

# ஒரு சேவை பாதையில் ஒன்றாகப் பயணித்தல்



ரூஹி பயிற்சிகழகம்





நூல் 7

# ஒரு சேவை பாதையில் ஒன்றாகப் பயணித்தல்

ரூஹி பயிற்சிகழகம்

இந்தத் தொடர்வரிசையில் வரும் நூல்கள்:

ரூஹி பயிற்சிக்கழகத்தினால் வடிவமைக்கப்பட்ட இந்தத் தொடர்வரிசையில் உள்ள தலைப்புகள் கீழே வழங்கப்பட்டுள்ளன. இளைஞர்களும் முதியவர்களும் தங்கள் சமூகங்களுக்குச் சேவை செய்வதற்கான திறனாற்றலை மேம்படுத்துவதற்குரிய ஒரு முறைமையான முயற்சியில் இந்த நூல்கள் பிரதான தொடர்வரிசையாகப் பயன்படுத்தப்படும். பஹாய் குழந்தைகள் வகுப்பு ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்குத் தொடர்வரிசையில் வரும் மூன்றாவது நூலின் கிளைப்பயிற்சித் தொகுப்பு ஒன்றை உருவாக்கி வருவதுடன், இளைய இளைஞர் குழுமங்களுக்கு எனிமேட்டர்களை உருவாக்குவதற்கு நூல் 5 இன் கிளை பயிற்சிகள் தொகுப்பு ஒன்றையும் ரூஹி பயிற்சிக்கழகம் உருவாக்கி வருகின்றது. அவையும் கீழ்காணும் பட்டியலில் குறிப்பிடப்படுகின்றன. களத்தில் அனுபவம் பெருகி, மேம்பாட்டிலுள்ள பாடத்திட்ட அம்சங்கள் பல, விரிவாகக் கிடைக்கும் கட்டத்தை அடையும்போது இந்தப் பட்டியலும் மாற்றம் கண்டு, கூடுதல் தலைப்புகள் சேர்த்துக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| நூல் 1 | *ஆன்மாவைப் பற்றி பிரதிபலித்தல்* |
| நூல் 2 | *சேவைக்காக எழுதல்* |
| நூல் 3 | *குழந்தைகள் வகுப்புகளுக்குப் போதித்தல், கிரேட் 1* |
| | *குழந்தைகள் வகுப்புகளுக்குப் போதித்தல், கிரேட் 2 (கிளை பயிற்சி)* |
| | *குழந்தைகள் வகுப்புகளுக்குப் போதித்தல், கிரேட் 3 (கிளை பயிற்சி)* |
| | *குழந்தைகள் வகுப்புகளுக்குப் போதித்தல், கிரேட் 4 (கிளை பயிற்சி)* |
| நூல் 4 | *இரட்டை அவதாரங்கள்* |
| நூல் 5 | *இளைய இளைஞர் சக்திகளை விடுவித்தல்* |
| | *ஆரம்ப உந்தம்: நூல் 5'இன் முதல் கிளை பயிற்சி* |
| | *விரிவடையும் வட்டம்: நூல் 5'இன் இரண்டாவது கிளை பயிற்சி* |
| நூல் 6 | *சமயத்தைப் போதித்தல்* |
| நூல் 7 | *ஒரு சேவை பாதையில் ஒன்றாக நடப்பது* |
| நூல் 8 | *பஹாவுல்லாவின் திருவொப்பந்தம்* |
| நூல் 9 | *ஒரு வரலாறு சார்ந்த முன்னோக்கைப் பெறுதல்* |
| நூல் 10 | *துடிப்பான சமூகங்களை நிர்மாணித்தல்* |
| நூல் 11 | *லௌகீக வழிமுறைகள்* |
| நூல் 12 | *குடும்பமும் சமூகமும்* |
| நூல் 13 | *சமுதாய நடவடிக்கையில் ஈடுபடல்* |
| நூல் 14 | *பொது சொல்லாடல்களில் பங்கு பெறுதல்* |

பதிப்புரிமை © 2002, 2025 ரூஹி அறக்கட்டளை, கொலம்பியா.
அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. பதிப்பு 1.1.1.PE வெளியீடு ஏப்ரல் 2002
பதிப்பு 2.1.2.PE ஜூலை 2025

Originally published in Spanish as *Avancemos en un sendero de servicio*
Copyright © 2005, 2024 by the Ruhi Foundation, Colombia
ISBN 978-628-95545-9-5

ரூஹி பயிற்சிக்கழகம்
காலி, கொலம்பியா
மின்னஞ்சல்: instituto@ruhi.org
வலைத்தளம்: www.ruhi.org

# உள்ளடக்கம்


பயிற்றுநருக்கான ஒரு சில சிந்தனைகள் ........ v

ஒரு சேவை பாதையில் மேம்பாடு காண்பதன் ஆன்மிக இயலாற்றல்........ 1

பயிற்சிப் பாடங்களின் பயிற்றுநராகப் பணிபுரிதல்........ 43

அடித்தட்டுகளில் கலைகளை ஊக்குவித்தல்........ 163

# பயிற்றுநருக்கான ஒரு சில சிந்தனைகள்

லௌகீக ரீதியிலும் ஆன்மிக ரீதியிலும் செழிப்பான ஒரு புதிய நாகரீகத்தை உருவாக்குவதற்கு, பஹாய் போதனைகளில் உள்ளார்ந்திருக்கும் சமுதாய நிர்மாணிப்பு சக்திகளைப் பயன்படுத்திக்கொள்வதற்குத் தனிநபர்கள், ஸ்தாபனங்கள் மற்றும் சமூகங்களின் தரப்பில், தொடர்ந்தாற் போன்று அதிகரிக்கும் திறனாற்றல் தேவைப்படுகின்றது. இந்தத் திறனாற்றலை மேம்படுத்துவதே ரூஹி பயிற்சிக்கழகத்தின் பிரதான பயிற்சி வரிசையின் முக்கிய குறிக்கோளாகும். இந்தத் திறனாற்றலின் பல்வேறு பரிமாணங்களும் அது எவ்வாறு பேணி வளர்க்கப்படும் என்பது பற்றிய நுண்ணறிவுகளும் இரண்டு அடிப்படை மூலாதாரங்களிலிருந்து கோரப்படுகின்றன: பஹாவுல்லாவின் திருவெளிப்பாடு என்னும் சமுத்திரத்திலிருந்தும், அதன் பொக்கிஷங்களில் பங்கெடுத்து, தங்களைச் சுற்றியுள்ள அனைவருக்கும் அதன் உயிர் கொடுக்கும் நீரை வழங்கிட அதிகரித்த எண்ணிக்கையிலான மக்களுக்கு ஆற்றலளிப்பதில் உலகெங்கிலும் உருவாக்கப்பட்ட அனுபவத்திலிருந்தும், பயிற்றுநர்களாகப் பணிபுரிவோர், தங்கள் படிப்பாய்வின் மூலம் பெறப்பட்ட அறிவை மட்டுமின்றி, பாடநெறிகள் வகுத்துள்ள சேவை செயல்களை—உள்ளூர் மட்டத்தில் தனிநபர் மற்றும் கூட்டு தன்மைமாற்றத்திற்கான ஒரு செயல்முறையை இயக்க முற்படும் சேவை நடவடிக்கைகளை--மேற்கொள்வதில் அவர்களின் அனுபவத்தையும் தங்களின் முயற்சிகளுக்குக் கொண்டு வருகின்றனர். இந்தச் செயல்முறையில், அவர்களின் நூல் 7 பங்கேற்பு அதிக முக்கியத்துவம் பெறுவது வேறு எந்த கட்டத்திலும் அவ்வாறு முக்கியத்துவம் பெறவில்லை. அதில், பயிற்றுநர் இந்த சேவை நடவடிக்கையை மேற்கொண்டிட பிறருக்கு உதவுவதில், தாமே அதில் பயணித்து வருவதன் வழி பெற்றுவரும் அனுபவத்தின் மூலம் அவருக்கு நன்கு பழக்கமாகிவிட்ட ஒரு பாதையை ஆய்வு செய்திட பங்கேற்பாளர்களை ஈடுபடுத்துவார்.

இந்த ஆய்வு--"ஒரு சேவை பாதையில் முன்னேற்றம் காண்பதன் ஆன்மிக இயக்கவியல்கள்" என்னும் முதல் பாடப்பிரிவின் தலைப்பான--சேவையினால் தோற்றுவிக்கப்பட்ட ஆன்மிக வளர்ச்சியின் இயல்பின் மீது கவனம் செலுத்துவதன் மூலம் ஆரம்பிக்கின்றது. பங்கேற்பாளர்கள் பஹாவுல்லாவைக் கண்டுணர்ந்து அவரது சமயத்திற்கும் மானிடத்திற்கும் சேவை செய்திட முன்னெழுவதில் அவர்கள் ஆரம்பித்த ஆன்மிகத் தன்மைமாற்ற செயல்முறை குறித்து பிரதிபலித்திடுவதற்கு உதவியாக இந்தப் பாடப்பிரிவு ஒரு யோசனை வரிசையை முன்வைக்கின்றது: உண்மை என்னும் சூரியனை நோக்கி திரும்பியுள்ள ஓர் இதயத்தின் நிலை, கடவுளை அறிந்துகொள்ளவும் அவரது பண்புகளைப் பிரதிபலிக்கவும் நம் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டுள்ள திறனாற்றல், நம் வாழ்க்கைக்கு உயிரூட்டும் கடவுள் அன்பின் ஆற்றல் மற்றும் அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதனால் நாம் பெறுகின்ற ஒளியூட்டம், அவரது அறிவினால் நாம் பெறுகின்ற மனவுறுதியும், நம்மைச் செயல்படத் தூண்டுகின்ற மெய்நம்பிக்கையும் உறுதியும், நம் இதயங்களை வகைப்படுத்த வேண்டிய ஆர்வநம்பிக்கையுணர்வும் அவரது நோக்கத்தை அடைய அவர்களைத் தூண்ட வேண்டிய ஏக்கமிகு ஆசை, முயற்சி செய்யவும் தியாகங்கள் செய்ய வேண்டியதன் அவசியம் மற்றும் நமது அடிகளை விரைவுபடுத்தும் மகிழ்ச்சி நிலையாகும்.

பங்கேற்பாளர்களைப் பொறுத்தவரை, பாடப்பிரிவின் படிப்பாய்வு அவர்களுக்கு ஏற்கனவே நன்கு பரிச்சயமான ஒரு கருத்தாக்கம் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கச்

செய்திடும், அதாவது, சேவை களத்தில்தான் நாம் ஒவ்வொருவரும் கடவுளால் நமக்கு வழங்கப்பட்ட சாத்திய ஆற்றல்களை உணரவும் சமுதாயத்தின் மேம்பாட்டிற்குப் பங்களிக்கவும் முடியும். மேலும் ஆழமான நிலையில், இத்துறையில் பிரவேசிக்கும்போது, தூய்மை மற்றும் அறிவு, மெய்நம்பிக்கை மற்றும் கீழ்ப்படிதல், எதிர்ப்பார்ப்பு மற்றும் ஏக்கமிகு ஆசை, தியாகம் மற்றும் மகிழ்ச்சி ஆகியவற்றின் ஆற்றல்களைக் கோரும் "இருத்தல்" மற்றும் "செய்தல்" இரண்டும் பூரணமாக ஒன்றிணைந்துள்ள ஒரு நிலையான, ஒரு சேவக நிலையை நோக்கி நாம் உந்தித் தள்ளப்படுகின்றோம். இத்தகைய ஒரு நிலையில் ஒரு சேவை பாதையில் பயணித்தல், மனித ஆன்மாவில் உள்ளார்ந்துள்ள சக்திகள், பஹாவுல்லாவின் திருவெளிப்பாடு விடுவித்துள்ள சக்திமிக்க ஆற்றல்கள் ஆகிய இரண்டிற்கும் இடையில் ஓர் இயக்கவியல் மிக்க பரஸ்பர எதிர்விளைவை உருவாக்குகின்றது. ஆரம்பநிலையில் உள்ள பயிற்றுநர்கள் என்னும் முறையில், இந்தப் பாதையில் நாம் ஒன்றாகப் பயணிக்கும்போது இந்த இயக்கவியல்களே நமது உறவுகளை வடிவப்படுத்துகின்றன, நமது மனத்துணிவை உறுதிபடுத்தி தனிப்படவும் கூட்டாகவும் நமது திறனாற்றலை அதிகரிக்கின்றன.

இந்த ஆன்மிக இயக்கவியல்கள் மீது பிரதிபலித்த பிறகு, ரூஹி பயிற்சிக்கழகமும் அதன் பயிற்சிப்பாடங்களின் கல்வியியல் அணுகுமுறையும் இந்தப் பாதையின் வழி தனிநபர்கள் மேம்பாடு காண்பதற்கு எவ்வாறு உதவுகின்றன என்பதை ஆய்வு செய்வதற்குப் பங்கேற்பாளர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்படுகின்றது. இந்த ஆய்வு "பயிற்சிக்கழகத்தின் பயிற்சிப்பாடங்களுக்கு ஒரு பயிற்றுநராகப் பணிபுரிதல்", என்னும் அடுத்தப் பாடப்பிரிவின் நடுமையத்தை உள்ளடக்கும் ஓர் ஆய்வாகும். பகுதி 15 இந்த அணுகுமுறையை சுருக்கமாக விவரிக்கின்றது; அதன் உருவாக்கத்திற்கு வழிவகுத்த சில சிந்தனைகளைக் கோடிட்டுக் காட்டி, அதன் நடுமைய கருத்தாக்கங்கள் சிலவற்றைக் குறிப்பிடுகின்றது—ஓர் இரட்டை தார்மீக நோக்கத்தைப் பின்தொடர்தல், படிப்பாய்விலும் நடவடிக்கையிலும் சம நேரத்தில் ஈடுபடுதல், திறன்பாடுகளை வலுப்படுத்துதல்—பயிற்சிப்பாட உள்ளடக்கத்திற்கு அடித்தளமான கருத்தாக்கங்களும் சேவை பாதை எவ்விதத்தில் பயணிக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானித்தலும். அதைத் தொடர்ந்து வரும் பகுதிகள், ஒவ்வொன்றாகப் பாடத்திட்டத்தை நிர்வகிக்கும் கல்வியியல் கோட்பாடுகள் மீது வெளிச்சம் போட்டுக் காட்டும் முயற்சியில் முக்கிய வரிசையின் முதல் ஆறு புத்தகங்களைப் பரிசீலிக்கின்றன, அத்துடன் உபகரணங்கள் எதை சாதிக்க முற்படுகின்றன என்பதைப் பற்றிய ஆழமான புரிதலைப் பங்கேற்பாளர்கள் பெறவும் உதவுகின்றன. இந்த நோக்கத்திற்காக, இந்த மையப் பகுதிகள், "பயிற்றுநருக்கான சில சிந்தனைகள்" என்னும் ஒவ்வொரு நூலின் முன்னுரை குறிப்புகளிலிருந்து பேரதிகமாக ஈர்த்திடுகின்றன.

பாடப்பிரிவின் நடுபகுதியின் வழி பங்கேற்பாளர்களை வழிநடத்துவதில், அதன் முக்கியத்துவத்தைப் பயிற்றுநர் குறைத்து மதிப்பிடக் கூடாது. முன்னுரை குறிப்புகளிலிருந்து எடுபகுதிகளும் அவற்றுடன் இணைவாக வரும் பயிற்சிகளும், ஓரளவிற்குத் தாங்கள் ஏற்கனவே பயின்றுள்ள நூல்களின் உள்ளடக்கத்தைப் பகுப்பாய்வு செய்திடவும் அவை ஊக்குவிக்கும் சேவை செயல்கள் குறித்து பிரதிபலிக்கவும் பங்கேற்பாளர்களுக்கு ஒரு வழிமுறையாக அமைந்திடும். ஆனால், மேலும் முக்கியமாக, அவர்கள் சமயத்திற்கும் மானிடத்திற்குமான சேவையை, அதன் ஒழுங்கமைக்கும் கோட்பாடாகக் கொள்ளும் ஒரு கல்வியியல் செயல்முறையைத் தனிச்சிறப்பித்துக் காட்டும் பண்புக்கூறுகளைக் கண்டுணர வேண்டும். இந்தச் செயல்முறையில் புரிதலைப் பேணி வளர்ப்பதற்கும் ஆன்மிக நற்பண்புகளை உருவாக்கிக்கொள்வதற்கும் வழங்கப்படும் பங்கே அவர்களின் பார்வையில் தனித்து நிற்கும் ஒன்றாக இருந்திட வேண்டும். இந்த இரண்டு கட்டாயங்களும் கைகோர்த்துச் செல்வதை உறுதி செய்வதில் செலுத்தப்படும் கவனமே, திறன்கள் பயிற்சியில் குறுகிய கவனம் செலுத்தி, குறிப்பிட்ட பணிகளைச் செய்வதற்குத் தேவையான அறிவையும் தகவலையும் மட்டுமே வழங்கும் பயிற்சிகளிலிருந்து பயிற்சிக்கழகம் உருவாக்கிய கல்விச் செயல்முறையை வேறுபடுத்திக் காட்டுகிறது.

பகுதிகள் 16 முதல் 26 வரை மேற்கொள்ளப்பட்ட முதல் ஆறு நூல்களின் கலந்துரையாடலில் இந்தத் தலைப்பு எவ்வாறு பின்னப்பட்டுள்ளது என்பதைப் பங்கேற்பாளர்கள் உடனடியாகக் காண்பார்கள், அத்துடன், கல்வியியல் செயல்முறையின் பிற பண்புக்கூறுகள் பலவும் அதிலிருந்து எவ்வாறு அர்த்தத்தைப் பெறுகின்றன என்பதைப் புரிந்துகொள்ள அவர்களுக்கு உதவிட ஆசிரியர் தயாராக இருக்க வேண்டும். இந்தப் பண்புக்கூறுகளுள் பயிற்றுநர் குறிப்பாக மனதில் கொள்ள விரும்பும் சில உள்ளன.

முதலாவதாக, ஓர் இரட்டை தார்மீக நோக்கத்தைப் பின்தொடர்வதற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள ஒரு வாழ்க்கை கடவுள் மற்றும் அவரது திருவெளிப்பாட்டின் மீது மையப்படுத்தப்பட்டுள்ள ஒன்றாகும் என்பது தெளிவாகிட வேண்டும். உண்மையில், இதுவே பயிற்சிப் பாட வரிசைகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தின் பின்னால் உள்ள முக்கிய உந்தமாகும். இது, நூல் 1-இல் இருந்தே தெளிவாகத் தெரியும். அவற்றைப் பயில்வோரில் அவர்களின் உண்மையான அடையாளம்—சேவை பாதையில் பயணிக்கும் ஒருவரின் அடையாளம்–குறித்த ஓர் உணர்வை எழுப்பிவிடுவதற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள நூல் திருவாக்குகள் மற்றும் அவற்றைப் புரிந்துகொள்வதற்கும் அவற்றை தங்கள் வாழ்க்கையில் பயன்படுத்துவதற்கும் தேவையான முயற்சியில் பங்கேற்பாளர்களின் கவனத்தை மையப்படுத்துவதன் மூலம் தொடங்குகிறது. இந்த வெளிச்சத்தின் கீழ் மட்டுமே அது அவர்களின் கவனத்தை ஆன்மாவின் வாழ்க்கை, மற்றும் அவருடனான மன்றாடல் மற்றும் தொடர்பின் மூலம் அவர்களின் ஆன்மாக்கள் பெறும் ஊட்டத்தின்பால் அவர்களின் கவனத்தை வழிநடத்துகின்றது. இவ்வழியில் நனவுணர்வை உயர்த்திட நோக்கம் கொண்ட ஒரு கல்வியியல் செயல்முறையானது, தனிநபர்கள் தங்கள் வசம் உள்ள ஆன்மிக சக்திகளை விடுவிப்பதற்கான முதன்மை கால்வாயாக நீண்டகால தன்னிலை ஆய்வை ஊக்குவிக்கும் ஒன்றைக் காட்டிலும் “வலியுறுத்தும் தன்னகத்தை” அடக்குவதற்கு தனிநபர்களுக்கு உதவுவது அதிக பொறுத்தமுடையதாக இருந்திடும்.

இரண்டாவதாக, இந்தப் பகுதிகள் கல்வியியல் செயல்முறையில் திறனாற்றல் உருவாக்கத்திற்கு வழங்கப்படும் மையத்தன்மையை எடுத்துக்காட்ட உதவியாக இருக்க வேண்டும். இந்த செயல்முறையானது, அறிவு—குறிப்பாக பஹாவுல்லாவின் திருவெளிப்பாடு குறித்த அறிவு–மற்றும் நடைமுறையுடன் தொடர்புகொண்டுள்ளது என்பது உன்னிப்பான கவனத்திற்கு உட்பட வேண்டும். உண்மையில், திறனாற்றல் உருவாக்கத்தில் அதன் விளைவுத்திறமானது அடிப்படையில், இவ்விரண்டிற்கும் இடையிலான பரஸ்பர வினையை முழுவதுமாக பயன்படுத்திக்கொள்ளும் திறனையே சார்ந்துள்ளது: படிப்பாய்வின் மூலம் அடையப்படும் புரிதல் நடைமுறையின் ஒளியில் செழிப்புறச் செய்யப்படும் போது புதிய நுண்ணறிவுகள் உருவாக்கப்படுகின்றன, அத்துடன் சேவை செயல்களில் தொடர்ந்தாற் போன்று ஈடுபடுதல் அறிவுக்கான தாகத்தை அதிகரிக்கின்றது மற்றும் சமயத்தின் திருவாக்குகளில் மறைந்துள்ள உள் அர்த்தங்களை நாடுவதற்கான ஆவலைத் தூண்டுகின்றது. திறநாற்றல் உருவாக்கத்தின் வலியுறுத்தலே பல வருடங்களாக வெளிப்பட்டுள்ள ஆழ்ப்படுத்தும் முயற்சியின் பல்வேறு வகைகளிலிருந்து கல்வியியல் செயல்முறையை வேறுபடுத்திக் காட்டுகின்றது. இம்முயற்சிகள் அவற்றிற்குள்ளாகப் பயனளிப்பவையாக இருப்பினும் அவை செயலை விடுத்து திருவாக்குகளின் படிப்பாய்வின் மீது மட்டுமே கவனம் செலுத்துகின்றன. மாறாக, இங்கு ஒருவரின் சொந்த ஆன்மிக மற்றும் அறிவாற்றல் வளர்ச்சியில் கவனம் செலுத்தல் மற்றும் சமுதாயத்தின் தன்மைமாற்றத்திற்குப் பங்களித்தலெனும் இரட்டை நோக்கத்தின் சூழலில் அறிவு பெறுதல் நாடப்படுகின்றது. ஆதலின், தனிமனித முன்னேற்றமும் கூட்டு மேம்பாடும் ஒரே முன்னோக்கிய இயக்கமாக ஒன்றிணைக்கப்படுகின்றன.

மூன்றாவதாக, ஆய்வானது சேவை பாதையில் நடப்பதில் உருவாக்கப்பட்ட செயல்திறன்களுடைய தன்மையின்மீது– அவை எவ்வாறு ஒன்று மற்றொன்றின் மீது நிர்மாணிப்பது மட்டுமின்றி அவை ஒன்று மற்றொன்றுடன் பரஸ்பரமாகத் தொடர்புடையவையாக இருக்கின்றன—என்பதை வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டும். செயல்திறன்கள் என்னும் கருத்தாக்கம் நூல் 2-இல் அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த நூலில்,

பங்கேற்பாளர்கள் அர்த்தமுள்ளதும் மேம்படுத்துவதுமான உரையாடல்களை ஆரம்பிக்கவும் தக்கவைப்பதற்குமான தங்களின் திறனாற்றலை மேம்படுத்திட ஊக்குவிக்கப்பட்டனர். அந்த நூலில் படிப்பாய்வின் மூலம் இந்தச் சொல் எதை வலியுறுத்துகின்றது என்பது குறித்த ஓர் உள்ளுணர்வை அவர்கள் அடைந்திடுவதுடன், இளங்குழந்தைகளின் வருங்கால ஆசிரியர்களாக, சில அடிப்படையான கல்வியியல் கருத்தாக்கங்களை கிரகித்துகொள்ளல், தொடர்புள்ள ஆன்மிகப் பண்புகள் மற்றும் மனப்பான்மைகள் மீது பிரதிபலித்தல், அத்துடன் தேவைப்படும் திறன்களையும் திறமைகளையும் நடைமுறைப்படுத்தல் என்னும் முறையில் நூல் 3-ஐ கற்பிக்க உதவிடும் போது அதன் முக்கியத்துவம் குறித்த அவர்களின் பாராட்டுணர்வு அதிகரித்திருக்கும். அடுத்தடுத்த வந்த பயிற்சிப்பாடங்களின் படிப்பாய்வு எவ்வாறு, அவர்கள் ஈடுபட்ட விரிவடைந்த சேவைக்கு ஈடாக, கூடுதல் திறனாற்றலுக்குப் பங்களித்தன என்பதை அவர்கள் கண்டிருப்பர்.

இப்பொழுது, ஆரம்பநிலை பயிற்றுநர்கள் என்னும் முறையில், “செயல்திறம்” என்னும் கருத்தாக்கம் குறித்து முதன் முறையாக வெளிப்படையாகப் பிரதிபலிப்பதற்கு ஒரு வாய்ப்பைப் பெறுவர். கல்வியியல் செயல்முறையில் கருதப்பட்டபடி, செயல்திறன்களின் உருவாக்கம் ஒன்று மற்றொன்றுடன் தொடர்பு கொண்ட ஒரு பண்புகள் தொகுப்பினூடே--கருத்தாக்கங்களைப் புரிந்துகொள்வதில், ஆன்மிகப் பண்புகளைப் பெறுவதில், பொருத்தமான பழக்கவழக்கங்கள் மற்றும் மனப்பான்மைகளை உருவாக்கிக்கொள்வதில், அத்துடன் குறிப்பிட்ட சில திறன்களையும் திறமைகளையும் கூர்மைப்படுத்திக்கொள்வதில்--மேம்பாடு காண்பதை உள்ளடக்கியுள்ளது என்பதை அவர்கள் கண்டுணர்வர். செயல்திறன்களைப் பற்றி இவ்வகையில் சிந்திப்பதானது, அக்கருத்தாக்கம் இங்கு எவ்வாறு பயன்படுத்தப் படுகின்றது என்பதுடன் அன்றாட மொழி பயன்பாட்டில் அது எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பதை வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். அன்றாட மொழி பயன்பாட்டில், ஒரு விஷயத்தைச் செய்வதற்கான செயல்திறனைப் பெற்றிருத்தல் என்பது, கேக் செய்வதிலிருந்து ஓர் இளைய இளைஞர் குழுவிற்கு அனிமேட்டராகப் பணிபுரிவது வரை எதை வேண்டுமானால் குறிப்பிடக்கூடும். ஓர் அனிமேட்டராகப் பணியாற்றுவதற்கான செயல்திறனுக்கு, மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு வகையிலிருந்தும் சில பண்புக்கூறுகளின் தொகுப்பு ஒன்று தேவைப்படுவதால், கருத்தாக்கம் அது நோக்கமாகக் கொண்ட அர்த்தத்தை பிந்தைய சூழலில் மட்டுமே எடுத்துக்கொள்கிறது. செயல்திறன்களின் தொகுப்புகளையும் அத்துடன் அவற்றுக்கு மிகவும் இன்றியமையா பண்புக்கூறுகளையும் அடையாளங் காண்பதில், ரூஹி பயிற்சிக்கழகம் அவற்றைத் துல்லியத்துடன் முன்வைப்பதைத் தவிர்த்துள்ளது. அவ்வாறு செய்தல் எதிர்விளைவை உண்டாக்கும் என அது ஆரம்பத்திலேயே தீர்மானித்துள்ளது. பங்கேற்பாளர்கள் தங்கள் சமூகங்களின் மேம்பாட்டிற்காக அதிகரிக்கும் முறையில் பலக்கிய(complex) சேவைகளைச் செய்ய உதவும் வகையில் தேவைப்படும் பண்புகளை உருவாக்கிக் கொள்ள வேண்டியதன் அவசியத்தைக் கல்விச் செயல்முறை அறிந்திருப்பது போதுமானதாக இருக்குமென அஃது உணர்ந்தது.

இது மற்றொரு விஷயத்துடன் நெருக்கமாகத் தொடர்புடையது. பிரதான வரிசையின் பயிற்சிப்பாடங்களில் கவனம் செலுத்தப்பட்டுள்ள சேவைச் செயல்கள் இரண்டு சமநேர செயல்களை மேற்கொள்கின்றன: தனிநபரின் செயல்திறன்களை மேன்மேலும் அதிக அளவில் மேம்படுத்தும் அதே வேளை, அவரது முயற்சிகள் சமூக வாழ்வின் துடிப்பான வடிவமாதிரிகளை விரிவுபடுத்தவும் வலுப்படுத்தவும் செய்வதை சேவைச் செயல்கள் உறுதிபடுத்துகின்றன. அதன்படி, நூல் 1-இன் படிப்பாய்வுக்குப் பிறகு சிறிது அனுபவம் சேர்ந்த பிறகு சேவை பாதையில் முதல் செயல்—பிரார்த்தனைகளைப் பகிர்ந்துகொள்தல் மற்றும் அவற்றின் மீது குறிப்பாகக் குடும்பங்களுடன் பிரதிபலித்தல்—ஒதுக்கிவைக்கப்படக் கூடாது. அல்லது, நூல் 2-இல் பரிந்துரைக்கப்பட்டது போன்று, குடும்பங்களுடன் ஆழ்படுதலுக்கான கருப்பொருள்களை ஆராய்தலில் சிறிது பயிற்சிக்குப் பிறகு ஒருவரின் கிராமம் அல்லது அண்டைப்புறத்தில் குடும்ப விஜயங்களை மேற்கொள்தல் நிறுத்தப்படக்கூடாது. அர்ப்பணமிக்க நண்பர்களின் வளரும் மையக்கருவின் ஆற்றல்களால் வலுப்படுத்தப்பட்ட தனிநபர், தொடர்ந்தாற்போன்று மேன்மேலும் அதிக அனுபவம் பெறுகின்றார், அவ்வாறு செய்கையில் அதனுடன் தொடர்பு கொண்ட செயல்திறன்களில் முன்னேற்றம் கண்டும், இவ்வகையில் தொடர்ந்தாற் போன்ற ஈடுபாடு மற்றும்

முதிர்ச்சி பெறும் அனுபவத்தின் மூலம் ஒரு நோக்கமிக்க சமூகம் என்னும் துகிலை நெய்திட உதவுகின்றார்.

மேற்கண்ட எண்ணங்கள், நூல் 7-இன் பயிற்றுநருக்கு இரண்டாவது பாடப்பிரிவின் நடுமையத்தை சுற்றி ஒரு பயன்மிக்க கலந்துரையாடலை வழிநடத்திட உதவிட வேண்டும். தொடர்புடைய பகுதிகளை ஆய்வு செய்வதற்குப் போதுமான அளவு நேரம் அர்ப்பணிக்கப்பட வேண்டும் என்றாலும், பங்கேற்பாளர்கள் இந்தச் சேவைச் செயலை மேற்கொண்டிடும் போது அவர்கள் அப்பகுதிகளுக்கு மீண்டும் மீண்டும் திரும்பி வரக்கூடும் என்பது நினைவில் கொள்ளப்பட வேண்டும். நிச்சயமாக, அதன் சீரான மடிப்பவிழ்வின் பங்களிப்புக்கு மிகவும் அழுத்தமாக அவற்றைச் சார்ந்துள்ள ஒரு செயல்முறையான, ஒரு கல்வியியல் செயல்முறையின் தன்மை குறித்து கூடுதல் நுண்ணறிவுகளைப் பெற அவை முயல்வதால் ஒவ்வொரு நூலின் அறிமுக குறிப்புகளான, “பயிற்றுநருக்கான சில சிந்தனைகள்”, தனிப்பட்ட முறையில் மிகவும் இன்றியமையா வளங்களாக இருந்திடும்.

இதன் தொடர்பில், பயிற்றுநர் பாடப்பிரிவின் ஒட்டுமொத்த கட்டமைப்பை கருத்தில் கொண்டிருப்பதுடன் இந்த நடுமையப் பகுதிகளுக்கு முந்தியவை குறித்தும் பிந்தியவை குறித்தும் ஒரு தெளிவான யோசனையைக் கொண்டிருப்பது உதவியாக இருந்திடும். அங்கு மேற்கொள்ளப்படும் ஆய்வுக்கான அடித்தலத்தை அமைத்திட, பாடப்பிரிவின் முதல் பகுதியில் இரண்டு இன்றியமையா கருப்பொருள்கள் மீது கவனம் செலுத்தப்படுகின்றது. 2 முதல் 9 வரையிலான பகுதிகள் உந்துவிப்பு என்னும் கருப்பொருளை ஆராய்கின்றன, மற்றும் 10 முதல் 14 வரையிலான பகுதிகள் பங்கேற்பு குறித்த கருப்பொருளை விவாதிக்கின்றன.

முந்தையது குறித்து, வேறு எந்தக் காரணிகள் இதில் சம்பந்தப்பட்டிருப்பினும், புரிதல் என்பதே எல்லா உந்துவிப்பிலும் முதன்மையானது என பாடப்பிரிவு பரிந்துரைக்கின்றது. ஒரு கல்வியியல் செயல்முறை புரிதலைப் பேணி வளர்க்கின்ற அளவைச் சார்ந்தே அது மனித ஆன்மாவினுள் ஆழமாக வீற்றிருக்கும் உந்துவிப்பின் மூலாதாரங்களின் பயனைப் பெறுவதில் வெற்றி பெற முடியும். பகுதி 5, “பஹாய் திருவாக்குகளைப் புரிந்துகொள்தல்” என்னும் நூல் 1-இன் முதல் பாடப்பிரிவின் நோக்கத்தை விவரிக்கும் அதன் அறிமுகக் குறிப்பிலிருந்து ஓர் எடுபகுதியை வழங்குகின்றது. குறிப்பாக, அது உண்மை அறிவின் மூலாதாரமான திருவாக்குகளுடன் தொடர்புடையது என்பதால், புரிதல் குறித்த கருத்தாக்கத்தின் மீது பிரதிபலித்திட பயிற்றுநராகும் நாட்டம் கொண்டவருக்கு அது வழிகாட்டுகின்றது. அந்தப் பகுதியில் வரும் பயிற்சிகள், அவை முன்வைத்திட எதிர்ப்பார்க்கும் புரிதல் குறித்த பல்வேறு பரிமாணங்கள் குறித்த பாராட்டுணர்வைப் பெற பங்கேற்பாளர்களுக்கு உதவிடும் என்பதுடன், இறுதியில் பங்கேற்பாளர்கள் ஒரு நண்பர்கள் குழுவுடன் பயிற்சிப்பாடங்களைப் பயின்றிட ஆரம்பிக்கும் போது அவர்கள் இந்தப் பரிமாணங்களை நினைவில் கொள்வது அவர்களுக்கு முக்கியமாகும். இதைக் கூறிய பின்னர், விவாதிக்கப்பட்ட யோசனைகளை மிகவும் குறுகலான முறையில் பயன்படுத்த எந்த முயற்சியும் செய்திடக்கூடாது. ரூஹி பயிற்சிக்கழகமே, ஒரு கல்வியியல் செயல்முறை எவ்வாறு புரிதலைப் பேணி வளர்க்க முடியும் என்பதைப் பற்றிப் பிரதிபலிக்கையில், எவ்வித சூத்திரம் சார்ந்த அணுகுமுறையையும் தவிர்த்துள்ளது. அதற்கு மாறாக, பங்கேற்பாளர்கள் திருவாக்கைப் படிப்பாய்வு செய்திடும் போது, தங்கள் சொந்த வாழ்க்கை மற்றும் சமூகத்தின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு அதைப் பயன்படுத்த முயன்றிடும் போது, இறுதியில் அது அவர்களின் சிந்தனைகளையும் செயல்களையும் வடிவமைத்திட அனுமதிக்கும் போது, அதில் கோவில் கொண்டுள்ள குறையாத அர்த்தங்களை மேன்மேலும் அதிகமாக கிரகித்துக்கொள்வதற்கான பங்கேற்பாளர்களின் சாத்திய ஆற்றலில் தனது நம்பிக்கையை வைத்துள்ளது.

“பங்கேற்பு” என்னும் கேள்வியைப் பொறுத்தமட்டில், இது பயிற்சிப்பாட வரிசை முழுவதற்கும் அடிப்படையான ஓர் ஆழமான கருத்தாக்கம் ஆகும். யாவற்றிற்கும் மேலாக, பஹாவுல்லாவின் போதனைகள் ஒட்டுமொத்த மானிடத்திற்கும் உரியவையாகும், மற்றும் அவரது கருத்துருவான உலக நாகரீகத்தை நிர்மாணிப்பதற்கான திறனாற்றலை உருவாக்குவதில்

அக்கறை கொண்ட எந்தவொரு கல்வி செயல்முறையும் இயல்பில் பங்கேற்பு அணுகுமுறையைக் கொண்டதாக இருக்க வேண்டும். பயிற்சிப்பாடங்களில் கற்பனை செய்யப்பட்ட கற்பித்தல்-கற்றல் இயக்கவியலுக்கு இது என்ன அர்த்தத்தைக் கொண்டுவருகின்றது என்பதை பகுதி 10 விவாதிக்கின்றது, அத்துடன் உரைக்கப்பட்ட விஷயங்களுக்குப் போதுமான கவனம் செலுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு தனிமனிதனும் தனது சொந்த கற்றலுக்குப் பொறுப்பேற்பதற்கு உதவியாக பயிற்சிப்பாடங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. பயிற்றுநருக்கான இந்த பங்கேற்பு அணுகுமுறையின் சில தாத்பர்யங்களை எடுத்துக்காட்டும் பகுதிகள் 12 மற்றும் 14-இல் வரும் கற்பனையான உரையாடல்கள், பயிற்சிப்பாடங்கள் எளிமையுடன் அணுகப்பட வேண்டும் என்பதற்கான பாராட்டுணர்வை உயர்திட வேண்டும். விரும்பிய வகை பங்கேற்பை பெறுவதற்கான உத்திகளை நாடுவதிலும் அவை சாராம்சத்தை விட முன்னுரிமை பெற அனுமதிப்பதிலும் உள்ளார்ந்துள்ள அபாயங்கள் குறித்தும் அவை நனவுணர்வை உயர்த்திட வேண்டும். உத்திகளைத் தேடுவதில் செலவிடப்படக் கூடிய ஆற்றல் மற்றும் வளங்களின் அளவில் மட்டும் சிரமம் ஏற்படப் போவதில்லை, மாறாக, மேலும் முக்கியமாக, எவ்வாறு அந்த உத்திகளை நம்பியிருத்தல், புரிதலை மேம்படுத்துதல் என்னும் படிப்பாய்வின் பிரதான குறிக்கோளை அடைவதில் அதன் விளைவுத்திறத்தைக் குறைத்துவிடுகின்றன என்பதிலும் உள்ளது. குறிப்பிட்ட சில நோக்கங்களுக்கு குறிப்பிட்ட சில எளிமையான உத்திகள் உதவிடக்கூடும் என்பது உண்மையாயினும், ஆர்வமுள்ள பயிற்றுநர்கள், இறுதியில் அவை உருவாக்கும் சேவை செயல்கள் உட்பட, பயிற்சிப்பாடத்தின் உள்ளடக்கத்துடனான தங்களுடைய பரிச்சயமே தேவையான கற்பித்தல்-கற்றல் இயக்கவியலை உருவாக்க அவர்களுக்கு உதவும் என்பதைக் கண்டுணர வேண்டும்.

பயிற்சிப்பாடங்களின் படிப்பாய்வுடன் தொடர்புகொண்ட பங்கேற்கு குறித்த கருத்தாக்கத்தின் மீது கவனம் செலுத்திய பின், மேலே விவாதிக்கப்பட்ட பிரதான வரிசையின் மத்திய பகுதிகளுக்குப் பாடப்பிரிவு இயல்பான முறையில் நகர்கின்றது. அது பின்னர், பயிற்சிப்பாடங்களின் விநியோகத்திற்கான முறைமைக்குத் திரும்புவதற்கு முன் பகுதி 27-இல், பிரதான வரிசையிலிருந்து கிளைக்கின்ற பயிற்சிப்பாடங்கள் குறித்த கேள்வியை சுருக்கமாகத் தொடுகின்றது. இந்த முறைமை தன்னிச்சையானதல்ல என்பது தெளிவுபட வேண்டும். பாடத்திட்டம், பயில்பட்டம் மற்றும் பயிற்றுநர் ஆகிய மூன்று முதன்மை அம்சங்களால் ஆன இது, படிப்பாய்வுக்கும் செயலுக்கும் சமமாகப் பொருந்தும் ஒரு கோட்பாடான, கல்வியியல் செயல்முறையின் நடுமையத்தில் உள்ள ஒரு முக்கிய கோட்பாட்டைப் பிரதிபலிக்கிறது: இறுதியில் தங்களின் சொந்தக் கற்றலுக்குப் பொறுப்புடைய தனிநபர்கள், தங்கள் தனிப்பட்ட சூழ்நிலைகளுக்கு ஏற்ற வேகத்திலும் நடையிலும் சேவை பாதையில் மேம்பாடு காண அனுமதிக்கப்பட வேண்டும். முறைமையில் உள்ளார்ந்துள்ள நெகிழ்வுத்தன்மை இந்தக் கோட்பாட்டிற்கு இடமளிக்கின்றது என்பது எதிர்கால பயிற்றுநர்கள் என்னும் முறையில் பங்கேற்பாளர்களின் நினைவில் நிற்க வேண்டும். இந்த நெகிழ்வுத்தன்மையானது முறைமை இயங்கும் விதத்தில் முதன்மையாகக் காணப்படுகின்றது-- உதாரணத்திற்கு, படிப்பு வட்டங்கள் உருவாக்கப்படும் விதத்தில், அவை ஒன்றுகூடும் கால இடைவெளி, படிப்பாய்வின் தீவிரத்தில் சிறிது வேறுபாடுகளை அனுமதிக்கும் நிரப்ப விநியோக முறைகளில். அதற்காக, பயிற்சிப்பாட வரிசையின் அடிப்படை அறிவுப்பூர்வமான முறை புறக்கணிக்கப்பட முடியும் என பரிந்துரைக்கப் படுவதாக எடுத்துக் கொள்ளலாகாது. அவ்வப்போது, சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில், ஒரு தற்காலிகத் தேவைக்கு பதிலிறுக்கும் வகையில், ஒன்று அல்லது மற்றொரு புத்தகம் ஒரு தனிப் பாடமாக படிக்கப்படுகிறது அல்லது படிப்பின் வரிசை சில காலத்திற்கு சரிசெய்யப்படுகிறது. ஆயினும், பயிற்சிப்பாடங்களின் ஊடாக தனிநபர்களின் வரிசைக் கிரமமான நகர்ச்சியே திறனாற்றலை உருவாக்குகின்றது. இந்த வழியில் மேன்மேலும் சவாலான உள்ளடக்கத்தை அவர்களால் சமாளிக்கவும், அவர்கள் கற்றுக்கொண்டவற்றின் அடிப்படையில் கருத்தாக்கங்கள் பற்றிய புரிதலை விரிவுபடுத்திக்கொள்வது மட்டுமின்றி, பாதையின் ஒவ்வோர் அடியிலும், அவர்கள் மேலும் முன்னேற்றம் காண்பதற்குத் தேவையான நடைமுறை அறிவையும் நுண்ணறிவுகளையும் பெறுவதால், அதிக கோரிக்கைவிடுக்கும் சேவைச் செயல்களை அவர்களால் மேற்கொள்ள முடிகிறது.

முழு கல்வியியல் முறைமைக்கும் முக்கியமான பயிற்றுநரைப் பொறுத்த வரை, பாடப்பிரிவின் படிப்பாய்வானது இந்த சேவைச் செயலுக்குத் தேவைப்படும் ஒன்று மற்றொன்றுடன் தொடர்புடைய பண்புகளை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கும்: பாடத்திட்டத்தை நிர்வகிக்கும் கருத்துகள் மற்றும் கோட்பாடுகள் பற்றிய ஆழமான புரிதலுக்கும் கூடுதலாக, பயிற்சிப்பாடங்கள் வழி ஒரு குழுவை வழிநடத்துவதில் பயன்படுத்தப் படும் ஆன்மிக குணங்கள், மனப்பான்மைகள், திறன்கள் மற்றும் திறமைகள். இதில், எந்தவொரு செயல்திறன்களையும் போலவே, மேன்மேலும் அதிக பயன்விளைவுடன் பயிற்றுநர்களாகப் பணியாற்றுவதற்குத் தேவைப்படும் செயல்திறன்கள் காலப்போக்கில் அனுபவத்தின் மூலம் உருவாகும் என்பது பங்கேற்பாளர்களுக்கு நினைவூட்டப்படும். பயிற்சிப்பாடங்களின் உள்ளடக்கம் மீது தவறாமல் பிரதிபலித்திட அவர்களுக்கு இருக்கும் பல வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளவும், இந்த நோக்கத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்ட பிரதிபலிப்புக் கூட்டங்களில் சக ஆசிரியர்களின் அனுபவத்திலிருந்து கற்றுக்கொள்ளவும் அவர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள். இந்த ஒன்றுகூடல்களில் அவர்களின் பங்கேற்பு என்ன என்பதை அவர்கள் உணர உதவும் வகையில், சில பயிற்றுநர்களுக்கும் பிரதான வரிசைக்கான பயிற்சிக்கழக ஒருங்கிணைப்பாளருக்கும் இடையிலான கற்பனையான உரையாடலை பகுதிகள் 32 முதல் 35 வரை முன்வைக்கின்றன. அவர்களின் கலந்துரையாடல் முதன்மையாக உள்ளடக்கத்தின் படிப்பாய்வில் அக்கறை கொண்டுள்ளது; எனினும், பயிற்சிப் பாடங்கள் சேவை செயல்களுக்கான திறனாற்றலை உருவாக்கிட முயல்கின்றன, மற்றும் சேவைச் செயல்களை மேற்கொள்வதில் தனிநபர்களுக்கு உதவுவதற்கான முயற்சிகளில் இருந்து பெறப்பட்ட நுண்ணறிவுகளைப் பகிர்ந்து கொள்வதற்கு அத்தகைய ஒன்றுகூடல் ஓர் இடத்தை வழங்கும் என கருதுவது நியாயமானதாகவே இருக்கும்.

இங்கு மற்றொரு யோசனை குறிப்பிடப்பட வேண்டும். பங்கேற்பாளர்கள், நூலின் தொடக்க பக்கங்களிலிருந்து, இரட்டை தார்மீக நோக்கத்தை பின்தொடர்வதில் தனிநபரின் ஆன்மிக மற்றும் அறிவாற்றல் சக்திகளை விடுவிக்க முற்படும் ஒரு கல்விச் செயல்முறையின் இயல்பு பற்றிய பல காட்சிகளை ஏதாவது ஒரு வழியில் பெற்றிருப்பர். தனிநபர்களுக்குத் தார்மீக மற்றும் ஆன்மிக ரீதியில் சக்தியளிப்பதற்காக ஒரு சேவை பாதையின் வழி செயல்திறன்களை உருவாக்கிக்கொள்வதற்கு அளிக்கப்படும் கவனம், தனிநபர்களை தார்மீக ரீதியாகவும் ஆன்மிக ரீதியாகவும் மேம்படுத்துவதற்குப் பங்களிக்கிறது என்பது பாடப்பிரிவு முடிவை அடையும்போது பங்கேற்பாளர்களுக்குத் தெளிவாகத் தெரிந்துவிடும். பஹாவுல்லாவினால் கற்பனை செய்யப்பட்ட உலக ஒழுங்கமைப்பை நோக்கிய ஒரு மக்கள் தொகையின் இயக்கத்தை உருவாக்குவதற்கான செயல்முறையில் உள்ளார்ந்துள்ள—உண்மையில் அவர்களின் எதிர்கால முயற்சிகளுக்கு உந்துதலாக இருக்கும்--சாத்திய ஆற்றலை ஆரம்பநிலை பயிற்றுநர்கள் புறக்கணிக்கக் கூடாது. ஏனெனில், தனிநபர்கள் என்னும் முறையில், அணி அணியாக, ஒரு பொதுவான பாதையில் ஒன்றிணைந்து, ஒருவர் மற்றவருக்கு ஆதரவளித்து, தங்கள் சமூகங்களை மேம்படுத்துவதற்கு எண்ணற்ற மற்றவர்களின் பங்களிப்பை ஈடுபடுத்துவதால், ஆன்மிக சக்திகள் தேவையான அளவில் விடுவிக்கப்படுவதுடன் ஓர் இயக்கத்தின் இயக்கவியல் ஆரம்பிக்கப்படுகின்றது.

நூல் 7-இன் மூன்றாவது பாடப்பிரிவு, இரண்டாவது பாடப்பிரிவிற்கு ஓர் இயல்பான துணைவனை உள்ளடக்கியுள்ளது. ஒப்பீட்டளவில் சுருக்கமான, "அடித்தட்டுகளில் கலைகளை ஊக்குவித்தல்" இந்தச் செயல்முறையை மேம்படுத்துவதிலும், அது உருவாக்கும் சமூக வாழ்க்கையின் வடிவங்களை வலுப்படுத்துவதிலும் கலை நடவடிக்கை வகிக்கக்கூடிய பங்கை ஆராய்வதற்கான கல்விச் செயல்முறையில் பங்கேற்பாளர்கள் பெற்றுள்ள நுண்ணறிவுகளின் மீது நிர்மாணிக்கின்றது. இதற்குள்ளாக, அவ்விரண்டிற்கும் இடையில் உள்ள நெருக்கமான தொடர்பு குறித்து பங்கேற்பாளர்கள் நல்ல புரிதலைப் பெற்றிருப்பதுடன், குறிப்பாக கல்வியியல் செயல்முறையின் சூழலில், பயிற்சிக்கழக பரப்பியக்கங்கள் மற்றும் முகாம்கள் போன்ற கூட்டு முயற்சிகள் கலைகளின் வெவ்வேறு வடிவங்களைப் பயன்படுத்துவதற்கான ஒரு பரந்த தளத்தை வழங்குகின்றன என்பதை மதித்துணர்வர். இந்தக் கலை வடிவங்கள் ஒவ்வொன்றையும் தனித் தனியாக, சற்று விரிவாகப் பார்ப்பதற்கு முன், பங்கேற்பாளர்கள் கலை முயற்சிகளின் இயல்பு

மற்றும் மனித ஆன்மாவில் அழகின்பாலான ஈர்ப்புச் சக்தியை எழுப்பிவிடும் திறனைப் பற்றி பேசும் திருவாக்குகளிலிருந்து பல மேற்கோள்களைப் பற்றி பிரதிபலிக்கின்றனர். அடித்தட்டில் கலைகளை ஊக்குவிப்பதற்கான உந்துதல் இந்தச் சக்திவாய்ந்த ஆற்றலின் ஒரு வெளிப்பாடாகும் மற்றும், இஃது இறுதியில், “எவரது மகிமையின் முன் அழகின் சாரமே வெளிறி உலர்ந்திட வேண்டுமோ” அவரது (பஹாவுல்லாவின்) வெளிப்பாட்டிலிருந்து பிரகாசிக்கும் அழகின் மீதான ஈர்ப்புச் சக்தியின் பிரதிபலிப்பே ஆகும். மனிதகுலத்தின் மறுமலர்ச்சிக்காக அவர் வெளிப்படுத்தியுள்ள கடவுள் திருவாக்கில்தான், மனித ஆன்மாவை உயர்த்துவதிலும், சமயத்தின் போதனைகள் மூலம் வடிவமைக்கப்படும் கலாச்சாரத்தை உருவாக்குவதிலும் கலை வெளிப்பாட்டிற்கான செந்தரத்தை நாம் தேட வேண்டும்.



# ஒரு சேவை பாதையில் முன்னேறுவதன் ஆன்மிக இயக்கவியல்

## நோக்கம்

சமயத்திற்கும் மனிதகுலத்திற்குமான சேவை பாதையில் மேம்பாடு காண்பதன் ஆன்மிக இயக்கவியல் குறித்து அதிகரித்த விழிப்புணர்வை பெறுதல் மற்றும் அதில் இயங்கும் ஆற்றல்கள் குறித்து ஒரு புரிதலைப் பெறுதல்.

## பகுதி 1

நூல் 7-ஐப் பயின்றிட ஆரம்பிக்கும் பிறரைப் போன்று, இந்நேரம் நீங்கள் ரூஹி பயிற்சிக்கழகத்தின் முந்தைய ஆறு நூல்களையும் பயின்றிட உங்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். நாங்கள் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளது போன்று, பயிற்சிக்கழக செயல்முறையில் உங்கள் பங்கேற்பு, ஒரு சேவை பாதையில் பயணித்தல் என்னும் அர்த்தத்தில் விவரிக்கப்பட முடியும். நீங்கள் இந்தப் பாதையில் மேம்பாடு கண்டு வருகையில், நீங்கள் ஆன்மிக ரீதியில் வளர்ச்சி பெற்று, உங்கள் சமூகத்தின் அபிவிருத்திக்குப் பங்களிக்கத் தேவையான செயல்திறன்களை உருவாக்கிக்கொண்டு, பலக்கிய(complex) தன்மையான நடவடிக்கைகளில் அதிகரிப்புடன் ஈடுபடுகிறீர்கள். சேவை பாதையில் பயணிப்பதில் உள்ளார்ந்துள்ள மகிழ்ச்சியை அறிந்துள்ள நீங்கள், இப்பொழுது இதே பாதையில் பயணிக்க ஆர்வமுள்ள மற்றவர்களுக்கும் உதவ விரும்புகின்றீர்கள். அவ்வாறு செய்வதில் நீங்கள் மேன்மேலும் விளைவுத்திறம் பெற வேண்டுமானால், சமயத்திற்கும் மானிடத்திற்கும் சேவை செய்வதற்கான திறனாற்றலை விடுவிப்பதுடன் மிகவும் நெருக்கமான தொடர்பு, கொண்ட ஆன்மிக வளர்ச்சியின் இயல்பு குறித்து நீங்கள் அடிக்கடி பிரதிபலிப்பது முக்கியமாகும். இந்தப் பாடப்பிரிவு இத்தகைய பிரதிபலிப்பில் உங்களுக்கு உதவிட நம்பிக்கை கொண்டுள்ளது.

## பகுதி 2

இந்த பூலோக வாழ்க்கையில், நாம் இயலாற்றலாகப் பெற்றிருக்கும் ஆன்மிகப் பண்புகளை மேம்படுத்திக்கொள்ள முயல்கின்றோம். ஆன்மிகப் பண்புகளை நாம் பெற்றிருக்கும் விதமானது நாம் லௌகீகப் பொருள்களைப் பெற்றிருப்பதிலிருந்து மிகவும் வேறுபட்டதாகும். ஒரு கண்ணாடி சூரியனைப் பிரதிபலிக்கும்போது, அஃதொரு விதத்தில் சூரியனின் பிம்பத்தைத் தன்னுள் கொண்டுள்ளது. ஆனால், உண்மையில், சூரியன் அந்தக் கண்ணாடியினுள் இல்லை. நமது ஆன்மிகப் பண்புகள் நாம் கடவுளிடமிருந்து பெறும் பரிசுகளாகும். நாம் நமது இதயமெனும் கண்ணாடியை அவரை நோக்கித் திருப்பும் போது அவற்றைப் பெறுகின்றோம். எவ்வாறாயினும், இவ்வுலகத்தின் தூசி மற்றும் மாசுகளால் மறைக்கப்பட்டுள்ள இதயங்களில் தெய்வீகப் பண்புகள் மங்கலாகவே பிரதிபலிக்கின்றன. ஆகையால், ஆன்மிக வளர்ச்சியின் தன்மையை ஆராய முற்படும் இந்தப் பாடப்பிரிவில் நாம் படித்து ஆய்ந்திடும் முதல் பத்தி, இதயமெனும் கண்ணாடியை மெருகூட்டுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் ஒன்றாக இருப்பது பொருத்தமாக இருந்திடும். அப்துல்-பஹா பின்வருமாறு கூறுகின்றார்:

> **“உள்ளங்களெனும் கண்ணாடிகளை மெருகேற்றுவது மிக முக்கியமான ஒன்றாகும், அதனால், அவை பிரகாசமடைந்து தெய்வீக ஒளியைப் பெற்றிடக் கூடும். ஓர் உள்ளம் மெருகேற்றப்பட்ட கண்ணாடியின் செயலாற்றலைப் பெற்றிருக்கலாம்; மற்றொன்று இவ்வுலகின் புழுதி மற்றும் மாசு ஆகியவற்றினால் மூடி மறைக்கப்பட்டிருக்கலாம். ஒரே சூரியன் இரண்டின்மீதும் ஒளிர்கின்ற போதிலும், மெருகேற்றப்பட்ட, தூய்மையான மற்றும் புனிதப்படுத்தப்பட்ட கண்ணாடியில், நீங்கள் சூரியனை அதன் முழுமையிலும், கீர்த்தியிலும் மற்றும் சக்தியிலும் தனது கம்பீரம் மற்றும் ஒளிர்வு ஆகியவற்றை வெளிப்படுத்துவதைக் காணலாம்; துருப்பபிடிந்தும் தெளிவிழந்துமுள்ள கண்ணாடிக்குப் பிரதிபலிப்பதற்கான ஆற்றல் இல்லை. சூரியனைப் பொருத்த வரையில் அஃது அக்கண்ணாடியின் மீது பிரகாசிக்கின்றது. சூரியன் குறைவுறவோ, மங்கலுறவோ இல்லை. ஆகவே நம்முடைய உள்ளமெனும் கண்ணாடியை மெருகேற்றிடும் நாட்டத்தைக் கொண்டிருப்பதே நமது கடமையாகும், அதனால், நாம் அவ்வொளியைப் பிரதிபலிக்கின்றோராகவும், அவற்றின் மூலம் முழுமையாக வெளிப்படுத்தப்படும் தெய்வீக அருட்கொடைகளைப் பெறுவோராகவும் ஆகிடக்கூடும்.”[1]**

1. கோடிட்ட இடங்களை நிரப்புக:

அ. நாம் நமது உள்ளமெனும் கண்ணாடியை ____________________ வேண்டும், அதனால் அவை _____________________________ அடைந்து, _______________________ ____________பெற்றிடக்கூடும்.

ஆ. ஓர் உள்ளம் _________________________ கண்ணாடியின் தகுதியைப் _______________ மற்றோர் உள்ளம் இவ்வுலகின் ____________ மற்றும் _______________ல் ______________________ பட்டிருக்கலாம்.

இ. ஒரே சூரியன் மெருகேற்றப்பட்ட கண்ணாடி மற்றும் இவ்வுலகின் புழுதியாலும் _____________________ லும் மூடி மறைக்கப்பட்டுள்ள கண்ணாடி ஆகிய ____________ ______________ மீதும் __________________

ஈ. மெருகேற்றப்பட்ட, __________________________ மற்றும் ____________________ ______________கண்ணாடியில், நாம் சூரியனை அதன் _________________________, _________________________ மற்றும் _________________ தனது _______________, மற்றும் _______________ ஆகியவற்றை வெளிப்படுத்தவதைக் காணலாம்.

உ. _______________மற்றும் ____________________ உள்ள கண்ணாடியில் ____________ _________________க்கான ______________________ இல்லை.

ஊ. நமது உள்ளமெனும் கண்ணாடிக்கு மெருகு கொடுக்கும் நாட்டத்தைக் கொண்டிருப்பதே நமது கடமையாகும், அதனால், நாம் தெய்வீக ஒளியைப் ______________________கவும், அவற்றின் மூலம் முழுமையாக ____________________________படும் _______________ப் _________________________ ____________ கவும் ஆகிவிடக்கூடும்.

2. கீழ்காண்பவை சரியா, தவறா என்பதை முடிவு செய்க.

______ மெருகேற்றப்பட்ட ஒரு கண்ணாடியானது பௌதீக சூரியனின் ஒளியைப் பிரதிபலிக்கிறது.

______ மெருகேற்றப்படாத ஒரு கண்ணாடி பௌதீக சூரியனின் ஒளியைப் பிரதிபலிப்பதில்லை.

______ மெய்மையெனும் சூரியன் தூய உள்ளங்களின் மீது ஒளிர்கிறது.

______ மெய்மையெனும் சூரியன் இவ்வுலகின் புழுதி மற்றும் மாசு ஆகியவற்றினால் மூடி மறைக்கப்பட்ட உள்ளங்களின் மீது ஒளிர்கிறது.

______ தூய உள்ளங்கள் மெய்மையெனும் சூரியனின் ஒளியைப் பிரதிபலிக்கின்றன.

______ இவ்வுலகின் புழுதி மற்றும் மாசு ஆகியவற்றினால் மூடி மறைக்கப்பட்ட உள்ளங்கள் மெய்மையெனும் சூரியனின் ஒளியைப் பிரதிபலிக்கின்றன.

3. கீழ்காண்பவற்றில், எவை "இவ்வுலகின் புழுதி மற்றும் மாசு" என்பதை முடிவு செய்யவும்.

_______ லௌகீக உடைமைகளின்பால் பற்று

_______ மனித குலத்தின்பால் அன்பு

_______ பேராசை

_______ பொறாமை

_______ தன்மீது அன்பு

_______ அறிவு

_______ ஆடம்பரத்தையும் சுகத்தையும் விரும்புதல்

_______ அகந்தை

4. கீழ்காண்பனவற்றில் எவை, "நமது உள்ளமெனும் கண்ணாடியை மெருகேற்றுவதில்" நமக்கு உதவுகின்றன என்பதை முடிவு செய்யவும்.

_______ மகிழ்ச்சி

_______ நம்பிக்கை

_______ கனிவு

_______ அறிவு

_______ பிறருடன் போட்டியிடுதல்

_______ பிறர் குறையைக் காணுதல்

_______ மனிதகுலத்தின்பால் அன்பு

_______ இறைவன் மீது அன்பு

_______ பிரார்த்தனை

_______ நற்செயல்கள்

_______ திருவாசகங்களைப் படித்தல்

_______ நம்மைவிட மற்றவரை முன்மதித்தல்

5. இவ்வுலகின் புழுதி மற்றும் மாசு ஆகியவை நமது உள்ளமெனும் கண்ணாடியின் மீது குவிந்துவிடாமல் பார்த்துக்கொள்வதற்கு, நாம் தொடர்ந்தாற்போல் முயற்சி செய்ய வேண்டும். கீழ்காணும் கூற்றுகள் சரியா, தவறா என்பதை முடிவு செய்யவும்.

_______ பிரார்த்தனை மட்டுமே நமது உள்ளமெனும் கண்ணாடியை மெருகேற்றும்

_______ நற்செயல்கள் மட்டுமே நமது உள்ளமெனும் கண்ணாடியை மெருகேற்றும்

_______ பிரார்த்தனைகளும், நற்செயல்களும் இணைந்து, நமது உள்ளமெனும் கண்ணாடியை மெருகேற்றும், ஏனெனில் அவை இறைவனுடைய அருட்கொடைகளைக் கவர்ந்திடும்

_______ இறைவனுடைய அருட்கொடைகளால் மட்டுமே நாம் நமது உள்ளமெனும் கண்ணாடியை மெருகேற்ற முடியும்.

_______ ஒருவருடைய உள்ளத்தின் தூய்மையை இழந்துவிட முடியும்.

_______ நமது உள்ளமெனும் கண்ணாடியை மெருகேற்றும் பணியானது, நம்முடைய வாழ்க்கையின் ஏதாவது ஒரு கட்டத்தில், முடிவுபெறுகிறது

6. கீழ்க்காணும் கேள்விகளுக்கு விடையளிக்கவும்.

அ. ஒரு தூய உள்ளத்தின் நோக்கம் என்ன? _______________________________________

_______________________________________________________________

ஆ. தூய்மையற்ற ஓர் உள்ளம் எதனை சாதிக்க முடியும்? ________________________________

________________________________________________________________________________

இ. மெய்மை சூரியன்பால் திரும்பாத ஓர் உள்ளமெனும் கண்ணாடி என்னவாகின்றது?

________________________________________________________________________________

7. கீழ்க்காணும் கேள்வியைப் பற்றி உங்கள் குழுவின் பங்கேற்பாளர்களுடன் விவாதிக்கவும்: சேவைப்பாதையில் நடக்கும் ஒருவர் எவ்வாறு தன்னை இவ்வுலகின் புழுதி மற்றும் மாசு ஆகியவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்கிறார்?

8. பின்வரும் மேற்கோளை நீங்கள் மனனம் செய்திட விரும்பலாம்:

**"தனது வலிமையின் ஆற்றலின் மூலம், சூனியமெனும் நிர்வாண நிலையிலிருந்து, தனது படைப்பினைத் தோற்றுவித்து, அதற்கு உயிரெனும் அங்கியினை அணிவித்துள்ள இறைவனுக்கே அனைத்துப் புகழ்ச்சியும் பேரொளியும் உரியதாகட்டும். படைப்புப் பொருள்கள் அனைத்தின் மத்தியிலிருந்து, அவர், தனது பிரத்தியேகச் சலுகைக்காக, மனிதனெனும் இரத்தினத்தைப் போன்ற மெய்ம்மையினைத் தேர்ந்தெடுத்து, அதற்கு, அவரை அறிந்துகொள்ளும் விசேஷ தன்மையையும் அவரது பேரொளியின் மகிமையினைத் தியானித்திடும் ஆற்றலையும் வழங்கியுள்ளார்."** [2]

## பகுதி 3

நாம் ஒவ்வொருவரும் கடவுளை அறிந்து அவரது திருநாமங்களையும் பண்புகளையும் பிரதிபலிப்பதற்கான திறனாற்றல் வழங்கப் பெற்றுள்ளோம். எண்ணற்ற பிற இயலாற்றல்களும் நமக்கு வழங்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், திறனாற்றலின் அளவு எல்லாருக்கும் சமமானதன்று; கடவுள் நமது திறனாற்றலுக்கும் அப்பாற்பட்ட ஒன்றை நம்மிடம் கோரமாட்டார். நம்மிடம் கோரப்படுவது, நாம் இயலாற்றல் முறையில் பெற்றுள்ள ஆற்றலை முழுமையாக மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே. பஹாவுல்லா கூறுகின்றார்:

**உங்கள் ஒவ்வொருவரின் உள்ளேயும் நாம் எமது படைப்பை முழுமை பெறச் செய்துள்ளோம்; அதன்வழி, எமது கைவேலையின் உயர்சிறப்பு மனிதர்களுக்குப் பூரணமாக வெளிப்படுத்தப்படக்கூடும். அதனால், ஒவ்வொரு மனிதனும், மகிமைமிக்கவரான ஆண்டவனின் அழகினைத் தானாகவே பாராட்ட முடிந்து வந்திருக்கின்றது; அத்தகைய ஆற்றல் அவனுக்கு அளிக்கப்பட்டிருக்கவில்லை எனில், எங்ஙனம், அவன், தன் தவற்றுக்குக் காரணங்கூற அழைக்கப்பட முடியும்?** [3]

தெய்வீக பண்புகளையடைய, இறைவன் நம் ஒவ்வொருவருக்கும் விதித்துள்ள உயர்ந்த ஆன்மிக நிலையை உணர்ந்து அதை நோக்கி நாம் சீராகப் பயணிக்க வேண்டும். நமது இதயங்கள் உண்மை அழகான சர்வ-மகிமைமிக்கவரின் அழகை நோக்கி ஈர்க்கப்பட வேண்டும். இதுவே நமது சிந்தனைகளையும் செயல்களையும் வழிகாட்டுவதற்கான பூரண அளவுகோலாகும்; நாம் சராசரித் தன்மையோடு திருப்தியடையக்கூடாது. இன்றைய சமுதாயத்தின் அளவுகோலுக்கு இணங்க வாழ்வது நம்மை சராசரித்தன்மைக்குள் ஆழ்த்திவிடும். பிறருடன் போட்டியிடுவதன் மூலமாகவே நாம் உயர்சிறப்பை அடைய முடியும் என பலர் நினைக்கின்றனர். ஆனால், உண்மையில், போட்டி என்பது இந்த உலகத்தின் பொறிகளில் நம்மை மேலும் சிக்க வைத்திடும். கடவுள் நமக்கு அபரிமிதமாக விதித்துள்ளதை அடைவதற்கான தீவிர ஆவலே நம்மை உயர்சிறப்பை நோக்கி உந்தித்தள்ளும் ஆற்றலாக இருக்க வேண்டும். உயர்சிறப்பிற்காகப் பாடுபடுதல் என்பது நமக்கு வழங்கப்பட்டுள்ள

இயலாற்றல்களை முழுமையாக மேம்படுத்திக் கொள்ள முயல்வதாகும். ஷோகி எஃபெண்டி, கடவுளிடம் நெருக்கம்பெற ஆவலுறுவோர்,

> **"...தாங்கள் வாழ்கின்ற சமுதாயத்தின் கீழ்த்தரமான நிலைமைகளையோ, தங்களைச் சுற்றிலுமுள்ள மக்கள் வெளிப்படுத்தும் தார்மீக வீழ்ச்சி, சீர்கெட்ட நடத்தை ஆகியவற்றுக்கான அறிகுறிகளையோ கண்ணுறக்கூடாது. "ஒப்பீடு சார்ந்த தனிச்சிறப்பு மற்றும் உயர்சிறப்பு ஆகியவற்றால் மட்டும் அவர்கள் மனநிறைவடையக்கூடாது. மாறாக, அவர்கள் மகிமை என்னும் எழுதுகோலின் ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் ஆகியவற்றைத் தங்களுடைய அதிவிழுமிய இலக்காக நிர்ணயித்து, மேன்மைமிக்க உச்சங்களின் மீது தங்கள் பார்வையை நிலைநாட்ட வேண்டும். அப்போதுதான், விரும்பத்தக்க இலக்கான தெய்வீக நல்லொழுக்கம் மற்றும் விழுமியங்கள் ஆகியவற்றின் உதாரணமாக விளங்குவது என்பதைத் தவிர வேறொன்றுமில்லாத ஓர் இலக்கு, எவ்வளவு தூரமாக உள்ளது என்பதும் கடந்து செல்ல வேண்டிய கட்டங்கள் எவ்வளவு அதிகமாக உள்ளன என்பதும் தயக்கமின்றி உணரப்படும்." என கூறுகின்றார்.[4]**

1. மேலே காணப்படும் முதல் மேற்கோளின் அடிப்படையில், "திறனாற்றல்" குறித்த கருத்தாக்கத்தின் மீது சற்று சுருக்கமாகப் பிரதிபலிப்போம். பின்வரும் கூற்றுகள் சரியானவையா என்பதைத் தீர்மானிக்கவும்:

   _______ மக்கள் அனைவருக்கும் கடவுளை அறிந்துகொள்ளவும் அவரது நாமங்கள் மற்றும் பண்புகளைப் பிரதிபலிக்கவும் திறனாற்றல் உண்டு.

   _______ சில மக்கள் கடவுளின் அவதாரத்தை நிராகரிப்பதற்கான காரணம் அவர்களுக்கு கடவுளை அறிந்துகொள்ளவும் அவரது திருவழகைப் பாராட்டவும் திறனாற்றல் இல்லை என்பதே.

   _______ இரக்கமற்ற ஒருவருக்கு இரக்கம் காட்டுவதற்கான திறனாற்றல் இல்லை.

   _______ நேர்மையற்றவனாக வளர்க்கப்பட்ட ஒருவனுக்கு நேர்மைக்கான திறனாற்றல் கிடையாது.

   _______ மற்றவரின் திறனாற்றலை அறிந்துகொள்ள முடியும்.

   _______ நாம் ஒவ்வொருவரும் நமது சொந்த திறனாற்றலை அறிவோம்.

   _______ நமது திறனாற்றலின் அளவைக் கடவுள் மட்டுமே அறிவார்.

   _______ நாம் நமது சொந்த சாத்தியமான ஆற்றல்களை சொந்த முயற்சிகளால் மட்டுமே மேம்படுத்திக்கொள்கின்றோம்.

   _______ நாம் நமது இதயங்களைத் தூய்மைப்படுத்தி, சமுதாயத்தின் தன்மைமாற்றத்திற்குப் பங்களிக்க முயலும்போது இறைவனின் அருளால் நமது ஆற்றல்களை மேம்படுத்திக் கொள்கிறோம்.

2. "திறனாற்றல்" என்னும் கருத்தாக்கம் பற்றி சிறிது சிந்தித்துள்ளோம் என்பதால், ஆன்மிக வளர்ச்சியின் தன்மையைப் பற்றிய கூடுதல் நுண்ணறிவுகளைப் பெறுவதற்கு "அதிசிறப்பு" என்னும் தொடர்புடைய கருத்தைப் பற்றி நாம் ஆராயலாம். அவ்வாறு செய்திட நமக்கு உதவியாக, மேலே உள்ள இரண்டாவது மேற்கோள் மற்றும் அடுத்த பல பயிற்சிகளில் கவனம் செலுத்துவோம். பின்வரும் வாக்கியங்களில் வெற்றிடங்களை நிரப்பவும்:

அ. நாம் பின்வருவனவற்றைக் கண்ணுறக்கூடாதென ஷோகி எஃபெண்டி கூறுகின்றார்:

— ______________________________________________________________

— ______________________________________________________________

______________________________________________________________

ஆ. நாம் பின்வருவனவற்றுடன் மனநிறைவு கொள்ளக்கூடாது:

— ஒப்பீடு சார்ந்த ______________________________

— ஒப்பீடு சார்ந்த ______________________________

இ. ஒப்பீட்டளவிலான அதிசிறப்புடன் திருப்தியடையாமல் நாம் ____________________

ஈ. நாம் ________________________________________________ மேன்மைமிக்க உச்சங்களின்பால் நமது பார்வையைப் பதிக்க வேண்டும்.

உ. ஒரு முறை நாம் கடவுளின் ஆலோசனைகளை நமது அதிவிழுமிய இலக்காக நிர்ணயித்துவிட்டால், நாம் ____________________________________________

______________________________________________________________ உணர்வோம்.

3. சமுதாயத்தின் கீழ்த்தரமான நிலைமைகள் மற்றும் தார்மீக சிதைவிற்கும் மேலே உயரவேண்டுமானால், நாம் தெய்வீக நல்லொழுக்கங்கள் மற்றும் விழுமியங்களை(values) உருவாக்கிக்கொள்ள வேண்டும். இன்று சமுதாயத்தில் காணப்படும் சில நிலைமைகளின் பட்டியல் கீழே உள்ளது. ஒவ்வொன்றிற்கும், அவற்றை நேரடியாக எதிர்த்துப் போராடும் பின்வரும் பண்புக்கூறுகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

கற்புடைமை, கடவுளின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிதல், அனைத்தையும் தழுவும் அன்பு, நேர்மை, பற்றின்மை, தார்மீக நேர்மை புரிதல், நீதி, பணிவு.

ஒடுக்குமுறை: ______________________________________________________

லௌகீகவாதம்: ______________________________________________________

சட்டமின்மை: ______________________________________________________

தார்மீகசிதைவு: ______________________________________________________

ஊழல்: ______________________________________________________

தப்பெண்ணம்: ______________________________________________________

அகங்காரம்: ______________________________________________________

வெறுப்பு: ______________________________________________________

ஒழுங்கற்ற இன்பங்களில் ஈடுபடல்: ________________________________________

4. நம்மை அற்பநடத்தைகளிலிருந்து பாதுகாக்கும் சில மனப்பான்மைகளும் பழக்கங்களும் யாவை ________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

5. கீழே உள்ள முதல் நெடுவரிசை ஒப்பீட்டளவில் அதிசிறப்பின் சில உதாரணங்களையும் இரண்டாவது உண்மையான அதிசிறப்பின் சில உதாரணங்களையும் தருகிறது. ஒப்பீட்டளவில் அதிசிறப்பின் உதாரணங்களை உண்மையான அதிசிறப்புடன் பொருத்தவும்.

| | | |
|---|---|---|
| வகுப்பில் பிறரை விஞ்சிடுவதற்காகக் கடினமாகப் படித்தல் | அ. | எல்லா சூழ்நிலைகளிலும் நேரிமையான நடத்தையை மேற்கொள்வது |
| நமது மாதாந்திர செலவுகளைச் செலுத்தி, ஒரு பகுதியைப் பொழுதுபோக்கிற்காக ஒதுக்கிய பின் எஞ்சியிருக்கும் பணத்தில் சிறிதை நிதிக்கு வழங்குதல். | ஆ. | வகுப்பில் நாம் படிக்கும் பாடங்களை முழுமையாகப் புரிந்துகொள்ள முயல்வது |
| நாம் ஒருவேளை பிடிபடுவோம் என்பதால் தவறுகளைத் தவிர்த்தல் | இ. | எல்லா மனிதர்பாலும் அளவுகடந்த அன்பு செலுத்துதல் |
| பிற இனத்தவரையும் வகுப்பினரையும் சகிப்புத் தன்மையுடன் நடத்துதல் | ஈ. | நமது சக மனிதரின் பொதுநலனை தீவிரமாக மேம்படுத்துதல் |
| எவருக்கும் தீங்கு செய்யாதிருத்தல் | உ. | நிதியத்திற்குத் தாராளமாகவும் தியாகத்துடன் பங்களித்தல் |

6. உங்கள் குழு உறுப்பினர்களுடன் பின்வரும் கேள்விகளை விவாதிக்கவும்:

அ. நாம் ஏன் ஒப்பீட்டளவிலான தனிச்சிறப்பு மற்றும் அதிசிறப்புடன் திருப்தி அடையக்கூடாது.

ஆ. நமது அதிசிறப்பின் தரம் என்னவாக இருக்கவேண்டும்?

இ. சிலர் போட்டியின் மூலமாக மட்டுமே அதிசிறப்பை அடைய முடியுமென நினைக்கின்றனர். மறைமொழிகளில், பஹாவுல்லா நமக்குக் கூறுகின்றார்: "சதா வீண் தகராறுகளில் ஈடுபட்டும், தன் சகோதரனை விஞ்சிடவும் முயல்பவர் எல்லா

மனிதர்களிலும் மிகவும் அலட்சியமானவர் ஆவார்." போட்டியின் மூலமின்றி, அதிசிறப்பை எவ்வாறு அடைவதென நீங்கள் நினைக்கிறீர்கள்?

ஈ. அதிசிறப்பை அடைவதற்கு, நமது திறனாற்றலை நாம் முழுமையாக உருவாக்கிக் கொள்ள முயல்வது அவசியமாகும். "பரலோக தார்மீகங்கள் மற்றும் விழுமியங்களுக்கு உதாரணமாக இருக்கின்றோம்" என்னும் இலக்கை நாம் அடைந்துவிட்டோமென என்றுமே கருத முடியுமா?

## பகுதி 4

மனித உள்ளமானது அன்பு செலுத்துவதற்காகவே படைக்கப்பட்டது. அது தன்னியல்பாக, எதனுடனாவது இணைக்கப்பட்டிருக்க வேண்டும். அஃது உலகியல் விஷயங்களில் பற்றுக் கொள்ளாமல், இறைவனுடைய ஒளியைப் பிரதிபலிக்க முடிய வேண்டுமென்றால், அது இறைவனுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். அன்பை வெளிப்படுத்துவதற்குப் பல வழிகள் உண்டு. நாம் நமது குடும்பம், நமது நண்பர்கள் நமது சமூகம் மற்றும் நமது நாட்டை நேசிக்கிறோம். எனினும், அன்பின் இவ்வகை யாவுமே வரம்பிற்குட்பட்டவை. இறைவன் மீதான அன்பு ஒன்று மட்டுமே எல்லையற்ற அன்பாகும். அவருடைய அன்பு யாவற்றையும் தழுவியுள்ளது. நம்முடைய உள்ளங்கள் தூய்மையாக இருந்து, அவருடைய அன்பைப் பிரதிபலிக்கும்போது, நாம் மனித இனம் முழுவதற்காகவும் எல்லையற்ற, தன்னலமில்லா அன்பினை வெளிப்படுத்துகிறோம். மற்றவர்கள் மீது நாம் கொண்டிருக்கும் அன்பானது, இறைவனுடைய எல்லையற்ற அன்பினால் பிரகாசம் பெறவில்லையென்றால், அது பொறாமை, உடமையுணர்வு மற்றும் தப்பெண்ணம் போன்ற விரும்பத்தகாப் பண்புகளைப் பெற்றிடும்.

நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டிய அன்பின் மிக முக்கியமான பண்பு ஒன்று உள்ளது. அன்பு எப்போதும் பயத்துடனேயே உடன்வரும். நாம் விரும்புவோருக்கு நாம் பயப்படுகிறோம் என்பது இதன் அர்த்தமல்ல. நம் பயமெல்லாம் நமது அன்புக்குரியவர்களை நாம் இழந்துவிடுவோம் அல்லது அவர்களின் அன்பை இழந்துவிடுவோம் என்பதே. ஆதலால், கடவுளின் அன்போடு சேர்ந்து, நம் இதயத்தில் கடவுளின்பால் பயமும் இருக்க வேண்டும் - நமது செயல்கள், நமது தவறான செய்கைகள், கடவுளின் அன்பு நம்மை வந்தடைவதைத் தடுக்கும் என்ற பயம். நம் செயல்கள் கடவுள் நம்மை நேசிப்பதைத் தடுத்திடுமென சொல்லவில்லை. ஏனெனில், அவரது அன்பு எல்லையற்றது மற்றும் மனிதகுலத்தின்மீது அதன் பொழிவுகள் ஒருபோதும் நின்றுவிடுவதில்லை. ஆனால், நாம் செய்யும் காரியங்கள் அவருடைய அன்பு நம்மை வந்தடைவதை அனுமதிக்காத் தடைகளாக ஆகிடலாம். மறைமொழிகளில் பஹாவுல்லா பின்வருமாறு கூறுகின்றார்:

> **“உயிருருவின் புத்திரனே! என்னை நேசிப்பாயாக, அதனால் யாம் உன்னை நேசிக்க இயலும். நீ என்னை நேசிக்காவிடில் எமதன்பு எவ்வகையிலும் உன்னை வந்தடைய இயலாது. ஊழியனே, இதனை நீ அறிவாயாக.”** [5]

ஆன்மிகப் பண்புகளை உருவாக்கிக் கொள்வது முற்றிலும் இறை அன்பையும் இறை அச்சத்தையும் பொறுத்துள்ளது. திருவாக்குகளில் உள்ள பல உரைப்பகுதிகள் நமது ஆன்மிக வாழ்வின் இந்த இரண்டு இன்றியமையா ஆற்றல்கள் குறித்த நமது புரிதலைத் தெளிவுபடுத்துகின்றன. அப்துல்-பஹா கூறுகின்றார்:

> **“இறை அன்பும் ஆன்மிக ஈர்ப்பும் மனித இதயத்தைத் தூய்மைப்படுத்தி, புனிதமாகிடச் செய்யுமாதலால் அதைப் புனிதத்தன்மையெனும் மாசற்ற ஆபரணத்தைக் கொண்டு**

**அணிவித்து அலங்கரித்திடும்; பின்னர், இதயம் இறைவன்பால் முற்றிலும் பற்றுக்கொண்டு, புனித பரிபூரணரின்பால் அர்ப்பணித்துக் கொண்டபின், கடவுளின் அருள் அங்கு வெளிப்படுத்தப்படும்."**

**"இவ்வன்பானது உடலைச் சார்ந்ததன்று மாறாக, முற்றிலும் ஆன்மாவைச் சார்ந்ததாகும். தங்களின் உள்ளார்ந்த நிலை, இறையன்பினால் தூண்டப்பட்டுள்ள அந்த ஆன்மாக்கள் பரவிடும் ஒளிக்கதிர்களைப் போலாவர்; அவர்கள் ஒரு தூய படிகம்போன்ற வானில் புனிதத் தன்மையின் நட்சத்திரங்களாகப் பிரகாசித்திடுவர். ஏனெனில், நிஜ அன்பு, உண்மை அன்பு இறைவன்பாலான அன்பாகும்; இவ்வன்பானது மனிதரின் கருத்துகளுக்கும் கற்பனைகளுக்கும் அப்பால் புனிதப்படுத்தப் பட்டதாகும்."[6]**

பஹாவுல்லா கூறுகின்றார்:

**"இந்நாளில், இறைவனின் உதவியாளராக விரும்புகின்ற ஒருவர், தான் உடைமையாகக் கொண்டுள்ளவற்றின்பால் தனது கண்களை மூடி, அவற்றை இறைவன் தொடர்பானவற்றின்பால் திறக்கட்டும். தனக்கு இலாபமானவற்றில் ஈடுபடுவதை விடுத்து, எல்லாம் வல்லவரின் அனைத்தையும் நிர்ப்பந்திக்கவல்ல நாமத்தை உயர்வுறச் செய்வனவற்றில் தனது கருத்தைச் செலுத்தட்டும். அவர், தனது உள்ளத்தைத் தீய உணர்வெழுச்சிகளில் இருந்தும் ஒழுங்கற்ற ஆசைகளிலிருந்தும் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்; ஏனெனில், இறைவன்பாலான அச்சமே அவரை வெற்றிபெறச் செய்திடும் ஆயுதமும், அவர் தனது நோக்கத்தை அடைவதற்கான முதன்மை கருவியாகும். இறைவன்பால் பயமே தனது சமயத்தைப் பாதுகாக்கும் கவசமும் தனது மக்களை வெற்றிபெறச் செய்ய உதவிடும் கேடயமுமாகும். அது எந்த ஒரு மனிதனுமே அதனுடன் போட்டியிடவியலாத ஓர் ஆற்றலும், இழிவுப்படுத்த முடியாத ஒரு நியமமுமாகும். அதன் துணையைக் கொண்டும், சைனியங்களுக்கெல்லாம் பிரபுவாகிய அவரது அனுமதியின் பேரிலும், இறைவனின் அண்மைக்கு ஈர்க்கப்பட்டோர், மனித உள்ளங்களெனும் கோட்டைகளை அடக்கி வெற்றிகொள்ள முடிந்திருக்கின்றது."[7]**

1. பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்யவும்:

அ. நாம் கடவுள் மீது ___________________ செலுத்தாவிடில் அவரது அன்பு நம்மை எவ்வகையிலும் ______________________.

ஆ. இறை அன்பும் ஆன்மிக ஈர்ப்பும் மனித இதயத்தை _____________________________, ____________________ ஆகிடச் செய்யும்.

இ. இதயம் இறைவன்பால் முற்றிலும் ___________________, புனித பரிபூரனரின்பால் _______________ கொண்டதும், கடவுளின் _______________ அங்கு வெளிப்படுத்தப்படும்.

ஈ. இவ்வன்பானது ____________________ சார்ந்ததன்று மாறாக முற்றிலும் ________________ சார்ந்ததாகும்

உ. தங்களின் உள்ளார்ந்த நிலை இறை அன்பினால் _______________ அந்த ஆன்மாக்கள் __________________ ஒளிக்கதிர்களைப் போன்றவர்.

ஊ. தங்களின் உள்ளார்ந்த நிலை கடவுள் அன்பினால் தூண்டப்பட்டுள்ள அந்த ஆன்மாக்கள் ஒரு தூய படிகம் போன்ற வானில் _________________ தன்மையின் ___________________________ .

எ. ஏனெனில், ______________ அன்பான ________________ அன்பு _______________ மீதான அன்பாகும்; இவ்வன்பானது மனிதரின் _________________ ______________ அப்பால் புனிதப்படுத்தப் பட்டதாகும்.

2. பின்வரும் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்:

அ. மனித இதயத்தைத் தூய்மைப்படுத்தி புனிதமாக்கிடுவது எது? ____________________

________________________________________________________________________________

ஆ. கடவுள் அருளை ஈர்ப்பதற்கு இதயமானது என்ன நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும்? ____________________________________________________________________

________________________________________________________________________________

இ. கடவுள் மீதான அன்பு உடலைச் சார்ந்த ஒன்றா அல்லது ஆன்மிகத்தைச் சார்ந்த ஒன்றா? ______________________________________________________________________

ஈ. நமது ஆன்மாக்கள் கடவுள் அன்பினால் ஒளியூட்டப்படும் போது நாம் என்ன ஆகின்றோம்? ________________________________________________________________

________________________________________________________________________________

உ. நிஜ அன்பு என்பது என்ன? _____________________________________________________

3. பின்வரும் கேள்வியை உங்கள் குழு உறுப்பினர்களுடன் விவாதிக்கவும்: தங்களின் உள்ளார்ந்த நிலை இறை அன்பினால் ஒளிரச் செய்யப்பட்டும், ஒரு தூய படிகம்போன்ற வானில் புனிதத் தன்மையின் நட்சத்திரங்களாகப் பிரகாசிப்போர், தங்களைச் சுற்றியுள்ள மக்கள் மீது எவ்விதமான தாக்கத்தைச் செலுத்துகின்றனர்?

4. அன்பின் வெளிப்பாடுகள் அனைத்தும், யாவற்றையும் அரவணைக்கும், எல்லையற்ற கடவுளின் அன்பினால் ஒளிரச் செய்யப்பட்டாலன்றி அவை எல்லைக்கு உட்பட்டே இருந்திடும். கீழே வழங்கப்பட்டுள்ள சொற்களைப் பயன்படுத்தி, இந்தக் கருத்தை வெளிப்படுத்தும் வாக்கியங்களை எழுதவும். உங்களுக்கு உதவியாக சில உதாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| மகிழ்ச்சி | கடவுள் மீதான அன்பு நம் இதயங்களுக்கு மகிழ்ச்சியூட்டுகின்றது |
| சுதந்திரம் | கடவுள் மீதான அன்பும் அவருடன் இணக்கப்பட்டிருத்தலுமே நமது உண்மையான சுதந்திரமாகும் |
| பேராசை | லௌகீக பொருள்கள் மீதான ஆசை பேராசைக்கு வழிவகுக்கும் |

| | |
|---|---|
| பொறாமை | நமது நண்பர்கள் மீதான அன்பு கடவுள் அன்பினால் ஒளிரச் செய்யப்பட்டாலன்றி அது பொறாமைக்கு வழிவகுத்திடும் |
| ஒளி | ______________________________ |
| துக்கம் | ______________________________ |
| ஏமாற்றம் | ______________________________ |
| வாழ்வு | ______________________________ |
| பெரும் தாபம் | ______________________________ |
| பேராவல் | ______________________________ |
| கிருபை | ______________________________ |
| கற்பனைகள் | ______________________________ |
| உடைமையுணர்வு | ______________________________ |
| பயம் | ______________________________ |
| இரக்கம் | ______________________________ |
| பரிவிரக்கம் | ______________________________ |
| புனிதத்தன்மை | ______________________________ |
| தப்பெண்ணம் | ______________________________ |
| நீதி | ______________________________ |
| அறிவு | ______________________________ |
| துணிவு | ______________________________ |

5. பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்யவும்:

அ. இந்நாளில் நாம் கடவுளின் உதவியாளராக ஆகிட விரும்பினால் கடவுளின்பால் பயமே நம்மை வெற்றிபெறச் செய்யும் ____________________

ஆ. நாம் நமது நோக்கத்தை அடைவதற்கு கடவுளின்பால் பயமே நமது ________________

இ. கடவுளின்பால் பயமே அவரது சமயத்தைப் பாதுகாக்கும் ___________________________

ஈ. கடவுளின்பால் பயமே அவரது மக்களை வெற்றிபெற உதவிடும் ___________________

உ. கடவுளின்பால் பயமே எவருமே ___________________ ஒரு நியமம் ஆகும்.

ஊ. கடவுளின்பால் பயமே அதனுடன் எவருமே போட்டியிட முடியாத ஓர் __________________ ஆகும்.

எ. கடவுளின்பால் பயமே அவரது அண்மையை அடைந்தோர் மனித உள்ளங்களெனும் ____________________ _____________________ _____________________ முடிந்திருக்கின்றன

6. உங்கள் குழுவினருடன் பின்வரும் கேள்விகளை விவாதிக்கவும்:

அ. ஆன்மிகப் பண்புகளை உருவாக்கிக்கொள்வதில் கடவுளின்பால் அன்பு ஏன் முக்கியமாகின்றது

ஆ. ஆன்மிகப் பண்புகளை உருவாக்கிக்கொள்வதில் கடவுளின்பால் பயம் ஏன் முக்கியமாகின்றது?

7. பின்வரும் மேற்கோளை நீங்கள் மனனம் செய்திட விரும்பலாம்:

**“தேடுபவர், இறைவனின் அன்பெனும் சமுத்திரத்தில் மூழ்கியிருக்கும் வேளையில்,ஆழ்ந்த ஏக்கமிகு ஆவலினால் நெகிழப்பட்டவராக, இறைவனின் ஆணைகளை மேற்கொள்வதற்குக் கண்டிப்பாக முன்னெழுவார்.”** [8]

## பகுதி 5

இறைவன் மீதான அன்பு, அவரது சமயத்திற்கான ஒரு சேவை பாதையில் நடப்பதற்கு நமக்கு உந்துகை அளிக்கும் ஆற்றலாகும். இந்தப் பாதையில் நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் அவர் மீதான நமது அன்பை அதிகரிக்கிறது. எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும், நம் இதயங்கள் என்னும் கண்ணாடிகள் மேலும் அதிகமாக மெருகூட்டப்பட்டும், நமது ஆன்மிக குணங்களை நாம் மேலும் வளர்த்துக் கொள்ளவும் செய்கிறோம். நமது எண்ணங்களை ஒளிரச் செய்வதும், இந்தப் பாதையில் நமது செயல்களை வழிநடத்தவும் செய்வது இறைவனின் சட்டமே ஆகும். நாம் அவருடைய சட்டங்களுக்குக் கீழ்ப்படியாது இருப்போமேயானால், நமது பாதை இருண்டுவிடும், நாம் வழிதவறியும் போய்விடுவோம். கிதாப்-இ-அக்டாஸ் திருநூலில் பஹாவுல்லா, கடவுள் அவதாரத்தை அங்கீகரித்தல் மற்றும் அவரது கட்டளைகளைப் பின்பற்றுதல் என்னும் நமது இரட்டைக் கடமைகளைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்:

**“இறைவனால் தமது ஊழியர்களுக்கு விதிக்கப் பட்ட முதல் கடமை யாதெனில் தமது வெளிப்பாட்டின் பகலூற்றானவரும் தமது சட்டங்களுக்குத் தோற்றுவாய் ஆனவரும் தமது சமயம் என்னும் இராஜ்யம், படைப்புலகம் ஆகிய இரண்டிலும் இறைமையைப் பிரதிநிதிப்பவருமாகிய அவரை அறிந்து, ஏற்றுக் கொள்வதுதான். இக் கடமையை எய்திடும் ஒருவன் நல்லன அனைத்தையும் அடைந்தவன் ஆவான்; அதன் இழப்பிற்கு ஆளாகிடும் ஒருவன் நேர்மைச் செயல் ஒவ்வொன்றிற்கும் தோற்றுவாயாக இருந்த போதிலும் வழி தவறிப் போனவனே. அதி விழுமிய இந் நிலையை, உயர்வு மிகு இவ்வொளியின் உச்சத்தை அடையும் ஒவ்வொருவனும் உலகின் ஆவலாகிய அவரது ஒவ்வொரு கட்டளையையும் கடைப்பிடிக்க வேண்டியது இன்றியமையாததாகும். இவ்விரட்டைக் கடமைகள் பிரிக்கப்பட இயலாதவை. ஒன்றின்றி மற்றது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இவ்வாறுதான் தெய்வீக அருட்தூண்டலின் ஊற்றாகிய அவரால் ஆணை இடப்பட்டுள்ளது.”** [9]

கடவுளின் சட்டங்கள் குறித்து பஹாவுல்லா கூறுகின்றார்:

**“வையத்தின் மக்களே! எமது ஊழியர்களின் மத்தியில் எமது கட்டளைகளே எமது அன்புமிகு அருள்பாலிப்புகள் என்னும் ஒளி விளக்குகள் என்பதையும் படைப்புலகின்பால் எமது கருணைக்குத் திறவுகோல் என்பதையும் நிச்சயமாக அறிந்திடுவீராக.”** [10]

தமது நிருபம் ஒன்றில் அவர் கூறுகின்றார்:

**“மெய்யாகவே, அதை அவர்கள் அறிவார்களேயானால், கடவுளின் சட்டங்கள் சமுத்திரத்தை போன்றவையும், மனிதர்களின் குழந்தைகள் மீன்களும் ஆகும்.”** [11]

பஹாவுல்லா மேலும் பிரகடனம் செய்கிறார்:

**“உண்மையிலேயே அவரது கட்டளைகள்தாம், உலகத்தின் பாதுகாப்புக்கும் அதன் மக்களின் இடர்காப்புக்கும் வலுமிக்க அரணாக அமைந்திடுகின்றன—உண்மையை ஒப்புக்-கொண்டும் அதனைப் புரிந்துகொண்டும் உள்ளவர்களுக்கு அஃது அறிவொளியாகின்றது; அப்பால் திரும்பி அதனை நிராகரித்திட்டோருக்கு அது நெருப்பாகி விடுகின்றது.”** [12]

**“நீங்கள் புரிந்துகொள்பவர்களாக இருப்பீர்களாயின், அவரது சட்டம் உங்களுக்கு ஓர் அரணாகும்.”** [13]

அவரது திருவெளிப்பாட்டின் சட்டங்களையும் விதிமுறைகளையும் உள்ளடக்கியுள்ள கித்தாப்-இ-அக்டாஸ் குறித்து அவர் நம்மை அறிவுறுத்துகின்றார்:

**“கூறுவீராக: மனிதர்களே, அதனை எடுத்துக்கொள்ளுங்கள்; அதனில் கொடுக்கப் பட்டுள்ளவற்றைக் கடைப்பிடியுங்கள்; அதனில், மன்னிக்கும், வள்ளன்மைமிக்க உங்கள் பிரபுவின் வியத்தகு தெய்வக் கட்டளைகளும் அடங்கியுள்ளன. உண்மையிலேயே அது உங்களை இவ்வுலகிலும் மறுவுலகிலும் நன்மை அடையச் செய்திடும்; மேலும் அஃது, உங்களுக்குப் பொருத்தமற்றவற்றைத் தூய்மைப்படுத்திடும்.”**[14]

அவரது திருவாசகங்கள் ஒன்றில் நாம் படிக்கின்றோம்:

**“இறைவனின் சட்டங்கள் அவரது மாட்சிமை பொருந்திய வெளிப்பாடு எனும் விண்ணுலகிலிருந்து அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. அவற்றை அனைவரும் தளரா ஊக்கத்துடன் கடைப்பிடிக்க வேண்டும். மனிதனின் அதிசிறந்த தனித்தன்மை, அவனது உண்மையான முன்னேற்றம், அவனது இறுதி வெற்றி, எப்பொழுதும் அவற்றையே சார்ந்திருக்கின்றது, தொடர்ந்தும் அவற்றையே சார்ந்திருக்கும். யாரொருவர் இறைவனின் கட்டளைகளைப் பின்பற்றுகின்றாரோ, அவர், நித்திய கழிபேருவகையினை அடைந்திடுவார்.”** [15]

1. மேலே உள்ள மேற்கோள்கள் பின்வருவனவற்றைத் தாத்பரிக்கின்றன:

_______ கடவுளின் அவதாரத்தை அங்கீகரிப்பது நமது முதல் கடமையாகும்.

_______ நாம் அவரை அங்கீகரித்த பிறகு, நமது அடுத்த கடமை அவருக்குக் கீழ்ப்படிவதாகும்.

_______ கடவுளின் அவதாரத்தை அங்கீகரிப்பது அவரது சட்டங்களுக்குக் கீழ்ப்படிவதை விட மிக முக்கியமாகும்.

_______ சட்டங்களுக்குக் கீழ்ப்படிவது கடவுளின் அவதாரத்தை அங்கீகரிப்பதைவிட மிகவும் முக்கியமாகும்.

_______ கடவுளின் அவதாரத்தை அங்கீகரிப்பதும் அவரது சட்டங்களுக்குக் கீழ்ப்படிவதும் சமமான முக்கியதுவம் உடையவை; ஒன்றின்றி மற்றது ஏற்றுக்கொள்ளப்பட முடியாது.

_______ கடவுள் நம்மீது அன்பு செலுத்துவதன் காரணமாக நமக்குச் சட்டங்களை வழங்கியுள்ளார்

_______ நாம் கடவுளிடம் அச்சம் கொள்வதற்காக அவர் நமக்கு சட்டங்கள் வழங்கியுள்ளார்.

_______ நாம் தண்டனைக்கு பயந்து கடவுளின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

_______ நாம் கடவுள் மீது அன்பு செலுத்துவதன் காரணமாக அவரது சட்டங்களுக்குக் கீழ்ப்படிகின்றோம்.

_______ நாம் கடவுளின் கருணையை ஈர்ப்பதற்காக அவரது சட்டங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

_______ கடவுள் தமக்குக் கீழ்ப்படிவோரை மட்டுமே விரும்புகின்றார்

_______ கடவுளுக்குக் கீழ்ப்படிவோர் அவரது அன்பைப் பெறுவதற்குத் தங்களின் இதயங்களைத் திறக்கின்றனர்.

_______ கடவுளின் சட்டங்கள் என்னும் சமுத்திரத்திற்கு வெளியே நாம் வாழ முடியாது.

2. மேலே உள்ள மேற்கோள்களில் கடவுளின் சட்டங்கள் பின்வருமாறு வர்ணிக்கப்படுகின்றன

— கடவுளின் அருள்பாலிப்புகள் என்னும் ______________________

— கடவுள் __________________________ திறவுகோல்கள்

— எல்லா மனிதர்களும் மூழ்கியுள்ள ______________________

— உலகத்தின் ___________ அதன் மக்களின் ___________ வலுமிக்க அரண்

— உண்மையை ஒப்புக்கொண்டும் அதனைப் புரிந்துகொண்டும் உள்ளவர்களுக்கு அஃது ______________________; அப்பால் திரும்பி அதனை நிராகரித்திட்டோருக்கு அது ______________________விடுகின்றது

— நமக்கு ஓர் _________________ ஆகும்.

3. இப்போது கொடுக்கப்பட்ட இரண்டு உதாரணங்களுக்கும் அடுத்து, கடவுளுடைய சில சட்டங்கள் மற்றும் நியமங்களைக் கீழே பட்டியலிடுங்கள். மேற்கண்ட சொற்றொடர்களின் அடிப்படையில், அவை ஒவ்வொன்றையும் பார்ப்பது நமது வாழ்க்கைக்கு அவற்றின் முக்கியத்துவத்தைப் பற்றிய நமது புரிதலையும் சேவை பாதையில் நமது முயற்சிகளின் செயல்திறனையும் எவ்வாறு அதிகரிக்கிறது?

ஒவ்வொரு நாள் காலையும் மாலையும் கடவுள் திருவாக்கைப் படித்துப் பிரதிபலித்தல்

ஒவ்வொரு நாளும் கட்டாயப் பிரார்த்தனையை ஒப்புவித்தல்

4. கடவுளுக்குக் கீழ்ப்படியும் ஒரு சேவகனாக இருத்தல் என்பதன் அர்த்தம் என்ன?

_______ கடவுள் விதித்தவற்றின் விவேகத்தைத் தொடர்ந்து கேள்வி கேட்பது

_______ பஹாய் ஸ்தாபனங்களின் முடிவுகளை தொடர்ந்து எதிர்த்தல் அல்லது புறக்கணித்தல்

_______ கடவுளின் மற்ற ஊழியர்களை கண்மூடித்தனமாக பின்பற்றுதல்

_______ உண்மையை ஏற்றுக்கொண்டு அதன்படி வாழ வேண்டும் என்னும் நோக்கத்துடன் உண்மையை ஆராய்தல்

_______ உறுதியான காலடிகளுடன் கடவுளின் பாதையில் பயணித்தல்

_______ நமது எண்ணங்களையும் செயல்களையும் கடவுளின் போதனைகளுடன் இணைவாக்கிட முயல்தல்

_______ கடவுளின் சட்டத்தை மகிழ்ச்சியுடன் நிலைநிறுத்துதல், அவருடைய திருவாக்கை மேன்மைபடுத்துதல்

_______ சூழ்நிலைகள் எப்படிப்பட்டதாக இருப்பினும் கடவுளின் சட்டங்களுக்கு நாம் விசுவாசத்துடன் இருத்தல்

_______ நமது பலவீனங்களிலும் நலிவுகளிலும் ஆழ்ந்திருக்காமல், கடவுளின் கிருபையிலும் அவரது அருளிலும் நமது முழு நம்பிக்கையையும் உறுதியையும் வைத்தல்

5. இதற்கு முன் அவ்வாறு செய்யவில்லை என்றால், கித்தாப்-இ-அக்டாஸ்ஸிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் மேற்கோளை நீங்கள் இப்போது மனனம் செய்திட விரும்பலாம்:

**“எமது சக்தி என்னும் நா சர்வ வல்லமை பெற்றுள்ள எமது ஒளி என்னும் சுவர்க்கத்திலிருந்து எமது படைப்பை நோக்கி இச் சொற்களை இயம்புகின்றது : ‘எமது அழகின் மீதுள்ள அன்பின் பொருட்டு எமது கட்டளைகளைக் கடைப்பிடிப்பாயாக.’”[16]**

## பகுதி 6

கடவுளின் அவதாரத்தை அங்கீகரித்தல் நம் கண்களைத் திறக்கின்றது. நமது மேம்பாட்டிற்கு ஏதுவானதையும் தாழ்வுக்கு வழிவகுப்பதையும் அறிந்துகொள்கின்றோம் அவதாரத்தின் மூலம் நமக்குக் கொண்டுவரப்பட்ட திருவெளிப்பாட்டை நாம் படிப்பாய்வு செய்திடும் போது, மனிதகுலத்திற்கான கடவுளின் நோக்கத்தை நாம் அறிந்துகொள்கின்றோம். யாவற்றிலும் அவரது வலிமை மற்றும் ஆழங்காணமுடியா விவேகம் ஆகியவற்றின் ஓர் அடையாளத்தைக் காண்கின்றோம். கடவுள் அவதாரத்தின் மூலம் நாம் பெறுகின்ற அறிவும் அவர்பால் நாம் உணரும் அன்பும் நமக்கு உறுதியைத் தருகின்றன. நமது இதயங்கள் தடுமாறுவதில்லை நடுங்குவதுமில்லை.

நாம் தாழ்மையுடன் சேவை பாதையில் நடக்கும்போது, நாம் மெய்நம்பிக்கையிலும் மெய்யுறுதியிலும் வளர்கிறோம். நமது விசுவாசத்தின் அளவு அதிகரிக்கையில், கடவுளுடைய அருட்கொடைகளைப் பெறுவதற்கும் ஆன்மிகப் பண்புகளை வளர்த்துக்கொள்வதற்குமான நமது

திறமை அதற்கேற்ப வளர்கின்றது. நாம் உண்மைச் சூரியனை நோக்கி நம் பார்வையைத் திருப்புகின்றோம், தொடர்ந்தாற் போன்று ஒளிபெறுகிறோம். ஆதலால், இந்தப் பாதையில் ஒவ்வொரு செயலும் நனவுடனான அறிவுடன்--கடவுளைப் பற்றிய அறிவு, அவரது திருவெளிப்பாடு, மற்றும் மனிதகுலத்திற்கான அவரது நோக்கம்--மேற்கொள்ளப்படுகிறது இதுவே மெய்நம்பிக்கை என்பதன் உட்பொருளாகும். அப்து'ல்-பஹா கூறுகிறார்:

**"கடவுளின் புனித திருவாசலுக்கு முன்பாக நேர்மையான செயல்களைச் செய்பவன் பிரியமானவனும் ஏற்கத்தக்கவனுமாக இருப்பினும், செயல்கள் அறிவிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். ஒரு குருடனின் கைவண்ணம் எவ்வளவுதான் ஈடு இணையற்றதாகவும், நேர்த்தியானதாகவும் இருந்தபோதும், அவன் தானே அதைக் காண முடியா நிலையில் இருக்கின்றான். சில மிருகங்கள் மனிதனுக்காக எவ்வளவு கடினமாக உழைக்கின்றன, அவை அவனுக்காக எவ்வளவு சுமைகளைச் சுமக்கின்றன, அவை அவனது சுகத்திற்கும் ஆறுதலுக்கும் எவ்வளவு அதிகமாக பங்களிக்கின்றன; எனினும் அவை அறியாமையில் இருப்பதால் அவை அனுபவிக்கும் துன்பங்களுக்கெல்லாம் கூலி கிடையாது. மேகங்கள் தங்கள் அருட்கொடையைப் பொழிகின்றன, தாவரங்களையும் பூக்களையும் பேணி வளர்த்து, சமவெளி மற்றும் புல்வெளி, காடு மற்றும் தோட்டத்திற்குப் பசுமையையும் கவர்ச்சித் தோற்றத்தையும் வழங்குகின்றன; ஆனால், அவற்றின் பொழிவுகளின் பலன்களையும், விளைவுகளையும் உணராதவையாக இருப்பதால், அவை பாராட்டையோ மதிப்பையோ பெறுவதில்லை, எந்த மனிதனின் நன்றியையும் பாராட்டையும் பெறுவதில்லை. விளக்கு ஒளியைத் தருகிறது, ஆனால் அதற்கு அவ்வாறு செய்வது குறித்த உணர்வு இல்லாததால், அதற்கு யாரும் கடன்பட்டிருக்கவில்லை. இது தவிர, நற்செயல்களும், நன்னடத்தைகளும் கொண்ட ஒரு மனிதன், ஒளியை எந்தப் பக்கத்தில் கண்டாலும் அதை நோக்கிக் கண்டிப்பாகத் திரும்புவான். விஷயம் இதுதான், மெய்நம்பிக்கை என்பது அறிவையும் நற்செயல்கள் மேற்கொள்ளப் படுவதையும் உள்ளடக்கியதாகும்."[17]**

பஹாவுல்லா நமக்கு அறிவுறுத்துகின்றார்:

**"கூறுவீராக: மனிதர்களே! இறைவனின் அருளையும் அவரது கருணையையும் பெறுவதிலிருந்து உங்களையே நீங்கள் தடைச்செய்து கொள்ளாதீர்... தமது ஞானமெனும் பொக்கிஷங்களை உங்கள் கண்களின் பார்வைக்கு முன் திரையகற்றியவரும், மேலும் உங்களை ---- தமது தடுக்கவியலாததும், தமது எதிர்த்து வாதிடவியலாததுமான அதி மேன்மைமிகு சமயத்தில் மெய்யுறுதி எனும் ----- மெய்யுறுதி என்னும் சுவர்க்கத்திற்கு உயர்ந்தெழச் செய்வதற்குக் காரணமாய் இருந்தவரும் அவரேயாவார்."[18]**

**"மக்களே, மனிதரிடையே நடைமுறையில் உள்ளதை துறப்பதன் மூலமும், இந்தப் புனிதமான மற்றும் ஒளிரும் திருவழகை நோக்கித் திரும்புவதன் மூலமும் அன்றி கடவுள் சமயத்தில் யாரும் மெய்யுறுதி பெறவோ நிலைத்தன்மை அடையவோ முடியாத நாள்களான இந்நாள்களில் அற்ப ஆசைகள் மற்றும் வீண் கற்பனைகள் என்னும் கணைகளிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், விசுவாசிகளுடன் நீங்கள் கணக்கிடப்படவும் மெய்யுறுதி என்னும் ஆடையினைக் கொண்டு உங்களை அனிவித்துக்கொள்ளுங்கள்."[19]**

1. மேலே உள்ள முதல் மேற்கோளின் அடிப்படையில் பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்யவும்:

அ. குருடனின் கைவண்ணம் ஈடு இணையற்றதாகவும், நேர்த்தியானதாகவும் இருந்தாலும், ________________________________________________

________________________________________________

ஆ. சில மிருகங்கள் மனிதனுக்காக கடினமாக உழைக்கின்றன, அவனுக்காக சுமைகளைச் சுமக்கின்றன, அவனது சுகத்திற்கும் ஆறுதலுக்கும் அதிகமாகப் பங்களிக்கின்றன; ஆனால் ______________________________________________________

____________________________________________________________________________

இ. மேகங்கள் தங்கள் அருட்கொடையைப் பொழிகின்றன, தாவரங்களையும் பூக்களையும் பேணி வளர்த்து, சமவெளி மற்றும் புல்வெளி, காடு மற்றும் தோட்டத்திற்கு பசுமையையும் மயக்குதலையும் வழங்குகின்றன; ஆனால், அவற்றின் பொழிவுகளின் பலன்களையும், விளைவுகளையும் அவை ____________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

ஈ. விளக்கு ஒளியைத் தருகிறது, ஆனால் __________________________________________

____________________________________________________________________________

உ. ஒரு மனிதன் நற்செயல்கள் புரிகின்றான், ஆனால் அவனது செயல்கள் __________

____________________________________________________________________________

2. இப்பொழுது அடுத்த இரண்டு மேற்கோள்களையும் குறிப்பிட்டு, பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்யவும்:

அ. நாம் நம்மை ______________________________________________________ தடைச்செய்து கொள்ளக்கூடாது

ஆ. கடவுள் தமது ________________ ________________ நம் கண்களுக்கு முன் திரையகற்றி, நம்மைத், ____________________, _____________________ _____________________, அதி __________________ ____________________ பற்றுறுதி என்னும் ____________________ __________________ __________________.

இ. _________ ____________ மற்றும் ________ ____________ என்னும் கணைகளிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள, ______________ என்னும் ஆடையினைக் கொண்டு நம்மை ___________________.

ஈ. இந்நாள்களில் மனிதரிடையே நடைமுறையில் உள்ளதை _____________ மூலமும், இந்தப் புனிதமான மற்றும் ஒளிரும் திருவழகை _____________ _____________ மூலமும் அன்றி கடவுள் சமயத்தில் யாரும் _____________ பெறவோ _____________ அடையவோ முடியாது

3. பின்வரும் ஒவ்வொரு வார்த்தைக்கும் "மெய்நம்பிக்கை" என்னும் சொல்லை உள்ளடக்கிய ஒரு வாக்கியத்தை அமைக்கவும். உங்களுக்கு உதவியாக ஓர் உதாரணம் வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| அசைக்கமுடியாத | திருவொப்பந்தத்தின்பால் அவரது மெய்நம்பிக்கை ஒரு மலையைப் போன்று அசைக்க முடியாததாகும். |
| கேள்விக்கிடமற்ற | ________________________________________________ |
| உள்ளுரம் | ________________________________________________ |
| உறுதியான | ________________________________________________ |
| அதிகரிப்பு | ________________________________________________ |
| புதிதாய் விழிப்பூட்டப்பட்ட | ________________________________________________ |
| உண்மையான | ________________________________________________ |
| பற்றுறுதி | ________________________________________________ |
| சந்தேகத்திற்கிடமற்ற | ________________________________________________ |
| அப்பழுக்கற்ற | ________________________________________________ |
| அசைக்கமுடியாத | ________________________________________________ |

4. பின்வருபவை உண்மையா என்பதைத் தீர்மானிக்கவும்:

_______ கடவுள் அறிவும் அவரது அவதாரத்தை அங்கீகரிப்பதும் மெய்நம்பிக்கையின் மூலாதாரமாகும்.

_______ பஹாவுல்லா மீதான மெய்நம்பிக்கை என்பது அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதலை உட்குறிக்கின்றது.

_______ ஒருவருக்கு கடவுள் அவதாரத்தின்மீது மெய்நம்பிக்கை இருந்தால் அவர் அவரது கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடப்பார்.

_______ மெய்நம்பிக்கை என்பது கேள்விகள் கேட்காமல் இருப்பது.

_______ கடவுள் அறிவு அதிகரிக்கும் போது மெய்நம்பிக்கையும் அதிகரிக்கின்றது.

_______ கடவுள் வெளிப்பாட்டின் போதனைகளுக்கு ஏற்ப ஒருவர் செயல்படும்போது மெய்நம்பிக்கை அதிகரிக்கிறது.

_______ அசைக்க முடியாத மெய்நம்பிக்கை வைத்திருப்பது வெறித்தனமாக இருப்பதற்கு சமம்

_______ மெய்நம்பிக்கை என்பது ஒருவர் இழக்கக்கூடிய ஒன்றல்ல.

_______ நமக்கு மெய்நம்பிக்கை இருந்தால், போதனைகளைப் பற்றிய நமது சொந்தப் புரிதலை நாம் ஒருபோதும் சந்தேகிக்க மாட்டோம்.

_______ திருவெளிப்பாட்டின் உண்மையை அறிந்துகொண்டு, அதன்படி செயல்பட தயங்குவது மெய்நம்பிக்கையின் பலவீனத்தைக் காட்டுகிறது.

_______ நாம் இயல்பாகவே சந்தேகத்தின் நிலைகளைக் கடந்து உறுதியான நிலையை அடைகிறோம்..

_______ நாம் மெய்நம்பிக்கையில் வளர்ச்சியுறும் போது, அற்ப ஆசைகளையும் வீண் கற்பனைகளையும் கைவிட முடிகிறது.

_______ கடவுள் திருவெளிப்பாட்டின் உண்மை குறித்த மெய்யுறுதி நிலையை அடைய மெய்நம்பிக்கை தேவை.

5. மெய்யுறுதியாக இருக்கும் சில விஷயங்களை எழுதுங்கள். உங்களுக்கு உதவியாக இரண்டு உதாரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

அ. உலக ஒழுங்கமைப்பு ஸ்தாபிக்கப்படும் என்பதில் எனக்கு மெய்யுறுதி உண்டு.

ஆ. சமயம் அதன் பாதையில் எதிர்கொள்ளும் எந்தத் தடையையும் எதிர்கொண்டு, அதன் உயரிய நோக்கத்தை அடையும் எனக்கு மெய்யுறுதி உண்டு.

இ. ________________________________________

ஈ. ________________________________________

உ. ________________________________________

ஊ. ________________________________________

6. பின்வருவனவற்றை உங்கள் குழுவில் விவாதிக்கவும்:

அ. நீங்கள் பஹாவுல்லாவின் போதனைகளில் நம்பிக்கை கொண்டுள்ளீர், ஆனால் ஒரு இக்கட்டான சூழ்நிலையில், பெரும் அழுத்தத்தின் கீழ், நேர்மை என்னும் கோட்பாட்டின்படி செயல்படுவது உங்களுக்கு நன்மை பயக்காதென முடிவு செய்தால், நீங்கள் எதைச் சந்தேகிக்கிறீர்கள்?

ஆ. நம் மெய்நம்பிக்கையை வலுப்படுத்த அறிவு பெறுவது மட்டும் போதுமானதா? நனவுடனான அறிவும் செயலும் சேர்ந்து எவ்வாறு சந்தேகத்திலிருந்து விடுபடவும் மெய்யுறுதியைப் பெறவும் நமக்கு உதவுகின்றன?

இ. சர்வவல்லவரிடம் ஆர்வமிகு விண்ணப்பமின்றியும் அவரது கிருபையின் பொழிவு இல்லாமலும் நாம் மெய்நம்பிக்கையையும் மெய்யுறுதியையும் அடைய முடியுமா?

## பகுதி 7

மெய்நம்பிக்கை என்பது நமது ஆன்மிக இருப்பை நிர்மாணிப்பதற்கான அடித்தளமாகும். கடவுள் திருவெளிப்பாட்டின் உண்மையை நாம் நம்புகிறோம், அவருடைய சட்டங்கள் மற்றும் அறிவுறுத்தல்களின்படி செயல்பட தயங்க மாட்டோம். கடவுள் மீதும் அவரது அவதாரத்தின் மீதும் நாம் வைத்திருக்கும் அன்பில் நாம் பற்றுறுதியுடன் இருக்கின்றோம். கடவுளுடைய சித்தம் நிறைவேறும்

என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம், அவரது சித்தத்தின்பால் நமது சொந்த சித்தத்தை சரணடையச் செய்கின்றோம். ஆயினுங்கூட, கடவுளின் ஆன்மிக மற்றும் லௌகீகப் படைப்பைப் பற்றிய நமது அறிவு வரம்புக்குட்பட்டது என்பதுடன் ஒரு நாளிலிருந்து அடுத்த நாள் என்ன நடக்கும் என்பதை நாம் ஒருபோதும் அறிவதில்லை. எனவே, நம்பிக்கை நிறைந்த இதயங்களுடன், கடவுளின் அருட்கொடைகள் நம்மீது பொழிவதை நாம் தொடர்ந்து எதிர்பார்க்கிறோம். நாம் கடவுள் கருணையில் நம்பிக்கை கொள்கின்றோம், அவருடைய ஆசீர்வாதங்களைப் பெறுவோமென எப்போதும் எதிர்ப்பார்க்கின்றோம். அப்து'ல்-பஹா கூறுகிறார்:

> **“கடவுள் மீதான உமது நம்பிக்கையை என்றுமே இழந்து விடாதீர். என்றுமே ஆர்வநம்பிக்கையோடு இருப்பீர். ஏனெனில், கடவுளின் அருட்கொடைகள் என்றுமே மனிதன் மீது பொழியாமல் இருந்ததில்லை....எல்லா சூழ்நிலைகளிலும் மனிதன் கடவுளின் ஆசிகள் என்னும் கடலினுள் மூழ்கி இருக்கின்றான். ஆதலால், எந்தச் சூழ்நிலைகளிலும் நீர் ஆர்வநம்பிக்கை இழக்க வேண்டாம், மாறாக உமது ஆர்வநம்பிக்கையில் உறுதியாக இருப்பீர்.”[20]**

> **“இறைவன் வழங்கிடும் ஆசிகளை இதயம் புறக்கணித்துவிடுமானால், அஃது எவ்வாறு மகிழ்ச்சி அடையக்கூடும்? கடவுளின் கருணையின்மீது ஆர்வநம்பிக்கையும் நம்பகத்தன்மையும் அதுகொண்டிருக்காவிடில், எங்ஙனம் அஃது ஓய்வு காண இயலும்? அந்தோ, கடவுளின் மீது நம்பிக்கை கொள்ளுங்கள்! ஏனெனில், அவரது அருட்கொடை என்றும் நிலையானது, மேலும் அவரது ஆசிகள் மிகவும் சிறப்பானவை! அந்தோ, சர்வ சக்திமிக்கவரின் மீது நம்பிக்கை வையுங்கள், ஏனெனில், அவர் என்றுமே தவறுவதில்லை, அவரது நன்மைகள் என்றென்றும் நிலைத்திருக்கும்! அவரது சூரியன் இடைவிடாது ஒளிதருகின்றது, அவரது கருணை என்னும் மேகங்கள், இரக்கம் என்னும் நீரினால் நிரப்பப்பட்டிருக்கும்; அதனைக் கொண்டு அவர் தம்மீது நம்பிக்கை கொண்டோரின் இதயங்களுக்கு நீர் பாய்ச்சுவார். அவரது புத்துணர்வூட்டும் தென்றல், மனிதர்களின் வறண்ட ஆன்மாக்களுக்குக் குணப்படுத்தலை அதன் சிறகுகளில் என்றென்றும் ஏந்திச் செல்லும்!”[21]**

நமது ஆர்வநம்பிக்கையின் மூலாதாரத்தைப் பொறுத்த வரை, அவர் கூறுவதாவது:

> **“திருவெளிப்பாட்டின் மகிழ்ச்சிமிகு செய்திகள் அறிவிக்கப்பட்டன, எரியும் புதரின் கொழுந்துவிட்டெரியும் தீச்சுடரும் கனல்விடும் நெருப்பும் பிரகாசமாக ஒளிவீசின. வழிகாட்டுதல் என்னும் சைனியங்கள் போன்று, ஒற்றுமை என்னும் சமுத்திரத்தின் பேரலைகள், முரண்பாடு என்னும் கரையின் மீதடித்து, ஒற்றுமை மற்றும் இணக்கமெனும் விலைமதிப்பற்ற முத்துக்களை திசையெங்கும் பரப்பியது. தெய்வீக வசந்த காலம் பூமியை வளம் வந்தது, தெய்வீகப் புஷ்பங்கள் மலர்ந்தன, வசந்தகால மழை பொழிந்தது, எல்லா திசையிலிருந்தும் உயிரளிக்கும் காற்று வீசியது; இறுதியில், ஒருமைத்தன்மை என்னும் அழகு உலகின் சபையினரில் வெளிப்படுத்தப்படுவதுடன் அதன் வதனத்தின் பிரகாசம் எல்லா மாநிலங்களிலும் பிரகாசமாக ஒளிவீசும் எனும் ஆர்வநம்பிக்கையினால் அனைவரும் நிறைந்திருந்தனர்.”[22]**

1. பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்யவும்:

அ. நாம் என்றுமே ஆர்வநம்பிக்கையுடன் இருக்க வேண்டும், ஏனெனில் கடவுளின் ____________________ என்றுமே பொழியாமல் ____________________________

ஆ. நாம் எல்லா சூழ்நிலைகளிலும் ஆர்வநம்பிக்கையற்று இருக்கக்கூடாது, மாறாக நமது __________________ நாம் __________________ இருக்க வேண்டும்.

இ. நாம் எல்லா _________________ _________________ இருக்கக்கூடாது, மாறாக நமது ஆர்வநம்பிக்கையில் நாம் உறுதியாக இருக்க வேண்டும்.

ஈ. கடவுளின் _________________ என்னும் மேகங்கள், _________________ என்னும் நீரினால் நிரம்பியுள்ளன.

உ. கடவுள் தமது ___________ என்னும் நீர்களைக் கொண்டு, அவர்மீது ___________ கொண்டோரின் ___________ நீர் பாய்ச்சுகின்றார்.

2. பின்வரும் கூற்றுகள் உண்மையா என்பதைத் தீர்மானிக்கவும்:

_______ கடவுள் மீதான நம்பிக்கையே ஆர்வநம்பிக்கைக்கான தவறாத மூலாதாரமாகும்.

_______ ஒருவரின் திறன்களில் மனவுறுதியே ஆர்வநம்பிக்கைக்கான உண்மையான மூலாதாரமாகும்.

_______ கடவுளின் யாவற்றையும் தழுவிடும் பரிவிரக்கத்தின் மீதான மனவுறுதியிலிருந்தே ஆர்வநம்பிக்கை பிறக்கின்றது.

_______ கடவுள் அவதாரத்தின் போதனைகளின் உண்மையின் மீதான மெய்நம்பிக்கையானது எல்லையற்ற ஆர்வநம்பிக்கைக்கான மூலாதாரமாகும்.

_______ லௌகீக உடைமைகளும் அதிகாரத்தில் உள்ளோருடன் தொடர்புகளே ஆர்வநம்பிக்கைக்கான பெரும் மூலாதாரங்களாகும்.

_______ அப்பாவிகளே ஆர்வநம்பிக்கையுடன் இருப்பர். ஒரு யதார்த்தமான நபருக்கு எல்லா விஷயங்களையும் சந்தேகக் கண்களுடன் பார்ப்பதற்கு காரணம் உள்ளது.

_______ ஆர்வநம்பிக்கை முட்டாள்களின் உள்ளங்களில் இருந்தே பிறக்கின்றது.

_______ எல்லா சூழ்நிலைகளிலும் கடவுளுடைய சித்தத்தில் நாம் திருப்தியடையும் போது நாம் எப்போதும் ஆர்வநம்பிக்கையுடன் இருப்போம்.

_______ நாம் இறைவனின் அருட்கொடை நம்மீது இடைவிடாது பொழியப்படும் என்பதில் பூரண மெய்நம்பிக்கை கொள்ளும் போது நாம் என்றுமே ஆர்வநம்பிக்கையுடன் இருப்போம்.

_______ பஹாவுல்லாவின் உலக ஒழுங்கமைப்பு இறுதியில் ஸ்தாபிக்கப்படும் என்னும் மெய்நம்பிக்கை நமக்கு இருக்குமானால், நாம் ஒருபோதும் ஆர்வநம்பிக்கை இழக்க மாட்டோம்.

3. நாம் ஆன்மிகப் பண்புகளை உருவாக்கிக்கொள்ள விரும்பும்போது, ஆர்வநம்பிக்கை என்பது பின்வருவனவற்றை உட்குறிக்கின்றது

_______ நமது முயற்சியின் அளவு என்னவாயினும் இறுதியில் நாம் அதில் வெற்றிபெறுவோம் என்பது உறுதி

_______ நாம் அதில் ஒரு வேளை வெற்றிபெறாமல் போகக்கூடும் என நமக்கு நாமே நினைவூட்டிக் கொள்ள வேண்டும்.

_______ நாம் எந்த முயற்சியும் மேற்கொள்ள தேவையில்லை.

_______ செய்வதற்கான நமது சொந்த திறனில் நமக்கு நமது திறனாற்றலில் மனவுறுதி கொண்டிருந்தால் மட்டும் போதுமானது, ஏனெனில் அதுவே நமது வெற்றியைத் தீர்மானிப்பதில் முக்கிய காரணியாக இருக்கும்.

_______ நாம் நேர்மையான முயற்சியை மேற்கொண்டால், கடவுள் அருளினாலும் கிருபையினாலும் வெற்றி பெறுவோம் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

4. பின்வரும் வாக்கியங்களில் ஒரு ஆர்வநம்பிக்கை கொண்ட நபரினால் பேசப்படுபவை எவை?

_______ நான் நல்லவனன்று. மாற முயல்வதில் எந்த பிரயோஜனமும் இல்லை.

_______ எனக்கு வரம்புகள் உள்ளன என்று தெரிந்தாலும், நான் எப்போதும் என்னால் முடிந்ததைச் செய்ய முயற்சிக்கிறேன்.

_______ வாழ்க்கையின் மிக கடினமான நேரங்களில், தெய்வீக உதவிக்காக நான் பிரார்த்திக்கிறேன், கடவுளுடைய சித்தத்திற்கேற்ப எனக்கு உதவி கிடைக்கும் என நம்புகிறேன்.

_______ மனிதனின் தாழ்ந்த இயல்பு எப்போதும் அவனுடைய உயர்ந்த இயல்பை வென்றிடும், மக்கள் உன்னதமாக செயல்படும் நாளை நான் ஒருபோதும் காணப்போவதில்லை.

_______ ஒவ்வொரு மனிதனின் மேன்மையிலும் நாம் கொண்டுள்ள நம்பிக்கையுறுதியே நம்மை சேவையில் கடப்பாட்டுடன் நிலைத்திருக்க வைக்கிறது.

_______ என் வகுப்பில் உள்ள சில குழந்தைகள் தவறாக நடந்துகொள்கின்றனர், ஆனால் நான் அவர்களுக்கு பொறுமையாக உதவி செய்தால், அவர்கள் முன்னேற்றம் காண்பார்கள் என்பது எனக்குத் தெரியும்.

_______ இளைஞர்கள் மீது செயல்படும் எதிர்மறை சமூக சக்திகள் மிகவும் வலுவாக இருப்பதால், அவற்றின் செல்வாக்கை எதிர்க்க அவர்களுக்கு உதவ முயல்வதில் எந்தப் பயனும் இல்லை.

_______ இளைய இளைஞர்களில் செயலின்மையை ஊக்குவிக்கும் சக்திகள் இருந்தபோதிலும், அவர்களில் பலர், முறையான மற்றும் தொடர்ச்சியான பேணலுடன், அவற்றின் செல்வாக்கை எதிர்க்கவும், சமூகத்திற்கு சேவை செய்வதற்கு தங்களை அர்ப்பணிக்கவும் கற்றுக்கொள்வார்கள்.

_______ சேவை பாதையில் நாம் எதிர்கொள்ளும் தடைக்கற்கள் பெரும்பாலும் முன்னேற்றத்திற்கான படிக்கற்களாக மாற்றப்படலாம்.

_______ எங்கள் சமூகம் இப்பொழுது ஒரு நெருக்கடியை சந்தித்து வருகிறது, ஆனால் எந்தவொரு இடர்ப்பாடுகளையும் சமாளிக்கவும், சமயத்தில் உள்ளார்ந்துள்ள சக்திகளைப் பயன்படுத்துவதன் மூலம் தொடர்ந்து முன்னேறவும் முடியும் என நான் நம்புகிறேன்.

_______ சமூகங்கள் ஒருபோதும் ஒற்றுமையை அடையவே முடியாத அளவுக்கு சமுதாயத்தில் பிளவுகள் உள்ளன.

_______ சில சமயங்களில் இது ஒரு கடினமான பணியாகத் தோன்றினாலும், அதிக ஒற்றுமையை உருவாக்க ஆன்மிக கோட்பாடுகளை நாம் பயன்படுத்த முடியும்.

5. பின்வரும் பிரார்த்தனையை மனனம் செய்யவும்:

**“இரங்குபவரும், சர்வ வள்ளன்மையாளரும் அவரே யாவார்! கடவுளே, என் கடவுளே! என்னைப் பார்க்கின்றீர்; என்னைத் தெரிந்திருக்கின்றீர். எனது தஞ்சமும் புகலிடமும் நீரே. உம்மையன்றி வேறெவரையும் நான் நாடியதில்லை, நாடப்போவதுமில்லை; உமது அன்பு என்னும் பாதையைத் தவிர வேறெந்தப் பாதையிலும் நான் அடி வைத்ததில்லை; வைக்கப் போவதுமில்லை. விரக்தி எனும் துயர்மிகுந்த இவ்விரவில் எதிர்பார்ப்புடனும், முழு ஆர்வநம்பிக்கையுடனும் எனது கண்கள் உமது எல்லையற்ற தயவெனும் அதிகாலையின்பால் திரும்புகின்றன; எனது சோர்வுற்ற ஆன்மா, இவ் வைகறையில், உமது அழகு, பூரணத்துவம் என்பனவற்றின் நினைவில் புத்துணர்வு பெற்று வலுவடைந்துள்ளன. உமது கருணை என்னும் அருள் எவருக்கு உதவுகின்றதோ, அவர், ஒரு துளியேயாயினும், எல்லையற்ற சமுத்திரமாகி விடுவார்; சாதாரண ஓர் அணுவிற்கு உமது அன்புப் பரிவெனும் அருட்பொழிவு உதவிடுமாயின், ஒரு மின்னிடும் விண்மீனைப் போல அது ஒளிர்ந்திடும்.**

**தூய்மை என்னும் ஆவியானவரே, அதி வள்ளன்மைமிகு வழங்குபவரே , கவரப்பட்டவனும் உற்சாகமடைந்தவனுமான இவ்வூழியனை உமது பாதுகாப்பு என்னும் அடைக்கலத்தில் காத்தருள்வீராக. இப் படைப்புலகினில் அவன் உமது அன்பில் உறுதியாகவும் நிலையாகவும் இருந்திட உதவுவதோடு இச் சிறகொடிந்த பறவை உமது விண்ணுலக விருட்சத்திலுள்ள தெய்வீகக் கூட்டில் புகலிடத்தையும், பாதுகாப்பையும் அடைந்திட அருள்வீராக.”[23]**

## பகுதி 8

ஆர்வநம்பிக்கையின் (hope) நெருங்கிய துணைவன் ஏக்கமிகு ஆவலாகும். இறைவனின் அருளைப் பெற ஏக்கமுறா இதயம் உயிரற்றது. கடவுளின் பிரசன்னத்தை அடைய வேண்டும் என்னும் ஆசையில் எரிந்திடாமல் இருக்கும் ஓர் ஆன்மா, வழிதவறுதல் என்னும் பாலைவனத்தில் அலைந்து திரிவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும். ஆசை என்பது மனித இதயத்தின் ஒரு சொத்தாகும். ஆனால் ஆசையின் குறிக்கோள் பரலோக குணங்கள், ஆன்மிக மகிழ்ச்சி, தெய்வீகத் திருவாசலில் ஏற்பு மற்றும் அவருடைய சமயத்திற்காகப் பணிவான சேவை ஆகியவையாகவே இருக்க வேண்டும். ஏனெனில், தன்னகம், உணர்வெழுச்சி ஆகியவற்றின் தூண்டுதல்கள் உலகத்தையும் அதன் மாயைகளையும் நோக்கி ஆசையை வழிநடத்தினால், ஆன்மாவின் முன்னேற்றத்தை உந்தித் தள்ளும் சக்தி தீர்ந்து போய்விடும். 'அப்துல்-பஹா கூறுகின்றார்:

**"தெய்வீக தாராளத்தன்மையெனும் ஊற்று பாய்கின்றது, ஆனால் நாம் ஜீவ நீருக்கான தாகம் கொண்டிருக்க வேண்டும். தாகம் ஏற்பட்டாலன்றி, இதமளிக்கும் நீர் (தாகத்தைத்) தணிக்காது. ஆன்மாவுக்கு பசி ஏற்பட்டாலன்றி, தெய்வீக மேசையின் சுவையான உணவு ஊட்டம் தராது. புலனுணர்வுவெனும் கண்கள் திறக்கபட்டாலன்றி , சூரியனின் ஒளிகள் காட்சிக்கு வராது. நாசி சுத்தமாகும் வரை, தெய்வீக ரோஜா தோட்டத்தின் நறுமணம் சுவாசிக்காது. இதயம் ஏக்கத்தால் நிறைந்தாலன்றி, இறைவனின் தயவுகள் வெளிப்படாது... இதமளிக்கும் நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது, ஆனால் நமக்கு தாகம் இல்லாவிடில், அதனால் நாம் அடையும் பயன் என்ன? மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டுள்ளது, ஆனால் நமக்குக் கண்கள் இல்லையெனில் அதனால் நாம் பெறும் இன்பம் யாது? இனிய கீதங்கள் விண்ணுலகை நோக்கி எழுகின்றன, ஆனால் நமக்கு செவிகள் இல்லாவிடில், நாம் என்ன இன்பத்தைக் காணவியலும்?”[24]**

ஷோகி எஃபெண்டியின் சார்பாக எழுதப்பட்ட ஒரு கடிதத்தில் நாம் பின்வருமாறு வாசிக்கலாம்:

**“எனவே, உங்கள் பலவீனங்களில் ஆழ்ந்திருக்காதீர்; கடவுள் மீது பூரண நம்பிக்கை (reliance) கொள்ளுங்கள்; அவரது சமயத்திற்குச் சேவை செய்யவும், அவரது அழைப்பைப்**

**பிரகடனப்படுத்தவும் உங்கள் இதயம் ஆசை என்னும் தீயினால் எரியட்டும்; பின்னர், மனித இதயங்களை மாற்றுவதற்கான பேச்சுத்திறனும் சக்தியும் எப்படி உருவாகின்றன என்பதை நீங்கள் காண்பீர்கள்.”[25]**

1. பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்யவும்:

அ. தெய்வீக தாராளத்தன்மையெனும் ஊற்று _______________, ஆனால் நாம் ஜீவ நீருக்கான _______________ கொண்டிருக்க வேண்டும்

ஆ. ___________________________________ என்னும் ஊற்று பாய்கின்றது, ஆனால் நாம் _____________________________ தாகம் கொண்டிருக்க வேண்டும்.

இ. ஆன்மாவுக்கு ____________________ ஏற்பட்டாலன்றி, தெய்வீக மேசையின் சுவையான உணவு ஊட்டம் தராது.

ஈ. ஆன்மாவுக்குப் பசி ஏற்பட்டாலன்றி, தெய்வீக மேசையின் _______________________ _____________ ஊட்டம் தராது.

உ. நம் இதயங்கள் _________________________ நிறைந்திடும்போது, இறைவனின் தயவுகள் வெளிப்படும்.

ஊ. நம் இதயங்கள் ஏக்கத்தால் நிறைந்திடும்போது, இறைவனின் ____________________ __________________________.

எ. நாம் நமது _________________________ ஆழ்ந்திருக்கக்கூடாது.

ஏ. அவரது சமயத்திற்கு சேவை செய்யவும், அவரது அழைப்பைப் ________________ நமது இதயங்கள் ______________ என்னும் ______________________________.

ஐ. அவரது சமயத்திற்கு சேவை செய்யவும், அவரது அழைப்பைப் பிரகடனப்படுத்தவும் நமது ____________ _________________ என்னும் ___________________________ வேண்டும்.

ஒ. __________________________________________________, _________________________________ __________________________ நம் இதயம், ஆசை என்னும் தீயினால் எரிய வேண்டும்.

ஓ. _______________ _______________________ _______________ செய்யவும், _____________ _________________________ம் நம் இதயம், ஆசை என்னும் தீயினால் எரியும் போது நமக்கு மனித இதயங்களை மாற்றுவதற்கான பேச்சுத்திறனும் சக்தியும் உருவாகும்.

2. முதல் மேற்கோளின் அடிப்படையில், “அன்றி” என்னும் சொல்லைக் கொண்ட ஐந்து வாக்கியங்களை எழுதவும்.

அ. அன்றி ____________________________________________________________________________ ____________________________________________________________________________________

ஆ. அன்றி ____________________________________________

____________________________________________

இ. அன்றி ____________________________________________

____________________________________________

ஈ. அன்றி ____________________________________________

____________________________________________

உ. அன்றி ____________________________________________

____________________________________________

3. பின்வரும் கூற்றுகள் உண்மையா என்பதைத் தீர்மானிக்கவும்:

_______ எல்லா ஆசைகளும் பாராட்டுக்குரியவை.

_______ தெய்வீகப் பூரணத்துவங்களுக்கான ஆசை பாராட்டுக்குரியது.

_______ நாம் தெய்வீகப் பூரணத்துவங்களுக்கு ஆசைப்படாவிடில் நாம் அவற்றை அடையவியலாது.

_______ எவ்வித ஆசையும் இல்லாவிடில் நாம் மிகவும் மகிழ்ச்சியாக இருந்திடுவோம்.

_______ ஒவ்வொரு இதயத்திற்கும் உண்மையான மகிழ்ச்சியைக் கொண்டுவருவதற்கான ஆசை பாராட்டத்தக்கது.

_______ கடவுள் நமக்காக ஆசைப்படுவதை நாம் விரும்பினால் மட்டுமே நமது இதயங்கள் மகிழ்ச்சியால் நிரம்பிடும்.

_______ தன்னல ஆசைகள் எப்போதுமே கடவுள் நமக்காக விரும்புவதுடன் முரண்டுபடும்.

_______ சமயத்தைப் போதிக்க வேண்டுமெனும் ஏக்கமிகு ஆசையினால் நிரம்பி வழியும் இதயங்களுடன் நாம் செயல்பட்டால், நாம் தெய்வீக உறுதிபாடுகளைப் பெறுகின்றோம்.

_______ கடவுளின் தயவுகளைப் பெறுவதற்கு ஏக்கமிகு ஆசை ஒரு முன்நிபந்தனையாகும்

_______ கடவுளை மகிழ்ச்சிப்படுத்தும் ஆசையை மறைக்காத வரை, ஒருவரின் லௌகீக சூழ்நிலைகளை மேம்படுத்துவதற்கான ஆசை ஏற்புடையதே.

_______ லௌகீக ஆசைகள் நம் வாழ்க்கைகளில் ஆதிக்கம் செலுத்துவதிலிருந்து நாம் எப்போதுமே ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

_______ தன்னல ஆசைகளிலிருந்து நம் இதயங்களை நாம் தூய்மைப்படுத்தும் போது, நாம் கடவுளை நெருங்கி வருகின்றோம்.

_______ கடவுளின் பிரசன்னத்தை அடைவதே இறுதி ஆசையாகும்

4. பின்வரும் ஆசைகளில் எவை ஏற்கத்தகாதவை? ஏன் கூடாது?

_______ ஒருவரின் தொழிலில் உயர்சிறப்பை அடைவதற்கான ஆசை

_______ உலகில் அமைதி ஸ்தாபிக்கப்படுவதைக் காணும் ஆசை.

_______ சமயத்தைப் போதிக்கும் ஆசை.

_______ ஒரு மகிழ்ச்சியான குடும்பத்தைக் காணும் ஆசை.

_______ மெய்நம்பிக்கை மற்றும் மெய்யுறுதியில் வளர்வதற்கான ஆசை.

_______ திருவொப்பந்தத்தில் உறுதியுடன் இருப்பதற்கான ஆசை.

_______ சமயத்திற்கும் மானிடத்திற்கும் தன்னலமின்றி சேவை செய்வதற்கான ஆசை.

_______ சமயத்திற்கும் மானிடத்திற்குமான சேவையில் அறியப்பட வேண்டுமெனும் ஆசை

_______ ஆன்மிகப் பண்புகளை உருவாக்கிக்கொள்ளும் ஆசை.

_______ பிறரின் மகிழ்ச்சிக்காக வேலை செய்யும் ஆசை.

_______ உள்ளூர் ஆன்மிக சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமெனும் ஆசை.

_______ சமயத்தின் முன்னேற்றத்தை காண்பதற்கான ஆசை.

_______ சமூகத்தில் ஓர் உயர்ந்த அந்தஸ்தை அடையும் ஆசை

_______ பிறர் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கான ஆசை.

_______ பிறர் முன்னேற்றம் அடைவதைக் காண்பதற்கான ஆசை.

_______ தனிப்பட்ட நலன்களை மேம்படுத்திக்கொள்ளும் ஆசை

_______ சமயத்தின் மிக முக்கிய நலன்களை தன்னலமின்றி ஊக்குவிக்கும் ஆசை.

5. பின்வரும் இரண்டு கூற்றுகள் பற்றி உங்கள் குழுவில் உள்ள பிற பங்கேற்பாளர்களுடன் விவாதிக்கவும்:

அ. மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கையைப் பற்றி தியானித்தல் ஆன்மிக தாகத்தைப் பெற உதவுகிறது.

ஆ. தன்னகத் திரையை முற்றிலும் எரித்துவிட்டு கடவுளின் பிரசன்னத்திற்குள் நுழைய வேண்டும் என்னும் ஆசையே இறுதியான ஆசை.

## பகுதி 9

அறிவு, மெய்நம்பிக்கை மற்றும் மெய்யுறுதி, ஆர்வநம்பிக்கை மற்றும் ஏக்கமிகு ஆசை ஆகியன சேவை பாதையில் நடப்போருக்கு இன்றியமையாதவையாகும். ஆனால் அவை போதுமானதன்று; இந்தப் பாதையில் கணிசமான முன்னேற்றங்களைக் காணவும், ஆன்மிக ரீதியாகவும் அறிவாற்றல் ரீதியாகவும் வளர்ச்சியடைவதற்கும் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குப் பங்களிப்பதற்குமான நமது இரட்டை நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமானால், செயல்படுவதற்கான சித்தத்தை வலுப்படுத்தி, தொடர்ச்சியாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

**“இறைவனின் வலுமிக்கதும் பாதுகாக்கப்பட்டதுமான நிருபங்களில் கட்டளையிடப்பட்டதற்கு இணங்க, அவர்கள் ஒவ்வொருவருக்கும், ஒரு குறிப்பிட்ட அளவு முன்விதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இயலாற்றலாக நீங்கள் கொண்டிருப்பவை அனைத்தும், உங்களின் சுயமுயற்சியின் வாயிலாகவே வெளிப்படுத்தப்படும். இவ்வுண்மைக்கு உங்களின் சொந்த செயல்களே சாட்சி அளிக்கின்றன.”[26]**

அப்துல்-பஹா கூறுகின்றார்:

**“உங்கள் உடல்களுக்கு ஓய்வை அளிக்காதீர், மாறாக உங்கள் ஆன்மாக்கள் அனைத்தையும் கொண்டு உழைத்திடுவீர், உங்கள் இதயங்கள் அனைத்தையும் கொண்டு அவரது உதவியையும் கிருபையையும் உங்களுக்கு அருளுமாறு கடவுளிடம் மன்றாடுங்கள். அதன்மூலம் நீங்கள் இவ்வுலகினை அப்ஹா சுவர்க்கமாகவும், இந்த மண்ணாலான கோளினை விண்ணுலக இராஜ்யத்தின் அணிவகுப்பு மைதானமாகவும் ஆக்கிடக் கூடும். நீங்கள் மட்டும் முயன்றீர்களானால், நிச்சயமாக இந்த மகிமைகள் பிரகாசித்திடும், இந்தப் பரிவிரக்கம் என்னும் மேகங்கள் அவற்றின் மழையைப் பெய்வித்திடும், இந்த உயிர்தரும் காற்று மேலெழுந்து வீசிடும், இந்த இனிய கஸ்தூரி மணம் திசையெங்கும் பரப்பப்படும்.”[27]**

1. பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்யவும்:

அ. ________________ ________________ நாம் கொண்டிருப்பவை அனைத்தும், நமது சுயமுயற்சியின் ________________ வெளிப்படுத்தப்படும்.

ஆ. நாம் உள்ளார்ந்த ஆற்றலாகப் பெற்றிருக்கும் அனைத்தும் ____________________ ____________________ ____________________________.

இ. நமது உடல்களுக்கு நாம் __________ ________________ கூடாது, மாறாக நம் ____________ அனைத்தையும் கொண்டு ____________, நம் ____________ அனைத்தையும் கொண்டு அவரது ____________ ____________ நமக்கு அருளுமாறு கடவுளிடம் ____________ வேண்டும். அதன்மூலம் நாம் இவ்வுலகினை ____________ ____________ இந்த மண்ணாலான கோளினை ____________ ____________ ____________ ____________ ஆக்கிடக் கூடும்.

ஈ. நாம் மட்டும் முயன்றால், ______________________________________________________

______________________________________________________________________

உ. நாம் மட்டும் முயன்றால் ______________________________________________________

______________________________________________________________________

ஊ. நாம் மட்டும் முயன்றால் ______________________________________________________

______________________________________________________________________

எ. நாம் மட்டும் முயன்றால் ______________________________________________________

______________________________________________________________________

2. பின்வருவனவற்றுள் எது முதல் மேற்கோளினால் உட்குறிக்கப்படுகின்றது?

_______ நமது திறனாற்றல்கள் கடவுளால் முன்விதிக்கப்பட்டுள்ளதால், வாழ்க்கையில் நாம் என்ன தேர்வுகள் செய்தாலும் அத்திறனாற்றல்கள் தாமாகவே மேம்பாடு காணும்.

_______ நமது திறனாற்றல்கள் கடவுளால் முன்விதிக்கப்பட்டுள்ளதால், நாம் முயன்றாலும் முயலாவிட்டாலும் அவை தாமாகவே மேம்பாடு காணும்.

_______ கடவுள் நமக்குக் குறிப்பிட்ட சில திறனாற்றல்களை வழங்கியுள்ளார், ஆனால் அவை நமது சொந்த சித்தத்தின் மூலமாகவே மேம்படுத்தப்படும்

_______ நமது சித்தத்தின் ஆற்றல் மூலம், நாம் எல்லா மனித வரம்புகளையும் எதிர்கொண்டு, முழு பூரணத்துவ நிலையை அடைய முடியும்.

_______ ஆன்மிக ரீதியில் நாம் எவ்வளவு தூரம் முன்னேறினாலும், கடவுள் நமக்காக விதித்துள்ள ஆற்றல்களை நம்மில் எவராலும் முழுமையாக வெளிப்படுத்த முடியாது; எனவே அவற்றை மேலும் மேம்படுத்த நாம் தொடர்ந்து முயன்று வர வேண்டும்.

3. பின்வரும் ஒவ்வொரு கேள்விக்கும் பதிலளித்து உங்கள் பதிலுக்கான காரணங்களை விளக்கவும்:

அ. தெய்வீகப் பரிபூரணங்களைப் பெறுவதற்கான நமது திறனாற்றலைக் கடவுள் ஏற்கனவே அறிந்திருக்கிறார் என்பதன் அர்த்தம், அவற்றைப் பெறுவது நம் சக்திக்கு உட்பட்டதல்ல, மாறாக அது கடவுளுக்கு உட்பட்டது என்பது அர்த்தமா?

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

ஆ. ஆன்மிகத் திறனாற்றல்களை மேம்படுத்துவதற்கு அல்லது மேம்படுத்தாமல் இருப்பதற்கான சுயசித்தம் நமக்கு உள்ளதா?

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

இ. நமக்கு சுயசித்தம் இருக்கின்றது என்னும் உண்மை நாம் நம் வாழ்வில் செய்யும் தேர்வுகளுக்கு நாம் கடவுளிடம் பொறுப்புடையோர் ஆவோமா?

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

ஈ. ஒரு மாணவன் பரீட்சைக்குப் படிக்காமல் இருந்துவிட்டு பரீட்சையில் தோல்வி காண்கின்றான் என வைத்துக்கொள்வோம். பின்னர் தான் தோல்வியுற்றதற்கு விதியே காரணம் என அவன் கூறலாமா?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

உ. ஒரு மாணவன் தனது படிப்பில் மிகுந்த உன்னிப்பும் உறுதியும் கொண்டவனாக இருந்து பரீட்சையில் சிறந்த மதிப்பெண்கள் பெறுகின்றான். இருப்பினும், அவனது வெற்றிக்கான காரணம் அதிர்ஷ்டம்தான் என கூறலாமா?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

ஊ. பல சமமான தகுதி வாய்ந்த இலக்குகளில் ஒன்றை அடைய முயல்வதில் நீங்கள் எதிர்ப்பைச் சந்தித்தால், அது விதியல்ல, எனவே அதை நீங்கள் கைவிட வேண்டும் என்பது அர்த்தமா? தொடர்ந்து முயன்றும் வெற்றிபெறவில்லை என்றால், நீங்கள் அம்முயற்சியைக் கைவிட வேண்டும் என்று அர்த்தமா? ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைய முயல்வதை நிறுத்திவிட்டு, அதற்குப் பதிலாக வேறு ஒன்றை பின்தொடர வேண்டும் என்பது உங்களுக்கு எப்படித் தெரிய வரும்?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

எ. நாம் முயற்சி செய்து நமது ஆன்மிகப் பண்புகளை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்னும் பொருண்மை, நாம் அதை கடவுளிடம் அவரது உதவியைக் கோராமல் செய்யலாம் என்பது அர்த்தமா?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

ஏ. தன் சொந்தத் திறனை வளர்த்துக்கொள்ளவும், சமுதாயத்தின் தன்மைமாற்றத்திற்குப் பங்களிக்கவும், சேவை பாதையில் ஒருவர் எடுக்கும் முயற்சி அப்பாதையில் அடையப்படும் சாதனைகளைப் போன்றே முக்கியமானதா?

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

4. பின்வரும் உரைப்பகுதியின் அடிப்படையில், மனித சித்தம் முயற்சி ஆகிய இரண்டிற்கும் தெய்வீக உதவிக்கும் இடையிலான தொடர்பை விவாதிக்கவும்.

**"மேலும், மனிதனின் அசைவின்மை அல்லது இயக்கம் கடவுளின் உதவியின் மூலமே நிர்ணயிக்கப்படுகிறது. இந்த உதவி அவனை அடையத் தவறினால், அவன் நன்மையையோ தீமையையோ செய்ய முடியாது. ஆனால், சர்வ கொடையாளரான இறைவனின் உதவி மனிதனுக்கு உளதாம்தன்மையை அருளும்போது, அவன் நன்மை தீமை ஆகிய... இரண்டையும் செய்திட இயலும். அந்த உதவி துண்டிக்கப்பட்டால், அவன் முற்றிலுமாய் சக்தியற்றவனாகிடுவான். இதன் காரணமாகவே கடவுளின் ஆதரவும் உதவியும் புனித நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த நிலையைக் காற்று, அல்லது நீராவியின் சக்தியால் நகரும் ஒரு கப்பலுடன் ஒப்பிடலாம். இந்த சக்தி துண்டிக்கப்பட்டால், அந்தக் கப்பல் முற்றிலுமாய் நகர இயலாது. ஆயினுங்கூட, கப்பலின் திசை திருப்புக் கட்டை எந்தத் திசைக்குத் திருப்பப்பட்டாலும், நீராவியின் சக்தி கப்பலை அந்தத் திசையில் செலுத்திடும். திசை திருப்புக் கட்டை கிழக்கு நோக்கி திரும்பினால், கப்பல் கிழக்கு நோக்கி நகரும், அது மேற்கு நோக்கி செலுத்தப்பட்டால், கப்பலும் மேற்கு நோக்கி நகரும். இந்த இயக்கம் கப்பலிலிருந்தே எழுவதில்லை, ஆனால், காற்று அல்லது நீராவியிலிருந்து எழுகிறது.**

**அதே போல், மனிதனின் எல்லா செயல்களும் தெய்வீக சக்தியின் உதவியால் ஆதரிக்கப்படுகின்றன, ஆனால் நன்மையை அல்லது தீமையைத் தேர்ந்தெடுப்பது மனிதனுக்கு மட்டுமே சொந்தமானது."[28]**

## பகுதி 10

நாம் சேவை பாதையில் பயணிக்கும் போது, தெய்வீக பரிபூரணத்துவங்கள், தியாகமின்றி பெறப்படுவதில்லை என்பது குறித்து உன்னிப்பான கவனத்துடன் இருக்க வேண்டும். தெய்வீகத்தின் உயர்ந்த பகுதிகளுக்குச் சொந்தமானதை அடைவதற்காக தன்னகம் என்னும் ராஜ்யத்துடன் தொடர்புடைய அனைத்தையும் துறப்பதிலேயே தியாகத்தின் மர்மம் உள்ளது. நெருப்பில் வீசப்படும் இரும்பின் உதாரணத்தின் மூலம், அப்துல் பஹா தியாகத்தின் புதிரை நமக்கு விளக்குகின்றார். இரும்பானது சாம்பல் நிறத்தில் சில்லிட்டும் கெட்டியாகவும் உள்ளது. நெருப்பின் பண்புகளைப் பெறுவதற்காக சிவந்து, சூடாகி, திரவம் ஆவதற்காக இந்தப் பண்புகளை கைவிட்டு விட வேண்டும். தியாகமென்பது நாம் பற்று வைத்திருக்கின்ற பொருள்களிலிருந்து பிரிவதை உட்படுத்துகிறது, ஆதலால் அது வேதனையை உண்டாக்குகிறது. இருப்பினும் அறியும் உள்ளத்திற்கு, வேதனை இனிமையானது, ஏனெனில் அது உண்மை மகிழ்ச்சியின் தூதுவனாகும். அப்துல் பஹா நமக்குக் கூறுகின்றார்:

**"...என்னைப் பாருங்கள், என்னைப் பின்பற்றுங்கள், என்னைப் போல் இருங்கள்; நீங்கள் சாப்பிடுகிறீர்களோ அல்லது உறங்குகிறீர்களோ, நீங்கள் உடல் நலத்துடன் இருக்கிறீர்களோ அல்லது நோயுற்றிருக்கிறீர்களோ, நீங்கள் நண்பர்களுடன் இருக்கிறீர்களோ அல்லது பகைவர்களுடன் இருக்கிறீர்களோ, நீங்கள் பாராட்டுதலைப் பெறுகின்றீர்களோ அல்லது பழியைப் பெறுகிறீர்களோ, உங்களை பற்றியோ, உங்கள் வாழ்வுகளைப் பற்றியோ எண்ணாதீர்கள்; இவ்வனைத்திற்காகவும் நீங்கள் கவலைப்படவே கூடாது. என்னைப் பாருங்கள் மற்றும் என்னைப் போல் இருங்கள்: நீங்கள் உங்களுக்கும் உலகிற்கும் மரிக்க வேண்டும், அதனால் நீங்கள் மீண்டும் பிறந்து சுவர்க்கத்தின் இராஜ்யத்தில் பிரவேசிக்கக்கூடும், மெழுகுவர்த்தியைப் பாருங்கள், அது எவ்வாறு ஒளி கொடுக்கின்றது. அது தனது ஒளிச்சுடரை வழங்கிடுவதற்காக, தனது வாழ்வை துளி துளியாக கண்ணீர் விட்டுக் கழிக்கிறது."[29]**

மற்றொரு தருணத்தில், அவர் விளக்குகின்றார்:

**"...இறைவனின் அண்மையில் இருப்பதென்பது, தன்னகத் தியாகத்தையும், பற்றின்மையையும் அவருக்காக அனைத்தையும் விட்டு விடுவதையும் அவசியமாக்குகிறது. அண்மை என்பது ஒத்த தன்மையாகும்."[30]**

நாம் நமது அதிவுயர்ந்த ஆர்வநம்பிக்கைளின் பலன்களைக் காணவேண்டுமானால், நாம் முயற்சி மேற்கொள்ளவும் தேவையான தியாகங்களைச் செய்யவும் தயாராக இருக்க வேண்டும். அப்துல்-பஹா கூறுகின்றார்:

**"இது மகிழ்ச்சிக்கான நேரம், மகிழ்ச்சி மற்றும் களிப்பிற்கான நாள், ஏனெனில், கடவுளே போற்றி, அப்ஹா பேரழகின் அருட்கொடையால் அனைத்துக் கதவுகளும் அகலத் திறக்கப்பட்டுள்ளன. ஆனால், உயர்வான முயற்சியும் சுய தியாகமும் தேவைப்படுகின்றன. ஆர்வநம்பிக்கையெனும் மரம் அதன் கனிகொடுக்கவும் முடிவுகள் சாதிக்கப்படவும் ஒருவரது எண்ணங்களின் செறிவு தேவைப்படுகின்றது."[31]**

1. பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்யவும்:

நாம் அப்துல்-பஹாவை பின்பற்ற வேண்டுமானால், நாம் ____________ ____________, நாம் ____________ இருக்கின்றோமோ அல்லது ____________, நாம் ____________ இருக்கின்றோமோ அல்லது ____________ இருக்கின்றோமோ, நாம் ____________ பெறுகின்றோமோ அல்லது ____________ பெறுகின்றோமோ, ____________ பற்றியோ, நமது ____________ பற்றியோ நாம் எண்ணக் கூடாது; இவ்வனைத்திற்காகவும் நாம் ____________ ____________ நாம் ____________ ____________ வேண்டும் மற்றும் ____________ ____________ ____________ வேண்டும்: நாம் ____________, ____________மரிக்க வேண்டும், அதனால் நாம் ____________ ____________ சுவர்க்கத்தின் இராஜ்யத்தில் பிரவேசிக்கக்கூடும்

2. பின்வரும் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

அ. ஒரு மெழுகுவர்த்தி ஏற்றிவைக்கப்படும்போது அதற்கு என்னவாகின்றது? __________

________________________________________________________

ஆ. தன்னை எரித்துக்கொள்ளாமல் ஒரு மெழுகுவர்த்தியால் ஒளி கொடுக்க இயலுமா?

______________________________________________________________________________

இ. ஏற்றிவைக்கப்படாத ஒரு மெழுகுவர்த்தியினால் என்ன பயன்? ____________________

______________________________________________________________________________

ஈ. ஒரு விதை விதையாகவே இருந்துகொண்டு தனது இயலாற்றலை வெளிப்படுத்த முடியுமா? ______________________________________________________________

உ. ஒரு விதை தான் ஒரு மரமாவதற்காக எதைத் தியாகம் செய்கின்றது? _____________

______________________________________________________________________________

ஊ. நாம் கடவுளால் வழங்கப்பட்ட இயலாற்றலை வெளிப்படுத்த வேண்டுமானால் நாம் தியாகம் செய்ய வேண்டிய சில விஷயங்கள் யாவை? ___________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

எ. தியாகமின்றி நாம் கடவுளின் அண்மையை அடைய முடியுமா? ____________________

ஏ. தியாகமின்றி நாம் ஆன்மிக பண்புகளை அடைய முடியுமா? ______________________

ஐ. நாம், நம் ஆன்மிகப் பண்புகளை உருவாக்கிக்கொள்ள முயலவில்லயெனில் நமது வாழ்வின் மதிப்பு என்ன? ________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

ஒ. நாம் எதிர்ப்பார்க்கும் பலன்களை நமது முயற்சிகள் உறுதிபடுத்திட வேண்டுமானால் சுய தியாகமும் எண்ணங்களின் செறிவும் ஏன் அவசியமாகின்றன? _______________

______________________________________________________________________________

3. தியாகத்தின் நோக்கம்...

_______ நித்திய வாழ்வைப் பெறுவதற்கு

_______ கடவுளின் அண்மையை அடைவதற்கு

_______ நமது லௌகீக செல்வங்களை அகற்றுவதற்கு

_______ நமது தன்னல ஆசைகளை அகற்றுவதற்கு

_______ நம்மை நாமே சோதித்துக் கொள்வதற்கு

_______ ஆன்மிகப் பண்புகளை உருவாக்கிக்கொள்வதற்கு

_______ துன்பப் படுவதற்கு

_______ அப்துல்-பஹாவின் உதாரணத்தைப் பின்பற்றுவதற்கு

_______ மனித இதயங்களுக்கு வழிகாட்டுதலெனும் ஒளியினைக் கொண்டு வருவதற்கு

4. தியாகத்தின் ஸ்தானம் மெய்யாகவே உயர்ந்தது. நாம் செய்யும் ஒவ்வொரு சிறிய செயலும் தியாகத்தின் ஒரு மாபெரும் செயலென தொடர்ச்சியாகப் பெருமைபட்டுக்கொண்டு அதனை அற்பமாக்காதபடி நாம் உறுதிபடுத்திக் கொள்ளவேண்டும். “தியாகம்” எனும் சொல் தகாத முறையில் பயன்படுத்தப்படும் வாக்கியங்களைப் பற்றி சிந்திப்போம். உதாரணத்திற்காக “பத்தொன்பதாம் நாள் பண்டிகைக்கு செல்வதற்காக எனக்கு மிகவும் விருப்பமான தொலைக்காட்சி நிகழ்ச்சியைக் காண்பதை நான் தியாகம் செய்தேன்.” இங்கு “தியாகம்” என்ற சொல்லின் உபயோகம் சரியாகுமா? ஏதோ ஒன்று கைவிடப்படுகின்றது என்பது உண்மை, ஆனால் இத்தகைய ஒன்றைத் “தியாகம்” என குறிப்பிட்டு நாம் தியாகத்தின் ஸ்தானத்தை அற்பமாக்குகிறோம் அல்லவா? மற்றோர் உதாரணத்தை எடுத்துக்கொள்வோம்: “நான் எனது அண்டைப்புறத்தில் சமயத்தைப் போதிப்பதற்கான ஒரு மும்முர பயிற்சிகழக பரப்பியக்கத்தில் கலந்துகொள்வதற்காக என் வார இறுதி நாள்களைத் தியாகம் செய்தேன்.” இஃது எதை உட்குறிக்கின்றது? சமயத்தைப் போதிப்பதனால் உருவாகும் உண்மையான மகிழ்ச்சியை நாம் அங்கீகரிக்கின்றோம் என்பதை இது குறிக்கின்றதா? நாம் எதைத் தியாகம் செய்துள்ளோம்? இதைக் கடவுளின் கிருபை மற்றும் தயவைப் பெறுவதெனும் அருட்கொடையுடன் ஒப்பிட முடியுமா? “தியாகம்” என்னும் சொல்லின் பயன்பாடு தேவைப்படாத சில வாக்கியங்களை எழுதவும்.

அ. ____________________________________________________________
____________________________________________________________

ஆ. ____________________________________________________________
____________________________________________________________

இ. ____________________________________________________________
____________________________________________________________

ஈ. ____________________________________________________________
____________________________________________________________

உ. ____________________________________________________________
____________________________________________________________

ஊ. ____________________________________________________________
____________________________________________________________

எ. ____________________________________________________________
____________________________________________________________

ஏ. ________________________________________________________________________________

________________________________________________________________________________

5. பின்வரும் கூற்றை உங்கள் குழுவினருடன் விவாதிக்கவும்:

நம் சமயத்தின் ஆரம்பத்திலிருந்து, அண்மை காலம்வரை, ஆயிரக்கணக்கான ஆன்மாக்கள், இறுதித் தியாகமான உயிர்த்தியாகம் செய்து, சமயத்திற்காகத் தங்கள் வாழ்க்கையையே அர்ப்பணித்துள்ளனர். நம்மில் பெரும்பாலானோர் உயிர்த்தியாகிகள் ஆகிட கோரப்படவில்லை. ஆனால், சேவை பாதையில் பயணிக்கும்போது நாம் அதே தியாக உணர்வினால் உயிரூட்டப்பட வேண்டும். தியாகமென்பது சேவை வாழ்க்கையின் ஓர் அடையாளமாகும்.

6. தியாகம், வேதனை, மகிழ்ச்சி ஆகியவற்றுக்கு இடையிலான உறவை விவாதிக்கவும்.

7. பின்வரும் மேற்கோளை மனனம் செய்யவும்:

**“எவனொருவன் இன்று, மனித இனம் முழுவதன் சேவைக்காகத் தன்னை அர்ப்பணிக்கின்றானோ, அவனே, ஓர் உண்மையான மனிதன். மேன்மைமிகு திருவுருவானவர் கூறுகின்றார்: உலக மனிதர்கள், இனங்கள் ஆகியோரின் நன்மைகளை விருத்தியடையச் செய்ய எழுகின்றவர் அருட்பேறும் மகிழ்வும் பெறுவர்.”**[32]

**“ஆதலால், ...உங்கள் சிந்தனைகள், வார்த்தைகள், செயல்கள் அனைத்தையும் அர்ப்பணஞ்செய்து, கடவுளின் அன்பெனும் அறிவை ஒவ்வோர் இதயத்திற்கும் கொண்டு செல்லுங்களென யாம் உங்கள் ஒவ்வொருவருக்கும் அறிவுறுத்துகின்றோம்.”**[33]

## பகுதி 11

இந்தப் பாடத்திட்டம் முழுவதும், சேவை பாதையில் பயணிப்பதன் ஆன்மிக இயக்கவியலை நாம் ஆராய்ந்தோம். கடவுளின் பண்புகளை பிரதிபலிக்கும் இதயத்தின் நிலைமைகளை நாம் ஆராய்ந்தோம். கடவுள் அன்பையும், இறை அச்சத்தையும், அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதன் இன்றியமையாமை குறித்தும் தியானித்தோம். இந்தப் பாதையில் மேம்பாடு காண்பதற்கு மெய்நம்பிக்கை, ஆர்வநம்பிக்கை, ஏக்கமிகு ஆசை ஆகியவற்றின் இன்றியமையா தேவையை நாம் கருத்தில் கொண்டோம். ஒருவரின் சொந்த அறிவுசார் மற்றும் ஆன்மிக வளர்ச்சியைப் பின்தொடர்வதற்கும், சமுதாய மேம்பாட்டிற்குப் பங்களிப்பதற்கும் சித்தம், உறுதிபாடு, முயற்சி ஆகியன தேவைப்படுகின்றன எனவும் இதற்கு தியாகம் அவசியம் என்பதையும் நாம் கண்டோம். நாம் நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால், இன்னல்கள் மற்றும் நெருக்கடியான தருணங்களைப் பொருட்படுத்தாமல், நாம் மகிழ்ச்சியுடன் இப்பாதையில் நடக்கிறோம் என்பது. மகிழ்ச்சி என்பது மனித ஆன்மாவின் ஒரு பண்பாகும். அது வெளிப்புற தாக்கங்களினால் விளையும் ஓர் உணர்ச்சியன்று. இயற்கையாகவே நாம் சோகமாக இருக்கும் நேரங்களும் மகிழ்ச்சியுடன் இருக்கும் நேரங்களும் உள்ளன. ஆனால், நமது இதயங்களின் அடிப்படை நிலை மகிழ்ச்சியாகும். கடவுளை அறிந்துகொள்வதன் மகிழ்ச்சி, அவரது வெளிப்பாட்டை அங்கீகரிப்பதன் மகிழ்ச்சி, அவரது கருணை என்னும் கடலில் ஆழ்ந்திருப்பதன் மகிழ்ச்சி, அவரது புனித திருவாசலில் சேவையில் ஈடுபடுவதன் மகிழ்ச்சி.

அப்து'ல்-பஹா மகிழ்ச்சியின் சாராம்சமாக இருந்தார். உங்கள் வாழ்நாள் முழுவதும், அப்து'ல்-பஹாவின் வார்த்தைகளை நீங்கள் தவறாமல் வாசிக்க வேண்டும், அவற்றை மனனம் செய்ய

வேண்டும், அவரது வாழ்க்கையின் உதாரணத்தை நினைவில் கொள்ளும் அதே நேரத்தில் அவ்வார்த்தைகளின் அர்த்தத்தைப் பிரதிபலிக்க வேண்டும். அவரது வார்த்தைகளையும் கூற்றுகளையும் பற்றிய உங்கள் படிப்பாய்வின் தீவிரமானது, அவை உங்கள் சிந்தனையின் ஒருங்கிணைந்த பாகமாக மாறிடும் அளவிற்கு இருந்திட வேண்டும். ஒவ்வொரு கணமும், மகிழ்ச்சியாக இருந்தாலும் சரி, சோகமாக இருந்தாலும் சரி, சிரமத்துடன் இருந்தாலும் சரி, சுகமாக இருந்தாலும் சரி, வேலையில் இருந்தாலும் சரி, ஓய்வாக இருந்தாலும் சரி, நீங்கள் அவருடைய வார்த்தைகளை நினைவுகூர்ந்து, அவரை நினைத்து, மகிழ்ச்சியால் நிரப்பப்பட வேண்டும். இந்த அடிப்படையில், அப்து'ல்-பஹாவின் எழுத்துகளிலிருந்து வரும் பின்வரும் மேற்கோள்களை நீங்கள் பிரதிபலிக்க விரும்பலாம், அத்துடன் உங்களால் முடிந்த அளவு அவற்றுள் பலவற்றை மனனம் செய்யலாம்:

> **“ஆனால் நீங்கள் இவ் விஷயத்தில்—அதாவது மனுக்குலத்திற்கு சேவையாற்றுவதில்—உங்கள் உயிர்களையே அர்ப்பணிக்க வேண்டும்; அவ்வாறு அர்ப்பணிக்கையில், மகிழ்வுறுவீராக.”[34]**

> **“உலகிலிருந்து பற்றறுத்தும், சமயத்தின்பால் தீவிரமாகக் கவரப்பட்டும், போதித்தலில் ஈடுபட்டும், பஹாவுல்லாவின் பாதுகாப்பளிக்கும் நிழலின் கீழ் உள்ள ஆன்மாக்களுக்கு எத்துனை உயர்வானதொரு ஸ்தானம் விதிக்கப்பட்டுள்ளது என்பதை ஒருகால் நீங்கள் அறியக்கூடுமேயானால்! அத்தகையதொரு பாதையைப் பின்பற்றுபவராக இருப்பதற்காகவும், அத்தகையதொரு இராஜ்யத்தை நோக்கிச் செல்லும் ஒரு பயணியாக இருப்பதற்காகவும், நீங்கள் எவ்வாறு பெருமகிழ்ச்சி கொள்வீர், களிபுற்றும் பரவசத்தாலும், நீங்கள் உங்கள் சிறகுகளை விரித்து சொர்க்கத்தை நோக்கி உயரப் பறந்திடுவீர்.”[35]**

> **“இறைவனது ஆடையின் விளிம்பினை இறுகப் பற்றிக்கொள்வீராக; அவரது திருவொப்பந்தத்தை மேன்மைப் படுத்துவதற்காக உங்கள் முயற்சிகள் அனைத்தையும் வழிநடத்துவீராக; அவரது அன்பெனும் தீயினால் மேலும் பிரகாசமாக எரிந்துகொண்டு, அப்துல்-பஹாவின் மார்பிலிருந்து பொங்கி எழும் தொண்டூழியம் என்னும் சுவாசங்களினால் உங்கள் இதயங்கள் மகிழ்ச்சிப் பெருக்கால் துள்ளிடுமாக.”[36]**

> **“நம்மைப் பற்றிய அனைத்து சிந்தனைகளையும் நாம் ஒதுக்கிடுவோமாக; உலகின் மீதுள்ள அனைத்தின்பாலும் நமது கண்களை மூடிடுவோமாக; நாம் நமது வேதனைகளை அறிவிக்காமல் அல்லது நமது தவறுகளைப் பற்றி குறைகூறாமல் இருந்திடுவோமாக. மாறாக, நாம் நம்மையே முற்றிலும் மறந்திடுவோமாக; விண்ணுலகக் கிருபை என்னும் மதுரசத்தினை பருகிடும் வேளை, நமது களிப்பை உரக்கக் கூவிடுவோமாக, சர்வ புகழொளிமிக்கவரின் திருவழகில் நம்மை நாமே மறந்திடுவோமாக.”[37]**

> **“எந்நேரமும் நான் உங்களைப் பற்றி பேசுகின்றேன், உங்களை நினைவில் கொள்கின்றேன். இறைவனிடம் நான் பிரார்த்தனை செய்து, உங்கள் மீது இந்த ஆசிகள் அனைத்தும் பொழியச்செய்து, உங்கள் இதயங்களை மகிழ்வுறச் செய்து, உங்கள் ஆன்மாக்கள் பேரின்பம் பெறச் செய்து, உங்களுக்கு எல்லையில்லா களிப்பையும் தெய்வீக இன்பங்களையும் வழங்கிடுமாறு கண்ணீருடன் நான் அவரிடம் மன்றாடுகிறேன்.”[38]**

> **“இந்த விரைந்தோடும் உலகில் எனது ஒரே மகிழ்ச்சியானது, கடவுளின் கற்பாறைகளினால் ஆன பாதையில் நடப்பதும், கடும் சோதனைகளையும், எல்லா உலகியல் வேதனைகளைத் தாங்கிக்கொள்வதுமே ஆகும். இல்லையெனில், இந்த உலக வாழ்வு வறண்டதாகவும் வீணானதாகவும் இருந்திடும்; அதற்கு மரணமே மேலானதாகும். இந்த இருத்தல் என்னும் விருட்சம் எந்தக் கனியையும் ஈன்றிடாது; உயிர்வாழ்வெனும் இந்தப் பயிரிடப்பட்ட வயல் எந்த அறுவடையையும் வழங்கிடாது. ஆதலால்தான், மீண்டும் ஒரு முறை எதேனும் சூழ்நிலை எனது துயரமெனும் கோப்பையை பொங்கி வழிந்திடச் செய்தும், எழில்மிகு அந்தப்**

பேரன்பர், அந்த ஆன்மாக்களைக் கொல்பவர், மீண்டும் ஒருமுறை பார்வையாளர்களை வியப்புறச் செய்திடக்கூடுமாக. அப்போதுதான் இந்த இதயம் இன்புறும், இந்த ஆன்மா ஆசி பெறும்."[39]

"அப்போது உண்மைச் சூரியன் உதித்தது, இராஜ்யத்தின் சுடரொளிகள் கிழக்கு, மேற்கு ஆகியவற்றின் மீது பொழியப்பட்டது. காணக் கண் கொண்டோர் அந்த நற்செய்தியினால் மகிழ்வுற்று, உரக்கக் கூவினர்: 'ஆசிபெற்றோம், நாம் ஆசிபெற்றோர் ஆவோம்!; அவர்கள் அனைத்து பொருள்களின் உள்ளார்ந்த மெய்மையை கண்ணுற்றனர்; இராஜ்யத்தின் மர்மங்களைப் புலப்படுத்தினர். அதன் பின் தங்கள் வீண் கற்பனைகளிலிருந்தும் தங்கள் சந்தேகங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டு, அவர்கள் உண்மையெனும் ஒளியினைக் கண்ணுற்றனர். கடவுளின் அன்பெனும் கோப்பையிலிருந்து அடிமண்டிவரை பருகியதால் அவர்கள் அடைந்த அத்துணைப் பரவசத்தினால், இவ்வுலகையும் தங்களையுமே முற்றிலும் மறந்தனர். ஆனந்தத் தாண்டவமாடி அவர்கள் தங்கள் சொந்தத் தியாகமரண தலத்திற்கு விரைந்து சென்றனர்; அன்பிற்காக மனிதர்கள் உயிர்விடும் அவ்விடத்தில், தங்கள் சிரசுகளையும் இதயங்களையும் அவர்கள் தூக்கி எறிந்தனர்."[40]

# குறிப்பீடுகள்

1. From a talk given on 14 April 1912, published in *The Promulgation of Universal Peace: Talks Delivered by 'Abdu'l-Bahá during His Visit to the United States and Canada in 1912* (Wilmette: Bahá'í Publishing, 2012), par. 4, p. 19.

2. *Gleanings from the Writings of Bahá'u'lláh* (Wilmette: Bahá'í Publishing Trust, 1983, 2017 printing), XXXIV, par. 1, p. 86.

3. Ibid., LXXV, par. 1, p. 162.

4. From a letter dated 30 October 1924 written by Shoghi Effendi to the Local Spiritual Assembly of Ṭihrán, published in *Chaste and Holy Life: Extracts from the Bahá'í Writings*, compiled by the Research Department of the Universal House of Justice (Ingleside: Bahá'í Publications Australia, 2021), no. 7, pp. 11–12.

5. Bahá'u'lláh, *The Hidden Words* (Wilmette: Bahá'í Publishing, 2003, 2022 printing), Arabic no. 5, p. 4.

6. *Selections from the Writings of 'Abdu'l-Bahá* (Wilmette: Bahá'í Publishing, 2010, 2015 printing), no. 174.2—3, pp. 280–81.

7. *Gleanings from the Writings of Bahá'u'lláh*, CXXVI, par. 4, pp. 307–8.

8. *Light of the World: Selected Tablets of 'Abdu'l-Bahá* (Haifa: Bahá'í World Centre, 2021), no. 6.7, p. 20; also in *The Importance of Obligatory Prayer and Fasting: Extracts from the Bahá'í Writings*, compiled by the Research Department of the Universal House of Justice (Ingleside: Bahá'í Publications Australia, 2021), no. 23, p. 15.

9. Bahá'u'lláh, in *The Kitáb-i-Aqdas: The Most Holy Book* (Wilmette: Bahá'í Publishing, 1993, 2021 printing), par. 1, p. 23; also in *Gleanings from the Writings of Bahá'u'lláh*, CLV, par. 1, p. 375.

10. Bahá'u'lláh, in *The Kitáb-i-Aqdas*, par. 3, p. 24; also in *Gleanings from the Writings of Bahá'u'lláh*, CLV, par. 3, p. 376.

11. Bahá'u'lláh, cited in the introduction written by the Universal House of Justice to *The Kitáb-i-Aqdas*, p. 7.

12. *Tablets of Bahá'u'lláh Revealed after the Kitáb-i-Aqdas* (Wilmette: Bahá'í Publishing, 1988, 2021 printing), no. 5.10, p. 54.

13. Bahá'u'lláh, in *The Importance of Obligatory Prayer and Fasting*, no. 14, p. 11.

14. *Tablets of Bahá'u'lláh Revealed after the Kitáb-i-Aqdas*, no. 17.109, p. 321.

15. *Gleanings from the Writings of Bahá'u'lláh*, CXXXIII, par. 1, p. 327.

16. Bahá'u'lláh, in *The Kitáb-i-Aqdas*, par. 4, p. 24; also in *Gleanings from the Writings of Bahá'u'lláh*, CLV, par. 4, pp. 376–77.

17. From a Tablet of 'Abdu'l-Bahá. (authorized translation)

18. *Gleanings from the Writings of Bahá'u'lláh*, LII, par. 1, p. 118.

19. *Days of Remembrance: Selections from the Writings of Bahá'u'lláh for Bahá'í Holy Days* (Haifa: Bahá'í World Centre, 2016), no. 29.9, p. 146.

20. *Selections from the Writings of 'Abdu'l-Bahá*, no. 178.1, p. 284.

21. From a talk given on 21 November 1911, published in *Paris Talks: Addresses Given by 'Abdu'l-Bahá in 1911* (Wilmette: Bahá'í Publishing, 2006, 2016 printing), no. 34.8, p. 133.

22. *Light of the World*, no. 4.3, p. 9.

23. 'Abdu'l-Bahá, in *Bahá'í Prayers: A Selection of Prayers Revealed by Bahá'u'lláh, the Báb, and 'Abdu'l-Bahá* (Wilmette: Bahá'í Publishing Trust, 2002, 2020 printing), pp. 131–32.

24. From a talk given by 'Abdu'l-Bahá on 16 June 1912, published in *The Promulgation of Universal Peace*, par. 1, p. 273.

25. From a letter dated 31 March 1932 written on behalf of Shoghi Effendi to an individual, in *The Power of Divine Assistance: Extracts from the Bahá'í Writings*, compiled by the Research Department of the Universal House of Justice (Ingleside: Bahá'í Publications Australia, 2020), no. 66, p. 36.

26. *Gleanings from the Writings of Bahá'u'lláh*, LXXVII, par. 1, p. 169.

27. *Selections from the Writings of 'Abdu'l-Bahá*, no. 200.9, pp. 338–39.

28. 'Abdu'l-Bahá, in *Some Answered Questions* (Wilmette: Bahá'í Publishing, 2014, 2022 printing), no. 70.6–7, pp. 288–89.

29. 'Abdu'l-Bahá, in *Bahá'í Scriptures: Selections from the Utterances of Bahá'u'lláh and 'Abdu'l-Bahá* (New York: Bahá'í Publishing Committee, 1928), no. 969, p. 503.

30. From a talk given by 'Abdu'l-Bahá on 26 May 1912, published in *The Promulgation of Universal Peace*, par. 2, p. 205.

31. From a Tablet of 'Abdu'l-Bahá. (authorized translation)

32. *Tablets of Bahá'u'lláh Revealed after the Kitáb-i-Aqdas*, no. 11.12, p. 205; also in *Gleanings from the Writings of Bahá'u'lláh*, CXVII, par. 1, p. 282.

33. From a talk given by 'Abdu'l-Bahá on 9 November 1911, published in *Paris Talks*, no. 27.11, p. 99.

34. *Selections from the Writings of 'Abdu'l-Bahá*, no. 35.9, p. 105.

35. Ibid., no. 64.2, p. 143.

36. Ibid., no. 42.3, p. 123.

37. Ibid., no. 195.5, p. 327.

38. Ibid., no. 17.8, p. 56.

39. Ibid., no. 190.10, p. 313.

40. Ibid., no. 16.1, p. 50.



# பயிற்சிக்கழகப் பாடங்களுக்குப் பயிற்றுநராகப் பணிபுரிதல்

## நோக்கம்

ஒரு நண்பர்கள் குழுவினர் பயிற்சிக்கழகப் பாடங்களைப் பயில்வதற்கு உதவியாக பயிற்றுநர் ஒருவருக்குத் தேவைப்படும் செயல்திறன்களுக்குப் பங்களிக்கக்கூடிய சில கருத்தாக்கங்களைப் புரிந்துகொள்ளுதல் மற்றும் சில ஆன்மிகப் பண்புகள், மனப்பான்மைகள், திறன்கள் ஆகியவற்றைப் பெறுதல்

## பகுதி 1

பதினைந்து வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்காக ரூஹி பயிற்சிக்கழகத்தால் அமைக்கப்பட்ட கல்வி செயல்முறையில் பங்கேற்பாளர்கள், சமூக வாழ்க்கையின் துடிப்பான வடிவத்திற்குப் பங்களிக்கும் சேவைகளைச் செய்வதற்கு அவர்களைத் தயார்படுத்தும் நோக்கில் ஒரு பயிற்சிப்பாட வரிசையைப் பயில்கின்றனர். இச்சேவைகளில், ஒரு சேவை இன்றியமையாததாகும், ஏனெனில், அது இல்லாமல், இந்த வடிவமாதிரியைத் தொடர்ந்துப் பராமரிப்பதும் பலப்படுத்துவதும் இறுதியில் சாத்தியமற்றதாகிவிடும். உண்மையில், கல்வி செயல்முறையின் மடிப்பவிழ்வு அதனையே சார்ந்துள்ளது -- அதாவது, பங்கேற்பாளர்கள் ஒரு சேவைப் பாதையில் முன்னேற உதவும் பயிற்சிக்கழக பாடங்களின் பயிற்றுநர்களாகப் பணியாற்றுவதற்கான திறனை அதிக எண்ணிக்கையிலான தனிநபர்கள் உருவாக்கிக் கொள்வது. பயிற்சிகளின் வரிசை பெரும்பாலும் ஒரு படிப்பு வட்டத்தின் அமைப்பில் ஓர் அண்டைப்புறத்தில் அல்லது கிராமத்தில் வாடிக்கையாக சந்திக்கும் நண்பர்கள் குழுவினரிடையே பயிலப்படுகிறது. இருப்பினும், சில நேரங்களில், தீவிர பயிற்சிக்காக ஏற்பாடு செய்யப்பட்ட பரப்பியக்கத்தின் ஒரு பகுதியாக அல்லது பள்ளி விடுமுறை நாட்களில் நடைபெறும் முகாமின் போது (படிப்பு வட்ட) குழுக்கள் அமைக்கப்படுகின்றன. சந்தர்ப்பம் எதுவாக இருப்பினும், குழுவின் ஓர் உறுப்பினர் பயிற்றுனராகச் செயல்படுகிறார்.

திறமையான பயிற்றுநர் ஒருவரின் செயல்திறன்களை மேம்படுத்துவதற்கு சில ஆரம்பப் பயிற்சி தேவைப்படுகிறது. அதைத் தொடர்ந்து, பிரதிபலிப்புக்காக அவ்வப்போது கூட்டங்களில் பங்கேற்பது, இதில் பயிற்சிப்பாடங்களின் உள்ளடக்கம் ஆராயப்பட்டு அனுபவம் பகுப்பாய்வு செய்யப்படுகிறது. ஆன்மிகப் பண்புகள் நமது அனைத்து செயல்திறன்களுக்கும் அடித்தளமாக அமைகின்றன என்பதையும், இறுதியில், நமது விளைவுத்திறத்தின் அளவையும் தீர்மானிக்கின்றது என்பதை நாம் அறிவோம். அதனால்தான் இந்த நூலின் முதல் பாடப்பிரிவு பாடத்திட்டங்கள் வரைந்த சேவை பாதையில் நடப்பதால் உருவாகும் ஆன்மிக இயக்கவியலின் இயல்பைப் பற்றியதாக இருந்தது. இந்த இரண்டாவது பாடப்பிரிவில், நாம் புரிந்து கொள்ள வேண்டிய சில கல்விக் கோட்பாடுகள், நாம் பின்பற்ற வேண்டிய அணுகுமுறைகள் மற்றும் செய்முறைகள் மற்றும் தொடர்ச்சியான அனுபவங்களின் மூலம் நாம் வளர்த்துக் கொள்ள வேண்டிய ப் பண்புகள், மனப்பான்மைகள், திறன்கள் மற்றும் திறமைகள் ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்துவோம்.

## பகுதி 2

உந்துகை என்னும் கருத்தை ஆராய்வதன் மூலம் நமது கலந்துரையாடலைத் தொடங்குவோம். உந்துகை இன்றி, பயிற்சிகளில் பங்கேற்பவர்கள் சிறிதளவே கற்றுக்கொள்வர், அவர்களின் எண்ணிக்கையும் குறைந்துவிடும். உந்துகையின்(motivation) மூலங்களை எவ்வாறு பெறுவது மற்றும் உயர்ந்த அளவு உற்சாகத்தை எவ்வாறு பராமரிப்பது என்பது உங்களை நீங்களே அடிக்கடி கேட்டுக்கொள்ளும் கேள்வி. பயிற்சிகளின் பயில்வில் உங்களுடன் சேர உங்கள் நண்பர்களையும் சமூகத்தில் உள்ள மற்றவர்களையும் அழைக்கும்போதெல்லாம் இந்த சவாலை நீங்கள் எதிர்கொள்வீர்கள், பின்னர், ஒவ்வொரு முறையும் நீங்கள் அவர்களுடன் ஒரு குழுவாக ஒன்றிணையும் போதும் இது நடக்கும்.

இந்தக் கேள்வியை ஆராய்வதில் ஒரு ஆரம்ப நடவடிக்கையாக, மக்களுக்கு உந்துகை அளிக்கும் காரணிகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்: நிலையற்றவை மற்றும் நிரந்தரமானவை. ஆரம்பத்தில் மக்களை கணநேரம், வழக்கமாக ஒரு குறுகிய காலத்திற்கு, உந்துவித்து செயல்படத் தூண்டும் காரணிகள் உள்ளன. இரண்டாவது வகையான உந்துகை, ஒரு நபரின் இதயத்திலும் ஆன்மாவிலும் ஆழமாக வேரூண்றிய உந்துகையை உருவாக்கும் காரணிகளை உள்ளடக்கியுள்ளது. இரண்டாவது நூலின் மூன்றாவது பாடப்பிரிவிலிருந்து அலெயாண்ட்ராவுக்கும் பீட்ரிஸூக்கும் இடையே நடந்த, பீட்ரிஸ் பயிற்சிக்கழக செயல்முறைக்குள்

பிரவேசிக்க வழிவகுத்த, செழுமையான உரையாடல் உங்களுக்கு நினைவிருக்கும். அதற்கு பதிலாக, அலெயாண்ட்ரா தனது நண்பருக்கு பின்வரும் அழைப்பை நீட்டியிருப்பாரா என்பதை எண்ணிப்பாருங்கள்:

> "எங்கள் சமூகத்தில் சமீபத்தில் நாங்கள் நிறுவிய ஒரு படிப்பு வட்டத்தில் சேர உங்களுக்கு அழைப்புவிடுக்க விரும்புகிறேன். எங்கள் குழுவில் ஏற்கனவே பன்னிரண்டு பேர் உள்ளனர், அவர்கள் ஒவ்வொருவரையும் உங்களுக்குப் பிடிக்கும் என நான் நம்புகிறேன். நாங்கள் ஒன்றாக மிகவும் சந்தோஷமான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றோம். நாங்கள் வாரம் இரண்டு முறை இரண்டு மணி நேரம் பயிற்சி செய்கிறோம், ஆனால் மற்ற நடவடிக்கைகளிலும் ஈடுபடுகிறோம். உதாரணமாக, இந்த சனிக்கிழமை, எங்களுக்கு ஒரு சுற்றுலா இருக்கின்றது, அதற்கு உங்களை பெரிதும் வரவேற்கின்றோம். அதன் பின்னர் எங்களுள் சிலர் கைப்பந்து விளையாட நினைக்கிறோம்."[37]

இவ்விதமான அழைப்பை எந்த உந்துகை வகையுடன் நீங்கள் தொடர்புபடுத்துவீர்கள்? நிச்சயமாக, மேலே உருவாக்கப்பட்ட அழைப்பில் எந்தத் தவறும் இல்லை. குறிப்பிடப்பட்ட புறப்பயிற்சி நடவடிக்கைகள், குறிப்பாக இளைஞர்கள் அடங்கிய ஒரு படிப்பு வட்டத்திற்கு பொருத்தமானவைதான். இத்தகைய நடவடிக்கைகள் ஒருவரை ஒரு படிப்பு வட்டத்தில் சேர்ந்துகொள்ள ஊக்குவிக்கும் என்பதை யாரும் மறுக்கப் போவதில்லை. இங்கு என்ன பரிந்துரைக்கப்படுகின்றது என்றால், இந்த வகையான உந்துகை பெரும்பாலும் தற்காலிகமானதாக இருந்திடும். அது சில காலத்திற்குப் பயனளிக்கும் ஆனால் காலப்போக்கில் அதன் விளைவுத்திறம் குறைந்துபோய்விடும். நீங்கள் இந்த வகையான உற்சாகத்தை மட்டுமே நம்பியிருந்தால் நீங்கள் ஒரு மிகவும் இக்கட்டான நிலைக்கு ஆளாவீர்கள். நீங்கள் சதா ஏதாவது மகிழ்ச்சியளிக்கும் விஷயங்களைக் கண்டுபிடிக்க வேண்டும். இறுதியில் நீங்கள் சோர்வடைந்து போவீர்கள். கற்றல் என்பது மகிழ்சிகரமானதாக இருக்கவேண்டும் என்பதால், கல்வியும் போழுதுபோக்கும் ஒன்றாகிவிடாது.

பங்கேற்பாளருக்கு ஆன்மிக மற்றும் தார்மீக ஆற்றலளித்தல் என்னும், பயிற்சிப்பாடங்களின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு, நீங்கள் நிரந்தர உந்துகைகளுக்கான மூலாதாரங்களைத் தேட வேண்டும். நீங்கள் இத்தகைய மூலாதாரங்களில் பலவற்றுடன் ஏற்கனவே நன்கு அறிமுகமாகியுள்ளீர்கள். நீங்கள் எதற்காக பயிற்சிக்கழக செயல்முறையில் பங்கேற்றீர்கள் என்பதற்கான உங்கள் சொந்தக் காரணங்களைப் பற்றி நீங்கள் பிரதிபலித்தீர்களானால் அவற்றை நீங்கள் எளிதில் ஞாபகத்திற்குக் கொண்டுவருவீர்கள். பல்வேறு பயிற்சிகளைப் பயில உங்களைத் தூண்டியது என்ன, மற்றும் இப்போது இதே பயிற்சிப்பாடங்களுக்கான பயிற்றுநராக நீங்கள் செயல்படுவதற்குத் தேவையான செயல்திறன்களை உருவாக்கிக்கொள்வதற்கு உங்களுள் ஆவலை உண்டாக்கியது எது?

## பகுதி 3

உற்சாக உணர்வு தொற்றிக்கொள்ளும் தன்மையுடையது என சொல்லக் கேட்டிருப்பீர்கள். ஆதலால், இந்த சேவைச் செயலை நீங்கள் எவ்வளவு ஆர்வத்துடனும் துடிப்புடனும் அணுகுகின்றீர்கள் என்பது இந்தப் பாடத்திட்டங்களைப் பயின்றிட உங்கள் நண்பர்களுக்கு உந்துகை அளித்திட உதவும். இந்த உற்சாகம் வெறும் கிளர்ச்சியாக, வெறுமனே ஒரு கணநேர மற்றும் மேலோட்டமான உணர்ச்சியாகப் புரிந்துகொள்ளக்கூடாது. அது உள்ளார்ந்த மகிழ்ச்சியின் ஓர் இயல்பான வெளிப்பாடு, இம்மகிழ்ச்சி ஆன்மாவுக்கு சொந்தமான ஒரு குணம், அது மறையக்கூடிய சூழ்நிலைகளின் விளைவன்று. நீங்கள் ஏற்கனவே பூர்த்திசெய்துள்ள பாடப்பிரிவுகளிலும் ஆர்வமுள்ளோருடன் நீங்கள் பயிலப்போகும் பாடப்பிரிவுகளிலும் இந்த மகிழ்ச்சியைப் பற்றி அடிக்கடி குறிப்பிடப்படும்--உதாரணத்திற்கு, போதித்தலில் மகிழ்ச்சி என்னும் தலைப்பைக் கொண்ட நூல் 2-இன் முதல் பாடப்பிரிவு. கடந்த பாடப்பிரிவின் பகுதி 11-யும் இந்த மகிழ்ச்சி சம்பந்தமானதே. அந்தப்

பகுதியை மறுபடியும் படிக்கவும். ஒரு பயிற்றுநராகப் பணிபுரிவதற்கான உங்கள் விருப்பத்தைப் பொறுத்தவரை, அங்கு சொல்லப்பட்ட கருத்துகள் உங்களுக்கு எவ்வாறு பொருந்துகின்றன? இந்த அலகை(unit) படிக்கும் குழுவினருடன், அப்துல்-பஹாவின் வாழ்க்கையைப் பிரதிபலித்தல், அவரது வார்த்தைகளைப் படித்து மனனம் செய்தல், மற்றும் அவரது வற்றாத அன்பை நினைவுபடுத்திக்கொள்தல் ஆகியவை எவ்வாறு உங்களுக்கு நீடித்த மகிழ்ச்சியின் ஆதாரமாக இருக்கும் என்பதைக் கலந்துரையாடவும்.

ஒரு பயிற்றுநராக சேவை செய்வதற்கான பேராவல் மகிழ்ச்சியிலிருந்து ஊற்றெடுக்கின்றது மற்றும் இந்த மகிழ்ச்சியானது ஒரு படிப்பு வட்டத்தின் பங்கேற்பாளர்களுள் உற்சாகத்தை உருவாக்குகின்றது. தெளிவாகவே, இந்த மகிழ்ச்சி ஒரு தூய உள்ளத்தின் குணமாகும். இந்நூலின் முதல் பாடப்பிரிவு உட்பட பல்வேறு சந்தர்ப்பங்களில் இதயத் தூய்மை என்னும் கருப்பொருள் குறித்து நாம் விவாதித்திருக்கிறோம். நூல் 6-இன் இரண்டாவது பாடப்பிரிவில் நாம் போதித்தல் முயற்சிகளைப் பாதிக்கும் மூன்று மாசுகளைப் பற்றி விவாதித்தோம்: அங்கீகாரத்திற்கான ஆசை, மேன்மை உணர்வு மற்றும் இலட்சியவுணர்வு. இவை ஒரு பயிற்றுந ரின் விளைவுத்திறத்தை எவ்வாறு குறைக்கலாம் என்பதைப் பற்றி சிந்திப்போமாக:

1. ஒரு பயிற்றுநரின் நோக்கங்களின் தூய்மையை பங்கேற்பாளர்கள் உணர முடியும் என நீங்கள் நினைக்கின்றீர்களா?

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

2. படிப்பு வட்டத்தின் பயிற்றுநர் தான் பங்கேற்பாளர்களைவிட மேலானவர் என நினைக்கின்றார் என அப்பங்கேற்பாளர்கள் உணர்ந்தால் அவர்களின் உந்துகை எவ்வாறு பாதிக்கப்படும்?

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

3. சமூகத்தில் தனது அந்தஸ்து உயர வேண்டும் என்னும் எண்ணத்தில் பயிற்றுநர் சேவை செய்கிறார் என்னும் எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டால் அவர்களின் உந்துகை எவ்வாறு பாதிக்கப்படும்?

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

தூய்மை பற்றிய கேள்வி குறித்து மேலும் சிந்திப்பதற்கு பின்வரும் பட்டியலைப் பார்க்கவும். ஒரு பயிற்றுநராக சேவை செய்வதற்கு ஒருவருக்கு இருக்கக்கூடிய சில காரணங்களை அது கொடுக்கின்றது. அவற்றுள் சில முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதவை மற்றும் மாறுபடுத்திக் காட்டுவதற்காக இங்கே சேர்க்கப்பட்டுள்ளன. முதலில் அறவே ஏற்கப்பட முடியாதவற்றை “மு” என்னும் எழுத்தைக் கொண்டு குறியிடவும். பிறகு எஞ்சியிருப்பவற்றைக் கருத்தில் கொண்டு, உங்கள் குழுவில் உள்ள மற்ற பங்கேற்பாளர்களுடன் அவர்களுக்கு எவற்றிலிருந்து பற்றில்லாமல் இருக்க

வேண்டும் என்பதை விவாதியுங்கள். சுயலட்சியம், வெற்றி மற்றும் அங்கீகாரத்திற்கான ஆசை, உலகின் வீண் மாயைகள், தன்னகத்தின் தூண்டுதல்கள் போன்றவற்றை மனதில் கொள்ளுங்கள்.

ஒருவர் பின்வரும் காரணங்களுக்காக பயிற்றுநராக சேவை செய்திட விரும்பலாம்.

_______ மக்கள் முன்னேற்றத்தில் மகிழ்ச்சி அடைகிறார்.

_______ ஆன்மிக ரீதியில் வளர்ந்து தனது கிராமம் அல்லது அண்டைப்புறத்தில் சமூக நிர்மாணிப்பு நடவடிக்கைக்குப் பங்களித்திட விரும்புகின்றார்.

_______ இறுதியில் தான் ஒரு மண்டல ஒருங்கிணைப்பாளர் ஆகி சிறிது வருமானம் பெற விரும்புகின்றார்.

_______ துணை வாரிய உறுப்பினரைக் கவர விரும்புகின்றார்.

_______ மற்றவர்கள் தன்னைப் பின்பற்ற வேண்டுமென விரும்புகின்றார்.

_______ மற்றவர்களால் விரும்பப்பட வேண்டுமென விரும்புகின்றார்.

_______ மற்றவர்களின் மரியாதைக்கு ஆளாக வேண்டுமெனும் விருப்பம்.

_______ காரியங்களைச் செய்யவும் முடிவுகளைப் பெறவும் விரும்புகின்றார்.

_______ சமூகத்தில் ஒரு தலைவராகக் கருதப்பட வேண்டுமெனும் ஆசை.

_______ அதிநேசத்திற்கு உரியவர்பால் (கடவுள்) காதல்.

_______ உலக நீதிமன்றத்தினால் கொடுக்கப்பட்ட உலகப் பெருந்திட்டங்களுக்குப் பங்களிக்க வேண்டுமெனும் விருப்பம்.

_______ சமயத்தின்பால் பற்றற்ற சேவை என்னும் நறுமணத்தை சுவாசித்துள்ளார்.

_______ தனக்கு அல்லது தனது சமூகத்திற்கு கடவுளின் ஆசிகளை ஈர்த்திட விரும்புகின்றார்.

_______ கடவுளைத் திருப்திபடுத்துவதைத் தவிர வேறு ஆசை இல்லாதவர்.

## பகுதி 4

ரூஹி பயிற்சிக்கழகத்தின் பாடங்களைப் பயின்றிட மற்றவர்களுக்கு உதவும் முயற்சியில், புரிதல் என்பது தனியே, அனைத்து உந்துகைகளிலும் மிகப் பெரியதாகும். ஒவ்வொரு மனித இதயத்திலும் அர்த்தத்திற்கான ஏக்கம் உள்ளது; சிருஷ்டியின் புற மற்றும் அக யதார்த்தங்கள் குறித்த அறிவுக்கு இயல்பாகவே ஒரு தாகம் உள்ளது. இந்த ஏக்கத்தை கல்வி தீர்க்க வேண்டும். அது அவ்வாறு செய்யும் போது, அது உந்துகையின் மூலங்களிலிருந்து பயன் பெறுவதில் வெற்றி பெறுகின்றது. அப்துல்-பஹாவின் பின்வரும் வார்த்தைகளை நீங்கள் தியானிக்குமாறு நாங்கள் பரிந்துரைக்கிறோம். அதில், அவர் சமயத்தை போதிக்க எழுவோரின் "போதனைக் கூட்டம்" என அழைக்கும் ஒன்றின் மூலம் பயிற்சியளிப்பதற்கான ஒரு பிரபலமான பஹாய் மேற்கொண்ட முயற்சிகளை அவர் பாராட்டுகிறார்:

> **“இறைவனின் படையினரே! புராதன இறையாண்மையானவர், படைக்கப்பட்ட ஒவ்வொரு பொருளுக்கும் அதன் சொந்த பரிபூரணத்துவம், அதன் குறிப்பான நற்பண்பு மற்றும் விசேஷ உன்னதம் ஆகியவற்றின் பங்கினை விகித்துள்ளார். அதனால், ஒவ்வொன்றும், தனது அளவிற்கேற்ப மனிதகுலத்தின் உண்மையான கல்வியாளரின் விழுமிய தன்மையைக்**

**குறிக்கும் ஓர் சின்னமாகி, ஒவ்வொன்றும் ஒரு படிக (crystalline) கண்ணாடியைப் போன்று, மெய்மையெனும் சூரியனின் கிருபை, பிரகாசம் ஆகியவற்றைப் பற்றி எடுத்துரைக்கக் கூடும்.**

**“படைப்பினங்கள் அனைத்திலிருந்தும் அவர் தமது மிக அற்புதப் பரிசினை வழங்குவதற்காக, மனிதனைத் தேர்ந்தெடுத்து, விண்ணவ வான்படையினரின் வெகுமதிகளை அவன் அடைந்திடச் செய்துள்ளார். அவரது தவறாத வழிகாட்டுதலை அடைதலே, பரிசுகளில் அதிக விலைமதிப்புடையது. அதனால், மனித குலத்தின் உள்ளார்ந்த யதார்த்தமானது இந்த விளக்கினை ஏந்துவதற்கான ஒரு தனியிடமாகிட வேண்டும், மற்றும் இவ்வொளியின் பரவிடும் பிரகாசங்கள், உள்ளமெனும் வெளிச்சமிகு கண்ணாடியின் மீது வீசப்படும்போது, உள்ளத்தின் தூய்மையானது, ஒளிக்கதிர்களை முன்பை விட மேலும் பலமாக வீசி, மனிதர்களுடைய மனங்களின் மீதும் ஆன்மாக்களின் மீதும் கீர்த்தியுடன் பிரகாசித்திடச் செய்யும்**

**“அதிபெரும் வழிகாட்டுதலை அடைவதென்பது அறிவு, ஞானம் ஆகியவற்றையும், புனித வாசகங்களின் புதிர்களைப் பற்றி அறிவிக்கப்பட்டிப்பதையும் சார்ந்துள்ளது. இந்தக்காரணத்தால், இறைவனுடைய அன்பிற்குரியவர்கள், அவர்கள் இளையோராயினும், முதியோராயினும், அவர்கள் ஆண்களாயினும், பெண்களாயினும் ஒவ்வொருவரும் தனது செயல்திறன்களுக்கு ஏற்ப அறிவின் பல்வேறு கிளைகளில் அறிவு பெறுவதற்காகவும், புனித நூல்களின் புதிர்களைப் பற்றிய தனது புரிதலை அதிகரித்துக்கொள்ளவும், தெய்வீக நிரூபணங்கள், சான்றுகள் ஆகியவற்றைத் திரட்டிக்கொள்வதில் தனது திறமையை அதிகரித்துக் கொள்ளவும் கடுமுயற்சி செய்ய வேண்டும்.**

**“பரமானந்தத்தின் ஓய்விடங்களில் மெய்யாகவே ஒரு மிகவும் மேன்மையான ஸ்தானத்தை அடைந்துள்ள பிரபலமான சட்ரு’ஸ்- சுடூர், போதித்தல் கூட்டத்தை துவக்கி வைத்தார். அவர் இந்தப் பெருஞ்சிறப்பு வாய்ந்த ஸ்தாபனத்தின் அடித்தலத்தை இட்ட, முதல் ஆசிபெற்ற ஆன்மா ஆவார். இறைவன் போற்றப்படுவாராக, அவர் தனது வாழ்நாளில், பிரபுவாகிய கடவுளின் உறுதியான மற்றும் சொல்வன்மை மிக்க ஆதரவாளர்களாக இன்று இருக்கும் பலருக்குக் கல்வியளித்தார், அவர்கள் புனித தலைவாசலுக்கு மிக அருகில் இருந்தவரான அவரது தூய மற்றும் ஆன்மிக சந்ததியினரான சீடர்கள் ஆவர். அவரது மறைவுக்குப்பின், சில புனித ஆன்மாக்கள், அவரது போதனைப் பணியைத் தொடரச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதைப் பற்றி அவர் (அப்துல்-பஹா) அறிந்தபோது, இந்த சிறைவாசியின் உள்ளம் மகிழ்வுற்றது.”[1]**

அப்துல்-பஹாவின் இந்த வார்த்தைகள் ஒரு படிப்பு வட்டத்திற்கு விரும்பப்படும் இயக்கவியல்கள் குறித்து விலைமதிப்பற்ற அகப்பார்வைகள் வழங்குகின்றன. மேற்கண்ட உரைப்பகுதியின்படி, கடவுளின் வழிகாட்டலை அடைவதெனும் பரிசே கடவுளால் நமக்கு அருளப்பட்ட மாபெரும் பரிசாகும். “இந்த அதிபெரும் வழிகாட்டலைப்” பெறுவதற்கு, நமக்கு அறிவும் ஞானமும் தேவைப்படுகின்றது, நாம் புனித வாசகங்களில் கோவில் கொண்டுள்ள மர்மங்கள் குறித்து அறிவு பெற்றிருக்க வேண்டும். ஆதலால், அவரது தவறாத வழிகாட்டல் என்னும் அருட்கொடையைப் பெற்று புனித வாசகங்களின் மர்மங்களை ஆராய்வது, தாமே உந்துகைக்கான முதன்மை மூலாதாரமாகும். ஒரு படிப்பு வட்டத்தின் பங்கேற்பாளர்கள் உண்மையில் இத்தகைய ஒரு சிலிர்ப்பூட்டும் ஆய்வில் ஈடுபட்டு இந்த அற்புதப் பரிசைப் பெறுவதை உறுதிசெய்வதே உங்கள் சவாலாகும்.

இந்தக் குறிப்பை மேலும் புரிந்துகொள்ள, பயிற்சித் திட்டங்களின் வரிசையில் முதல் நூலுக்கு இப்போது திரும்பி, ஓர் ஆன்மிக விஷயத்தைப் பற்றிய உங்கள் புரிதலை ஓரளவுக்கு அதிகரித்த, குறைந்தது மூன்று பகுதிகளை அடையாளம் காணவும். அந்த ஒவ்வொரு பகுதியின் படிப்பாய்விலிருந்து நீங்கள் பெற்ற சில அகப்பார்வைகளைக் குறிப்பிடவும்.

1. ______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

2. ______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

3. ______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

உங்களுக்கு வழங்கப்பட்ட மேற்கண்ட நிருபத்தில் அப்துல் பஹா ஒரு குறிப்பிடத் தகும் அழகுடைய ஒரு பிரார்த்தனையை வெளிப்படுத்தியுள்ளார். அதை நீங்கள் மனனம் செய்து, நீங்கள் ஒரு பயிற்றுநராகப் பணிபுரிய முன்னெழுகையில், அதை நினைவுகூர்ந்திட விரும்பலாம்.

**“கடவுளே, மனிதர்களின் மெய்மைகளின் மீது தங்களது பிரகாசத்தை வீசி, அறிவுமற்றும் வழிகாட்டுதல் ஆகியவற்றின் பிரகாசமான ஒளியை அவர்களின் மீது வீசி, இவ்விழுமிய கிருபைக்காக, படைக்கப்பட்ட அனைவற்றிலிருந்து, அவர்களைத் தேர்ந்தெடுத்து, அனைத்தையும் அவர்கள் தழுவிடச் செய்து, அவற்றின் உள்ளார்ந்த சாரத்தை அவர்கள் புரிந்துக் கொள்ளவும், அவற்றின் புதிர்களைத் தெரிவித்து, அவர்களைப் புலனாகும் உலகிற்கு, இருளிலிருந்து, வெளியே கொண்டு வரச் செய்தவரே! ‘மெய்யாகவே, அவர் தாம் விரும்பியோருக்கு, தமது விசேஷ கருணையைக் காட்டுகின்றார்.’**

**“பிரபுவே, தங்களுடைய அன்பர்கள் அறிவு மற்றும் விஞ்ஞானங்களும் கலைகளும் பெற்றிடவும், படைப்பினங்கள் அனைத்தின் உள்ளார்ந்த மெய்மையில் பொக்கிஷமாக்கப்பட்டு இரகசியங்களை புரிந்துகொள்ளவும், அவர்களுக்கு உதவி புரிவீராக. இருப்பனவற்றின் உள்ளத்தில் எழுதப்பட்டு, பதியப்பட்டிருக்கும், மறைந்துள்ள உண்மைகளை அவர்கள் செவிமடுக்கச் செய்வீராக. படைப்பினங்கள் அனைத்தின் மத்தியில் அவர்கள் வழிகாட்டுதலின் சின்னங்களாகவும், இந்த, ‘முதல் வாழ்க்கையில்’ தங்களது ஒளியினை வீசிடும், மனதின் ஊடுருவும் கதிர்களாகவும், அவர்கள் இருந்திடச் செய்வீராக. உம்மிடத்தில் வழிநடத்துபவர்களாகவும், உமது பாதையில் வழிகாட்டிகளாகவும், உமது இராஜ்ஜியத்தின்பால் மனிதர்களை உந்தும் இடையீட்டாளர்களாகவும் ஆக்குவீராக.**

**“மெய்யாகவே நீரே சக்திமிக்கவர், பாதுகாப்பாளர், ஆற்றல்மிக்கவர், ஆதரிப்பவர், வலிமை மிக்கவர், தாராளகுணமிக்கவர்”**[2]

## பகுதி 5

படிப்பு வட்டத்தின் பயிற்றுனராக நீங்கள் பணிபுரியும்போது, பங்கேற்பாளர்கள், பயிற்சி உபகரணங்களைப் பற்றி பொருத்தமான அளவிற்கு புரிதல் பெற்றுள்ளனரா என்பதை நீங்கள் மதிப்பீடு செய்ய வேண்டும். இந்த சூழலில், பொதுவாகப் புரிதல் என்பது ஒருவர் சாதிக்கும் மற்றும் அத்துடன் முடிந்து போகும் ஒன்றல்ல என்பதை நீங்கள் அறிய வேண்டும். பல யோசனைகள் ஒரே தடவையில் புரிந்துகொள்ளப் படுகின்றன என்பதும் உண்மை. ஆனால், பெரும்பாலான விஷயங்களின் ஆழமான புரிதல் நீண்டகாலமாக உருவாகின்றது. ஆவ்வாறாயின், நீங்கள் உங்களை அடிக்கடி கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி, பங்கேற்பாளர்கள் “புரிந்துகொண்டார்களா” என்பதல்ல, மாறாக, ஒரு குறிப்பிட்ட விஷயம் குறித்து “அவர்கள் தங்கள் புரிதலில் மேம்பாடு கண்டுள்ளார்களா” என்பதே. புரிதல் குறித்த கருத்தாக்கத்தின் மீது கவனம் செலுத்தும், “பயிற்றுநருக்கான சில எண்ணங்கள்” என்னும் நூல் 1-இன் ஆரம்பப் பகுதியிலிருந்து வரும் பின்வரும் பத்திகளைப் படித்துப் பிரதிபலியுங்கள். அவ்வாறு செய்யும் போது, நூலின் முதல் பாடப்பிரிவின் பொருத்தமான பகுதிகளைப் பார்க்கவும்.

> பயிற்சிக்கழகத்தின் பாடத்திட்டங்களால் திறந்துவிடப்பட்ட சேவை பாதையில் பயணித்தல், உபகரணங்கள் சந்தேகத்திற்கு இடமின்றி முன்வைக்கும், பஹாவுல்லாவின் போதனைகள் குறித்த தொடர்ந்து ஆழப்படும் புரிதலைக் கோருகின்றது.
>
> அப்படியானால், இந்தத் தொடர்வரிசையில் உள்ள எல்லா நூல்களுக்கும் மிகவும் மைய நிலையில் இருக்கும் புரிதல் பற்றிய கேள்வியுடன் இந்த முதல் நூல் தொடங்குவதில் ஆச்சரியம் ஏதுமில்லை. புனிதவாசகங்களைப் படித்தல் என்பது, ஒருவர் தமதுவாழ்நாளில் பார்க்கும் ஆயிரக்கணக்கான பக்கங்களைப் படிப்பதற்கு சமமானதல்ல, மற்றும் “பஹாய் திருவாக்குகளைப் புரிந்துகொள்தல்” பாடப்பிரிவு ஒவ்வொரு நாளும் புனித வாசகங்களிலிருந்து பத்திகளைப் படித்து அவற்றின் அர்த்தத்தை தியானிக்கும் பழக்கத்தைப் பேணி வளர்க்க முயல்கிறது, இது பங்கேற்பாளர்கள் சேவை பாதையில் பயணிக்கும்போது பெரிதும் உதவியாக இருந்திடும். அதன் படிப்பாய்வில் அவர்களுக்கு வழிகாட்டுவதற்கு, பயிற்றுநர் புரிதல் பற்றிய கருப்பொருள் மீது அதிக சிந்தனை செலுத்த வேண்டும்.
>
> பஹாய் திருவாசகங்கள் ஆழ்ந்த ஆன்மிக உண்மைகளைக் கொண்டிருக்கின்றன, அவற்றின் எல்லையற்ற அர்த்தங்கள் மீது நாம் நமது புரிதலில் மேம்பாடு காண முயலும் போது, அதில் ஓர் உறுதியான முடிவைக் காண முடியாது என்பது நமக்குத் தெரியும். பொதுவாக ஒரு பத்தியை முதல் முறை படிக்கும் போது அதன் உடனடி அர்த்தம் குறித்த ஓர் அடிப்படைப் புரிதலை நாம் பெறுவோம், அத்துடன் இந்தப் பாடப்பிரிவின் முதல் பகுதி இதை அதன் ஆரம்பமாக எடுத்துக்கொள்கின்றது. இவ்வாறு, “உலக சீர்திருத்தமானது தூய்மையான மற்றும் நற்செயல்களின் மூலமும் பாராட்டுக்குரியதும் பொருத்தமானதுமான நடத்தையின் மூலமும் சாதிக்கப்பட முடியும்” என்னும் மேற்கோளைப் படித்த பிறகு பங்கேற்பாளரிடம், “உலக சீர்திருத்தம் எவ்வாறு சாதிக்கப்பட முடியும்” என பங்கேற்பாளர்களிடம் ஓர் எளிமையான கேள்வி கேட்கப்படுகின்றது. மேலோட்டமாகப் பார்க்கும் போது இத்தகைய கேள்விகளும் பயிற்சிகளும் மிகவும் எளிமையானவையாக தோன்றுகின்றன. ஆனால் பல வருடகால அனுபவம், இம்முறையில் ஆரம்பிக்கும் பயிற்சிக்கழகத்தின் முடிவை நியாயப்படுத்துவதாகத் தோன்றும். ஒரு பத்தியில் உண்மையின் பல அடுக்குகளைக்

கண்டுபிடிக்கும் அவசரத்தில், மனம் அப்பத்தியின் வெளிப்படையான அர்த்தத்தைக் காணத்தவறிவிடக்கூடாது என நம் அனைவருக்கும் நினைவூட்டப்பட வேண்டும். இந்த முதல் மட்ட புரிதலுக்கு செலுத்தப்படும் கவனமும், குழுக் கலந்தாலோசனைக்கு இன்றியமையாதது என்பதை நிரூபிக்கின்றது; அது, சுய கருத்துகள் தெய்வீக ஞானத்தால் ஒளியூட்டப்படும் போது அடையப்படக் கூடிய சிந்தனை ஒற்றுமையை வலுப்படுத்துகின்றது.

பெரும்பாலான பத்திகளின் உடனடி அர்த்தத்தைப் புரிந்துகொள்வது தனி வார்த்தைகளை அவற்றின் சூழலுக்கு வெளியே நீண்ட நேரம் விவாதிப்பதினால் பயனடையாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். அவ்வாறு கூறினாலும், ஒரு குழு சில நேரங்களில் ஒரு தனி வார்த்தையின் அர்த்தத்தை அகராதியில் தேடுவது அவசியமாக இருக்கலாம். இருப்பினும், முழு வாக்கியங்கள் மற்றும் பத்திகளிலிருந்து சொற்களின் அர்த்தங்களை எவ்வாறு ஊகிப்பது என்பதைப் பங்கேற்பாளர்கள் கற்றுக்கொள்வது மிகவும் பயனளிப்பதாக இருந்திடும்.

உடனடி அர்த்தத்தின் எல்லைக்கு அப்பால் புரிதல் விரிவடைய வேண்டுமானால், கருத்துகள் எவ்வாறு ஆணித்தர வெளிப்பாட்டை அடைகின்றன என்பதைக் காட்டும் எடுத்துக்காட்டுகள் உதவியாக இருக்கும். நேரடியான பயிற்சிகளே இதன் தொடர்பில் கோரப்படுகின்றன. உதாரணத்திற்கு, பகுதி 2-இல், அவர்கள் படித்த ஒரு பத்தியின் அடிப்படையில், குறிப்பிட்ட சில பண்புக்கூறுகள் பாராட்டத் தக்கவையா என்பதைத் தீர்மானிக்கும்படி கோரப்படுகின்றனர். பகுதி 4-இல் அதே போன்ற ஒரு பயிற்சியில், அவர்கள் ஐந்து பண்புகளைப் பெயரிடும்படியும், பின்னர் அவற்றில் எவற்றையும்--புனிதவாசகங்களில் “எல்லா மனித நற்பண்புகளுக்கும் அஸ்திவாரம்” என வர்ணிக்கப்படும்--வாய்மையின்றி அடைய முடியுமாவென தீர்மானிக்கும்படியும் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

அதன் நோக்கத்தை அடைய, கொடுக்கப்பட்டுள்ள பத்திகளின் சில தாக்கங்கள் பற்றி சிந்திக்குமாறு பங்கேற்பாளர்களுக்கு சவாலிடுவதன் மூலம் புரிதலில் மேலும் அதிக மேம்பாடு கண்டிட பாடப்பிரிவு கோருகின்றது. பகுதி 2-இல், “உலகில் வெகு சில நல்லவர்களே இருப்பதனால் அவர்களின் செயல்கள் எந்த விளைவையும் ஏற்படுத்துவதில்லை” என்னும் கூற்று உண்மையா என்பதைத் தீர்மானிக்கும்படி கோரப்படுகின்றனர். வெறும் கருத்தை மட்டும் வெளிக்கொணர்வது இங்கு நோக்கமல்ல. பயிற்றுநர் இடைநிறுத்தி பங்கேற்பாளரின் பதில்களுக்கான காரணத்தை வினவ வேண்டும். அந்தக் கூற்று முந்தைய மேற்கோளுடன் முரண்படுவதால் அது கண்டிப்பாக தவறாக இருக்க வேண்டும், என்பதுதான் குழுவின் முடிவாக இருக்க வேண்டும். பஹாய்கள் தங்களின் பாவங்களை அடுத்தவரிடம் ஒப்புக்கொள்ளலாமா என்னும் கேள்வியும் இந்த வகையான பயிற்சியின் மற்றோர் உதாரணமாகும். அது பாவங்களை நீக்குவதற்கான ஒரு வழிமுறையாக பாவமன்னிப்பிற்கு எதிரான போதனைகளில் உள்ள தடையைக் குறிக்கின்றது. அது படிப்பாய்வு செய்யப்பட்ட எந்த பத்திகளிலும் வெளிப்படையாகக் குறிப்பிடப் படாவிட்டாலும், அது, மொத்தக் கணக்குப் பார்க்க அழைக்கப்படுவதற்கு முன் உனது ஒவ்வொரு நாளையை செயலையும் கணக்கிட்டுக் கொள்வாயாக” என்னும் மேற்கோளை ஆராய்வதன் மூலம் வெளிக்கொணரப் படலாம்.

**இப்பொழுது, புரிதல் குறித்த கருத்தாக்கத்தின் மீதான உங்கள் பிரதிபலிப்புகளின் அடிப்படையில், பின்வரும் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்.**

1. புனிதவாசகங்களிலிருந்து எடுக்கப்பட்ட பத்திகளின் உடனடி அர்த்தத்தின் மீது கவனம் செலுத்துவது எவ்வாறு ஒரு குழுவில் சிந்தனை ஒற்றுமையை உருவாக்குகின்றது?

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

2. ஒரு பத்தியின் உடனடி அர்த்தத்திற்கும் அப்பால் சென்று அது நம் வாழ்வில் எவ்வாறு ஓர் ஆணித்தரமான வெளிப்பாட்டைக் காண்கிறது என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டியது ஏன் அவசியமாகின்றது?

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

3. புனித வாசகங்களில் இருந்து எடுக்கப்பட்ட பத்திகளின் பரந்த தாக்கங்களைப் பற்றிய நுண்ணறிவுகளைப் பெறுதல் சமயத்தின் போதனைகளுடன் நமது எண்ணங்களையும் செயல்களையும் இணைவாக்க எவ்வாறு உதவுகிறது?

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

## பகுதி 6

புரிதலைப் பேணி வளர்ப்பதற்கான உங்கள் திறன், உணர்திறன், பற்றின்மை, தாராளத்தன்மை போன்ற பண்புகளைத் தொடர்ச்சியாக மேம்படுத்துவதையும் ஆன்மிகப் புலனுணர்விலிருந்து பயன்பெறுவதையும் அவசியமாக்குகின்றது. நீங்கள் அனைவரும் சொல்வதைக் கவனமாகச் செவிமடுக்க வேண்டும். சில நேரங்களில், ஒரு தனிநபர் கலந்துரையாடப்படும் விஷயத்தை உண்மையில் நன்கு புரிந்துகொண்டிருந்தாலும், அவருக்குத் தமது எண்ணங்களை வெளிப்படுத்துவற்குப் போதுமான வார்த்தைகள் இல்லாமல் இருக்கலாம். நீங்கள் வார்த்தைகள் மீது மட்டுமே கவனம் செலுத்தக்கூடாது, மாறாக, உத்தேசிக்கப்படும் அர்த்தத்தைக் காண முயல வேண்டும். அவ்வாறு செய்திட, நீங்கள் உங்கள் நண்பர்கள் மீது நம்பிக்கை வைக்க வேண்டும், அத்துடன் அவர்கள் ஒவ்வொருவரிடமும் கூறுவதற்கு ஏதாவது குறிப்பிடத்தக்க விஷயம் இருக்கும் என்னும் மெய்யுறுதியும் வேண்டும்.

புரிதலைப் பேணி வளர்ப்பதற்கான திறனைப் பற்றி பிரதிபலித்திட, பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றையும் வாசிக்கவும், பின்னர் நீங்கள் சரி என நினைப்பவற்றைக் குறிக்கவும்.

_______ நான் பிறருடன் திருவாசகங்களிலிருந்து ஒரு பத்தியைப் படிப்பாய்வு செய்யும் போது, பங்கேற்பாளர்கள் அப்பத்தியை நான் புரிந்துகொண்ட விதத்தில் அவர்களும் புரிந்துகொண்டுள்ளனரா என்பதை ஒரு பயிற்றுநர் என்னும் முறையில் உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும்.

_______ நான் பிறருடன் திருவாசகங்களிலிருந்து ஒரு பத்தியைப் படிப்பாய்வு செய்யும் போது, நான் அவர்களின் புரிதலை மதிக்க வேண்டும் ஆனால், ஒரு பயிற்றுநர் என்னும் முறையில் எனக்கு மற்றவர்களைவிட தெளிவான புரிதல் இருப்பதால் நான் என் கருத்துகளில் உறுதியாக இருக்க வேண்டும்.

_______ நான் பிறருடன் திருவாசகங்களிலிருந்து ஒரு பத்தியைப் படிப்பாய்வு செய்யும் போது, எனக்கு எவ்வளவுதான் ஏற்கனவே தெரிந்திருந்த போதும், நான் எங்களின் கலந்துரையாடல்களில் இருந்து பல விஷயங்களைக் கற்றுக்கொள்கின்றேன்.

_______ நான் பிறருடன் திருவாசகங்களிலிருந்து ஒரு பத்தியைப் படிப்பாய்வு செய்யும் போது, நான் எனது புரிதலை பணிவுடனும் கபடில்லாமலும் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

_______ நான் ஒரு பயிற்றுநராகப் பணிபுரியும் போது, உபகரணம் சார்ந்த என் சொந்தப் புரிதல் பூரணமானது என நான் ஒரு போதும் எண்ணக்கூடாது. பங்கேற்பாளர்கள் திருவாசகப் பத்தி ஒன்றின் வெளிப்படையான அர்த்தத்திற்கு எதிர்மாறான முடிவுகளுக்கு வராமல் இருப்பதை உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும்.

_______ நான் ஒரு பயிற்றுநராகப் பணிபுரியும் போது, நான் எனது சொந்த கருத்துகளையும் நம்பிக்கைகளையும் வெளிப்படுத்தக் கூடாது.

_______ எங்கள் படிப்புவட்டத்தில் கலந்துரையாடலின் நோக்கம் நான் உபகரணத்தின் சரியான அர்த்தத்தைப் போதிக்க வேண்டும் என்பதாகும்.

_______ எங்கள் படிப்புவட்டத்தில் கலந்துரையாடலின் நோக்கம் எல்லாரும் தங்கள் மனதுக்குத் தோன்றிய எதையும் வெளிப்படுத்துவதாகும், ஏனெனில் சுய-வெளிப்பாடு நமக்கு மிக உயர்ந்த மதிப்புடையதாகும்.

_______ எங்கள் படிப்புவட்டத்தில் கலந்துரையாடலின் நோக்கம், படிப்பாய்வு செய்யப்படுவது பற்றிய ஓர் ஆழமான புரிதலை அடைந்திட பங்கேற்பாளர்கள் ஒருவர் மற்றவருக்கு உதவுவதாகும்.

_______ எனது சொந்த அபிப்பிராயங்களில் இருந்து பற்றற்று இருப்பதென்பது, பங்கேற்பாளரிடையே கலந்துரையாடல் ஒரு நோக்கமில்லாமல் நடைபெறுவதைக் கண்ட போதும் நான் அதை அனுமதிக்க வேண்டும் என்பதாகும்.

_______ அவர்கள் அவர்களின் சொந்த கருத்துகளிலிருந்து உண்மையிலேயே பற்றின்மையுடன் இருப்பின், ஒரு படிப்பு வட்டத்தின் உறுப்பினர்கள் எல்லாரும் கூறுவதை உண்மையென ஏற்றுக்கொள்வர்.

_______ சொந்தக் கருத்துகளில் இருந்து பற்றின்மையுடன் இருத்தல், திறந்த, மரியாதையுடனான, மற்றும் ஒளிவுமறைவற்ற கலந்துரையாடலை எளிதாக்குகின்றது.

_______ நான் ஒரு பயிற்றுநராக செயல்படும் போது, உண்மையான புரிதலின் வாயில்களை திறக்கும்படி நான் கடவுளை ஆர்வத்துடன் பிரார்த்திக்க வேண்டும்.

## பகுதி 7

அறிவுப் பசியுடனும் புரிதலுடனும் அணுக்கமாகத் தொடர்பு கொண்ட ஒரு சக்திமிக்க ஆன்மீக ஆற்றல் உண்டு: அழகின்பால் ஈர்ப்பு. பஹாவுல்லாவின் திருவாசகங்களில் இருந்து வரும் பின்வரும் பத்தியைப் பார்க்கவும்:

> **“மாளுந்தன்மையுடைய பறவைகளே, எம்மிடம் செவிசாய்ப்பீர்களாக! மாற்றமில்லா கீர்த்தி எனும் ரோஜா தோட்டத்தில், ஒரு மலர் மலரத் துவங்கியுள்ளது; அதனை ஒப்பிடும்போது மற்ற மலர் அனைத்துமே வெறும் ஓர் முள்ளாகும், அதன் ஒளியின் பிரகாசத்தின் முன், அழகின் சாரமே வாடி வதங்கிட வேண்டும். ஆகவே முன்னெழுந்து, உங்களுடைய உள்ளங்களின் முழுமையான ஆர்வத்துடனும், உங்களுடைய ஆன்மாக்களின் ஆவல் அனைத்துடனும், உங்களுடைய விருப்பத்தின் முழு உணர்ச்சி வேகத்துடனும் உங்களுடைய உடல் முழுவதின் ஒருமுகப்படுத்தப்பட்ட முயற்சிகளுடனும், அவரது முன்னிலையெனும் சுவர்க்கத்தினை அடைய கடுமுயற்சி செய்து, மாசற்ற மலரின் நறுமணத்தை நுகரவும், புனிதத்தன்மை எனும் இனிய நறுமணங்களை சுவாசிக்கவும், விண்ணுலக கீர்த்தி எனும் இந்த சுகந்தத்தின் ஓர் பங்கினைப் பெற்றிடவும் முயற்சி செய்வீர்களாக. எவர் இவ்வறிவுரையைப் பின்பற்றுகின்றாரோ, அவர் தமது சங்கிலிகளை உடைத்தெறிவார், உவகையூட்டும் அன்பிற்கு தன்னைத் தானே ஆட்படுத்திக்கௌ்வது என்பதை சுவைப்பார், தமது உள்ளத்தின் ஆவலை அடைவார் மற்றும் தமது அன்பிற்குரியவரின் கரங்களில் தமது ஆன்மாவை சரணடையச் செய்திடுவார். தமது கூண்டினை உடைத்துத் திறந்து, அவர், ஆவியின் பறவையைப் போலவே, தமது புனித மற்றும் நிலையான உறைவிடத்திற்கு பறந்துச் சென்றுவிடுவார். . .**
>
> **“நிலையான மெழுகுவர்த்தி தனது மறைவற்ற கீர்த்தியுடன் பிரகாசிக்கிறது. அது ஒவ்வொரு திரையையும் எவ்வாறு சுட்டெரித்துள்ளது என்பதைப் பாருங்கள். அவருடைய ஒளியின் விட்டிற்பூச்சி போன்ற அன்பர்களே! ஒவ்வொரு அபாயத்தையும் துணிவுடன் சந்தித்து, அதன் சுட்டெரிக்கும் தீச்சுடருக்கு உங்கள் ஆன்மாக்களை அர்ப்பணிப்பீர்களாக.” அவருக்காக ஏங்கிக் கொண்டிருப்பவர்களே! நீங்கள், ஒவ்வொரு உலக ஆசையையும் உங்களிடமிருந்து நீக்கிவிட்டு உங்கள் அன்பிற்குரியவரைத் தழுவிட விரைந்துச் செல்லுங்கள். எவருமே ஈடு செய்ய முடியாத ஓர் உணர்சியார்வத்துடன் அவரிடம் சென்றடைய விரைந்துச் செல்வீர்களாக! இதுவரை மனிதர்களுடைய பார்வையிலிருந்து மறைந்திருந்த மலரானது, இப்போது உங்கள் கண்களுக்கு, திரை நீக்கப்பட்டு காணப்படுகிறது. அவருடைய கீர்த்தியின் திறந்த பிரகாசத்தில், அவர் உங்கள் முன் நிற்கின்றார். அவருடைய குரல், பரிசுத்தமானவர்களையும் புனிதப்படுத்தப்பட்டவர்களையும், தம்முடன் இணைக்கப்பட வருமாறு அழைக்கின்றது. அதன்பால் திரும்புகின்றவர்கள் மகிழ்வெய்துவர்; இவ்வளவு அற்புதமான ஒரு தோற்றத்தின் ஒளியை அடைந்து அதன்மீது தனது பார்வையை செலுத்தியவர் நலமடைந்தவர்.”[3]**

உங்களுடன் ஒன்றாகப் பயிற்சியில் ஈடுபடுவோர் அழகின்பால் ஓர் இயல்பான ஈர்ப்பினால் ஊடுருவப்பட்டுள்ளனர் என உங்கள் உள்ளத்தில் நீங்கள் உறுதியாக உணர வேண்டும். ஒரு வேளை, பயிற்சிக்கழகப் பாடங்களை அவர்கள் பயிலும்போது, கடவுள் திருவெளிப்பாட்டின் விழுமிய நிலையை உணர்வதற்கும் வெளிப்படுத்தப்பட்ட திருவாக்கின் அழகை மதித்துணர்வதற்கும் அவர்கள் உதவப்பட்டால், ஒவ்வொரு அமர்விலும் அவர்கள் உணரக்கூடிய மகிழ்ச்சியானது அவர்களுக்கு ஒரு சக்திமிக்க உந்துகைக்கான மூலாதாரமாக இருந்திடும். இவ் விஷயம் குறித்து நீங்கள் பிரதிபலிக்கும் போது, நீங்கள் நூல் 1-ஐப் பார்த்து, பேரன்பரின் அழகைப் பற்றிய காட்சிகளை வழங்கும் மூன்று அல்லது நான்கு பகுதிகளை தேர்ந்தெடுக்கவும். அந்தப் பகுதிகள் ஒவ்வொன்றிற்கும் உங்களைக் கவர்ந்தவைப் பற்றி சில வார்த்தைகள் கூறவும்.

1. ______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

2. ______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

3. ______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

4. ______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

## பகுதி 8

உபகரணங்களில் குறிப்பிடப்படும் பல பத்திகளில் அடங்கியுள்ள வெளிப்படுத்தப்பட்ட திருவாசகத்தின் ஆழமான அர்த்தம் மற்றும் அழகு, பங்கேற்பாளர்களுக்கு மிகவும் வலுவான கவர்ச்சிக்கான மூலாதாரமாக இருந்திடும். ஆனால், பயிற்றுநரின் உதவியுடன், ஒரு படிப்பு வட்டத்தில் பங்கேற்பாளர்கள் உருவாக்கும் சூழ்நிலையும் முக்கியமாக இருக்கும். அழகின்பால் கவர்ச்சி என்பது, ஓர் அன்புநிறைந்த சூழ்நிலையில் ஒன்றாகப் பணிபுரியும் மக்கள் குழுவினரிடையே உருவாக்கப்படும் ஓர் ஆற்றலாகும். இவ்வாறாக, ஒரு படிப்பு வட்டத்தின் சூழ்நிலை குறித்து நீங்கள் சதா விழிப்புணர்வுடன் இருந்து அது பங்கேற்பாளரின் ஆன்மிக மேம்பாட்டிற்குப் பங்களிப்பதை உறுதிபடுத்திட வேண்டும்

பயில்வட்டம் சந்திக்கக்கூடிய பௌதீக சூழ்நிலை ஒரு முக்கிய காரணியாக இருக்கும். துரதிர்ஷ்டவசமாக, இன்றைய உலகில், பௌதீக அழகு பெரும்பாலும் செல்வத்துடன் தொடர்புப்படுத்தப்படுகின்றது. ஆனால், தேவைப்படுவது ஓர் ஆடம்பரமான சூழலன்று. இயற்கையில், ஒழுங்கில், நேர்த்தியில் ஓர் அழகுண்டு. அஃது அந்தக் குழு ஒரு மர நிழலின் கீழ் உட்கார்ந்திருப்பினும், மிகவும் விலை உயர்ந்த பொருள்களால் அலங்கரிக்கப்பட்ட ஓர் அறை, ஓர் எளிமையான குடிசை அல்லது பயிற்சிக்கழகத்தின் ஒரு கட்டிடத்தில் கூடியிருப்பினும், ஒவ்வொரு குழுவும் சந்திக்கும் சூழ்நிலையானது அழகு, பரிபூரணம் ஆகியவற்றிற்கான தனிநபரின் ஏக்கத்தைத் திருப்திபடுத்துவதாக இருப்பதை நீங்கள் உறுதிபடுத்திட வேண்டும்.

உங்கள் சொந்த நடத்தையும் சூழ்நிலைக்குப் பங்களிக்கும் ஒரு காரணியாக இருக்கும். நடத்தையும் அழகுடையதாக இருந்திடும், ஆகையால், அதற்குக் கவர்வதற்கான சக்தி இருக்கும். கருணையில், மென்மையில், பிறருக்கான மரியாதையில் அழகு உண்டு. இவ் விஷயத்தை மேலும் பரிசீலிப்பதற்கு, அழகிற்கான உங்கள் உணர்வு அவமதிக்கப்பட்ட வெவ்வேறு தருணங்களைப் பற்றி சிந்திக்கவும். துரதிர்ஷ்டவசமாக, இது பணியிடங்களில், ஓய்விடங்களில், நண்பர்களின் ஒன்றுகூடல்களில், குடும்ப ஒன்றுகூடல்களில் மற்றும் கல்வி ஸ்தாபனங்களில் கூட அடிக்கடி நிகழ்கிறது. இவ்வித நடத்தையின் உதாரணங்கள் பின்வருமாறு:

— மக்கள் ஒருவர் மற்றவரைப் பார்த்துக் கத்துதல்
— மக்கள் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்துவது
— மற்றவர் முன் ஒருவரை அவமானப் படுத்துதல்
— மற்றவர்களைப் பாலியல் பொருள்களாகப் பார்ப்பது மற்றும் நடத்துவது
— மக்கள் மதுபோதையில் செயல்படுவது

மேற்குறிப்பிடப்பட்ட குரூபமான நடத்தை ஒரு படிப்பு வட்ட பங்கேற்பாளர்களால் வெளிப்படுத்தப்படும் என்பதை நம்மால் கற்பனை செய்வது கடினம். ஆனால், அன்புக் கருணை நிறைந்த சூழ்நிலையை கீழறுத்திடும் நுட்பமான நடத்தை முறைகள் குறித்து பயிற்றுநர் விழிப்புடன் இருக்க வேண்டும். இங்கு, சில சிரமமான சூழ்நிலைகளின் உதாரணங்கள் உள்ளன். அவை ஒவ்வொன்றிற்கும், உங்களுக்கு ஒரு பொருத்தமற்ற பதிலிறுப்பு வழங்கப்படுகின்றது, அதை நீங்கள் சரிபடுத்த கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

அ. பங்கேற்பாளருள் ஒருவர் மேஜையில் சாய்ந்துகொண்டு தனது உபகரணத்தின் மீது கிறுக்கிக்கொண்டிருக்கின்றார். ஒரு பொருத்தமற்ற பதிலிறுப்பு இப்படி இருக்கும்: “நீ சோம்பேறித்தனமாக இருப்பதுடன் குழுவில் உள்ள மற்றவர்களையும் பாதிக்கின்றீர்கள்.” ஆனால் நீங்கள் கூறக்கூடியது:

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

ஆ. பங்கேற்பாளருள் ஒருவர் மிகவும் மெதுவாகப் பேசுகிறார், மற்றவர்களால் அவர் என்ன கூறுகின்றார் எனத் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு பொருத்தமற்ற பதிலிறுப்பு இப்படி இருக்கும்: “உன்னால் கொஞ்சம் சத்தமாகப் பேசமுடியாதா?” ஆனால், நீங்கள் கூறக்கூடியது:

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

இ. பங்கேற்பாளருள் ஒருவர் ஒரு கேள்விக்குத் தெளிவாகவே ஒரு தவறான பதிலைத் தருகின்றார். ஒரு பொருத்தமற்ற பதிலிறுப்பு இப்படி இருக்கும்: ”யாருக்காவது சரியான பதில் தெரியுமா?” ஆனால் நீங்கள் கூறக்கூடியது:

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

ஈ. பங்கேற்பாளருள் இருவர் ஒருவர் மற்றவருடன் கிசுகிசுத்துக் கொண்டிருக்கின்றனர். ஒரு பொருத்தமற்ற பதிலிறுப்பு இப்படி இருக்கும்: “உங்கள் நகைச்சுவையை எங்கள் எல்லாருடனும் பகிர்ந்துகொள்ள முடியுமா?” நீங்கள் கூறக்கூடியது:

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

உ. ஒரு பங்கேற்பாளர் குழு படிக்கும் விஷயத்துடன் சம்பந்தமில்லாத ஒரு கேள்வியைக் கேட்கின்றார். ஒரு பொருத்தமற்ற பதிலிறுப்பு இப்படி இருக்கும்: “அது நாம் எதைப் பற்றி பேசுகின்றோம் என்பதுடன் தொடர்பில்லாதது.” நீங்கள் கூறக்கூடியது:

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

ஊ. பங்கேற்பாளருள் இருவர் பயிற்சிகளில் ஒன்றைப் பற்றி வாதிடத் தொடங்குகிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தனது கருத்தே சரியானது என வலியுறுத்துகின்றனர். ஒரு பொருத்தமற்ற பதிலிறுப்பு இப்படி இருக்கும்: "நிறுத்துங்கள். நீங்கள் இருவருமே தவறு." நீங்கள் கூறக்கூடியது:

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

ஏ. பங்கேற்பாளருள் ஒருவர் ஆய்வு செய்யப்படும் மேற்கோளுடன் உடன்படாத ஒரு பதிலைக் கொடுக்கிறார். ஒரு பொருத்தமற்ற பதிலிறுப்பு இப்படி இருக்கும்: “நீங்கள் இப்போது படித்த மேற்கோள் உங்களுக்குப் புரியவில்லையா?” நீங்கள் கூறக்கூடியது:

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

ஏ. பங்கேற்பாளருள் ஒருவர் தலைப்புக்கு சம்பந்தமில்லா விஷயத்தைப் பற்றி பேசுகின்றார். ஒரு பொருத்தமற்ற பதிலிறுப்பு இப்படி இருக்கும்: “தயவுசெய்து கருப்பொருள் பற்றி மட்டுமே பேசவும்?” நீங்கள் கூறக்கூடியது:

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

கித்தாப்-இ-அக்டாஸ் திருநூலின் முக்கிய அம்சங்களை ஷோகி எஃபெண்டி வரையறுக்கும் *கடவுள் கடந்து செல்கின்றார்”* என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் மேற்கோளை மனனம் செய்யுமாறு பரிந்துரைக்கப்படுகின்றது. அவ்வாறு செய்யும்போது, ஒரு படிப்பு வட்டத்தில் பொருத்தமான சூழ்நிலையை உருவாக்குவதற்கு இந்த மேற்கோளில் கோடிட்டுக் காட்டப்பட்ட அறிவுரைகளைக் கடைப்பிடிப்பது எவ்வாறு இன்றியமையாதது என்பதை சிந்தித்துப் பார்க்கவும்.

> **“. . . பஹாவுல்லா, தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு, எவ்வித பாகுபாடுமின்றி, அனைத்து சமயங்களின் நம்பிக்கையாளர்களுடன் நட்புணர்வுடனும், நல்லிணக்கத்துடனும் பழகுமாறு அறிவுரை கூறுகின்றார்; சமயவெறி, தேசத்துரோகம், தற்பெருமை, சச்சரவு மற்றும் பூசல் ஆகியவற்றிலிருந்து தங்களைப் பாதுகாத்து கொள்ளுமாறு எச்சரிக்கின்றார்; மாசில்லா தூய்மை, கண்டிப்பான வாய்மை, கரைப்படியா கற்புடைமை, நம்பகத்தன்மை, விருந்தோம்பல், விசுவாசம், மரியாதை, சகிப்புத்தன்மை, நீதி மற்றும் நியாயம் ஆகியவற்றை அவர்களுக்கு அறிவுறுத்துகிறார்; ஒரு கரத்தின் விரல்கள் போலவும் ஓர் உடலின் அங்கங்கள் போன்று இருக்கும்படி அவர்களுக்கு ஆலோசனை கூறுகின்றார்; முன்னெழுந்து, அவரது சமயத்திற்குச் சேவை புரியுமாறு அவர்களை அழைக்கின்றார்; தமது சந்தேகமற்ற உதவியை அவர்களுக்கு உறுதிபடுத்துகின்றார்.”[4]**

## பகுதி 9

இப்பாடப்பிரிவின் முதல் எட்டு பகுதிகளும் உந்துகை குறித்த கருப்பொருளைச் சுற்றி வலம் வருகின்றன. தெளிவாகவே, இத்தகைய ஒரு மேலோட்டமான கலந்துரையாடலில், இக்கருப்பொருளுக்கு நாம் போதுமான நியாயம் செய்ய முடியாது. நாம் செய்யக்கூடியதெல்லாம், உந்துகைக்கான சில மூலாதாரங்களைப் பரிசீலிப்பதுதான். உங்கள் அனுபவம் அதிகரிக்கும் போது, உங்கள் படிப்பு வட்ட பங்கேற்பாளரிடையே அதிக அளவு உற்சாகத்தைப் பராமரிப்பதற்கான ரகசியங்களைப் படிப்படியாகக் கண்டுபிடிப்பீர்கள் என நம்புகின்றோம். இதுவரை நீங்கள் பெற்ற நுண்ணறிவுகளை ஒருங்கிணைக்க, முந்தைய பிரிவுகளை மதிப்பாய்வு செய்ய சிறிது நேரம் ஒதுக்கவும். பின்னர், பின்வரும் சொற்கள் மற்றும் சொற்றொடர்களைப் பயன்படுத்தி உந்துதல் பற்றி

ஒரு பத்தியை எழுதவும்: நிலையற்ற, நிரந்தரமான, மகிழ்ச்சி, இதயத் தூய்மை, புரிதல், மேம்பாடு, கடவுள் திருவாசகம், சூழ்நிலை, வேர்கள், அறிவுக்கான தாகம், இறைவனின் தவறா வழிகாட்டலை அடைதல், அழகின் மீது கவரப்படுதல்.

## பகுதி 10

நாம் விவாதிக்க வேண்டிய அடுத்த கருப்பொருள் பங்கேற்பு குறித்ததாகும். இது இயல்பாகவே இதற்கு முந்தைய கருப்பொருளைப் பின்பற்றுகின்றது, ஏனெனில், பயிற்சிப்பாடங்களைப் படிப்பாய்வு செய்வோர் கற்றலில் தீவிரமாக ஈடுபட்டால் மட்டுமே அவர்கள் உயர்ந்த அளவிலான உந்துகையைப் பராமரிக்க முடியும்.

ரூஹி பயிற்சிக்கழகத்தின் பயிற்சிப்பாடங்கள் பங்கேற்பைச் சார்ந்தவை என அடிக்கடி கூறப்படுகின்றது. இதன் தொடர்பில், “பங்கேற்பு வழிமுறை” என்னும் சொற்றொடரைப் பற்றி நீங்கள் கேட்டிருக்கக் கூடும். வழிமுறை, அணுகுமுறை, உத்திமுறை, செய்முறை ஆகியவை பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்படும் சொற்களாகும். ஆனால், நமக்கு, கல்விச் சூழலில் இத்தகைய வார்த்தைகளின் முக்கியத்துவம் குறித்த பாராட்டுணர்வை பெறுதல் முக்கியமாகும். இங்கு வலியுறுத்தப்படுவது யாதெனில், ரூஹி பயிற்சிக்கழகத்தின் பங்கேற்பு குறித்த அடிப்படை அக்கறை, உத்திகள் மற்றும் செய்முறை மட்டத்திலன்று. நாம் இங்கு நாடுவதெல்லாம் பங்கேற்பாளர் தனது சொந்தக் கற்றலுக்குத் தானே பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும் என்பதே. கண்டிப்பாகக் கூறினால், கற்பிக்கும் வழிமுறை பங்கேற்பு முறையில் இல்லாத போதும் இது நிகழலாம். இவ் விஷயத்தைத் தெளிவுபடுத்த பின்வரும் உதாரணம் உதவிடும்.

ஒரு மாநாட்டில், பேராசிரியர் ஒருவர் உங்களுக்கு விருப்பமான கருப்பொருள் பற்றி வழங்கும் விரிவுரையில் நீங்கள் கலந்துகொள்கிறீர்கள் என வைத்துக்கொள்வோம். பேராசிரியர் சற்று நீண்ட உரையை வழங்குகிறார், ஆனால், கருத்துகளை முழுமையாகத் தெளிவாகவும், ஒத்திசைவுடனும் விளக்குகின்றார். அவையோரின் மிகுதியான அளவைக் கருத்தில் கொண்டு, பேச்சாளர் சில கேள்விகளை மட்டுமே எடுத்துக்கொள்ள முடிகின்றது மற்றும் அனைவரையும் உள்ளடக்கும் கலந்துரையாடலை நடத்துவது சாத்தியமில்லை. தெளிவாகவே, இந்நிகழ்ச்சியில் பயன்படுத்தப்பட்ட முறை பங்கேற்பு முறையென சொல்லவியலாது. இருப்பினும், உரை முழுவதும் நீங்கள் பூரணமாகக் கற்றலில் ஈடுபட்டுள்ளீர்கள். ஏனெனில், அக்கருப்பொருள் பற்றி உங்களுக்கு அதுவரை தெரிந்ததற்கும் மேற்பட்டு உங்கள் அறிவை விரிவுபடுத்திக்கொள்ள நீங்கள் ஆர்வமாக இருக்கின்றீர்கள். பேச்சாளரால் வழங்கப்படும் ஒவ்வொரு கருத்தையும் செவிமடுக்கின்றீர்கள், அவற்றைப் பற்றி சிந்திக்கின்றீர்கள், உங்கள் மனதில் சில கேள்விகளை உருவாக்கிக் கொள்கின்றீர்கள், பின்னர் நம்பிக்கையான சில மூலாதாரங்களில் இருந்து அவற்றுக்குப் பதில் காண முயல்கின்றீர்கள்.

இப்பொழுது, உலகம் முழுவதும், தங்கள் வகுப்பறையில் உட்கார்ந்து கொண்டு சலிப்புடனும், கொட்டாவி விட்டுக்கொண்டும் தங்களுக்கு விரிவுரையாற்றும் ஆசிரியர்களை செவிமடுத்துக் கொண்டிருக்கும் ஆயிரமாயிரம் மாணவர்களைக் கற்பனை செய்து பாருங்கள். இக்காட்சி எல்லா பள்ளிகளிலும் காணப்படக் கூடிய ஒன்றல்ல, ஆனால், இது போன்ற வகுப்பறைகள் உள்ளன. அவற்றில் ஒன்று அல்லது இரண்டை நீங்கள் கண்டிருக்கக் கூடும். போதிப்பதற்கு ஒரே வழிமுறை பயன்படுத்தப்படும் இவ்விரண்டு சூழல்களுக்கும் இடையில் என்ன வேறுபாடு உள்ளது?

நிச்சயமாகவே, பங்கேற்பின் அளவில்தான் வேறுபாடு உள்ளது. முதல் சூழலில் நீங்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளீர்கள். பேராசிரியர் உரை நிகழ்த்துகின்றார், ஆனால் உங்கள் சொந்த கற்றலுக்கு நீங்களே பொறுப்பேற்கின்றீர்கள். முன்வைக்கப்பட்ட யோசனைகளை ஆராய்வதற்கான பொறுப்பை நீங்களே ஏற்றுக் கொண்டுள்ளீர்கள், மற்றும் இந்த அர்த்தத்தில், கல்வியியல் நடவடிக்கையில் நீங்கள் முழுமையாகப் பங்கேற்கின்றீர்கள். இரண்டாவது சூழலில் நேரெதிரான ஒன்று நிகழ்கின்றது. மாணவர்கள் செயல்படாமல் இருக்கின்றனர். ஆசிரியர் சுறுசுறுப்பாக இருந்தபோதும், மாணவர்களின் பங்கேற்பைப் பெறத் தவறிவிடுகின்றார்.

இரண்டு கல்வியியல் சூழல்கள் பற்றிய இந்த சுருக்கமான ஒப்பீடு, ரூஹி பயிற்சிக்கழகத்தின் அணுகுமுறை பங்கேற்பு முறையைச் சார்ந்தது என்னும் நமது கூற்றை தெளிவுபடுத்துகின்றது. அதாவது, பயிற்சிப்பாடங்களுக்கு ஒரு பயிற்றுநராகப் பணிபுரியும் போது, மாணவர்கள் தங்கள் கல்விக்குப் பொறுப்பேற்க நீங்கள் உதவுகின்றீர்கள் என்பதை இது உட்குறிக்கின்றது. நீங்கள் ஒன்றாகப் பயிலும் மணிநேரங்களில், வழங்கப்படும் உள்ளடக்கத்தை ஆராய்வதில் அவர்களின் மனங்கள் முழுமையாக ஈடுபட்டிருக்க வேண்டும், மற்றும் ஒவ்வொரு பங்கேற்பாளரும் தனது சொந்தக் கற்றலுக்குத் தானே பொறுப்புடையவர் என்னும் ஆழ்ந்த உணர்வைப் பெற வேண்டும்.

ஒரு மாநாட்டில் உங்கள் சொந்த கலந்துகொள்தலின் உதாரணத்தைப் போலன்றி, ஒரு படிப்புவட்டத்தின் உறுப்பினர்களுக்கு வெறுமனே விரிவுரை வழங்கினால் அப்பயில்வட்டத்தில் தேவைப்படும் அளவு பங்கேற்பு அடையப்பட முடியுமா என்பதற்குச் சாத்தியமில்லை. இந்த பங்கேற்பு அணுகுமுறையைப் பின்பற்றுவதை சாத்தியமாக்கும் கருவிகளை ரூஹி பயிற்சிக்கழகத்தின் நூல்கள் உங்களுக்கு வழங்கிடும்.

இந்தத் தலைப்பு குறித்த நமது கலந்துரையாடலைத் தொடர்வதற்கு முன், சில பிம்பங்களை உங்கள் மனதிற்கு கொண்டு வந்து ஒரு பயில்வட்டத்தின் சூழலில் அவற்றைப்பற்றி சிந்திக்குமாறு உங்களைக் கேட்டுக்கொள்கின்றோம். எவ்வாறிருப்பினும், இங்கு கோரப்படும் போதித்தல்-கற்றல் இயக்கவியலின் முழு பிம்பத்தையும் இங்கு கீழே வழங்கப்படும் சூழல்கள் எதுவுமே முழுமையாக வழங்காவிடினும், அவை உங்களுக்கு மதிப்புமிக்க நுண்ணறிவுகளை வழங்கிடும். இந்த பிம்பங்களுள் சில முற்றிலும் பொறுத்தமற்றவை. அவற்றை வெட்டிவிட்டு அவ்வாறு செய்வதற்கான

உங்கள் காரணத்தை வழங்கவும். எஞ்சியிருப்பவைகளுக்கு, அந்த பிம்பங்கள் ஒவ்வொன்றும் எந்த உணர்வில் பயனுள்ளவையாக இருக்கின்றன என்பதை விளக்கவும்.

அ. நீங்கள் தூண்டிவிடும் ஒரு நெருப்பு: ________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

ஆ. நீங்கள் நிரப்புகின்ற காலி கோப்பைகள்: ___________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

இ. ஒரு வங்கிக் கணக்கில் நீங்கள் சேர்க்கும் பணம்: ______________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

ஈ. நீங்கள் ஏற்றி வைக்கும் தீபங்கள்: ___________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

உ. நீங்கள் பேணி வளர்க்கும் நட்புகள்: _________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

ஊ. நீங்கள் ஒரு குழுவினருடன் உருவாக்கி வரும் ஒரு விஷயம்: ______________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

எ. நீங்கள் ஒன்றாக அடித்தலமிடும் ஒரு மாபெரும் கட்டிடம்: ________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

ஏ. நீங்கள் மெருகூட்டுகின்ற விலைமதிப்பற்ற இரத்தினங்கள் நிறைந்த சுரங்கங்கள்: _

____________________________________________________________________________

____________________________________________________________________________

ஐ. நீங்கள் நடுவராகப் பணிபுரியும் ஒரு காற்பந்து விளையாட்டு: ______________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

ஒ. நீங்கள் நீதிபதியாக இருக்கும் ஒரு போட்டி: ________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

ஓ. நீங்கள் நீர் பாய்ச்சும் செடிகள்: ________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

## பகுதி 11

பங்கேற்பு குறித்து நாம் இதுவரை கூறியவை, ரூஹி பயிற்சிக்கழகத்தின் பயிற்சிப்பாடங்களால் பேணி வளர்க்கப்படும் கல்வியியல் செயல்முறையில் ஈடுபடும் ஒவ்வொருவரும் தங்களின் சொந்த கற்றலில் சுறுசுறுப்புடன் ஈடுபட வேண்டும் என்பதை உட்குறிக்கின்றது. மேலும், ஒரு பயிற்றுநரெனும் முறையில் அதன் பங்கேற்பு அணுகுமுறையை கடைப்பிடிப்பதைச் சாத்தியமாக்கும் கருவிகளை அதன் நூல்கள் உங்களுக்கு வழங்கிடும் என்பதையும் நாங்கள் சுட்டிக்காட்டியுள்ளோம். ஆதலால், நாம் அதன் நூல்களின் படிப்பாய்வின்பால் நம் கவனத்தைத் திருப்பி கற்பனை செய்யப்படும் போதித்தல்-கற்றல் இயக்காற்றலை பயிற்றுநர் எவ்வாறு பேணி வளர்க்க முடியும் என்பது குறித்த நுண்ணறிவைப் பெற முயல வேண்டும்.

முதலில், பயிற்றுநருக்கும் மற்ற பங்கேற்பாளர்களுக்கும் இடையிலான உறவு, ஆசிரியர்-மாணவர் சார்ந்த ஒன்றல்ல என்பது உங்களுக்குத் தெளிவாக இருக்க வேண்டும். ஆனால், அதற்காகப் பயிற்றுநர் கலந்துரையாலுக்கான ஒரு பற்றற்ற மற்றும் செயலற்ற வழிநடத்துனராக இருக்க முடியும் என்பது அர்த்தமல்ல. முழுவதும், பயிற்றுநர் விழிப்புடனும், கவனத்துடனும், அவதானிப்புடனும் இருக்க வேண்டும். அவரது சிந்தனைகள் எல்லா நேரங்களிலும் பங்கேற்பாளர்கள் ஒவ்வொருவரும் என்ன படிப்பாய்வு செய்யப்படுகின்றது என்பது குறித்த மேலும் பரிபூரணமான ஒரு புரிதலைப் பெற தான் எவ்வாறு உதவ முடியும் என்பதிலேயே குவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஒரு குழுவினருடன் எந்த ஒரு பாடப்பிரிவின் படிப்பாய்வையும் ஆரம்பிப்பதில், பயிற்றுநர் அதன் நோக்கத்தை விளக்குவதன் மூலம் ஆரம்பிப்பார். பெரும்பாலும், அது உள்ளடக்கும் முக்கிய கருத்தாக்கங்களை முன்னிலைப்படுத்துவதன் மூலம் ஆரம்பிப்பார். பங்கேற்பாளர்கள் பின்னர், ஒவ்வொரு பகுதியையும் படித்து கலந்துரையாடுவர், தனிநபராகவோ குழுவினராகவோ அதனுடன் வரும் பயிற்சிகளை மேற்கொள்வர். உண்மையில், புரிதலைப் பேணி வளர்ப்பதிலும் பங்கேற்பாளர்கள் கற்றல் செயல்முறையில் சுறுசுறுப்புடன் ஈடுபட உதவுவதிலும் பயிற்சிகள் முக்கிய கருவியாக பங்காற்றுகின்றன. சில பயிற்சிகள் பயிற்றுநரின் சிறிதளவு உதவியுடன் மேற்கொள்ளப்படலாம் என்றாலும், ஒரு யோசனையைப் பற்றிய புரிதலை ஆழப்படுத்துவதில் பங்கேற்பாளர்களுக்கு உதவ பயிற்றுநர் தமது கருத்துகளை வழங்க வேண்டிய சந்தர்ப்பங்களும் இருக்கும். “பயிற்றுநருக்கான சில சிந்தனைகள்” பகுதியிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் எடுபகுதி, பயிற்சிகள் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை வெளிச்சம் போட்டு காட்டுகின்றது:

> பரிசீலிக்கப்படும் உரைப்பகுதிகளில் பொதிந்துள்ள அர்த்தங்களின் நெடுக்கத்தை பாடப்பிரிவு எவ்விதத்திலும் உள்ளடக்க முயலவில்லை. ஒவ்வொரு பயிற்சிக்கும் எவ்வளவு கலந்துரையாடல் தேவை என்பது ஒவ்வொரு பயிற்றுநரும் சிந்திக்க

வேண்டிய கேள்வியாகும். இங்கு, தொடர்புள்ள ஆனால் பல புற கருத்துகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் கலந்துரைடயாடலை நீட்டிப்பது உபகரணத்தின் விளைவுத்திறத்தை குறைத்துவிடும் போக்குடையது என்பதை நினைவில் கொள்வது அவசியமாகும். ஒவ்வொரு குழுவும் ஒரு நியாயமான முன்னேற்ற லயத்தை ஸ்தாபித்துக்கொள்வது அவசியமாகும்; பங்கேற்பாளர்கள் தாங்கள் தங்களின் சொந்த சாத்தியங்களுக்கு ஏற்ப சீராக முன்னேறுகின்றனர் என்னும் ஒரு தனித்துவமான உணர்வைப் பெற வேண்டும். இருப்பினும், பயிற்சிகளின் சிந்தனையார்ந்த பகுப்பாய்வின்றி, பகுதிகள் விரைவாகவும் மேலோட்டமாகவும் கடக்கப்படாமல் இருப்பதில் பயிற்றுநர் கவனமாக இருக்க வேண்டும்; வெறுமனே பதில்களை மட்டும் நிரப்பி இவ்விதமாக, செயல்பட்ட குழுக்கள், நீடித்த விளைவுகளை அடைந்ததில்லை.

ஒரு குழுவை ஒவ்வொரு பகுதியாக கொண்டு செல்லும்போது, உபகரணத்தின் நோக்கம் அடையப்படுவதை உறுதிபடுத்த பயிற்றுநர் தவிர்க்க வேண்டிய இரண்டு போக்குகள் யாவை?

நூல் 1-இன் மூன்று பாடப்பிரிவுகளிலிருந்து சில பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, பயிற்சிகளை மேற்கொள்வது உங்களுக்கு இப்போது பயனுள்ளதாக இருக்கும். ஒரு பயிற்றுநராக உங்களிடமிருந்து சில வழிகாட்டுதல்கள் தேவைப்படக்கூடிய கலந்துரையாடல்களைத் தூண்டக்கூடியவை எவை என்பதைத் தீர்மானிக்கவும். அவற்றை கீழே எழுதவும்.

## பகுதி 12

விவாதிக்கப்படும் சில பிரச்சினைகளைத் தெளிவுபடுத்துவதற்கு, இடைவேளையின் போது, நூல் 7-ஐப் படிப்பாய்வு செய்வதற்கு உங்களுக்கு உதவும் பயிற்றுநருக்கும் பங்கேற்பாளர்களுள் ஒருவருக்கும் இடையில் நடைபெறும் ஒரு கற்பனையான உரையாடலைப் பார்ப்போம்.

— *பங்கேற்பாளர்: பங்கேற்பு குறித்த கருத்தாக்கத்தை ஒரு புதிய வழியில் நான் புரிந்துகொள்ள ஆரம்பித்துள்ளேன். ஒரு பயில்வட்டத்தின் உறுப்பினர்கள் திருவாசகங்களில் இருந்து சில பகுதிகளைப் படித்து, சில கேள்விகளுக்கு பதிலளித்து, பின்னர் தங்களின் தனிப்பட்ட கருத்துக்களை சுற்றிலும் உள்ளோர் வெளிப்படுத்துவது என்பதுதான் பயிற்சிக்கழக பயிற்சிப்பாடங்களை படிப்பதற்கான அணுகுமுறை என முதலில் நான் நினைத்தேன்.*

— *பயிற்றுநர்: நானும் கடந்தகாலத்தில் இத்தகைய மிகையாக எளிமைப்படுத்தப்பட்ட வர்ணனையை கேட்டிருக்கின்றேன். துரதிர்ஷ்டவசமாக, பங்கேற்பு என்பது ஏதோ ஒரு வகையான சூத்திரம் என்னும் எண்ணத்தை அது ஏற்படுத்துகின்றது*

— *பங்கேற்பாளர்: ஆனால், பயிற்சிக்கழக செயல்முறையில் ஈடுபட்ட பிறகு, வெகு விரைவில், ஒருவர் முதலில் கற்பனை செய்வதை விட இந்த அணுகுமுறையில் பேரதிகமான விஷயம் அடங்கியுள்ளது என்பதை ஒருவர் உணர்ந்திடுவார்.*

— *பயிற்றுநர்: உண்மை என்னவெனில், நாம் பயிலும் உபகரணமானது பெரிதும் பஹாய் திருவாசகங்களைச் சார்ந்தும், திருவாசகங்களிலிருந்து எடுக்கப்பட்ட உரைப்பகுதிகளைப் படித்து புரிந்துகொள்வதிலும் வலுவான வலியுறுத்தலை வைக்கின்றது என்பதே. வழங்கப்பட்ட கேள்விகளும் பயிற்சிகளும் பங்கேற்பாளர்கள் பொருத்தமான யோசனைகளை தங்களுக்குள் விவாதிக்க வேண்டும் என்பதும் உண்மைதான்.*

— *-பங்கேற்பாளர்: ஆனால் கலந்துரையாடல் ஊக்குவிக்கப்படக்கூடாது என சிலர் கூறுகின்றனர்—உபகரணங்களுக்கு உண்மையாக இருக்கும் ஒரு முயற்சியில், நாம் அனைவரையும் கேள்விகளுக்கு பதிலளிக்கத் தூண்ட வேண்டும், பின்னர் அடுத்த கேள்விகளுக்கு செல்ல வேண்டும். பயிற்சிகளைப் பணித்தாள்களைப் போல நடத்தினால் அவற்றின் நோக்கத்தை அடைய முடியாது என்பதை நான் இப்போது உணர்கிறேன். மேலோட்டத்தில், அவற்றில் பலவற்றிற்கான பதில்கள், வெளிப்படையாகத் தெரிந்தாலும், அவை ஒவ்வொரு பங்கேற்பாளரிடமிருந்தும் ஓரளவு சிந்தனையையும் பிரதிபலிப்பையும் வரவழைக்கும் நோக்கம் கொண்டவை.*

— *பயிற்றுநர்: நீர் சொல்வது முற்றிலும் சரி. அதனால்தான் ஒரு பயிற்றுநர் விசேஷ கவனத்துடன் இருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட பாடப்பிரிவின் ஒவ்வொரு பகுதியையும் கடந்து செல்வதன் மூலம் எதை அடைய வேண்டும் என்பதைப் பற்றி அவர் ஓரளவு உணர வேண்டும்; அத்துடன், பொருத்தமான நேரங்களில், பங்கேற்பாளர்களிடையே ஒரு கலந்துரையாடலை ஆரம்பித்து வைக்க வேண்டும்; வழங்கப்பட்ட கருத்துகள் மற்றும் யோசனைகளின் பயன்பாடு மற்றும் அவை உட்குறிக்கின்றவைப் பற்றி மேலும் பிரதிபலிக்க அவர்களுக்கு உதவ வேண்டும். சில யோசனைகளுக்கு ஒரு குறுகிய கலந்துரையாடலும், மற்றவைகளுக்கு சற்று நீண்ட கலந்துரையாடலும் தேவைப் படலாம்.*

— *பங்கேற்பாளர்: சில சந்தர்ப்பங்களில், ஒரு பயிற்சிப்பாடத்தைப் படிக்கும்போது, சில பயிற்சிகள் ஓரளவு திண்மையுடன் கையாளப்பட்டதை நான் கவனித்திருக்கிறேன். உதாரணமாக, சில பயிற்சிகளில் சரியான "ஆம்" அல்லது "இல்லை" என்னும் பதிலைக்*

*கொடுக்கும்படி வலியுறுத்தப்பட்டது. இது கூற்றுகளின் பட்டியலிலிருந்து உண்மையானவற்றைத் தேர்ந்தெடுக்கச் சொல்லும் பயிற்சிகளாகும்.*

— *பயிற்றுநர்: அத்தகைய பயிற்சிக்கான பதில் மிகவும் நேரடியானதாக இல்லாதபோது, பங்கேற்பாளர்கள், விவாதம் மற்றும் பிரதிபலிப்பு மூலம், திருவாசகங்களின் ஒளியில் பலக்கிய பிரச்சினைகளைப் பற்றிய நுண்ணறிவைப் பெறுவதற்காக வேண்டுமென்றே இந்த வழியில் அது அமைக்கப்பட்டுள்ளது. மீண்டும், ஒரு பயிற்றுநர் பகுப்பாய்வை ஊக்குவிக்க வேண்டும்.*

— *பங்கேற்பாளர்: ஒரு புதிய பயிற்றுநராக நான் நினைக்கிறேன், முதலில், இதைச் செய்வதில் நான் பயப்படுகிறேன், விவாதம் எல்லா இடங்களிலும் செல்லக்கூடும், மேலும் என்னால் அதை சரியாக வழிநடத்தவோ அல்லது பங்கேற்பாளர்கள் எழுப்பும் கேள்விகளுக்கு பதிலளிக்கவோ முடியாமல் போகலாம்.*

— *பயிற்றுநர்: அப்படி உணர்வது முற்றிலும் இயல்பான ஒன்றே, ஆனால் அனுபவம் அதிகரிக்கும் போது, பங்கேற்பாளர்கள் கட்டுப்பாட்டுடனான கலந்துரையாடலில் ஈடுபட நீங்கள் உதவ கற்றுக்கொள்வீர்கள் என நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். வெறுமனே சீரற்ற எண்ணங்களை வெளிப்படுத்துதல் புரிதலை அதிகரிக்காது என்பதை அவர்கள் உணர்வார்கள். நீங்கள் கலந்துரையாடலை விறைப்பாக வைத்துக்கொள்ளாமல் அதை ஒருமுகப்படுத்திட கற்றுக்கொள்வீர்கள். சில சமயங்களில் அவர்களின் பங்களிப்புகள் கலந்துரையாடலுக்கு அவ்வளவு பொருத்தமானதாக இல்லாவிட்டாலும், மக்கள் விரும்புவதைச் சொல்ல நினைப்பது பரவாயில்லை என்றே கூறலாம். இருப்பினும், குழுவினர் இந்த விஷயத்திலிருந்து முற்றிலும் விலகிச் செல்வதையும், அது நீண்டகாலத்திற்குத் தொடர்வதையும் நீங்கள் கண்டால், குழுவினர் உபகரணத்தின் படிப்பாய்வுக்குத் திரும்பிட நீங்கள் உதவ வேண்டும். அது அவ்வளவு சிரமமாக இருக்காது, ஏனெனில் குழுவினருடனான உங்கள் உறவு மரியாதை மற்றும் பரிவிரக்கத்தின் அடிப்படையில் அமைத்திருக்கும்.*

— *பங்கேற்பாளர்: ஆனால் அது எல்லா நேரங்களிலும் சுலபமாக இருக்காது. நான் பங்கேற்ற பயில்வட்டங்களில், சில நபர்களால் தங்கள் பேச்சை நிறுத்தவே முடியவில்லை. அதே சமயம் சிலரோ ஒரு வார்த்தைக்கூட பேசவில்லை.*

— *பயிற்றுநர்: நிச்சயமாக, பிரச்சினையானது உண்மையில் ஒரு கலந்துரையாடலில் ஒரு தனிநபரின் பங்களிப்பின் நீளம் அல்லது சுருக்கத்தைச் சார்ந்த ஒன்றல்ல, மாறாக வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் குழுவினரின் கூட்டு புரிதலை அதிகரிக்கின்றனவா அல்லவா என்பதுதான். இதை நீங்கள் உங்கள் மனதில் தெளிவாகக் கொண்டிருக்க வேண்டும். எது எப்படியிருந்தாலும், பேசுபவர்களில் அல்லது மௌனமாக இருப்பவர்களில் எவரையும் சங்கடப்படுத்தக்கூடாது என்பதை நினைவில் கொள்வது மிக முக்கியம். குழுவினரின் நேரத்தை அளவுக்கு அதிகமாக எடுத்துக்கொள்வோர்பால் நீங்கள் வெறுப்புறாமல் இருப்பதை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். பல நேரங்களில் அவர்கள் கலந்துரையாடலை நடத்திச் செல்ல உதவுவதாக அவர்கள் நம்பக்கூடும், மேலும் தாங்கள் வரம்பு மீறிச் செல்வதை அவர்கள் உணராமல் இருக்கலாம். நிச்சயமாகவே, மற்ற நேரங்களில் அவர்கள் தங்கள் சொந்த யோசனைகளின்பால் அளவுக்கு அதிகமாக பற்றுக்கொண்டிருக்கலாம். சூழ்நிலை என்னவாக இருப்பினும், குழுவினருடன் நீங்கள் அன்பும் தோழமையும் நிறைந்த ஓர் உறவை ஸ்தாபித்துக் கொண்டிருந்தீர்களானால், உரையாடலை சரியான திசையில் வழிநடத்துவதற்கும், அதிகமாகப் பேசுவோர் மனம் புண்படாமல் கலந்துரையாடலில் மற்றவர்களையும் ஈர்த்திடவும் நீங்கள் வழிகளைக் கண்டறிவீர்.*

— *பங்கேற்பாளர்: பேசாமல் இருப்போர், எப்படி?*

— *பயிற்றுநர்: இஃது உண்மையில் மிகவும் சுவாரஸ்யமான ஒரு விஷயம். சில சமயங்களில் பேசுவதற்கு நாம் அளவுக்கதிகமான முக்கியத்துவம் கொடுக்க முனைகிறோம். யாராவது மௌனமாக இருந்தால் பதற்றமடைகிறோம். அமைதியாக இருப்பவர்கள் அல்லது கூச்ச சுபாவம் கொண்டவர்கள் மிகவும் புத்திசாலிகளன்று அல்லது அவர்கள் கவனம் செலுத்துவதில்லை என்றுங்கூட நாம் நினைக்கிறோம். பேசுதல் என்பது பங்கேற்பிற்கான ஓர் அறிகுறியாக இருக்க வேண்டும் என்பதில்லை. நீங்கள் குழுவினரை அவதானித்தால், அஃது அவ்வளவு பெரியதல்ல, யார் கற்றலில் ஈடுபட்டுள்ளனர், யார் செவிமடுகின்றனர், சிந்திக்கின்றனர் மற்றும் விடாமுயற்சியுடன் பயிற்சிகளை மேற்கொள்கின்றனர் என்பதை நீங்கள் காணலாம். குழுவினருள் கூச்ச சுபாவமுள்ளோர் படிப்படியாக தன்னம்பிக்கையை உருவாக்கிக் கொண்டு கலந்துரையாடல்களில் பங்கேற்பார்கள், ஆனால் அதை இயல்பாக நடக்க விட்டுவிட வேண்டும்.*

மேற்கண்ட கலந்துரையாடலை மனதிற்கொண்டு, ஒரு பயிற்றுநர் கற்றல்-போதித்தல் செயல்முறை முழுவதும் முழுமையாக ஈடுபட்டிருக்க வேண்டும் என்பதன் அர்த்தம் என்ன என்பதைப் பற்றிய உங்கள் சிந்தனைகள் சிலவற்றை கீழ்க்காணும் காலியிடத்தில் எழுதவும்.

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

## பகுதி 13

கலந்துரையாடல் சீராக நடைபெற்றுக் கொண்டே இருக்கும் போது அதை ஒருமுகமாக வைத்திருக்கும் சவால் சுலபமானதல்ல, நீங்கள் செயல்ரீதியான அனுபவத்தை பெற்று வருகையில் நீங்கள் இத்திறமையை சிறப்பாகக் கையாள கற்றுக்கொள்வீர்கள். கீழே சில சூழ்நிலைகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சூழ்நிலையிலும் ஆலோசிக்கப்பட்ட இரண்டு பதிலிறுப்புகளும் செல்லுபடியானவை ஆனால் அவை வெவ்வேறு சூழ்நிலைகளில் செல்லுபடியானவை ஆகும். இவ்விரண்டு பதிலிறுப்புகள் ஒவ்வொன்றும் எந்த சூழ்நிலைகளில், மிகுந்த விளைவுத்திறம் மிக்கவையோ, அந்த சூழ்நிலைகளை வர்ணிக்கவும்: சூழ்நிலைகளைப் பொறுத்து பொருத்தமான மற்றொரு பதிலைப் பற்றி நீங்கள் சிந்திக்க முடியுமா? -

1. பங்கேற்பாளர்களில் ஒருவரிடம் ஒரு கேள்வி பற்றிய சில எண்ணங்களை வழங்குமாறு கேட்கப்படுகிறது, ஆனால் அவர் நீண்ட நேரம் பதில் அளிக்காமல் இருக்கிறார்.

   அ. அவர் இறுதியில் பதில் அளிக்கும் வரை நீங்கள் அமைதியாகக் காத்திருக்கிறீர்கள்.

   ______________________________________________________________________________

   ______________________________________________________________________________

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

ஆ. நீங்கள் கனிவாக மற்றொரு பங்கேற்பாளர் பக்கம் திரும்பி, அக்கேள்வி குறித்து அவரது எண்ணங்களை கேட்கின்றீர்கள்.

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

இ. _____________________________________________________________________________

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

2. பங்கேற்பாளர்களில் ஒருவர் ஒரு பதிலுக்கு எப்போதுமே முதலில் பதில் அளிப்பவராக இருந்து, மற்றவர்கள் பேசுவதை கடினமாக்குகிறார்.

அ. நீங்கள், குழுவின் தனி நபர்கள் சிலரை அவர்களுடைய பெயர்களைக் கொண்டு அழைத்து சில கேள்விகள் சிலவற்றை அவர்களிடம் கேட்கிறீர்கள்:

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

ஆ. நீங்கள் ஒரு கட்டத்தில், குழுவிற்கு வெளியே, அந்த நபருடன் ஒரு நல்ல, நட்புமிக்க உரையாடலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது, அவரிடம் கலந்துரையாடலுக்கு மற்றவர்களின் பங்களிப்பதை செவிமடுப்பதில் அவர் என்ன நுண்ணறிவுகளை பெற்றிருக்கின்றார் என கேட்கின்றீர்கள்:

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

இ. _____________________________________________________________________________

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

3. பங்கேற்பாளருள் ஒருவர் வெகு நேரமாக கலந்துரையாடலில் பங்குபெறவில்லை.

அ. அவர் சொல்வதற்காக ஏதோ கொண்டிருக்கிறார் என நீங்கள் நினைக்கும் போது நீங்கள் அவரிடம் ஒரு நேரடியான கேள்வியைக் கேட்கிறீர்கள்.

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

ஆ. அவர் எதுவரை மௌனமாக இருக்க விரும்புகின்றாரோ, அதுவரை அவர் அவ்வாறு இருக்க அனுமதித்து, அவரைத் தனியே விட்டுவிடுகிறீர்கள்.:

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

இ. ______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

4. பயிற்சிகளை மேற்கொள்வதில், சில பங்கேற்பாளர்கள் பல புற யோசனைகளை அறிமுகப்படுத்துகின்றனர், அதனால் கலந்துரையாடல் தலைப்புக்கு அப்பாற்படுகின்றது.

அ. நீங்கள் கலந்துரையாடலுக்கான தலைப்புக்குத் திரும்பிட பங்கேற்பாளர்களுக்கு உதவி, பயிற்சியின் நோக்கத்தை அவர்களுக்கு நினைவுபடுத்துகின்றீர்கள்:

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

ஆ. பயிற்சிகளின் நோக்கத்தைப் பற்றிய ஒரு தெளிவான புரிதலைப் பெற்றுள்ளார் எனத் தோன்றும் ஒரு பங்கேற்பாளரை அழைத்து குழுவினரை மீண்டும் கலந்துரையாடலின் கருப்பொருளுக்கு கொண்ட வர அவரிடம் ஒரு நேரடி கேள்வியைக் கேட்கின்றீர்கள்:

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

இ. ________________________________________________________________________________
________________________________________________________________________________
________________________________________________________________________________
________________________________________________________________________________

## பகுதி 14

முந்தைய பகுதியில் நடந்த கலந்துரையாடல், ஒரு குழுவுடன் ரூஹி பயிற்சிக்கழகத்தின் நூல்களைப் படிப்பாய்வு செய்யும்போது ஒரு பயிற்றுநர் பின்பற்றுவதற்கான சூத்திரங்கள் ஏதும் இல்லை என்பதை உணர உங்களுக்கு உதவியிருக்கும். உண்மையில், ஒவ்வொரு பயிற்றுநரும் பயிற்சிப்பாடங்களின் படிப்பாய்வை பின்பற்ற வேண்டிய எளிய படிகளின் வரிசையாகக் குறைக்கும் தூண்டுதலை எதிர்த்திட வேண்டும். கல்வி தொடர்பானவை உட்பட நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொரு வகையான சவால்களுக்கும் ஒரு தீர்வை வாக்களிக்கும் தொழில்நுட்ப வழிமுறைகள் நமக்குத் தொடர்ந்தாற் போன்று வழங்கப்படும் போது அது அவ்வளவு சுலபமாக இருந்திடாது. போதித்தல்-கற்றல் அனுபவத்தை வளப்படுத்துவதற்கான நமது உற்சாகத்தில், நாம் கவனக்குறைவாக பங்கேற்பாளர்களின் உபகரணத்துடன் அர்த்தமுள்ள முறையில் ஈடுபடுவதற்கான முயற்சிகளுக்கு ஊறு விளைவிக்கும் படிப்பாய்வு உத்திகள் மற்றும் நடைமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கு எதிராக நாம் குறிப்பாக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ரூஹி பயிற்சிக்கழகத்தின் பயிற்சிப்பாடங்களால் பேணி வளர்க்கப்பட்ட கல்வியியல் செயல்முறையை ஓர் அடிப்படை எளிமை அடையாளப்படுத்துகின்றது. அதன் உபகரணங்கள் படிப்பாய்வு செய்யப்படும் எந்த ஓர் சூழலும் தோழமை மற்றும் களிப்புணர்வுகளால் ஆளப்பட வேண்டும். இறுதியில், கற்றலை சடங்குகள், நடைமுறைகள் மற்றும் உத்திகள் பேணி வளர்க்கப்போவதில்லை, மாறாக அறிவைத் தேடுதல் மற்றும் சேவை செய்வதற்கான உந்துகையே பேணி வளர்க்கும்.

மேலே உள்ளவற்றின்படி கற்றல் செயல்முறையை எளிதாக்கக்கூடிய சில உத்திகள் கிடையாது என்பது அதன் அர்த்தமல்ல. ஆனால் "உத்திகள்" செயல்முறையில் ஆதிக்கம் செலுத்த முடியாது. கல்வி செயல்முறைக்கு மையமாக விளங்கும் புனித வாசகங்களின் கண்ணியத்தை குறைத்து மதிப்பிடவோ புரிதலின் தீவிர முயற்சியை அற்பமாக்கவோ அனுமதிக்கப்பட முடியாது. நூல் 7-இன் பயிற்றுநராகப் பணியாற்றும் ஒருவருக்கும் இந்தப் பகுதிகளைப் படித்த பங்கேற்பாளர்களின் குழுவிற்கும் இடையிலான பின்வரும் கற்பனை உரையாடல் சாத்தியமான ஆபத்துகளை அடையாளம் காணவும் அவற்றைத் தவிர்க்கவும் கற்றுக்கொள்ள உதவும்:

— *பங்கேற்பாளர் 1: ரூஹி பயிற்சிக்கழகத்தின் பயிற்சிப்பாடங்களைப் படிப்பாய்வு செய்வதில் எந்த சடங்குகளும் அல்லது பின்பற்ற வேண்டிய நிலையான படிகளும் இல்லை என்பதை அறிவது மிகவும் உதவியாக இருக்கின்றது. சில சமயங்களில் படிப்பாய்வு நடத்தப்படும் விதத்தைப் பார்த்த போது, அவை பயிற்சிக்கழகத்தின் "வழிமுறைகள்" என நான் நினைத்தேன், ஆனால் அது அவ்வாறு இல்லை என்பதை இப்போது உணர்கிறேன்.*

— *பங்கேற்பாளர் 2: மனனம் செய்தல் சில நேரங்களில் எவ்வாறு செய்யப்படுகிறது என்பது போல. குழந்தைகள் வகுப்புகளின் ஆசிரியர்கள் ஓர் எளிய உத்தியைப் பயன்படுத்தி ஒரு பிரார்த்தனையை அல்லது மேற்கோளை மனனம் செய்ய இளைஞர்களுக்கு உதவுகிறார்கள். இதில், குழந்தைகள் ஒரு மேற்கோளின் முதல் வாக்கியத்தை அல்லது சொற்றொடரை அவர்கள் மனனம் செய்யும் வரை அதை மீண்டும் மீண்டும்*

*ஒப்புவிக்கின்றனர். பின்னர், அதைத் தொடர்ந்து வரும் வாக்கியத்தைச் சேர்க்கிறார்கள், இந்த வழியில் அவர்கள் முழு மேற்கோளையும் மனனம் செய்கிறார்கள். இது ஓர் எளிய, ஆனால் விளைவுத்திறம் கொண்ட உத்தியாகும். மேலும், நான் முதியவர் ஆன பிறகும், திருவாசகங்களில் இருந்து நீண்ட பகுதிகளை மனனம் செய்ய இதே உத்தியை அடிக்கடி பயன்படுத்துகிறேன். ஆனால், பங்கேற்பாளர்கள் "விளையாட்டாக" இருக்கும்போது மேற்கோள்களை மனனம் செய்ய உதவும் உத்திகளைத் தேடுவதில் நிறைய சக்தி செலவிடப்படலாம் என்பதை நான் அவதானித்துள்ளேன்.*

— *பங்கேற்பாளர் 3: உதாரணமாக, சில நேரங்களில் ஓர் ஆசிரியர் மேற்கோளை ஒரு வெள்ளை பலகையில் முழுமையாக எழுதி, பங்கேற்பாளரை அதை சத்தமாக வாசிக்கச் சொல்வதை நான் பார்த்திருக்கிறேன். பின்னர் பயிற்றுநர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சொற்களை அழிக்கிறார், மற்றொரு பங்கேற்பாளர் விடுபட்ட வார்த்தையை நினைவுபடுத்துவதன் மூலம் அதைப் படிக்கிறார். மிகக் குறைவான சொற்கள் எஞ்சியிருக்கும் வரை செயல்முறை தொடர்கிறது. இப்படி மனனம் செய்வது அநாவசியமாக நீட்டிக்கப்படலாம்.*

— *பங்கேற்பாளர் 4: நான் நூல் 1-ஐப் பயிலும் போது, ஒவ்வொரு மேற்கோளுக்கும் ஒரு சித்திரம் வரையச் சொன்னது எனக்கு நினைவிருக்கிறது. உண்மையைச் சொல்வதானால், இதன் நோக்கம் எனக்குப் புரியவில்லை, எங்களில் சிலர் இந்தச் செயல்பாட்டை ரசிக்கவில்லை, ஏனெனில் இது கருத்தாக்கங்களின் வரிசையில் கவனம் செலுத்துவதையும் பின்பற்றுவதையும் கடினமாக்கியது. உபகரணத்தின் ஊடே சுறுசுறுப்புடன் நகர்வதை நாங்கள் விரும்பியிருப்போம். பல மாதங்களுக்குப் பிறகுதான் இது பயிற்சிப்பாடங்களைப் பயிலும் வழிமுறையின் ஓர் அம்சமன்று என்பதை நான் அறிந்தேன்.*

— *பங்கேற்பாளர் 2: "உத்தி" பற்றிய கேள்வி எப்போதும் நேரடியானதன்று என்பதை என்னால் உணர முடிகிறது. மேலும், பயிற்றுநர்கள் என்னும் முறையில் பங்கேற்பாளர்கள் புரிதலைப் பெறும் மும்முர முயற்சியிலிருந்து மகிழ்ச்சி பெறுவார்கள் என்னும் நம்பிக்கை நமக்கு இருக்க வேண்டும். இந்தப் பிரிவுகளில் நாம் விவாதித்த அனைத்திலிருந்தும், பங்கேற்பாளர்கள் கற்றல் செயல்பாட்டில் ஈடுபட உதவுவதற்கான நமது ஆர்வத்தில், இறுதியில் பயிற்சிப்பாடங்களின் விளைவுத்திறத்தைக் கீழறுத்திடக்கூடிய சடங்காக மாறக்கூடிய நடவடிக்கைகளில் நாம் வீழ்ந்திடாமல் இருப்பது முக்கியம்.*

— *பயிற்றுநர்: நீங்கள் அனைவரும் ஒரு முக்கியமான முடிவுக்கு வந்துள்ளீர்கள். சில பயிற்றுநர்கள் பயிற்சிப்பாடங்களின் ஆய்வில் சில நடவடிக்கைகளை உள்ளடக்குவது இயல்பு எனினும், அவற்றை " ரூஹி முறையின்" அம்சங்கள் என நாம் குறிப்பிடும்போது, இது எளிமையான, மகிழ்ச்சியான மற்றும் தேவைகளின் பன்முகத்தன்மைக்கு உணர்திறன் கொண்ட ஒரு செயல்முறையில் விடாப்பிடியை அறிமுகப்படுத்துகின்றது. ரூஹி பயிற்சிக்கழகம் செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை என்னும் வரிசையை வெளியிட முடியாது என்பதை நீங்கள் மதித்துணரலாம் என்பதில் சந்தேகமில்லை, ஏனெனில் இதுவே விடாப்பிடிக்கு வழிவகுக்கும். ஆதலால், படிப்பாய்வு செய்யப்படும் உபகரணத்தின் சாராம்சத்தை மறைக்க அல்லது செயல்முறையின் எளிமையை மறைக்க உத்தியை அனுமதிக்காத அதே நேரம், புரிதலை மேம்படுத்துவதற்கு எது பங்களிக்கிறது என்பதைத் தீர்மானிப்பதில் அது ஆசிரியரின் முடிவுக்கே அதிகம் விடப்படுகின்றது.*

# பகுதி 15

கலந்துரையாடலை வழிநடத்தும் திறனுக்கும் அப்பால், பங்கேற்பாளர்கள் உள்ளடக்கம் பற்றிய புரிதலைப் பெறுவதில் மேம்பாடு காண்பதற்கும் தங்கள் சொந்தக் கற்றலின் உரிமையை எடுத்துக்கொள்வதற்கும் உதவ வேண்டுமானால், பயிற்றுநர்கள் ஆய்வு செய்யப்படும் உபகரணத்தை நன்கு அறிந்திருக்க வேண்டும் என்பது இப்போது உங்களுக்கு தெளிவாக இருக்க வேண்டும். நிச்சயமாக, நீங்களே ஓர் ஆசிரியரின் உதவியுடன் ரூஹி பயிற்சிக்கழகத்தின் முதல் ஆறு நூல்களை முடித்துள்ளீர்கள், மேலும் அவர்கள் பரிந்துரைக்கும் சேவை செயல்களை நிறைவேற்றுவதில் நல்ல அனுபவத்தையும் பெற்றுள்ளீர்கள் -- இது, உங்கள் கிராமம் அல்லது அண்டைப்புறத்தில் அதன் முன்னேற்றத்திற்காக உழைக்கும் தனிநபர்களின் அதிகரித்து வரும் மையக்கருவின் ஒரு பகுதியாகும். இருப்பினும், இப்போது, ஓர் ஆர்வமுள்ள பயிற்றுநராக, நீங்கள் மேலும் சென்று பயிற்சிப்பாடங்களின் உள்ளடக்கத்தை வடிவமைக்க உதவிய சில மையக் கருத்தாக்கங்கள் மற்றும் அடித்தலமான கோட்பாடுகளைப் பற்றி பிரதிபலிக்க வேண்டும்.

> ஆரம்பத்தில் இருந்தே, ரூஹி பயிற்சிக்கழகத்தின் பயிற்சிப்பாடங்கள் மனிதகுல சேவைக்கான ஒரு பாதை குறித்து தடம் காண்கின்றன என்பது ஒவ்வொரு பங்கேற்பாளருக்கும் தெளிவாக இருக்க வேண்டும், அதில் நாம் ஒவ்வொருவரும் நம் சொந்த வேகத்தில் பயணிக்கிறோம், மற்றவர்களுக்கு உதவுகிறோம். இந்தப் பாதையில் பயணித்தல் என்பது ஓர் இரட்டை தார்மீக நோக்கத்தைப் பின்தொடர்வதைக் குறிக்கிறது: ஒருவரின் சொந்த ஆன்மிக மற்றும் அறிவுசார் வளர்ச்சியில் கலந்துகொள்வது மற்றும் சமூகத்தின் தன்மைமாற்றத்திற்குப் பங்களிப்பது. பாதையில் முன்னேற்றம் என்பது புரிதல் மற்றும் அறிவு, ஆன்மிக குணங்கள் மற்றும் பாராட்டத்தக்க மனப்பான்மைகள், அத்துடன் பல திறமைகள் மற்றும் திறன்கள் தேவைப்படும் பல செயல்திறன்களின் வளர்ச்சியை உள்ளடக்கியது. ஒருபுறம், பஹாய் சமயத்தின் போதனைகளும், மறுபுறம், பௌதீக மற்றும் ஆன்மிக நாகரீகத்தை மேம்படுத்துவதில் உலகளாவிய பஹாய் சமூகத்தின் குவிந்து வரும் அனுபவமும் பயிற்சிக்கழகத்தின் நூல்களுக்கான அறிவு மூலாதாரங்களாகும். நாம் மாறவிருக்கும் தனிமனித நிலை மற்றும் நாம் நிர்மாணிக்கக்கூடிய நாகரிகம் பற்றிய பஹாவுல்லாவின் தொலைநோக்கே இந்தப் பயிற்சிக்கழகத்திற்கு உத்வேகம் அளித்திடும்.

ஏற்கனவே, இந்த நூலில் நீங்கள் சில காலமாக நடந்து வரும் பாதையின் ஆன்மிகத் தன்மையை ஆராய வாய்ப்பு கிடைத்தது. எல்லா நேரத்திலும், இரட்டை தார்மீக நோக்கத்தைப் பின்தொடர்ந்தது உங்கள் அடிகளை வலுப்படுத்தியது மற்றும் சேவைக்கான உங்கள் அர்ப்பணிப்பை மேம்படுத்தியுள்ளது. இந்தப் பாதையில் ஒருவர் மேம்பாடு காணுபோது, சேவை செய்யும் திறன் எவ்வாறு அதிகரிக்கிறது என்பதை நீங்கள் நேரில் பார்த்திருப்பீர்கள், அத்துடன் தனிப்பட்ட மற்றும் கூட்டுத் தன்மைமாற்றத்தின் இயக்கவியல் பற்றிய பல விலைமதிப்பற்ற நுண்ணறிவுகளைப் பெற்றிருப்பீர்கள்.

தனிநபர்களுக்குத் தேவையான திறனாற்றலை வளர்க்கும் வகையில் பயிற்சிப்பாடங்களை வடிவமைக்கும் முயற்சியில், ரூஹி பயிற்சிக்கழகம் ஆரம்பத்தில் பல தேர்வுகளுக்கான வாய்ப்பைக் கொண்டிருந்தது என்பதை இங்கு கவனிக்க வேண்டியது அவசியம். எடுத்துக்காட்டாக, பஹாய் ஆழப்படுத்தும் திட்டங்களின் மிகவும் பொதுவான அணுகுமுறையை அது ஏற்றுக் கொள்ளலாம்--- அதாவது, சமயம் குறித்த போதிய அறிவை மாணவருக்கு வழங்குவது: அதன் கொள்கைகள், அதன் ஆன்மிக மற்றும் சமூக போதனைகள், அதன் வரலாறு, அதன் சட்டங்கள் மற்றும் அதன் நிர்வாகம்.

இந்த அறிவு, தனிமனிதர்கள் சுயமாக எழுச்சியடையச் செய்து, சமயத்திற்காகச் சேவை செய்யத் தூண்டும் என எதிர்பார்க்கப்படும். இதில் சேர்க்கப்பட வேண்டியது யாதெனில் தொடர்ச்சியான ஊக்குவிப்பின் மூலம் வலுப்படுத்தப்பட்ட, குறிப்பிட்ட திறன்களில் சில பயிற்சிகள்.

இத்தகைய பல மாற்று நடவடிக்கைகளை ஆராய்ந்த பிறகு, படிப்பாய்வும் செயல்பாடும் இணைந்த ஒரு கல்வி அணுகுமுறையை பயன்படுத்திட பயிற்சிக்கழகம் தீர்மனித்தது. அறிவு மற்றும் நடைமுறை இரண்டையும் ஒனறிணைத்தல் மூலமாகவே சமயத்திற்கும் மானிடத்திற்கும் சேவை செய்வதற்கு தேவையான திறனாற்றல் உருவாக்கப்படுகின்றது என அது திடமாக நம்பியது. பஹாய் திருவாசகங்களில் கற்பனை செய்யப்பட்ட தனிநபர் மற்றும் கூட்டு தன்மைமாற்றத்தை ஏற்படுத்துவதற்கான திறனை உருவாக்கும் எந்த அணுகுமுறையும் புரிதலை வளர்ப்பதில் செயலின் முக்கியத்துவத்தை புறக்கணிக்க முடியாது. படிப்பு மட்டும் - சேவைத் துறைக்கு வெளியே அறிவைத் தேடுவது - போதுமானதாக இருக்காது.

இயல்பாகவே, திருவாசகங்களில் இருந்து உரைப்பகுதிகளைப் படிப்பாய்வு செய்வதற்கு பலமான அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். ஆனால், பஹாய் போதனைகளை ஒருவரின் சொந்த வாழ்க்கைக்கும், ஒருவரின் சொந்த கிராமம் அல்லது அண்டைப்புற வாழ்க்கைக்கும் பயன்படுத்துவதற்கு சமமான முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். கல்விச் செயல்முறை பங்கேற்பாளர்களை பஹாவுல்லாவின் வெளிப்பாட்டுடன் மட்டுமின்றி, சமயத்தின் போதனைகள் மற்றும் கோட்பாடுகளைப் பயன்படுத்துவதில் பஹாய் அனுபவத்துடனும் இணைக்க வேண்டும். மேலும் என்னவெனில், பங்கேற்பாளர்கள் இந்த அனுபவத்தின் மேற்கொண்டு மடிப்பவிழ்விற்கும் அதன் பரப்பிற்கும் பங்களிப்பதை உறுதி செய்ய வேண்டும்.

இறுதியில் ரூஹி பயிற்சிக்கழகம் அறிவு மற்றும் பழக்கவழக்கங்கள், திறன்கள் மற்றும் திறன்கள், மனப்பான்மைகள் மற்றும் ஆன்மிக குணங்கள் ஆகியவற்றின் மீது ஒரே நேரத்தில் கவனம் செலுத்தும் ஒரு கற்பித்தல் முறையை ஏற்றுக்கொண்டது. இது அவர்கள் சமூகங்களின் முன்னேற்றத்திற்காகத் தங்கள் ஆற்றல்களை அர்ப்பணிக்க விரும்புவோரால் படிப்படியாக பெறப்படும். இந்தத் தேவைகளை ஒன்று சேர்த்த “செயல்திறம்” குறித்த கருத்தாக்கம் உருபெற ஆரம்பித்தது. சமயத்திற்கும் மானிடத்திற்கும் பணிபுரிவதற்கு ஓர் அதிகரிக்கும் எண்ணிக்கையிலான மக்களின் செயல்திறத்தை மேம்படுத்துவதற்கு, ரூஹி பயிற்சிக்கழகம் அதன் பயிற்சிப்பாடங்களை ஒரு "சேவை பாதையின்" அடிப்படையில் வரையறுக்கப்பட்ட ஒரு தொடர்வரிசையில் ஒழுங்கமைக்க முடிவு செய்தது. இந்த வழியில், பங்கேற்பாளர்கள் குறிப்பிட்ட சேவை செயல்களைச் செய்வதன் மூலம் தனிப்பட்ட மற்றும் கூட்டுத் தன்மைமாற்றம் குறித்த பாதையைப் பற்றி அறிய உதவ முடியும் என பயிற்சிக்கழகம் உணர்ந்தது.

பங்கேற்பாளர்கள் சேவைக்கான தங்கள் திறனாற்றலை வளர்த்துக் கொள்ளும்போது அதனுடன் முறைமையுடன் முன்னேறக்கூடிய வகையில் அப்பாதை அமைக்கப்பட வேண்டும். அதன்படி, சேவைச் செயல்கள் ஒன்று மற்றொன்றின் மீது கட்டமைத்து, ஒரு பயிற்சிப்பாடத்திலிருந்து அடுத்த பயிற்சிப்பாடத்தில் பலக்கியதன்மை (complexcity) அதிகரித்திட வேண்டும். அத்துடன், எங்கெல்லாம் தனிநபர்கள் சேவை பாதையில் செல்ல நேர்ந்தாலும், பிறரும் மேம்பாடு காண உதவும் தங்களின் முயற்சிகளில் அவர்கள் சேவை பாதையில் ஆரம்பத்தில் அவர்களோடு உடன்செல்வர். இது, திறனாற்றல் உருவாக்க செயல்முறைக்கு உள்ளார்ந்த ஒன்றென தெளிவாகியது. அதிக அனுபவம் உள்ளோர், குறைவான அனுபவம் உடையோர் பாதையில் நடக்க முயலும் போது அவர்களுக்கு உதவுகின்றனர், இவர்களும் உரிய நேரத்தில், மற்றவர்களுக்கு உதவுவதற்கு கற்றுக்கொள்கின்றனர்.

இந்தக் கட்டத்தில் இடைநிறுத்தி கீழே பட்டியலிடப்பட்டுள்ள யோசனைகளை உங்கள் குழுவுடன் விவாதிப்பது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். பின்னர், ஒவ்வொன்றையும் பற்றிய சில எண்ணங்களை எழுதுங்கள். காலப்போக்கில், இந்த யோசனைகளைப் பற்றிய உங்கள் புரிதல் எவ்வாறு பரிணமிக்கின்றது என்பதை உங்களால் அவதானிக்க முடியும்.

அ. பஹாவுல்லாவின் திருவெளிப்பாடு, தனிப்பட்ட மற்றும் கூட்டு வாழ்க்கைக்கான அதன் பயன்பாடு ஆகியவை பற்றிய அறிவுக்கு பயிற்சிப்பாடங்கள் கொடுக்கும் முக்கியத்துவம்: ________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

ஆ. புரிதலைப் பேணி வளர்ப்பதில் படிப்பாய்வுடன் இணைந்து, செயல்பாட்டின் பங்கு: _

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

இ. ஒரு சேவை பாதையின்மீது செயல்திறன்களை மேம்படுத்திக்கொள்வது __________

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

ஈ. பயிற்சிப்பாடங்களினால் வகுக்கப்பட்ட சேவை பாதையால் பேணி வளர்க்கப்படும் தனிப்பட்ட மற்றும் கூட்டுத் தன்மைமாற்ற செயல்முறை: ___________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

## பகுதி 16

மேலே விவாதிக்கப்பட்ட கல்வியூட்டு அணுகுமுறையும் அதன் அடிப்படை கருத்தாக்கங்களும் ரூஹி பயிற்சிக்கழகத்தின் உபகரணங்களுக்கு எவ்வாறு வடிவம் கொடுத்துள்ளன என்பதை மேலும் ஆராய்ந்திட, உங்களுக்கு ஏற்கனவே பரிச்சயமான முதல் ஆறு பயிற்சிப்பாடங்களால் கண்டறியப்பட்ட சேவை பாதையை நாம் பார்க்கவிருக்கின்றோம். அவ்வாறு செய்வதற்கு, “நான் ஒரு சேவை பாதையில் நடக்கின்றேன்” என்னும் சொற்றொடரை நாம் பரிசீலிப்போம். இந்த வாக்கியத்தில் உள்ள “நான்” என்னும் சொல்லின் உண்மையான அடையாளம் யாது? அப்பாதையின் தன்மை என்ன, மற்றும் அதில் நடத்தல் எதை உட்படுத்துகின்றுது?

நூல் 1 இந்தக் கேள்விகளுள் முதலாவது கேள்விக்கு பதிலளிக்கின்றது. ஒருவரின் உண்மையான அடையாளம் குறித்த மூன்று அம்சங்கள் ஆராயப்படுகின்றன. “எனது இருத்தலின் யதார்த்தம் எனது ஆன்மா. அது, கடவுளை நோக்கிய ஒரு நித்தியமான பேரொளிமிக்க

பயணத்திற்குத் தேவையான பண்புகளைப் பெற இந்த உலகின் வழி கடந்து செல்கின்றது. கடவுளுடன் தொடர்புகொள்தலே எனக்குப் பிரியமான தருணங்கள், ஏனெனில் எனது ஆன்மா அதன் உன்னத நோக்கத்தை அடைய வேண்டுமெனில் பிரார்த்தனையே அதன் அன்றாட ஊட்டமாகும். பஹாவுல்லாவின் திருவெளிப்பாட்டை படிப்பாய்வு செய்தல், இக்காலத்திற்கான கடவுளின் போதனைகள் குறித்த எனது புரிதலை ஆழப்படுத்திக்கொள்ளல், மற்றும் அவற்றை என் சொந்த வாழ்விற்கும் சமூகத்தின் வாழ்விற்கும் பயன்படுத்தக் கற்றுக்கொள்ளல் ஆகியவையே எனது தலையாய பணியாகும். இவையே, உண்மையில், ஒருவரின் உண்மையான அடையாளத்தின் மைய அம்சங்கள் என்பதை குறித்த விழிப்புணர்வை உருவாக்குதலே *ஆன்மாவின் வாழ்வைப் பற்றி பிரதிபலித்தலின்* குறிக்கோளாகும்.

உண்மையில், மேற்குறிப்பிட்ட மூன்று யோசனைகளின் வரிசையும் நூலில் எதிர்வரிசையில் ஆரம்பிக்கின்றன என்பதை நீங்கள் இந்நேரம் உணர்ந்திருப்பீர்கள். இஃது, ஒருவர் தமது தன்னகத்தின் மீது கவனத்தை மையப்படுத்துவதற்கு மாறாகக் கடவுள் திருவெளிப்பாட்டின் மீது மையப்படுத்தப்பட்ட வாழ்க்கை குறித்த ஒரு தொலைநோக்கை உருவாக்குகின்றது என்பதைப் பயிற்சிக்கழகம் கண்டறிந்துள்ளது. இதிலும் அடுத்து வரும் இரண்டு பகுதிகளிலும் உள்ள கருத்துரைகளும் பயிற்சிகளும் உங்களுக்கும் உங்கள் குழுவில் உள்ள பிற உறுப்பினர்களுக்கும் இக்கருப்பொருள் குறித்த ஆய்வில் உதவிடும்.

நூல் 1-இன் “பஹாய் வாசகங்களைப் புரிந்துக்கொள்தல்” என்னும் முதல் பிரிவு, திருவாசகங்களிலிருந்து ஒரு வாக்கிய கூற்றுக்களின் மீது ஒருமுனைப்படுத்துகின்றது. ஒவ்வொரு கூற்றின் உடனடியான அர்த்தம், மற்றும் ஒருவருடைய வாழ்க்கையுடன் அதன் நேரடியான தொடர்பு ஆகியவை இங்கு வலியுறுத்தப்படுகின்றன மேலும், கலந்தாய்வினை, “எளிமையின்” ஓர் குறிப்பிட்ட கட்டத்தில் வைத்துக்கொள்வதென்பது வற்புறுத்தப்படுகிறது. ஆயினும் எளிமை என்பது, ஆழமற்ற நிலை என குறிப்பிடுவதில்லை, தேவைக்கு அதிகமான எளிமைபடுத்துதலுடனும் அது குழப்பப்படக்கூடாது. இதை சரியாக உணர்ந்து கொள்வதற்காக, கல்வி உபகரணங்களின் பின்வரும் நான்கு வகைகளையும், மாணவர்களின் மீது அவற்றின் சில விளைவுகளையும் வருணிக்க முயற்சி செய்யுங்கள்.

அ. எளிமையான மற்றும் ஆழமற்ற

ஆ. எளிமையான மற்றும் ஆழமிக்க

இ. சிக்கலான மற்றும் ஆழமற்ற

ஈ. எளிதற்ற மற்றும் ஆழமிக்க

நூல் 1-ல் வழங்கப்பட்டுள்ள திருவாசகங்களைப் படிப்பாய்வு செய்வதற்கான நேரடி அணுகுமுறை சேவை பாதையில் புறப்படவிருப்பவர்களுக்கு ஏன் மிகவும் உதவியாக இருக்கிறது என நாம் வினவலாம்? அவர்கள் திருவாசகங்களில் படிப்பன குறித்த உன்னிப்பான பிரதிபலிப்பின் மதிப்பு மேலும் அதிக நனவுடன் இருக்கக்கூடும் என்பது ஒரு பதிலாக இருக்கலாம். அவர்கள் அன்றாடம் திருவாசகங்களில் உரைப்பகுதிகளில் இருந்து படிக்கும் மற்றும் பிரதிபலிக்கும் பழக்கத்தை உருவாக்கிக்கொள்ளும் போது, போதனைகள் அதிகரித்த முறையில் அவர்களின் சிந்தனைகளையும் செயல்களையும் வடிவமைக்கின்றன.

கீழே இரண்டு தொகுப்பு கூற்றுகள் உள்ளன. முதல் பத்தியில் உள்ள கூற்றுகள் மனப்போக்குகளை வர்ணிக்கின்றன. அவை விரும்பத்தகாதவை என்றாலும், அசாதாரணமானவை அன்று. இரண்டாவது தொகுப்பில் உள்ளவை விரும்பப்பட வேண்டிய இலக்குகளாகும். ஒரு சேவை பாதையில் நடக்கும் போது, நாம் ஒவ்வொருவரும் இந்த இலக்குகளை நோக்கி நகர்கின்றோம். இடதுபுற நெடுவரிசையில் உள்ள ஒவ்வொரு கூற்றிலிருந்தும் இந்த நகர்வைக் குறிக்கும் வலப்புற நெடுவரிசையில் உள்ள கூற்றிற்கு ஓர் அம்புக்குறியை வரையவும்.

உலகத்தைப் பற்றிய நமது கண்ணோட்டங்கள் வெறும் அநித்திய கருத்துகளால் வடிவமைக்கப்படுகின்றன.

நல்லது மற்றும் கெட்டது, சரி மற்றும் தவறு ஆகியன குறித்து வேறுபாடு காண்பது கஷ்டம்; எல்லாம் ஒப்பீடானவை.

சுதந்திரம் குறித்த நமது கருத்தானது, நாம் என்ன சொல்கின்றோம் செய்கின்றோம் என்பவற்றின்பால் வரம்புகளை வைக்கும் எதன்பாலும் நம்மை எச்சரிக்கைப்படுத்துகின்றன.

நமது தீர்மானங்கள் அந்த தருணத்தின் நமது உணர்ச்சிகளைப் பொறுத்து அமைகின்றன.

என்ன விளைவுகள் ஏற்பட்டாலும், நாம் நமது ஒவ்வொரு ஆசையையும் பின்பற்ற வேண்டுமென கூறும் ஒவ்வொரு செய்தியையும் பொருட்படுத்தாமல் இருப்பது கஷ்டம்.

முழுமையின் நல்வாழ்வை விட நமது சொந்த சுயநலம் முன்னுரிமை பெறுகிறது.

சமய போதனைகளின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

தனிநபர் தேவைகளும் இலட்சியங்களும் கூட்டு நலனுக்கு அனுகூலமான வற்றின்பால் இணைக்கப் படுத்தப் படுகின்றன.

சமயத்தின் அளவுகோல் சொற்கள் மற்றும் செயல்களின் மதிப்பை அளவிட தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

உலகத்தைப் பார்ப்பதற்கு பஹாவுல்லாவின் திருவெளிப்பாட்டினால் உத்வேகிக்கப்பட்ட ஒரு கட்டமைப்பு உருவாக்கப்படுகின்றது.

ஒருவருடைய சித்தத்தை கடவுளின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுப்பதன் மூலம் உண்மையான சுதந்திரத்தை அடைய முடியும் என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஒரு மனிதனின் ஸ்தானத்தின் கண்ணியத்திற்கு ஏற்ற வழிகளில் செயல்படுவதற்கான ஒழுக்கம் பேணி வளர்க்கப்படுவது போன்று ஒருவரின் ஆசைகளில் ஈடுபடுவதால் ஏற்படும் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வும் பேணி வளர்க்கப்படுகிறது.

# பகுதி 17

நூல் 1-இன் இரண்டாவது பாடப்பிரிவு பிரார்த்தனையின் முக்கியத்துவத்தைப் பற்றிய புரிதலை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது மற்றும் தனிநபர்கள் தவறாமல் பிரார்த்திக்கும் பழக்கத்தைப் பேணி வளர்க்க உதவுகிறது. சேவை பாதையில் இறங்கியதிலிருந்து, நீங்கள் உங்கள் சொந்த வாழ்க்கையில் இந்தப் பழக்கத்தை வலுப்படுத்தியும், உங்கள் கிராமத்திலோ சுற்றுப்புறத்திலோ உள்ள குடும்ப உறுப்பினர்களுடன் பிரார்த்தனைகளைப் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்புகளைப் பயன்படுத்தி உங்கள் சமூகத்தின் பக்தித் தன்மையை வலுப்படுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறீர்கள். இந்தக் கட்டத்தில், நூல் 1-இல் உள்ள "பயிற்றுநருக்கான சில சிந்தனைகள்" என்பதிலிருந்து பின்வரும் பகுதியைப் படித்து, அஃது எழுப்பும் யோசனைகளுடன் பாடப்பிரிவை மதிப்பாய்வு செய்வது பயனானது:

முதலாம் நூலின் பாடப்பிரிவைப் போன்று, நூலில் உள்ள இரண்டாவது பாடப்பிரிவு, ஆன்மிக வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒரு பழக்கம் சம்பந்தப்பட்டதாகும்: தவறாது பிரார்த்தித்தல். இது தொடக்கப் பகுதியில் "சேவை பாதை" என்னும் கருத்தாக்கத்தை வெளிப்படுத்துகிறது, இந்தப் பாதையில் நடப்பதற்கு, நாம் ஓர் இரட்டை நோக்கத்துடன் ஊட்டப்பட்டிருக்க வேண்டும் என பரிந்துரைக்கிறது. பங்கேற்பாளர்கள் இந்த நோக்கத்தின் தன்மையைப் பற்றிய நுண்ணறிவை வழங்கும் மேற்கோள்களின் ஆரம்பத் தொகுப்பை ஆராய்கின்றனர், இக்கருப்பொருள் எதிர்கால பாடத்திட்டங்களில் விரிவுபடுத்தப்படும்..

இக்கருப்பொருளின் பின்னணியில், பாடப்பிரிவு பிரார்த்தனையின் முக்கியத்துவத்தை ஆராய்கிறது. முந்தைய பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளதைப் போன்ற அணுகுமுறையை இது பயன்படுத்துகிறது. படிக்கப்படும் திருவாசகங்கப் பத்திகளின் அர்த்தத்தின் புரிந்தலை மேம்படுத்திட கேள்விகள் மற்றும் பயிற்சிகள் உருவாக்கப்படுகின்றன. பாடப்பிரிவின் வழி குழு முன்னேறும்போது, கடந்த கால விளக்கவுரைகள் மற்றும் நடைமுறைகளில் வேரூன்றிய கருத்துக்களை பகுப்பாய்வு செய்வதன் மூலம் பயிற்றுநர் சந்தேகங்களைக் களைய வேண்டியிருக்கும். சில மரபுகளில், சடங்குகளும் வடிவங்களும் படிப்படியாக அக நிலையின் முக்கியத்துவத்தை மறைத்துவிட்டதுடன் பலர் பிரார்த்தனையின் அவசியத்தை புறக்கணிக்கவும் செய்கின்றனர். உடலுக்கு உணவு எவ்வளவு முக்கியமோ அந்த அளவிற்கு பிரார்த்தனை மனித ஆன்மாவிற்கு முக்கியமாகும்.

யாவற்றிற்கும் மேலாக, பங்கேற்பாளர்களுக்கு "கடவுளுடன் உரையாடல்" மற்றும் அவரை நெருங்குவதற்கான விருப்பத்தை எழுப்புவதற்கு இந்த அலகு (this unit) விரும்புகிறது. உரையாற்றப்பட்ட கருத்துகளில், பிரார்த்தனை நிலைக்குச் செல்வது என்றால் என்ன, அவ்வாறு செய்யும்போது நமது இதயம் மற்றும் மனதின் தோரணை மற்றும் நாம் தனியாக இருந்தாலும் சரி, கூட்டமாக இருந்தாலும் சரி, நம் சூழலில் உருவாக்கப்பட வேண்டிய சூழ்நிலைகள் ஆகியவை அடங்கும். உண்மையில், வகுப்புவாத வழிபாட்டின் மூலம் உருவாக்கப்படும் சக்திகளைப் பற்றி சிறிது சிந்தித்த பிறகு, பங்கேற்பாளர்கள் பிரார்த்தனை மற்றும் பக்திக்காக ஒரு கூட்டத்தை நடத்துவதைக் கருத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. பாடப்பிரிவின் முதல் இரண்டு பகுதிகளும் பிரார்த்தனை, சுய வளர்ச்சி, சமுதாயத்தின் மேம்பாட்டிற்குப் பங்களிப்பதற்கான முயற்சிகள் ஆகியவற்றிற்கு இடையில் என்ன தொடர்பை ஸ்தாபிக்கின்றன?

______________________________________________________________________________________
______________________________________________________________________________________
______________________________________________________________________________________
______________________________________________________________________________________
______________________________________________________________________________________
______________________________________________________________________________________

2. பங்கேற்பாளர்கள் பிரார்த்தனையின் தன்மை குறித்து என்ன கருத்தாக்கங்களைப் புரிந்துகொள்ள பாடப்பிரிவு உதவுகின்றது?

______________________________________________________________________________________
______________________________________________________________________________________
______________________________________________________________________________________
______________________________________________________________________________________
______________________________________________________________________________________

3. பாடப்பிரிவின் படிப்பாய்வு அகற்ற உதவும், பிரார்த்தனை குறித்து உங்கள் சமூகத்தில் நிலவும் தவறான புரிதல்கள் யாவை?

______________________________________________________________________________________
______________________________________________________________________________________
______________________________________________________________________________________
______________________________________________________________________________________
______________________________________________________________________________________

4. "மனிதன் பிரார்த்தனை நிலையில் வாழ வேண்டும்" என்னும் அப்து'ல்-பஹாவின் கூற்றின் முக்கியத்துவத்தைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். இந்த நிலையை அடைவதற்கான பங்கேற்பாளர்களின் முயற்சிகளுக்கு அதிக பங்களிப்புச் செய்வதாக நீங்கள் நினைக்கும் அந்தப் பத்திகளை பாடப்பிரிவில் அடையாளம் காணவும்.

______________________________________________________________________________________
______________________________________________________________________________________
______________________________________________________________________________________
______________________________________________________________________________________
______________________________________________________________________________________

5. பாடப்பிரிவை முடித்தவுடன், பங்கேற்பாளர்கள் தங்கள் சமூகத்தின் பக்தித் தன்மையை செழுமைப்படுத்துவதற்கு முயன்றிடுவரென எதிர்ப்பார்க்கப் படுகின்றது--உதாரணமாக, ஒரு குடும்பத்தின் உறுப்பினர்களுடன் பிரார்த்தனைகளைப் பகிர்ந்து கொள்ள

வீடுகளுக்குச் செல்வதன் மூலம், தங்கள் கிராமத்தில் அல்லது அண்டைப்புறத்தில் ஒரு பக்தி கூட்டத்திற்கு ஆர்வத்துடன் ஆதரவளிப்பதன் மூலம் மற்றும் இறுதியில் தாங்களாகவே ஒரு பிரார்த்தனைக் கூட்டத்தை ஏற்பாடு செய்வதன் மூலம். இவ்வகையில், பங்கேற்பாளர்கள் தாங்கள் பெற்ற அறிவை அவர்களின் சொந்த வாழ்வில் மட்டுமின்றி, சமூகத்தின் வாழ்விலும் பயன்படுத்துமாறு பாடப்பிரிவு உடனடி அழைப்பை விடுக்கிறது-- இது, அவர்கள் பின்னர் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ள வேண்டிய சேவை செயல்களுக்கு ஒரு அடித்தளத்தை வழங்கும் தொடர்ச்சியான சிறிய நடவடிக்கைகள் மூலம். பங்கேற்பாளர்கள் செயல்பட உதவுவதன் முக்கியத்துவத்தைப் பற்றி சிந்திக்க, கல்விச் செயல்முறையின் ஆரம்பத்தில், உங்கள் சொந்த கிராமத்திலோ அல்லது அண்டைப்புறத்திலோ என்ன நடக்கிறது என்பதைப் பற்றி சிந்தியுங்கள்.

அ. எளிமையானதாக காணப்பட்டாலும், ஒருவருடன் ஒரு பிரார்த்தனையைப் பகிர்ந்துகொள்வது பங்கேற்பாளர்களுக்குச் சுலபமானதல்ல. நண்பர்கள் மற்றும் குடும்பங்களுடன் பிரார்த்தனைகளைப் பகிர்ந்துகொள்ளுதல் பற்றி உங்கள் கிராமத்திலும் அண்டைப்புறத்திலும் என்ன கற்றுக்கொள்ளப்பட்டுள்ளது?

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

ஆ. ஒரு சமூகத்தில் மேன்மேலும் தனிநபர்களால் மேற்கொள்ளப்படும் இந்த எளிய படியானது, வழிபாட்டிற்கும் மேம்பட்ட உரையாடலுக்கும் அதிகரித்து வரும் எண்ணிக்கையிலானோர் ஒன்றிணைக்கப்படும் இடங்களை உருவாக்கிட எவ்வாறு வழிவகுக்கிறது?

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

இ. தனிநபர்களுடனும் குடும்பங்களுடனும் பிரார்த்தனைகளைப் பகிர்ந்து கொள்வதில் நூல் 1-இல் பங்கேற்பாளர்களுக்கு உதவ உங்கள் கிராமத்தில் அல்லது அண்டைப்புறத்தில் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் எவ்வாறு மேம்பாடு காண்கின்றன?

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

ஈ. உங்கள் சமூகத்தின் பக்தித் தன்மையை எவ்வாறு வர்ணிப்பீர்கள்?

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

## பகுதி 18

இப்பொழுது நாம் நூல் 1-இன் மூன்றாவது பாடப்பிரிவின்பால் நமது கவனத்தைத் திருப்புவோம். "பயிற்றுநருக்கான சில சிந்தனைகளில்" இருந்து எடுக்கப்பட்ட பின்வரும் எடுபகுதிகள் ஒவ்வொன்றையும் படித்து, தொடர்ந்து வரும் பயிற்சிகளை மேற்கொள்ளவும்.

> நூலின் மூன்றாவது பாடப்பிரிவான "வாழ்வும் மரணமும்" பற்றிய ஆய்வு, சேவை பாதையில் நடப்பதற்கான அர்ப்பணிப்பை வலுப்படுத்துவதுடன் அதற்கு ஆழமான அர்த்தத்தையும் அளித்திடுமென நம்பப்படுகிறது. இந்த உலகில் சேவை என்பது வாழ்க்கையின் முழுமையான சூழலில் சிறப்பாகப் புரிந்து கொள்ளப்படுகிறது; இது நமது உலகின் படைப்பினங்களுக்கு அப்பாற்பட்டதுடன், கடவுளின் உலகம் முழுவதும் நம் ஆன்மாக்கள் முன்னேறும்போது என்றென்றும் தொடர்கிறது. கல்விச் செயல்முறையில், தொழில்நுட்பப் பயிற்சிக்கு எதிரிடையாக, பங்கேற்பாளர்கள் தாங்கள் என்ன செய்கிறார்கள் என்பதன் அர்த்தம் மற்றும் முக்கியத்துவத்தைப் பற்றி அதிக அளவில் உணர வேண்டும். அத்தகைய உணர்வு வளர்ந்தால் மட்டுமே, அவர்கள் தங்களைச் சுறுசுறுப்பான, பொறுப்பான "உரிமையாளர்களாக" தங்கள் சொந்தக் கற்றலில் பார்க்க வருவர் என அனுபவம் குறிப்பிடுகிறது.

1. ஆன்மாவின் வாழ்க்கை இந்த பௌதீக மட்டத்திற்கும் அப்பால் செல்கின்றது என்னும் நனவானது, ஒரு சேவை பாதையில் நடக்க வேண்டும் என்னும் நமது அர்ப்பணிப்பைப் பலப்படுத்துவதுடன், நாம் இந்தப் பாதையில் நாம் செய்கின்றவற்றிற்கு ஆழமான அர்த்தத்தை அளிக்கின்றது. இந்த யோசனையை மேலும் விரிவுபடுத்தும் பின்வரும் கூற்றுகளைப் படிக்கவும், பின்பு மேலும் சில கூற்றுகளை எழுதவும்.

   — சேவை பாதையில் நாம் நிச்சயமாக பின்னடைவுகளை எதிர்கொள்வோம் என்றாலும், வாழ்க்கை என்பது இந்த உலகத்தின் மாற்றங்கள் மற்றும் வாய்ப்புகளை உள்ளடக்கியிருக்கவில்லை என்னும் அறிவு நாம் நமது முயற்சிகளில் விடாமுயற்சியுடன் இருந்திட உதவுகின்றது.

   — உலக வாழ்க்கை கடவுளை நோக்கிய நமது நித்திய பயணத்தின் ஒரு கட்டம் என்பதை ஞாபகத்தில் வைத்துகொள்வது, நம்மை அவர்பால் நெருக்கமாக ஈர்க்கும் ஆன்மிகப் பண்புகளை மேம்படுத்திக்கொள்வதில் தொடர்ந்து கவனத்துடன் இருந்திடவும், அதன் விதிக்கப்பட்ட இலக்கை நோக்கி மானிடம் முன்னேற்றம் காண்பதற்கு நம்மை அர்ப்பணித்திடவும் உதவுகின்றது.

— ______________________________________________________________

______________________________________________________________

— ______________________________________________________________

______________________________________________________________

— ______________________________________________________________

______________________________________________________________

— ______________________________________________________________

______________________________________________________________

— ______________________________________________________________

______________________________________________________________

— ______________________________________________________________

______________________________________________________________

பாடப்பிரிவின் ஒவ்வொரு பகுதியும் பஹாய் திருவாசகங்களில் இருந்து ஒன்றிலிருந்து மூன்று மேற்கோள்களைக் கொண்டு ஆரம்பித்து, சில பயிற்சிகளுடன் தொடர்கின்றது. இந்தப் பாடப்பிரிவில் வரும் மேற்கோள்களின் மொழி முன்னைய இரண்டில் வருவதைவிட அதிகமாகக் கோரக்கூடியதாகும். நிச்சயமாக, குழுவினர் சிரமமான வார்த்தைகளின் மீது கவனம் செலுத்திடத் தேவையில்லை; ஒவ்வொரு பகுதியிலும் உரைக்கப்படும்--பயிற்சிகள் குறிப்பாக வெளிக்கொணர முயலும்-- மைய யோசனையை ஒவ்வொருவரும் கிரகித்துக்கொள்வதை பயிற்றுநர் உறுதிபடுத்திக்கொள்ள விரும்புவார்.

பாடப்பொருளின் இயல்பைப் பொறுத்தவரை, ஆணித்தரமான உதாரணங்களை ஈடுபடுத்தும் பயிற்சிகள் மிகவும் குறைவாக, ஆங்காங்கு உள்ளன. பெரும்பாலானவை கருத்தியல் மட்டத்திலேயே இயங்கிட முயல்கின்றன. பயிற்சிகள் முன்வைக்கும் சில கேள்விகள் விரைவாகவோ தெளிவான வழியிலோ பதிலளிக்கப்பட முடியாது என்பது கவனிக்கப்பட வேண்டும். அவை பாடப்பொருள் குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன; பங்கேற்பாளர்கள் அத்தகைய கேள்விகள் குறித்து சிந்திக்கும் போது, கற்றல் குறிக்கோள் நிறைவேறிடும்.

2. **பாடப்பிரிவுக்குச் திரும்பிச் சென்று அதன் பகுதிகளை மீளாய்வு செய்யவும். அவை அறிமுகப்படுத்தும் மைய யோசனைகள் சிலவற்றை கீழே வழங்கப்பட்டுள்ள காலியிடங்களில் எழுதவும்.**

3. தெளிவான பதில்கள் தராத கேள்விகளை எழுப்பும் சில பயிற்சிகளை அடையாளம் காணவும். இரண்டு உதாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

— பகுதி 2-இன் முதல் பயிற்சி: "மனித ஆன்மா எப்பொழுது உருவாகின்றது?"

— பகுதி 5-இன் மூன்றாவது பயிற்சி: "சரீர கருவிகளின்றி ஆன்மாவின் செல்வாக்கு மற்றும் செயல் குறித்த உதாரணங்களை நீங்கள் வழங்க முடியுமா?"

— ____________________

— ____________________

— ____________________

**விழிப்புணர்வை ஏற்படுத்திட மட்டுமே முன்வைக்கப்பட்டுள்ள மேற்கண்ட கேள்விகள் மீதான நீண்ட கலந்துரையாடல்களைத் தவிர்ப்பது ஏன் முக்கியம்?**

முதல் பல பகுதிகள், இந்த உலக மட்ட வாழ்வில் ஒரு மனிதனை உருவாக்கும் ஆன்மா மற்றும் உடல் இரண்டுக்கும் இடையிலான உறவின் மீது கவனம் செலுத்துகின்றன. இந்தப் பகுதிகளில் வழங்கப்படும் மைய யோசனை ஆன்மா ஒரு லௌகீக உருபொருளன்று என்பதாகும்; உடலுடனான அதன் தொடர்பு ஒரு கண்ணாடியில் தோன்றும் ஒளியுடன் ஒப்பிடப்படலாம். அதன் மேற்பரப்பை மூடியிருக்கும் தூசியோ, இறுதியில் கண்ணாடி அழிந்திடுவதோ அந்த ஒளியின் பிரகாசத்தைப் பாதிக்கவியலாது. உடலுக்கும் ஆன்மாவுக்கும் இடையிலான தொடர்பு துண்டிக்கப்படும் போது மரணம் அங்கு ஏற்படும் ஒரு நிலை மாற்றமே; அதன் பின், ஆன்மா அதன் சிருஷ்டிகர்த்தாவை நோக்கி நித்தியமாக முன்னேறுகின்றது.

அடுத்து, பாடப்பிரிவு வாழ்க்கையின் நோக்கம் குறித்த கேள்விக்குச் செல்கின்றது— கடவுளை அறிதலும் அவரது பிரசன்னத்தை அடைதலும். இங்கு கலந்துரையாடல்கள் இரண்டு பரந்த கருப்பொருள்களை வலம் வருகின்றன. முதலாவது, இவ்வுலகில் நமது வாழ்க்கைகளின் நோக்கம், இரண்டாவது, மரணத்திற்குப் பின் ஆன்மாவின் பயணம். ஆன்மா கடவுளின் ஓர் அடையாளமாகும். அது அவரது திருநாமங்கள் மற்றும் பண்புகள் அனைத்தையும் பிரதிபலிக்கவல்லது. இருந்தாலும், மனிதனுள் இருக்கும் இந்த உள்ளாற்றல்(potential) மறைந்துள்ளது; அது. காலத்திற்குக் காலம் மானிடத்திற்கு வழிகாட்டிட வருகின்ற கடவுள் அவதாரங்களின் உதவியின் மூலமாக மட்டுமே மேம்பாடு காண முடியும். அவர்கள் வழங்கிடும் ஆன்மிகக் கல்வியின் மூலமாக, நமக்குள் மறைந்து கிடக்கும் பொக்கிஷங்கள் வெளிப்படுத்தப்பட முடியும்.

மரணத்திற்குப் பின் ஆன்மாவின் பயணத்தைப் பொறுத்தமட்டில், பங்கேற்பாளர்களின் பரசீலனைக்காக ஒரு யோசனைகளின் வரிசை வழங்கப்படுகின்றது: கடவுளுக்கு விசுவாசமாக இருப்போர் உண்மையான மகிழ்ச்சியை எய்திடுவர்; நம்மில் எவருமே நமது முடிவு என்னவென்பதை என்றுமே அறியவியலாது, ஆதலால் நாம் ஒருவர் மற்றவரை மன்னித்திட வேண்டும், மற்றவரை விட மேலானவர் என நினைத்திடவும் கூடாது; இவ்வுலகைப் போன்றே வருவுலகில் ஆன்மா தொடர்ந்து முன்னேற்றம் கண்டும், இவ்வுலகில் நாம் மேம்படுத்திக்கொண்ட ஆன்மிக ஆற்றல்கள் அவ்வுலகில் நமக்கு உதவிடும்; விண்ணவ மண்டலங்களில் நமது அன்புக்கினியவர்களை நாம் கண்டுகொள்வோம், இவ்வுலகில் நமது வாழ்க்கைகளை நினைவுகூர்ந்திடுவோம், அத்துடன் புனிதமும் பரிசுத்தமும் மிக்க ஆன்மாக்களுடன் தோழமை கொள்வோம்.

4. மேற்கண்ட மூன்று பத்திகளும் பாடப்பிரிவு குறித்த உங்களின் மீளாய்விலிருந்து நீங்கள் ஏற்கனவே குறித்துக்கொண்ட முக்கிய யோசனைகளை கோடிட்டுக் காட்டுகின்றன. இந்த யோசனைகள் ஆன்மிக உண்மைகளைப் பிரதிநிதிக்கின்றன, மற்றும் பங்கேற்பாளர்கள் தேவையற்ற முடிவுகளுக்கு வருவதன் மூலம் தங்கள் சிந்தனைகளில் குழப்பம் அடையாமல் இருப்பதை பயிற்றுநர் உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். இதை மனதில் கொண்டு, கீழ்காணும் ஜோடிகளைப் பார்க்கவும். அவை ஒவ்வொன்றிற்கும், கலந்துரையாடப்படும் கருத்தாக்கங்கள் குறித்து பங்கேற்பாளர்கள் தெளிவுபெற வேண்டுமானால் பயிற்றுநர் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானியுங்கள். தெளிவாகத் தோன்றக்கூடிய, உங்கள் தேர்வைக் குறித்திடுவதுடன் திருப்தியுறாமல், உங்கள் வாதம் குறித்து சில எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ளவும்.

_______ கலாச்சாரத்தில் நிலவும், பல வேளைகளில் யூகவாதங்களுக்கான கருப்பொருளாக இருக்கும் வாழ்வு மற்றும் மரணம் பற்றிய குறிப்பிட்ட வேறு சில யோசனைகளை கலந்துரையாடலுக்குள் கொண்டுவரவும்.

_______ கலாச்சாரத்தில் நிலவும், பல வேளைகளில் யூகவாதங்களுக்கான கருப்பொருளாக இருக்கும் வாழ்வு மற்றும் மரணம் பற்றிய குறிப்பிட்ட வேறு சில யோசனைகளில் இருந்து விலகியிருக்கவும்.

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

_______ ஒரு பங்கேற்பாளர் எழுப்பிய கேள்வி மறுபிறப்பு போன்ற, தவறான யோசனைகளுடன் தொடர்புகொண்டுள்ளதால் அதை நிராகரித்தல்

_______ நீண்ட கலந்துரையாடலைத் தவிர்க்கும் அதே வேளை, ஒரு பங்கேற்பாளர் எழுப்பிய மறுபிறப்பு போன்ற, தவறான யோசனைகளுடன் தொடர்புகொண்டுள்ள கேள்வியைத் தெளிவுபடுத்துதல்

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

_______ ஆன்மாவின் வாழ்வின் ஆரம்பத்தைக் குறிக்கும் நேரத்தைப் பற்றிய ஒரு கேள்விக்கு சட்டம், மருத்துவம் இரண்டும் சார்ந்த பல தொடர்புள்ள கருப்பொருள்களை ஆய்வு செய்வதன் மூலம் பதிலளிக்கவும்

_______ ஆன்மாவின் வாழ்வின் ஆரம்பத்தைக் குறிக்கும் நேரத்தைப் பற்றிய ஒரு கேள்விக்குப் பதிலளிப்பதில் திருவாசகங்களில் இருந்து ஒரு பொருத்தமான மேற்கோளின்பால் பங்கேற்பாளர்களின் கவனத்தை மீண்டும் திருப்பவும்

________________________________________________________________________

________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

இறுதியாக, உங்களுக்குத் தெரிந்தபடி, இரண்டாவது பாடப்பிரிவில் அறிமுகப்படுத்தப்பட்ட இரட்டை தார்மீக நோக்கம் குறித்த கருத்தாக்கத்தை பாடப்பிரிவின் கடைசிப் பகுதி பங்கேற்பாளர்களுக்கு நினைவூட்டுகின்றது. ஆன்மாவின் முன்னேற்றம் குறித்து அவர்கள் அடைந்துள்ள நுண்ணறிவுகளின் அடிப்படையில், இந்த நோக்கத்தின் இரண்டு அம்சங்களின்பால் கவனம் செலுத்துவதன் முக்கியத்துவத்தைப் பற்றி பிரதிபலிக்குமாறு அது கேட்டுக்கொள்கின்றது. அவர்களின் கலந்துரையாடலில் பின்வரும் கருப்பொருள்களைச் சேர்ந்துக்கொள்ளுமாறு அவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்:

1. ஆன்மிகப் பண்புகளை உருவாக்கிக்கொள்தல்
2. கடவுளின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிதல்
3. மனிதகுல பொதுநலனுக்குப் பங்களித்தல்
4. சேவை பாதையில் முன்னேறுதல்

பங்கேற்பாளர்கள் மேற்குறிப்பிட்ட கருப்பொருள்களைச் சுற்றி ஒரு வளமான கலந்துரையாடலை மேற்கொள்வதை பயிற்றுநர் உறுதிபடுத்திக்கொள்வது ஏன் முக்கியமாகின்றது?

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

## பகுதி 19

நூல் 1, “நான் ஒரு சேவை பாதையில் நடக்கின்றேன்” என்னும் வாக்கியத்தில் உள்ள “நான்” என்னும் சொல்லின் முக்கியத்துவத்தைப் பற்றி பிரதிபலித்திட நம்மை அழைக்கின்றது என்பதை நாம் ஏற்கனவே கண்டுள்ளோம். அது பெரும்பாலும் அடையாளம் குறித்த விஷயத்தின்பால் கவனம் செலுத்திய போதிலும், நாம் ஏற்கனவே விவாதித்துள்ளது போன்று, அது அதைப் பயில்வோரில் சில நடவடிக்கைகளைத் தூண்டிவிட வேண்டும்-- மிக முக்கியமாக, அவர்களின் சமூகத்தில் உள்ள குடும்ப உறுப்பினர்களுடன் பிரார்த்தனைகளைப் பகிர்ந்துகொள்வது. *சேவைக்காக எழுதல்* என்னும் நூல் 2, இந்தப் பாதையில் அடுத்த சில அடிகளை எடுத்து வைக்கவும் சேவையில் ஈடுபடுவதற்கான அவர்களின் திறனாற்றலை மேம்படுத்தவும் உதவிடும் நோக்கம் கொண்டுள்ளது.

“பயிற்றுநருக்கான சில சிந்தனைகள்” என்னும் நூல் 2-இன் அறிமுக குறிப்புகள், அது கவனம் செலுத்த விரும்பும் செயல்திறன்களைப் பற்றியும் அதன் மூன்று பாடப்பிரிவுகளின் குறிக்கோள்கள் பற்றியும் விவாதிக்கின்றது. பயிற்சிப்பாடத்தின் வழி ஒரு குழுவை வழிநடத்துவதற்குத் தயாராவதில்

**இந்த அறிமுகத்தை நீங்கள் மிகவும் விரிவாக படிப்பாய்வு செய்திட விரும்பிய போதிலும், இங்கு நமது நோக்கத்திற்காக, நூலின் பொதுவான நோக்கம் மற்றும் அதன் கட்டமைப்பை வர்ணிக்கும் பின்வரும் எடுபகுதியை படிக்குமாறு நீங்கள் ஊக்குவிக்கப்படுகின்றீர்கள்:**

> ரூஹி பயிற்சிக்கழகத்தினால் வழங்கப்படும் பிரதான வரிசை பயிற்சிப்பாடங்களில் இரண்டாவதான இந்த நூல், அர்த்தமுள்ளதும் ஊக்குவிப்பதுமான உரையாடலுக்குப் பங்களித்திட உதவும் செயல்திறன்கள் மீது கவனம் செலுத்துகின்றது. நூல் கவனம் செலுத்தும் குறிப்பிட்ட சேவை செயல் மூன்றாவது பாடப்பிரிவில் விவரிக்கப்படுகின்றது. வகுப்புவாத பந்தங்களைப் பிளந்துகொண்டிருக்கும் சக்திமிகு ஆற்றல்கள் உள்ள ஓர் உலகில், சமுதாய வாழ்விற்கு மையமாகவுள்ள கருப்பொருள்களை ஆய்வு செய்வதற்கு நண்பர்களையும் அண்டையர்களையும் அவர்களின் இல்லங்களிலேயே காணச் செல்லும் நடைமுறை, கலாச்சாரத்தின் ஓர் முக்கிய அம்சமாகினால், அதிகரித்து வரும் தனிமையினால் உருவாக்கப்படும் நோய்களை அது தீர்க்க முடியும். இதனால் உருவாக்கப்படும் தோழமையின் பந்தங்கள், துடிப்பானதும் நல்லிணக்கமானதுமான சமூகங்களை கட்டமைக்கும் செயல்முறையை வலுப்படுத்துகின்றன என பாடப்பிரிவு பரிந்துரைக்கின்றது.
>
> தேவைப்படும் நிர்வாகம் சார்ந்த ஸ்தாபனங்கள் மற்றும் முகவாண்மைகளினால் ஆதரிக்கப்பட்ட, ஓர் அர்ப்பணமிக்க நண்பர்களின் மையக்கருவினரை ஈடுபடுத்தும் ஓர் அண்டைப்புறம் அல்லது கிராமத்தில் உள்ள குடும்பங்களுக்கு வருகையளிப்பதற்கான ஒரு நிலையான திட்டம், ஓரளவு ஒழுங்கமைப்பைக் கோருகின்றது. நூலின் வழி ஒரு குழுவினரை வழிநடத்துவதில், பங்கேற்பாளர்கள் இத்தகைய ஒரு நடைமுறையில் உள்ள முயற்சியில் பங்கேற்பதற்கு ஆயத்தமாக்கப் படுகின்றனர் என்பதை பயிற்றுநர் மனதில் கொள்ள வேண்டும். அவர்கள் பயிற்சியின் ஓர் அங்கமாக ஏற்பாடு செய்யப்படும், வாழ்க்கை முழுவதுமான சேவையின் ஒரு முக்கிய அம்சமான விஜயங்கள், ஒவ்வொரு வருடமும் அதில் பங்குபெறுவதற்கான ஒரு கடப்பாட்டிற்கு வழிவகுக்க வேண்டும்.
>
> ஆன்மீக மற்றும் சமுதாய முக்கியத்துவம் உடைய கருப்பொருள்களை ஆராயும் வெளிப்படையான நோக்கத்துடன் வீடுகளுக்கு விஜயம் செய்யும் நடைமுறை தெளிவாகவே ஒரு சமூகத்தின் கலாச்சாரத்தை வளப்படுத்துகின்றது. வீட்டில், பணிமனையில், பள்ளியில், மற்றும் சந்தையில் நிகழும் பல முறைசாரா கலந்துரையாடல்களும் இதன் தொடர்பில் சமமான முக்கியத்துவம் உடையவை. அவ்வப்போது நிகழும் அன்றாட உரையாடலில் ஆன்மிக கோட்பாடுகளை அறிமுகப்படுத்துவது, கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒரு திறமையாகும். அதன் மேம்பாட்டின் மீது இரண்டாவது பாடப்பிரிவு கவனம் செலுத்துகின்றது, இதன்வழி மூன்றாவது பாடப்பிரிவில் மேற்கொள்ளப்படும் படிப்பாய்வுக்கான அடித்தலத்தை இடுகின்றது.
>
> நண்பர்களுடனும் அண்டையர்களுடனும் நாம் மேற்கொள்ளும் உரையாடல்கள் உற்சாகமூட்டுவதாக இருக்க வேண்டுமானால், அவர்களுடனான நமது ஊடாடல்கள் (interactions) மகிழ்ச்சியூட்டுவதாக இருக்க வேண்டும். முதல் பாடப்பிரிவான, “போதிப்பதில் மகிழ்ச்சியில்” இந்தக் கருப்பொருள் மீதே கவனம் செலுத்தப்படுகின்றது. சாரத்தில், ரூஹி பயிற்சிக்கழகத்தினால் பரிந்துரைக்கப்படும்

சேவை செயல்கள் அனைத்தும், பஹாவுல்லாவின் திருவெளிப்பாடு என்னும் சமுத்திரத்தில் நாம் கண்டறியக்கூடிய தெய்வீக விவேகம் என்னும் முத்துக்களை பிறருடன் பகிர்ந்துகொள்வதை உள்ளடக்கியுள்ளது. முதல் பாடப்பிரிவின் படிப்பாய்வு இந்த முயற்சியில் உள்ளடங்கியுள்ள மகிழ்ச்சி குறித்த விழிப்புணர்வை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பங்கேற்பாளர்கள் பல பகுதிகளினூடே கடவுள் திருமொழியைப் பற்றியும் அதைப் பிறருடன் பகிர்ந்துகொள்வது எத்தகைய ஆசிகள் மிக்கது என்பதைப் பற்றியும் சிந்திக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இச்செயலிலிருந்து, நாம் சேவை பாதையில் நடக்கும்போது நமது அடிகளை விரைவுபடுத்தும் மகிழ்ச்சி உருவாகின்றது என பாடப்பிரிவு பரிந்துரைக்கின்றது.

மேலே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது போன்று, இரண்டாவது பாடப்பிரிவான "உற்சாகமூட்டும் உரையாடல்கள்" வெவ்வேறு சமுதாய இடவெளிகளில் அர்த்தமுள்ள உரையாடல்களில் ஈடுபடுவதற்கு இன்றியமையாத சில அறிவு, திறன்கள், மற்றும் பழக்கங்கள் சம்பந்தப்பட்டதாகும். பங்கேற்பாளர்கள் அப்துல்-பஹாவின் உரைகளை அடிப்படையாகக் கொண்ட சமயத்தின் பல்வேறு கோட்பாடுகள் குறித்த பல குறுகிய அறிக்கைகளைப் படிப்பாய்வு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அவ்வாறு செய்வதில், அவர்கள் அப்துல்-பஹாவின் விளக்கங்களின் பயனைப் பெற கற்றுக்கொள்வதுடன், இவ்வழியில், பஹாவுல்லாவின் போதனைகளின் முக்கியத்துவம் மற்றும் தாக்கங்களைச் சிறப்பாகப் புரிந்துகொள்ளவும் அவற்றைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளும் அவர்களின் முயற்சிகளில் அப்துல்-பஹாவின்பால் திரும்பிடும் ஒரு போக்கைக் கடைப்பிடிக்கவும் செய்கின்றனர். பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வது எவ்வாறு அர்த்தமுள்ள மற்றும் உற்சாகமூட்டும் உரையாடல்களை ஆரம்பிக்கவும் நிலைநிறுத்தவும் தேவைப்படும் செயல்திறன்களைப் பங்கேற்பாளர்களுள் பலப்படுத்துகின்றன?

அ. ஒவ்வொரு அறிக்கையிலும் உள்ள யோசனைகளின் வரிசையை அடையாளங் கண்டும் பின்னர் அவற்றை எளிதாகக் கூற முடியும் வரை குழுவில் அவற்றை ஒருவர் மற்றவருக்கு மாறி மாறி கூற வேண்டும்.

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

ஆ. நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள், மற்றும் அறிமுகமானவர்களுடனான அவர்களின் ஊடாடல்கள் (interactions) பற்றி சிந்தித்தும் அவர்களின் சிந்தனைகளை ஆக்கிரமிக்கும், அறிக்கைகளில் உள்ள யோசனைகளை பகிர்ந்துகொள்வதற்கான வாய்ப்புகளை வழங்கிடும், சில தலைப்புகளை அடையாளம் காணுதல்

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

இ. நூலின் படிப்பாய்வு இன்னும் செயல்பாட்டில் இருக்கும் போது, ஒன்று அல்லது இரண்டு அறிக்கைகளை தேர்ந்தெடுத்து, அவற்றில் அடங்கியுள்ள யோசனைகள் குறித்து சில நண்பர்களுடன் அல்லது குடும்ப உறுப்பினர்களுடன் உரையாடுவது.

_______________________________________________________________________________________

_______________________________________________________________________________________

_______________________________________________________________________________________

_______________________________________________________________________________________

நீங்கள் ஒன்றாகப் படிப்பாய்வு செய்து வரும் குழுவுக்கு, நூல் 2-இன் இரண்டாவது பாடப்பிரிவில் அறிமுகப்படுத்தப்பட்ட சில ஆன்மிக கோட்பாடுகளை இயல்பான முறையில் உங்கள் உரையாடல்களில் எவ்வாறு உங்களால் இணைத்துக்கொள்ள முடிந்தது என்பதைத் தெரிவிக்க விரும்பலாம்.

மூன்றாவது பாடப்பிரிவைப் பொறுத்தவரை, அது நூல் 2-இன் கருப்பொருளான சேவை செயல் மீது கவனம் செலுத்துகின்றது—சமூகத்தின் வாழ்வுக்கு இன்றியமையாக் கருப்பொருள் பற்றி கலந்துரையாட நண்பர்கள் மற்றும் அண்டையர்களைக் காண விஜயம் செய்வதாகும். மூன்று விதமான உரையாடல்கள் கோடிட்டுக் காட்டப்படுகின்றன. நூலின் படிப்பாய்வின் மூலம் பாடப்பிரிவின் பெரும்பகுதி இவற்றுள் முதலாவதற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது என்பது உங்களுக்குத் தெரியும். சமயத்தைப் பற்றிய அவர்களின் அறிவை ஆழப்படுத்த உதவும் முதன்மை நோக்கத்துடன், குடும்பங்களுக்கு விஜயம் செய்யும் முறையான திட்டத்தின் ஒரு பகுதியாக, குடும்ப உறுப்பினர்களுடன் விவாதிக்கக்கூடிய கருப்பொருள்களின் வரிசையை இது விரிவுபடுத்துகிறது. இரண்டாவது வகை உரையாடலுக்கான உள்ளடக்கமானது, அவர்களின் ஆன்மிகக் கல்விக்காக வகுப்புகளிலும், குழுக்களிலும் இளைஞர்களின் பெற்றோரை தொடர்ந்து சந்திப்பதில் உலகளவில் வளர்ந்து வரும் அனுபவத்திற்கு பதிலிறுக்கின்றது–இது இப்போது சமூக நிர்மாணிப்பு முயற்சியின் ஒருங்கிணைந்த அம்சமாகும். இறுதியாக, பாடப்பிரிவு இளைஞர்களுடனான உரையாடல்களில் இணைக்கப்பட வேண்டிய யோசனைகளின் வரிசையை கோடிட்டுக் காட்டுகிறது. இந்த உரையாடல்கள் சேவையின் வழிகளைக் கண்டறியும் இளைஞர்களின் விருப்பத்தை நிவர்த்தி செய்கின்றன. இத்தகைய உரையாடல்கள், தேவையான திறன்களை வளர்த்துக்கொள்வதற்கான வழிமுறையாக, பயிற்சிக்கழக பயிற்சிப்பாடங்களில் சேருவதற்கு இளைஞர்களை வழிநடத்துகிறது. பின்வரும் கேள்விகளை உங்கள் பிற குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடவும்.

அ. புத்தகம் 2-ஐப் படிப்பவர்களில் பலர், குழந்தைகள் மற்றும் இளைய இளைஞர்களுக்கான கல்வித் திட்டங்களின் அணுகுமுறைகள் மற்றும் அடிப்படைக் கருத்துகளைப் பற்றிய தங்கள் புரிதலை மேலும் ஆழப்படுத்திக் கொள்வார்கள், அத்துடன் அவர்களுள் சிலர் நூல்கள் 3 மற்றும் 5-ஐப் படிக்கும்போது, இந்த விசேஷ சேவை செயல்களை மேற்கொள்ள முடிவு செய்வார்கள். ஆரம்பத்திலேயே நூல் 2-ல் இந்தத் திட்டங்களின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்வதும், ஆசிரியர்கள் மற்றும் அனிமேட்டர்களுடன் பெற்றோருடன் உரையாடல்களில் ஈடுபடுவதும், அங்கு பரிந்துரைக்கப்பட்டபடி, பங்கேற்பாளர்களின் சேவை பாதையில் அடிகளை விரைவுபடுத்துவது எப்படி?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

அ. சமூகத்திற்கு சேவை செய்ய ஆர்வமுள்ள இரண்டு இளைஞர்களான, அலெஜாண்ட்ரா, பீட்ரைஸ் இருவருக்கும் இடையே நடக்கும் உரையாடலின் உள்ளடக்கத்தைக் கற்றுக்கொள்வது, தங்கள் சேவை பாதையில் செல்பவர்களுக்கு எப்படி உதவியாக இருக்கும்?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

இ. இல்லங்களுக்குச் சென்று அவற்றின் உறுப்பினர்களை அர்த்தமுள்ள மற்றும் உற்சாகமளிக்கும் உரையாடலில் ஈடுபடுத்தும் பழக்கம் அண்டைப்புறம் அல்லது கிராமத்தின் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக மாறுவதால், சமூக வாழ்க்கையின் ஆன்மிக மற்றும் சமூகக் கட்டமைப்பு வலுவடைகிறது. மூன்றாவது அலகில் (யூனிட்டில்) அறிமுகப்படுத்தப்பட்டவற்றிலிருந்து தொடங்கி, சமூக நிர்மாணிப்புச் செயல்முறைக்குச் பங்களிக்கும் வகையில் சேவை பாதையில் நடப்பவர்களின் திறனாற்றலை இல்லங்களில் உள்ள உறுப்பினர்களுடன் ஆன்மிகக் கருப்பொருள்களை பகிர்ந்து கொள்ளக் கற்றுக்கொள்வது எவ்வாறு குறிப்பிடத் தக்க வழிகளில் அதிகரிக்கின்றது?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

இப்பொழுது மூன்றாவது பாடப்பிரிவாக இருப்பதன் உள்ளடக்கத்தை ரூஹி பயிற்சிக்கழகம் முதன் முதலில் வழங்கத் தொடங்கிய போது, இல்ல விஜயங்கள் மேற்கொண்ட சிலர் தங்கள் முயற்சிகளில் விடாமுயற்சியுடன் இருந்தனர், அதே நேரம் பிறர் விரைவில் நின்றுவிட்டனர். விடாமுயற்சியுடன் இருந்தோர் உடனடி விளைவுகளைச் சாராமல் போதிக்கும் செயலிலேயே மகிழ்ச்சியைக் கண்டனர் என்பதிலேயே வேறுபாடு அடங்கியிருப்பதாகத் தோன்றியது. நூல் 2 - இன் முதல் பாடப்பிரிவு இந்த விஷயத்தை கவனிப்பதற்காக வடிவமைக்கப்பட்டது. அது பின்வரும் யோசனைகள் வரிசையைப் பின்பற்றுகின்றது. யோசனைகளைப் படித்து ஒரு பயிற்றுநராகப் பணிபுரியும் உங்கள் முயற்சிகளின் அடிப்படையில் அவற்றைப் பற்றி சிந்தியுங்கள். பின்னர், இந்த

சேவை செயல் உங்களுக்கு எவ்வழியில் ஒரு நிலையான மகிழ்ச்சிக்கான மூலாதாரமாக இருக்கும் என்பதை விளக்குவதற்கு ஒரு சிறு பத்தி எழுதவும்.

- அதன் ஆழத்தில் தெய்வீக வழிகாட்டல் என்னும் முத்துக்கள் வீற்றிருக்கும் பஹாவுல்லாவின் திருவெளிப்பாட்டை ஒரு சமுத்திரத்திற்கு ஒப்பிடலாம். பஹாவுல்லாவின் திருவெளிப்பாட்டில் வீற்றிருக்கும் விவேக முத்துகளை நாம் கண்டறிந்து கொண்டும் அவற்றைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளும் போது, நமது இதயங்கள் மகிழ்ச்சியால் நிரம்புகின்றன.
- நாம் செய்யும் முயற்சியின் விகிதத்திற்கே பஹாவுல்லாவின் திருவெளிப்பாடு என்னும் சமுத்திரத்தில் உள்ள பயன்களை நாம் பெற முடியும்.
- பஹாவுல்லாவின் திருவெளிப்பாடு என்னும் சமுத்திரம் வியப்பளிக்கும் வகையில் நமக்கு அருகில் உள்ளது. நாம் விரும்பினால், கண் சிமிட்டும் நேரத்திற்குள் அதன் கரைகளை அடையலாம்.
- பஹாவுல்லாவை கண்டறிதல் என்னும் அருட்கொடையை பெற்றபின், அவரது திருவெளிப்பாடு என்னும் சமுத்திரத்திலிருந்து நாம் பயன் பெற்று, அதன் தெய்வீக வழிகாட்டல் என்னும் முத்துக்களை பிறருடன் தாராளமாகவும் நிபந்தனையின்றியும் பகிர்ந்துகொள்கின்றோம்.
- நாம் சேவை பாதையில் முன்னேறும் போது கடவுள் திருமொழி நிலையான உத்வேகத்திற்கான மூலாதாரமாக இருந்திடும். நாம் பிறருடன் கடவுள் திருமொழியைப் பகிர்ந்துகொள்கின்றோம், ஏனெனில் அதற்கு மனித இதயங்கள் மீது விசேஷ சக்தியும் விளைவும் உள்ளது.
- நமது அன்றாட வாழ்க்கையில் நாம் ஈடுபடும் எல்லா நடவடிக்கைகளிலும், பஹாவுல்லாவின் திருவெளிப்பாடு என்னும் சமுத்திரத்தில் மறைந்துள்ள முத்துகளைக் கண்டறிய பிறருக்கு உதவும் நடவடிக்கைகள் விசேஷ ஆசீர்வாதங்களைக் கொண்டுள்ளன.
- நாம் சேவையின் மூலம் பெறுகின்ற மகிழ்ச்சி அச்செயலிலேயே அடங்கியுள்ளது. நாம் விளைவுகள் மீது அதிக பற்றுக் கொண்டிருந்தாலோ பாராட்டு அல்லது குறைகூறலினால் பாதிக்கப்பட்டாலோ, நாம் இந்த மகிழ்ச்சியை இழந்துவிடுகின்றோம். கழிப்புமிகு சேவைக்கு பற்றின்மை அவசியமாகும்.
- நாம் முயற்சி செய்யவும் தியாகங்கள் புரியவும் விரும்ப வேண்டும். தியாகம் என்பது கீழான ஒன்றை மேலான ஒன்றிற்காக தியாகம் செய்வது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யும் போது, நாம் ஆன்மிக மகிழ்ச்சியை எய்துகின்றோம் மற்றும் நமது ஆன்மிக மேம்பாட்டை அதிகமாக்கிக் கொள்கின்றோம்.
- சேவை பாதையில் நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் தேவைப்படும் முயற்சியின் தீவிரம் மற்றும் தரம் இரண்டின்பாலும் நாம் கவனம் செலுத்த வேண்டும்.
- நன்னம்பிக்கையும் நன்றியுணர்வும் சேவை பாதைக்கு மிகவும் அடிப்படையான இரண்டு மனப்பான்மைகளாகும்.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

இப்பொழுது, மேற்கண்ட உங்கள் ஆய்வுகளின் வெளிச்சத்தில், நூல் 2-இன் பயிற்றுநருக்கான அறிமுகக் குறிப்புகளிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் எடுபகுதிகளைப் படிக்கவும்.

> இந்த நூல்கள் வரிசையில் விவரிக்கப்படும் சேவைச் செயல்கள், ஒரு சமூகத்தின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு மையமாக இருப்பினும், அவை யாவற்றுக்கும் மேலாக படிப்பாய்வு மற்றும் செயல்பாட்டின் மூலம் தனிநபர் திறனாற்றலை அதிகரிக்கும் நோக்கம் கொண்ட ஒரு செயல்முறையின் அம்சங்களாகும். ஒவ்வொரு நூலாகப் பலக்கியத்தில் (complexcity) உயரும் இந்த செயல்கள், ஒன்று மற்றொன்றிமீது கட்டமைக்கின்றன என்பதை ஒவ்வொரு பயிற்றுநரும் உணர வேண்டும். ஒவ்வொரு சேவை செயலையும் விளைவுத்திறத்துடன் மேற்கொள்ளக் கற்பது அச்செயல்களைத் தொடர்ந்து வரக்கூடிய செயல்களுக்குத் தேவையான திறனாற்றலுக்கு முக்கியம் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த நூலில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது போன்று ஓர் இல்லத்திற்கான பல விஜயங்களினூடே நடைமுறையிலிருக்கும் ஓர் உரையாடலை நீட்டிப்பது, நூல் 1-ல் ஊக்குவிக்கப்படும் நடவடிக்கையைவிட—சொந்தமாகவோ வேறு சிலருடன் சேர்ந்தோ ஒரு வழிபாட்டுக் கூட்டத்தை நடத்துதல்--தெளிவாகவே அதிக தேவைகள் கொண்ட ஒன்றாகும்.

> மேலும், மிகவும் சிக்கலான சேவைச் செயல்களை முன்னெடுத்துச் செல்வதற்கு, பங்கேற்பாளர்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன்களில் மேம்பாடு காண்பது இன்றியமையாததாக இருக்குமென்பதைப் பார்ப்பது கடினமன்று.

நூல் 2-இல் குறிப்பிடப்பட்டுள்ள திறன்கள்--அர்த்தமுள்ள மற்றும் மேம்படுத்தும் உரையாடலுக்கு பங்களிக்க உதவும் திறன்கள்--பங்கேற்பாளர்கள் நூல் 1 பற்றிய அவர்களின் ஆய்வின் மூலம் பெறும் அறிவு மற்றும் திறன்கள் மற்றும் அதிலிருந்து வெளிப்படும் செயல்பாடுகளில், குறிப்பாக ஒரு பிரார்த்தனையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் செயலில் அவர்களின் ஈடுபாட்டை எவ்வாறு உருவாக்குவது என்பதை உங்கள் குழுவுடன் விவாதிக்கவும்..

## பகுதி 20

அடுத்து, பயிற்சிப்பாடங்களின் வரிசைப்படி குறிப்பிடப்படும் சேவைச் செயல் குழந்தைகளின் ஆன்மிகக் கல்வி குறித்ததாகும். நூல் 3-ஆன, *குழந்தைகள் வகுப்புகளுக்குப் போதித்தல்*, கிரேட் 1, இந்த முயற்சியில் நுழைய விரும்புவோருக்குத் தேவையான சில அறிவு, திறன்கள் மற்றும் திறமைகள் மற்றும் குணங்கள் மற்றும் மனப்பான்மைகளில் கவனம் செலுத்துகிறது.

நிச்சயமாகவே, நூலைப் படிக்கும் பலர், சேவை பாதையில் உறுதியாக நிலைநிறுத்தப்பட்டாலும், அத்தகைய வகுப்புகளுக்குக் கற்பிக்க விரும்ப மாட்டார்கள். இருப்பினும், இளையோரின் ஆன்மிகக் கல்விக்கான அக்கறை அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. குடும்ப உறுப்பினர்களாகவும், சமூகத்தின் உறுப்பினர்களாகவும், சமயத்தின் ஸ்தாபனங்கள் மற்றும் முகவாண்மைகளின் உறுப்பினர்களாகவும், நாம் அனைவரும் இந்த மிக முக்கியமான பொறுப்புக்கு கவனம் செலுத்த வேண்டும். அதன் முதன்மை நோக்கத்திற்கும் கூடுதலாக, நூல் 3 அத்தகைய கூட்டு விழிப்புணர்வை வலுப்படுத்திட எதிர்ப்பார்க்கிறது. இதைக் கருத்தில் கொண்டு, "பயிற்றுநருக்கான சில எண்ணங்கள்" என்னும் பகுதியிலிருந்து பின்வரும் எடுபகுதியைப் படித்து, உங்கள் குழுவின் மற்ற உறுப்பினர்களுடன் விவாதிக்கவும்:

> அவர்களின் நூல் 2-இன் இரண்டாம் பாடப்பிரிவின் படிப்பாய்விலிருந்து, கல்வி என்பது மூன்று விதமானது என்னும் அப்துல்-பஹாவின் அறிக்கைகளின்பால் ஏற்கனவே பரிச்சயப்பட்டிருப்பர்: லௌகீகம், மனிதம், மற்றும் ஆன்மிகம். தனிநபரின் மேலான இயல்பாகிய ஆன்மிக இயல்பின் உதவியின் மூலம் பிந்தைய வகை கல்வியைப் பற்றிய அவர்களின் புரிதலை மேலும் மேம்படுத்துவதற்கு இங்கே அவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும். பஹாய் சமயத்தில் கருக்கொள்ளப்பட்ட குழந்தைகளுக்கான ஆன்மிகக் கல்வியானது சில சமயங்களில் மத போதனையுடன் தொடர்புடைய மதப்பிடிவாத நம்பிக்கைகளைத் திணிப்பதில் இருந்து அடிப்படையில் வேறுபட்டது என்பது ஆரம்பத்தில் இருந்தே தெளிவாக இருக்க வேண்டும். அது, அறிவின்பால் விருப்பம், கற்றலின்பால் ஒரு திறந்த மனப்பான்மை,

மற்றும் யதார்த்தத்தை ஆராய்வதற்கு ஒரு நிலையான ஆவலைப் பேணி வளர்ப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

இளையோரின் கல்வியில், மதக் கோட்பாடுகளை ஒதுக்கித் தள்ள முடியாது என்பதை ஒப்புக்கொள்வது சம அளவில் முக்கியமானது. ஏனெனில், அவ்வாறு செய்தல், அவர்களின் எண்ணங்கள், செயல்கள் ஆகியவற்றின் மீது ஆளுமை செலுத்தும் தெய்வீக உண்மைகள் மற்றும் ஆன்மிகக் கோட்பாடுகளின் அணுகலை அவர்களுக்கு மறுப்பதாகிவிடும். சமூகத்துடனான அவர்களின் பரஸ்பர ஊடாடல்களிலிருந்து இளைஞர்கள் சுதந்திரமான தேர்வுகள் மூலம் தங்களுடைய சொந்த செந்தரங்களையும் உலகக் கண்ணோட்டங்களையும் பெறுவதே சிறந்தது என்னும் கூற்றை ஆதரிப்பவர்கள், அரசியல், பொருளாதார மற்றும் கலாச்சார சக்திகள் அவற்றின் சொந்த நலன்களுக்கு அனுகூலமான நம்பிக்கை மற்றும் நடத்தை வடிவங்களை எவ்வளவு தீவிரமாக ஊக்குவிக்கின்றன என்பதைப் பாராட்டவில்லை. ஆனால் இது அவ்வாறு இல்லாவிட்டாலும், தனிநபரின் ஆன்மிக இயல்பைப் பேணி வளர்க்கும் கல்வி இல்லாத நிலையில் அடுத்தடுத்த தலைமுறைகள் ஒரு சிறந்த உலகத்தை உருவாக்க முடியுமென கருதுவதற்கு எந்தக் காரணமும் இல்லை. தெய்வீகக் கல்வியாளரின் வழிகாட்டுதலைப் பெறாத மனிதகுலம் குழப்பம், அநீதி மற்றும் துன்பத்திற்கு மேற்பட்டு வேறு எதையும் உருவாக்க முடியாது.

சமயத்தில் கருக்கொள்ளப்பட்ட குழந்தைகளின் ஆன்மிகக் கல்விக்கும், மதப்பிடிவாத சமய போதனைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதை மேலே உள்ள எடுபகுதி விளக்குகின்றது. ஆனால் இந்த நாளுக்கான மனிதகுலத்தின் சர்வலோக கல்வியாளரான பஹாவுல்லாவின் திருவெளிப்பாட்டில் காணப்படும் தெய்வீக உண்மைகள் மற்றும் ஆன்மிகக் கோட்பாடுகளில் இருந்து இத்தகைய கல்வி பயன் பெறுகிறது என்பதையும் இது தெளிவுபடுத்துகிறது.

அ. மதப்பிடிவாத போதனையின் சில குணாதிசயங்கள் யாவை—மதம் சார்ந்த களத்திற்கு மட்டும் பிரத்தியேகமாக இல்லாத குணாதிசயங்கள்?

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

ஆ. கடவுள் திருமொழியை மனனம் செய்தல் மதப்பிடிவாத ஒன்றென வாதிடுவோர்பால் நீங்கள் எவ்வாறு பதில்வினையாற்றுவீர்?

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

இ. தெய்வீக வெளிப்பாட்டில் அடங்கியிருக்கும் ஆன்மிக உண்மைகள் மற்றும் கோட்பாடுகளின் அணுகல் குழந்தைகளுக்கு மறுக்கப்படும் போது, உலகின் பல்வேறு மக்களின் கலாச்சாரங்களை ஊடுருவி வரும் தீவிர லௌகீகவாதங்களின் மதிப்புகளை அவர்கள் சுலபத்தில் உள்வாங்கிக்கொள்ள முடியும். இந்த மதிப்புகளில் சில யாவை?

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

ஈ. நீங்கள் மேலே குறிப்பிட்டுள்ள மதிப்புகள் எவ்வாறு ஒரு மனிதனின் ஆன்மிக இயல்பின் அபிவிருத்தியைக் கீழறுக்கின்றன?

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

குழந்தைகளின் ஆன்மிகக் கல்விக்கான ரூஹி பயிற்சிக்கழகத்தின் திட்டம் இளைஞர்களுக்குப் பாராட்டத்தக்கப் பாத்திரத்தையும் நேர்மையான நடத்தையையும் உருவாக்க உதவுவதில் அக்கறை கொண்டுள்ளது என்பதை நூல் 3-இன் இரண்டு பாடப்பிரிவுகள் பற்றிய உங்கள் சொந்த ஆய்விலிருந்து நீங்கள் அறிவீர்கள். ஒரு பாராட்டத்தக்க குணத்தை வேறுபடுத்திக் காட்டும் மனப்பான்மைகள் மற்றும் பழக்கவழக்கங்கள், நிச்சயமாக, அவை ஆன்மிக குணங்களின் வெளிப்பாடுகளாக இருந்தால் மட்டுமே வேரூன்றும், மற்றும் கிரேட் 1-க்கான பாடங்கள், அதற்கேற்ப, ஐந்து மற்றும் ஆறு வயது குழந்தைகளிடம் அத்தகைய குணங்களை வளர்ப்பதில் கவனம் செலுத்துகின்றன. நூலின் முதல் பாடப்பிரிவில் எடுத்துக் கொள்ளப்படும் “பயிற்றுநருக்கான சில எண்ணங்களில்" இருந்து கீழே உள்ள பத்தி இந்த யோசனையைப் பற்றி விவாதிக்கிறது.

> பாடப்பிரிவு பரிந்துரைக்கும் ரத்தினங்களில், ஒவ்வொரு தனிநபருக்கும் வழங்கப்பட்டுள்ள, ஓர் உன்னதமான மற்றும் நேர்மையான தன்மை உருவாக்கப்படக்கூடிய நிரந்தர கட்டமைப்புகளாக பார்க்கப்படும் "ஆன்மிக குணங்கள்" என அழைக்கப்படுபவை உள்ளன. அவை -- பழக்கவழக்கங்கள் மற்றும் மனப்பான்மைகள் மற்றும் திறன்கள் மற்றும் திறன்கள் உட்பட ஒவ்வொரு வகையான பாராட்டுக்குரிய பண்புகளுக்கும் பயன்படுத்தப்படும் பொதுவான சொல்லான -- "நல்லொழுக்கங்கள்" எனப்படும் ஒரு தனித்துவமான ஒழுக்க வகையை உருவாக்குகின்றன. இது அனைத்து பங்கேற்பாளர்களும் போதுமான அளவு புரிந்து கொள்ள வேண்டிய ஓர் அத்தியாவசிய யோசனையாகும். பகுதிகள் 6 மற்றும் 7 இந்த கூற்றின் சில தாக்கங்களைப் பரிசீலிக்கிறது. குழுவின் உறுப்பினர்கள், கடவுளை நோக்கிய நமது நித்திய பயணத்தில் நமக்கு உதவிட இந்த வாழ்க்கையில் மனித

ஆன்மாவின் ஆற்றல்கள் என்னும் முறையில் ஆன்மிக குணங்கள் எவ்வாறு உருவாக்கப்பட வேண்டுமென அவர்கள் யோசித்த நூல் 1-இன் மூன்றாவது அலகின் ஆய்வுடன் தங்களின் கலந்துரையாடலை தொடர்புபடுத்திட முடிவதை பயிற்றுநர் உறுதிபடுத்திட விரும்புவார். ஆன்மிகப் பண்புகளைப் பேணி வளர்ப்பதில் கடவுளின்பால் அன்பும் கடவுளைப் பற்றிய அறிவும் இன்றியமையாதது. இந்த இரண்டு பிரிவுகளில் உள்ள கருத்துக்கள், கிரேட் 1 பாடங்களை எவ்வாறு, உதாரணத்திற்கு, நேரம் தவறாமை மற்றும் வாய்மை இரண்டும் ஒன்றே மற்றும் ஒரே விதமான பண்புகள் எனக் கூறும் ஒழுக்கநெறி பற்றிய பயிற்சியிலிருந்து வேறுபடுத்துகின்றன என்பதை பங்கேற்பாளர்கள் பார்ப்பது முக்கியம். மற்றும், ஆசிரியர்கள் இந்த வேறுபாட்டைப் பாராட்டும்போது, ஒரு நல்ல குணத்தின் உருவாக்கத்தை முதன்மையாக நடத்தை மாற்றத்தின் அடிப்படையில் பார்க்கும் போக்கைத் தவிர்ப்பார்கள்.

இளைஞர்கள் தங்கள் நடத்தையைத் துல்லியப்படுத்திட உதவுவதில், பயிற்றுநர்கள் ஆன்மிகப் பண்புகளுக்கும்--மனித ஆன்மாவின் இன்றியமையா பண்புகள்—பழக்கவழக்கங்கள், திறன்கள் மற்றும் மனப்பான்மைகள் என பொதுவாக அழைக்கப்படும், பாராட்டுக்கு உகந்த எல்லா குணாதிசயங்களையும் குறிப்பிட பயன்படுத்தப்படும், ஒழுக்கநெறிகளுக்கு இடையிலான வேறுபாடுகள் குறித்த ஒரு பாராட்டுணர்வைப் பெறவேண்டுமென பரிந்துரைக்கப்படுகின்றது. கிரேட் 1-ஐப் போதிக்கும் போது, இந்த வேறுபாட்டை நினைவில் கொள்வது ஏன் முக்கியம் என்பது குறித்து பின்வரும் கூற்றுகள் மேலும் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. இந்தப் பட்டியலுக்கு மேலும் சில கூற்றுகளை நீங்கள் சேர்க்க முடியுமா? இந்தப் பயிற்சியை மேற்கொள்வதில், முதலாம் பாடப்பிரிவின் பகுதிகள் 6 மற்றும் 7-இல் வழங்கப்பட்டுள்ள யோசனைகள் மீது பிரதிபலிப்பது உங்களுக்கு உதவியாக இருந்திடக் காண்பீர்கள்.

— ஆன்மிகப் பண்புகளை மேம்படுத்துவதில், இந்தப் பண்புகளின் என்றுமே வற்றாத மூலாதாரமான கடவுளின்பால் தங்களின் இதயங்களையும் மனங்களையும் குவித்திட குழந்தைகள் வழிகாட்டப்படுகின்றனர்.

— பாராட்டுக்குரிய மனப்பான்மைகளும் போக்குகளும், அவை எவ்வளவுதான் சமுதாய வழக்கங்களால் வலுப்படுத்தப்பட்டிருந்தாலும், அவை ஆன்மிகப் பண்புகள் என்னும் அடித்தலத்தின்மீது நிர்மாணிக்கப் பட்டிருந்தாலன்றி, அவை விரைந்து மறையும் எல்லைக்குட்பட்ட இயல்பைக் கொண்டவையாகும்.

— குழந்தைகளில் இரக்கம், அன்பு, மற்றும் தாராளம் போன்ற ஆன்மிகப் பண்புகளைப் பேணி வளர்ப்பதானது, அவை குழந்தைகளில் அனுதாபம், அக்கறை மற்றும் பகிர்தல் போன்ற பொருத்தமான மனப்பான்மைகளையும் பழக்கவழக்கங்களையும் வளர்த்திடும்.

— கலாச்சார மற்றும் சமுதாய வழக்கங்களுக்கு இணைவாக நடந்துகொள்ள கற்பது, அது தானாகவே, ஆன்மிகப் பண்புகளின் மேம்பாட்டிற்கு வழிவகுக்காது.

— ஆன்மிகப் பண்புகளை வெளிப்படுத்துவதற்கான ஊக்குவிப்பானது, கடவுளின் நல்விருப்பத்தை அடைவதற்கான ஆவலிலிருந்து பிறக்க வேண்டுமே அன்றி, பிறரின் அங்கீகாரத்தை பெறுவதற்கான ஆவலிலிருந்து பிறக்கக் கூடாது.

— எந்த வழியிலாவது தன்னலமிக்க முடிவுகளை அடைதல்—அனுகூலத்துவம்—வெளிப்படையில் பாராட்டுக்குரியதாக இருக்கும் நடத்தையை வெளிப்படுத்துவதில் ஒரு வலுவான காரணியாக இருந்திடக்கூடும்; ஆனால் ஆன்மிக குணங்களை வெளிப்படுத்தும் விருப்பத்தில் அது எந்தப் பங்கையும் வகிக்காது.

பஹாய் திருமொழிகளில் காணப்படும் சில கல்விக் கோட்பாடுகளை ஆராயும் நூல் 3-இன் முதல் பாடப்பிரிவின் 1 முதல் 17 வரையிலான பகுதிகளை மதிப்பாய்வு செய்ய சில நிமிடங்களை எடுத்துக் கொள்ளுங்கள். இந்த பிரிவுகளில் உள்ள முக்கிய கருத்துகளை கீழே உள்ள இடத்தில் பட்டியலிடவும்–குழந்தைகளின் ஆன்மிக வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்கள், குறிப்பாக கிரேட் 1 ஆசிரியர்கள் புரிந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

_______________________________________________________________

_______________________________________________________________

நீங்கள் அவதானித்திருப்பது போன்று, பாடப்பிரிவில் ஆராயப்பட்ட முதல் கருத்தாக்கங்களுள் ஒன்று 'கட்டொழுங்கு' ஆகும். "பயிற்றுநர்க்கான சில எண்ணங்கள்" என்னும் கீழே காணப்படும் எடுபகுதியானது, பிற வழிகளில் நடத்தையை சரிபடுத்த முற்படுவது போலில்லாமல், ஆன்மிகப் பண்புகளைப் பேணி வளர்ப்பதில் அக்கறை கொண்ட கல்விச் செயல்முறையில் இந்தக் கருத்தாக்கம் எவ்வாறு காணப்படுகின்றது என்பதை விரிவுபடுத்துகின்றது.

மேற்கூறிய கருத்தாக்கங்கள் மற்றும் யோசனைகள் பற்றிய கலந்துரையாடல், இறுதியில், ஆன்மிகக் கல்வியின் மூலம், குழந்தைகள் ஆன்மிக குணங்களைப் பெறுவதை ஒரு வெகுமதியாகவும், தகுதியற்ற தன்மையை வைத்திருப்பதை மிகப்பெரிய தண்டனையாகவும் கருத வேண்டும் என்பதை பங்கேற்பாளர்களுக்கு உணர்த்த வேண்டும். இவையனைத்தும், இளைஞர்களின் நடத்தையில் மாற்றத்தை சரியான கண்ணோட்டத்தில்--ஒரு மைய நோக்கமாக அன்று, ஆனால், நடத்தையை மேம்படுத்துவதற்கான உதவியாக--பார்க்க பங்கேற்பாளர்களுக்கு உதவ வேண்டும் அதற்கேற்ப, குழந்தைகளுடனான அவர்களின் தொடர்புகளில் விரும்பத்தக்க நடத்தையை ஊக்குவிக்கவும், ஒழுங்கற்ற நடத்தை முறைகளை தவிர்த்திடவும் பொருத்தமான வழிகளைக் கண்டுபிடிப்பார்கள், மற்றும் இவற்றில் சில பிரிவு 13-இல் குறிப்பிடப்பட்டுள்ளன. பகுதியில் சுருக்கமாக குறிப்பிடப்பட்டுள்ள பிற கருத்துக்கள் சுதந்திரம் மற்றும் கட்டொழுங்கு தொடர்பானவை. குழந்தைகள் கல்வியில் கடுமையான தண்டனைக்கு இடமில்லை எனும்போதிலும், அவர்கள் விரும்பியபடி செய்ய அவர்களுக்கு முழுமையான சுதந்திரத்தை அனுமதிப்பது அவர்களின் ஆன்மிக வளர்ச்சிக்கு சம அளவு தீங்கு விளைவிப்பதாகும்.

கீழே சில கூற்றுகள் உள்ளன. பாடப்பிரிவில் வழங்கப்பட்டுள்ள கட்டொழுங்கு குறித்த கருத்தாக்கத்துடன் ஒத்துப்போகின்றவை எவை என்பதைத் தீர்மானிக்கவும்.

_______ கட்டொழுங்கு கடுமையாக இருக்க வேண்டும்.

_______ கட்டொழுங்கு நீடிக்க வேண்டுமானால், அஃதொரு மனிதனில் உள்ளிருந்து வரவேண்டும்.

_______ உண்மையான சுதந்திரம் சுய கட்டொழுங்கைச் சார்ந்துள்ளது.

_______ கட்டொழுங்கு திணிக்கப்படும் போது அது படைப்பாற்றலை முடக்குகின்றது.

_______ கட்டொழுங்கானது படைப்பாற்றல் முன்முனைவை சுய-இன்பங்களிலிருந்து பாதுகாக்கின்றது.

_______ ஆசிரியர் ஒருவர் கடவுள் மீதான அன்பை மாணவர்களுள் உட்புகுத்திடும்போது நடத்தை தரங்களை அமைப்பதற்கு அவசியமில்லை.

_______ சுய-கட்டொழுங்கு இன்றி, ஆன்மிகப் பண்புகளை அறவே உருவாக்க முடியாது.

_______ குழந்தைகள் தாங்களாகவே எதையும் கண்டுகொள்வதற்கான சுதந்திரம் வழங்கப்பட வேண்டும்; கட்டொழுங்கானது கண்டறிதல் மற்றும் உண்மையான கற்றல் செயல்முறைக்கு இடையூறாக இருந்திடும்.

_______ குழந்தைகள் கட்டொழுங்கினால் செழிப்புறுகின்றனர்; அவர்கள் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட, கட்டமைக்கப்பட்ட சூழலில் மேலும் விளைவுத்திறத்துடன் கற்க முடியும்.

_______ கற்பவர் என்னும் பணிவான தோரணையின் மூலம் தனிநபர்கள் ஞானம் பெறுகின்றனர். கற்றலின் இந்தத் தோரணையால் விதிக்கப்படும் ஒழுக்கம் தோல்வி பயத்திலிருந்து ஒருவரை விடுவித்து, முன்முயற்சியின் ஆக்கபூர்வ பயிற்சிக்கு வழியைத் திறக்கிறது.

_______ கட்டொழுங்கைக் கடைப்பிடித்தல் என்பது எந்த விதமான வன்முறை அல்லது கெடுவழக்கம், உளவியல் அல்லது பௌதீக ரீதியானது என எடுத்துக்கொள்ள முடியாது, ஏனெனில் வன்முறையானது அடிப்படையில் மனித ஆன்மாவின் உன்னதத்துடன் ஒத்துப் போகாததும் மனித மேம்பாட்டுக்குத் தீங்கு விளைவிப்பதும் ஆகும்.

இப்பொழுது, சிறிது நேரம் எடுத்துக்கொண்டு பின்வரும் கேள்வியை உங்கள் குழுவினருடன் கலந்துரையாடவும்: ஒரு பயில்வட்டத்தின் பங்கேற்பாளர்கள் குழந்தைகள் அன்று, மாறாக அவர்கள் முதிய வயதுடையோரெனும் போது கட்டொழுங்கு குறித்த கருத்தாக்கம் ஒரு பயில்வட்டத்திற்கு எவ்வாறு பொருந்துகின்றது.

இரண்டாவது பாடப்பிரிவைப் பொறுத்தவரை, அஃது இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது: இந்தக் படிநிலைக்குப் பரிந்துரைக்கப்பட்ட இருபத்துநான்கு பாடங்களும் ஆரம்பப் பகுதிகளும் பயிற்றுநர்கள் பாடங்களின் உள்ளடக்கத்தை நன்கு அறிந்துகொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட ஆன்மிகப் பண்பின் மேம்பாட்டைச் சுற்றி கட்டமைக்கப்பட்டுள்ளன. இளைஞர்களிடம் ஆன்மிகப் பண்புகளைப் பேணி வளர்க்க, பாடங்கள் அவர்களைக் கடவுள் திருமொழியுடன் உடனடித் தொடர்பு கொள்ளச் செய்து, உயர்ந்த மனித இலட்சியங்களின் உருவகமான ‘அப்துல்-பஹா’வின் கதைகளைக் கொண்டு அவர்களை ஊக்குவிக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். பிரார்த்தனை, மேற்கோள்களை மனனம் செய்தல் மற்றும் கதைகள் ஆகியன இந்தப் பாடங்களின் முக்கிய அம்சங்களை உருவாக்குகின்றன, அத்துடன் இரண்டாவது பாடப்பிரிவின் ஆரம்பப் பகுதிகள் ஒரே நேரத்தில் நான்கு பாடங்களை எடுத்து, ஒவ்வொன்றிலும் இந்த முக்கிய கூறுகளை மதிப்பாய்வு செய்வதன் மூலம் பங்கேற்பாளர்களுக்கு வழிகாட்டுகிறது. நீங்கள் இப்போது இந்தப் பிரிவுகளை ஆராய்ந்து, குழந்தைகளின் ஆன்மிகக் கல்வியில் இந்தக் அம்சங்கள் வகிக்கும் பங்கைப் பற்றி ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களை எழுத விரும்பலாம்.

பிரார்த்தனை: ____________________________________________

____________________________________________

____________________________________________

மேற்கோள்களை மனனம் செய்தல் ______________________________

____________________________________________

____________________________________________

கதைகள்: ____________________________________________

____________________________________________

____________________________________________

பாடங்களின் பிற அம்சங்கள் ஒவ்வொன்றின் பங்கு குறித்து சில வார்த்தைகள் கூற முடியுமா?

பாடல்கள்: ______________________________________________

______________________________________________

______________________________________________

ஒத்துழைப்பு விளையாட்டுகள்: ______________________________________________

______________________________________________

______________________________________________

வர்ணமிடல்: ______________________________________________

______________________________________________

______________________________________________

இரண்டாவது பாடப்பிரிவு பங்கேற்பாளர்களை மூன்று அல்லது நான்கு குழந்தைகளுடன் படிப்பது உட்பட, பாடங்களின் பல்வேறு அம்சங்களை அவர்களின் படிப்பின் ஒரு பகுதியாக வழங்குவதைப் பயிற்சி செய்ய ஊக்குவிக்கின்றது. சில குழுக்கள் ஒரு வகுப்பில் குழந்தைகளுடன் அனுபவத்தைப் பெறுவதற்கு முன், ஒரே நேரத்தில் நான்கு பாடங்களைப் படிப்பதன் மூலம், முழு யூனிட்டையும் இந்த வழியில் தொடரலாம். பங்கேற்பாளர்கள் நான்கு பாடங்களின் தொகுப்பைப் படித்து, பின்னர் உடனடியாக சிறிது அனுபவத்தைப் பெற முடியும்--மற்றொரு பயிற்றுநருக்கு உதவுவதன் மூலம் அல்லது தாங்களாகவே ஒரு வகுப்பைத் தொடங்குவதன் மூலம். அத்தகைய நெகிழ்வானதும் பதில்வினையாற்றக்கூடிய அணுகுமுறையை மேற்கொள்ள, பயிற்றுநர் தனது கிராமத்திலோ சுற்றுப்புறத்திலோ என்ன நடக்கிறது என்பதைப் பற்றி என்ன வகையான அறிவு இருக்க வேண்டும் என்பதைப் பற்றி கலந்துரையாடவும்.

## பகுதி 21

முதல் மூன்று நூல்கள் எழுச்சியூட்டும் சேவைச் செயல்களைப் பற்றிய ஆழமான மதிப்புணர்வைப் பெற்ற பிறகு, “நான் ஒரு சேவை பாதையில் நடக்கின்றேன்” என்னும் பஹாய் அடையாளம் பற்றிய கேள்விக்கு, “நான் ஒரு சேவை பாதையில் நடக்கின்றேன்” என்னும் கூற்றில் வரும் “நான்” என்னும் கேள்விக்கு மீண்டும் திரும்பும், பயிற்சிக்கழகத்தின் பிரதான வரிசையில் வரும் அடுத்த நூலைப் பார்ப்போம். வரலாறானது தனிநபரின் பெரும்பகுதி அடையாளத்தையும், அத்துடன் முழு மக்கள் கூட்டத்தின் அடையாளத்தையும் வடிவமைக்கின்றது. வரலாறுடனான தொடர்பு துண்டிக்கப்படும்போது, குழப்பம் ஏற்பட்டும் மக்கள் வேரற்ற மரங்களாக ஆகிடுவர் ஆனால், மனித வாழ்வில் மாற்றம் ஏற்பட்டு வரும் இந்தக் காலகட்டத்தில், பழைய ஒழுங்கமைப்பு சிதைந்து, அதன் இடத்தில் ஒரு புதிய படைப்பு தோன்றும்போது, ஒவ்வொருவரும் தனது இருப்புக்கான வரலாற்று வேர்களை எங்கே காண்பது என நாம் வினவலாம். பெரும்பாலானோருக்கு இது ஒரு கடினமான கேள்வி, ஆனால் பஹாய்களுக்கு, இதற்கான பதில் மிகவும் எளிமையானது: பாப் பெருமானார் தமது பணியை முல்லா ஹுசைனுக்கு அறிவித்த அந்த விதிநிறைந்த மாலையிலிருந்து கடவுளின் சமயத்தை முன்னோக்கிக் கொண்டு வந்த எண்ணற்ற நிகழ்வுகளில் நாம் நமது அடையாளத்தின் அம்சங்களைத் தேட வேண்டும்.

நூல் 4-*ஆன, இரட்டை அவதாரங்கள்,* பாப் மற்றும் பஹாவுல்லாவின் வாழ்க்கை வரலாற்றை ஆய்வு செய்வதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. முதல் பாடப்பிரிவில் கடவுளின் நாளான, இந்த

நாளின் முக்கியத்துவம், சுருக்கமாக ஆராயப்படுகிறது. இரண்டாவது மற்றும் மூன்றாவது பாடப்பிரிவுகள், இந்த இரண்டு புனிதர்களின் அருட்பணியுடன் பங்கேற்பாளர்களை அறிமுகப்படுத்துகின்றன. கடவுள் அவதாரங்களின் தோற்றத்துடன் தொடர்புடைய ஆழமான கருப்பொருள்களை விளக்கும் திருமொழிகளில் இருந்து தொடர்புடைய பத்திகளை ஆய்வு செய்வதன் மூலம் அத்தியாயங்களின் ஆன்மிக முக்கியத்துவம் அடிக்கோடிட்டுக் காட்டப்படுகிறது. பங்கேற்பாளர்கள் பாப் மற்றும் பஹாவுல்லாவின் வாழ்க்கையைப் பற்றிய அத்தியாவசிய உண்மைகளைக் கற்றுக்கொள்வது எவ்வளவு முக்கியமானதாக இருப்பினும், இந்தக் கருப்பொருள்களைப் பற்றிப் பிரதிபலிப்பதன் மூலம் அவர்கள் பெறும் புரிதல்தான் அவர்களை சேவை பாதையில் நிலைநிறுத்தும். இது தொடர்பில், பயிற்றுநருக்கான அறிமுகக் குறிப்புகள் விளக்கமளிக்கின்றன:

> பின்னர், இரண்டாவது மற்றும் மூன்றாவது பாடப்பிரிவுகள் மூலம் ஒரு குழுவை வழிநடத்தத் தயாராகும்போது, பயிற்றுநர் உரைக்கப்பட்ட ஆன்மிகக் கருப்பொருள்களின்பால் உன்னிப்பான கவனம் செலுத்த வேண்டும். இவற்றில், உதாரணமாக, ஒவ்வொரு தெய்வீக அவதாரமும் மனித உலகில் அவரது சொந்த விருப்பத்தின்படி அன்று, மாறாக கடவுளின் விருப்பத்தால் வெளிப்படுத்தப் படுகிறார், அத்துடன் அவரால் உள்ளார்ந்த அறிவும் வழங்கப்படுகின்றார். அவரது ஸ்தானத்தை முதலில் அங்கீகரிப்போர், மகத்தான வீர செயல்கள் புரிந்திட, அவரது சமயத்தின் தன்மைமாற்றும் சக்திக்கு சாட்சியாக இருக்கும் செயல்கள் புரிந்திட அழைக்கப்படுகின்றனர்; மனிதகுலத்தை உண்மைக்கு வழிநடத்தவும், கடவுளின் விருப்பத்தையும் நோக்கத்தையும் அவரது படைப்புகளுக்குத் தெரியப்படுத்துவதற்காகவும் துன்பங்கள் நிறைந்த ஒரு வாழ்க்கையை அவர் ஏற்றுக்கொள்கிறார்; பூமியில் உள்ள எந்த சக்தியும், எவ்வளவு சக்தி வாய்ந்ததாக இருந்தாலும், அவருடைய செல்வாக்கைக் குறைப்பதில் வெற்றிபெறவோ அல்லது அவரிடம் ஒப்படைக்கப்பட்ட திருப்பணியை அவர் சாதிப்பதையோ தடுக்க முடியாது. இது தொடர்பாக, மூன்றாவது பாடப்பிரிவில் கையாளப்படும் ஒரு முக்கியமான கருத்து நெருக்கடி மற்றும் வெற்றி குறித்ததாகும். இந்தக் கருத்தாக்கத்தின் புரிதலானது—கடவுள் சமயத்தில் ஏற்படும் ஒவ்வொரு நெருக்கடியும் அதனுள் அடங்கியிருக்கும் சக்தியின் ஒரு புதிய அளவை வெளியிட உதவுகிறது என்பது—சேவை பாதையில் நடக்கும் எல்லாருக்கும் இன்றியமையாதது, அவர்கள் சமயத்தின் வரலாற்றைப் பாராட்டுவது மட்டுமின்றி, நெருக்கடி மற்றும் வெற்றிகளின் ஒரு வரிசையின் வழி தவறாமல் தொடரும் ஒரு செயல்முறையான, தங்களின் அண்டைப்புறங்களிலும் கிராமங்களிலும் அதன் சீரான மடிப்பவிழ்வுக்குப் பங்களிக்கவும் கூடும்.

ஒரு பயிற்றுநராகச் செயல்படும் உங்கள் முயற்சியில், இரட்டை அவதாரங்களின் வாழ்க்கைகளைச் சூழ்ந்துள்ள நிகழ்ச்சிகளின் ஆன்மிகத் தனிச்சிறப்பு குறித்த உங்களின் சொந்தப் புரிதல் உபகரணங்களுடன் பங்கேற்பாளர்கள் ஈடுபடும் விதத்தை எவ்வாறு பாதிக்கும்?

_______________________________________________________________________________

பயிற்சியின் பங்கேற்பாளர்கள் அவர்கள் கற்கும் சரித்திர குறிப்புகளை ஓரளவு விவரங்களுடன் மொழிவதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டும். பயிற்றுநர் அவர்கள் அவ்வாறு செய்வதற்கான திறனை மேம்படுத்துவதற்கு எவ்வாறு உதவ முடியும்?

மேலே குறிப்பிட்டுள்ளபடி, மூன்றாவது பாடப்பிரிவு முழுவதும் இயங்கும் ஒரு கருப்பொருள் நெருக்கடி மற்றும் வெற்றி குறித்ததாகும். பங்கேற்பாளர்கள் இந்தக் கோட்பாட்டைப் பற்றிய ஆழமான புரிதல் பெறுவதை உறுதிசெய்வது உங்களின் சவால்களில் ஒன்றாகும். நெருக்கடி மற்றும் வெற்றியின் இயக்கவியலை முழுமையாகப் புரிந்து கொள்ள, நூலின் மூன்றாவது பாடப்பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள குறிப்பிடத்தக்க நிகழ்வுகளின் பட்டியலை நீங்கள் காலவரிசைப்படி உருவாக்கிட விரும்பலாம். அவ்வாறு செய்த பிறகு, எந்த நிகழ்வுகள் நெருக்கடி அல்லது வெற்றியின் புதிய கட்டத்தின் தொடக்கத்தைக் குறிக்கின்றன என்பதைத் தீர்மானிக்கவும்.

இப்பொழுது, உங்கள் சொந்த சமூகத்தைப் பற்றி சிந்திக்கவும். இந்த நெருக்கடி மற்றும் வெற்றியின் இயக்கவியல் வழி மேம்பாடு எவ்வாறு அடையப்பட்டுள்ளது?

இந்த நூலில், பங்கேற்பாளர்கள் முந்தைய புத்தகங்களில் நினைவில் வைத்திருந்ததை விட மிக நீளமான மேற்கோள் பத்திகளை மனனம் செய்ய சவால் விடப் படுகிறார்கள் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இரண்டாவது அலகில் அவர்கள் வாழும் அட்சரங்களுக்கான பாப் பெருமானாரின் உரையையும், மூன்றாவதில், கித்தாப்-இ-அக்டாஸின் தொடக்க ஐந்து பத்திகளையும் மனமாகக் கற்றுக்கொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள். ரூஹி பயிற்சிக்கழகத்தின் பயிற்சிப்பாடங்களினால் பேணி வளர்க்கப்பட்ட கல்விச் செயல்முறை மனனம் செய்வதை வலியுறுத்துகிறது என்பது ஆரம்பத்தில் இருந்தே தெரியும் ஒன்றாகும். கடினமானதாகக் கருதுபவர்கள் மீது எந்த அழுத்தமும் இல்லை என்றாலும், அவர்கள் நூல் 4-ஐ அடைவதற்குள், அனைத்து பங்கேற்பாளர்களும் மேற்கோள் பத்திகளை மனதிற்குக் கொண்டு வருவதன் மதிப்பைப் பற்றி அதிக அளவில் அறிந்திருப்பார்கள், அத்துடன் மனித இதயத்தில் கடவுள் திருவாக்கின் பல நுண்ணறிவுகளையும் பெற்றிருப்பார்கள். உங்கள் சொந்த படிப்பாய்வு பற்றி மீண்டும் சிந்தியுங்கள். முந்தைய படிப்புகள் ஒவ்வொன்றிலும் நீங்கள் முன்னேறும்போது புத்தகம் 4-இல் உள்ள நீண்ட பத்திகளை மனனம் செய்யும் உங்கள் திறன் எவ்வாறு படிப்படியாக அபிவிருத்தி அடைந்தது?

## பகுதி 22

பிரதான வரிசையில் ஐந்தாவது நூல், நூல் 3 போன்றது, இளைஞர்களின் கல்வி பற்றிய கேள்வியை எடுத்துக்கொள்கிறது. *இளைய இளைஞர்களின் சக்திகளை விடுவித்தலானது,* "அனிமேட்டர்களாக" பணியாற்ற விரும்புவோருக்கு அவர்களின் ஆன்மிக வலுவூட்டலுக்கான மூன்று ஆண்டு திட்டத்தில் பன்னிரெண்டு முதல் பதினைந்து வயதுக்குட்பட்ட இளைஞர்களைக் கொண்ட குழுக்களை ஈடுபடுத்துவதற்குத் தேவையான திறன்களை வளர்க்க உதவுகிறது. நூல் 3-இல் உள்ளது போன்று, பிரதான வரிசையின் வழி நகர்ந்து செல்லும் ஒவ்வொருவரும் இந்த நூலைப் பயில்வதன்

மூலம் ஏதாவது ஒரு வழியில் பயன் பெறுவர் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. ஆனால், இந்த சேவைச் செயல் அடிப்படையில்–ஆனால் பிரத்தியேகமானது அன்று–எல்லாப் பின்னணிகளையும் சார்ந்த இளைஞர்களுக்கும் சமுதாயத்தின் மேம்பாட்டிற்குப் பங்களிப்பதற்கான ஒரு வழியைத் திறப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதை பயிற்றுநர்கள் உணர வேண்டும். பயிற்றுனருக்கான அறிமுகப் பகுதி இந்தக் குறிப்பைப் பற்றி உரைப்பதுடன், திறனாற்றல் உருவாக்க செயல்முறை அத்தகைய பங்கேற்பாளர்களை இந்தச் சேவைச் செயலைச் செய்ய எவ்வாறு தயார்படுத்தும் என்பதை விவரிக்கிறது:

நூல் 5-இன் பயிற்றுநர்களாகச் செயல்படுபவர்கள் அங்கீகரிக்க வேண்டியது என்னவெனில், பங்கேற்பாளர்களில், தங்கள் பதின்ம வயதின் பிற்பகுதியில் அல்லது இருபதுகளின் முற்பகுதியில் உள்ள பல இளைஞர்கள், அனிமேட்டராக பணியாற்ற வேண்டும் என்னும் வெளிப்படுத்தப்பட்ட விருப்பத்துடனும், அவ்வாறு செய்ய தேவையான உள்ளுறை திறனுடனும் பாடங்களின் பிரதான வரிசைக்குள் பிரவேசித்திருப்பர். சிலர் இளைய தலைமுறையினருக்குக் கல்வி கற்பிப்பதில் தாங்கள் ஆற்றக்கூடிய பங்கை வலியுறுத்தும், தங்கள் சகாக்களுடனான கலந்துரையாடல் மூலம் சமயத்துடன் தொடர்பு கொண்டிருப்பர். மற்றவர்கள், இளைய இளைஞர்களாக ஆன்மிக சக்தியூட்டல் திட்டத்தை முடித்து, பின்னர் விரைவில் நூல் 1-ஐ பயில்வதில் ஈடுபட்டிருப்பர். பயிற்சிக்கழக செயல்முறைக்கு அவர்களைக் கொண்டு வந்த வழி எதுவாக இருந்தபோதிலும், அவர்கள் இப்போது தங்கள் கிராமத்திலோ சுற்றுப்புறத்திலோ அதன் மேம்பாட்டிற்காகக் கடப்பாடு கொண்ட தனிநபர்களின் அதிகரித்து வரும் மையக்கருவின் ஒரு பகுதியாக இருப்பார்கள். இந்தச் சூழலில், நூல் 2-இல் உரைக்கப்பட்ட சேவைச் செயல் போன்று சமயத்திற்கு மையமாக இருக்கும் கருப்பொருள்களை ஆராய்வதற்காக இல்லங்களுக்கு விஜயம் செய்வதில் அனுபவம் பெறுவர். இந்த மையக்கருவின் ஒரு பகுதியாக, அவர்களுள் ஒரு நல்ல எண்ணிக்கையினர், அந்த உள்ளூரில் உள்ள ஓர் இளைய இளைஞர் குழுவுடன் நெருங்கிய தொடர்புடையவர்களாக இருந்து, அனிமேட்டர் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுவதுடன் திட்டத்துடன் தொடர்பு கொண்ட கருத்தாக்கம் மற்றும் அணுகுமுறைகளை பெற்றோருடன் கலந்துரையாட அவருடன் வாடிக்கையான விஜயங்களில் சேர்ந்துகொள்வர். இந்தக் கட்டத்தில், அவர்கள் அனைவரும் பஹாய் போதனைகளைப் பற்றிய கணிசமான அறிவைப் பெற்றிருப்பார்கள். அது அவர்களின் நூல்கள் 3 மற்றும் 4-ஐப் பயில்வதன் மூலம் ஆழமடைந்து, நண்பர்கள் மற்றும் அண்டை வீட்டாருடன் அர்த்தமுள்ள உரையாடல்களைத் தொடங்குவதற்கும் நிலைநிறுத்துவதற்கும் தேவையான திறன்கள், திறமைகள், மனப்பான்மைகள் மற்றும் ஆன்மிகப் பண்புகளை வெளிப்படுத்துவர். குறிப்பாக இங்கேதான், அவர்கள் நூல் 5-ஐ அடையும் போது, ரூஹி பயிற்சிக்கழகத்தின் பிரதான வரிசைப் பயிற்சிகளில் உள்ளார்ந்துள்ள--ஒரு சேவை பாதையில் நடப்பதன் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒரு செயல்முறையான--திறனாற்றல் உருவாக்க செயல்முறை வெளிப்படையாகத் தெரிய வரும். இளைய இளைஞர்களின் ஒரு குழுவை அவர்களின் ஆன்மிக சக்தியூட்டலுக்கான மூன்று ஆண்டு திட்டத்தில் ஈடுபடுத்துவது ஒரு கோரிக்கைமிக்க சேவையாகும். அத்துடன், அவ்வாறு செய்வதற்கான புதிய அனிமேட்டர்களின் முயற்சிகள் பேரளவில், அவர்கள் இதுவரை சேவை பாதையில் சீராக உருவாக்கிக்கொண்டுள்ள திறனாற்றலைச் சார்ந்திருக்கும்.

ஒரு பயிற்றுநராகும் விருப்பம் கொண்டவர் என்னும் முறையில் மேலே விவரிக்கப்பட்ட விதத்தில் பயிற்சிப் பாட வரிசையினூடே படிப்படியாக நகர்ந்து இப்போது நூல் -ஐ வந்தடைந்துள்ள ஓர் இளைஞரைப் பற்றி நீங்கள் சிந்திப்பது உங்களுக்கு பயனுடையதாக இருக்கும். அவரை வேறுபடுத்திக் காட்டும் சில பண்புகள் யாதாக இருக்கும்? அவற்றுள் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இப்பட்டியலுக்கு நீங்கள் மேலும் சிலவற்றைச் சேர்க்க முடியுமா?

— ஒருவர் தனது உயர் இயல்பை வலுப்படுத்துவதன் மூலம் தனது உண்மையான ஸ்தானத்தை அடைகின்றார் என்னும் புரிதல்

— ஒருவரின் தனது சொந்த வளர்ச்சிக்கும் தனது சமூகத்தின் மேம்பாட்டிற்கும் பொறுப்பு உடையவர் என்னும் உணர்வு

— சேவைத் துறையில்தான் ஒருவர் தனது சொந்த அறிவுசார் மற்றும் ஆன்மிக வளர்ச்சிக்குப் பொறுப்பேற்று சமூகத்தின் முன்னேற்றத்திற்குப் பங்களித்தல் என்னும் இரட்டை தார்மீக நோக்கத்தைத் தொடர முடியும் என்னும் புரிதல்

— கடவுள் திருமொழியின் தன்மைமாற்றும் சக்தியை கண்டுணர்தல்

— அன்றாட உரையாடல்களில் ஆன்மிக கோட்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கான திறன்

— வரலாறு குறித்த ஒரு வலுவான உணர்வு, மற்றும் இந்த வரலாற்று முக்கியத்துவம் மிக்க தருணத்தின் இயல்பு குறித்த புரிதலும் அதில் ஒருவரின் இடமும்

— சேவை பாதையில் ஒருவர் தவறாமல் சந்திக்கும் சோதனைகள் மற்றும் பரீட்சைகளின் எதிரில் பற்றுறுதி

— ____________________________________________

— ____________________________________________

— ____________________________________________

— ____________________________________________

— ____________________________________________

— ____________________________________________

— ____________________________________________

— ____________________________________________

— ____________________________________________

— ____________________________________________

— ____________________________________________

— ____________________________________________

— ____________________________________________

— ____________________________________________

— ____________________________________________

— ____________________________________________

இப்போது, நூல் 5-இன் முதல் பாடப்பிரிவு, "வாழ்க்கையின் வசந்தகாலம்", திருமொழிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மேற்கோள்களை உள்ளடக்கியது என்பதை நீங்கள் அறிவீர்கள். அவை முழுவதுமாக, மனித வரலாற்றில் இந்தத் தருணத்தில் விளைவுத்திறத்துடன் செயல்படக்கூடிய ஓர் இளைஞனின் பிம்பத்தை வழங்குகின்றன. இப்போது அந்த பாடப்பிரிவை மதிப்பாய்வு செய்யவும். அவ்வாறு செய்த பிறகு, மேலே உள்ள பட்டியலில் வேறு ஏதேனும் பண்புகளைச் சேர்ப்பீர்களா என்பதை முடிவு செய்யுங்கள்.

"வாக்குறுதி மிக்க காலம்" என்னும் இரண்டாவது பாடப்பிரிவு அடிப்படையில் இரட்டை நோக்கம் கொண்டதாகும். இளைய இளைஞர்கள் ஒரு தனித்துவ வயதினர் குழுவைச் சேர்ந்தவர்கள், மற்றும் அதற்கேற்ற சிறப்புப் பண்புகளைக் கொண்டவர்கள் என்னும் புரிதலை அப்பாடப் பிரிவு படிப்பவர்களின் மனதில் நிலைநிறுத்த முயல்கிறது. இந்தக் காலகட்டத்தை நோக்கிய சமூகம், சமயத்தின் திருமொழிகளால் வடிவமைக்கப்பட்டது, நடைமுறையில் உள்ள அனுமானங்கள் மற்றும் கோட்பாடுகளின் அடிப்படையிலான அணுகுமுறைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. மீண்டும், பயிற்றுநருக்கான பகுதியில் இருந்து படிப்போம்:

> . . . இந்த பிரிவு வளரிளம் பருவத்தின் இயல்பைச் சுருக்கமாகப் பார்க்கிறது, பின்னர் இந்த வயது நெடுக்கத்தில் உள்ள இளைஞர்களின் அதிகரித்து வரும் விழிப்புணர்வைச் சரியான முறையில் வழிநடத்தும் சவாலைப் பிரதிபலிக்குமாறு பங்கேற்பாளர்களைக் கேட்டுக்கொள்கிறது. இதில், பாடப்பிரிவு ஒரு எச்சரிக்கையை விடுக்கிறது: இதுபோன்ற முயற்சிகள் சில திட்டங்களின் இடறுகுழியைத் தவிர்க்க வேண்டும் என்பதாகும். இது வாழ்க்கையின் இந்த உருபெறும் கட்டத்தில் உள்ளவர்களின் அதிகரித்து வரும் சுய விழிப்புணர்வை மற்றவர்களுக்கான தன்னலமற்ற சேவையை நோக்கி செலுத்துவதற்கு பதிலாக, அதை "தன்னகத்தை” நோக்கி செலுத்தியும், துரதிர்ஷ்டவசமாக, இறுதியில் அது அவர்களை "வலியுறுத்தும் தன்னகத்தின்" கைதிகளாக ஆக்குகிறது. 5 முதல் 9 வரையிலான பகுதிகள், பஹாய் திருமொழிகளில் இருந்து பொருத்தமான மேற்கோள்கள் வரிசையின் மூலம் பங்கேற்பாளர்களை இந்தப் இடறுகுழியின் சில நுட்பமான ஆபத்துக்களைப் பற்றி எச்சரிக்க முயல்கின்றன. ஆரம்பகால வளரிளம் பருவத்தினரின் வாழ்க்கையில் சமூகச் சூழலுடைய விளைவுகளைப் பரிசீலிப்பதற்காக இந்த பாடப்பிரிவு தொடர்ந்து செல்கிறது, பரஸ்பர ஆதரவுக்கான ஒரு சூழலாக "இளைய இளைஞர் குழு" என்னும் கருத்தை அறிமுகப்படுத்துகிறது, அத்துடன் அத்தகைய குழுக்களின் அனிமேட்டர்களாகச் சேவை செய்ய எழும் அனைவராலும் கருதப்பட வேண்டிய தோரணையை வரையறுக்கிறது.

பாடப்பிரிவை மீளாய்வு செய்ய சிறிது நேரம் எடுத்துக் கொள்ளுங்கள், பின்னர் பங்கேற்பாளர்கள் தங்கள் ஆய்வின் மூலம் பின்வருவனவற்றைப் பற்றி என்ன புரிந்து கொள்ள வேண்டும் என நீங்கள் நினைக்கிறீர்கள் என்பதைப் பற்றி சில வார்த்தைகளைக் கூறுங்கள். இந்தப் புரிதலை அடைவதற்கு அவர்கள் எத்தகையான கருத்துக்களைக் கைவிட வேண்டும்?

அ. ஆரம்ப வளரிளம் பருவத்தின் இயல்பு: ______________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

ஆ. இளைய இளைஞர்களின் அதிகரிக்கும் விழிப்புணர்வை வழிநடத்துவது குறித்த சவால்: __________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

இ. இளைய இளைஞர் வாழ்க்கைகளில் சுற்றுச்சூழலின் விளைவுகள்: ________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

ஈ. இளைய இளைஞர் குழுவானது பரஸ்பர ஆதரவுக்கான ஒரு சூழல் என்னும் கருத்தாக்கம்: ____________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

உ. அனிமேட்டர்களாக சேவை செய்ய எழும் எல்லாராலும் மேற்கொள்ளப்பட வேண்டிய தோரணை: _________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

ஒரு கிராமத்திலோ சுற்றுப்புறத்திலோ அதிகரித்து வரும் மக்கள் எண்ணிக்கையினர் இளைய இளைஞர்களின் இயல்திறன்களை அங்கீகரித்தல், இன்று சமுதாயத்தில் நீட்டிக்கப்பட்டு வரும், இளைஞர்பாலான மனப்பான்மைகளில் இருந்து வேறுபட்ட மனப்பான்மைகளை ஊக்குவிக்கும் கலாச்சாரத்திற்குப் பங்களிக்கிறது. நூல் 5-இன் ஆய்வு பரவலாகிவிட்டதால், உங்கள் கிராமத்திலோ சுற்றுப்புறத்திலோ சமூக மட்டத்தில் என்ன வகையான மனப்பான்மை மாற்றத்தை நீங்கள் கண்டுள்ளீர்கள்?

மூன்றாவது பாடப்பிரிவு, “ஓர் அனிமேட்டராக சேவை செய்தல்”, பங்கேற்பாளர்கள் இரண்டாவது பாடப்பிரிவில் பெற்ற நுண்ணறிவுகளின் மீது அமைக்கின்றது, இளைய இளைஞர் திட்டத்தின் பிரதான நோக்கமான அவர்களின் ஆன்மிக, தார்மீக மற்றும் அறிவுசார் சக்திகளை வெளியிடுவது பற்றிய கலந்துரையாடலை ஆரம்பிக்கின்றது. பாடப்பிரிவின் வழி வளரும் அனிமேட்டர்களின் ஒரு குழுவைக் கொண்டு செல்லத் தயாராகும்போது, தார்மீக மற்றும் ஆன்மிக அதிகாரம் பற்றிய கேள்விக்கு நீங்கள் கணிசமான சிந்தனையைக் கொடுக்க விரும்புவீர்கள். ஆயினும்கூட, இந்த கேள்வி, நிச்சயமாக, ஒரு பயிற்றுநராகப் பணியாற்றுவதற்கான உங்கள் எல்லா முயற்சிகளிலும் உங்கள் மனதில் முதன்மையாக இருக்கும். கீழே உள்ள எடுபகுதியைப் படித்து பிரதிபலியுங்கள், இது இன்று சமூகத்தில் நடைமுறையில் உள்ளவற்றிலிருந்து அடிப்படையில் வேறுபட்ட சக்தி குறித்த கருத்தாகத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

> ஆன்மிக சக்தியூட்டல் பற்றிய கேள்விக்கு, பொதுவாக, பயிற்றுநர்களின் சிந்தனை மற்றும் பிரதிபலிப்பு தேவைப்படுகிறது. உண்மையில், இறுதிப் பகுப்பாய்வில், பயிற்சிக்கழக பயிற்சிகளால் இயக்கப்படும் கல்விச் செயல்முறையானது தார்மீக மற்றும் ஆன்மிக சக்தியூட்டலுக்கான ஒரு வழிமுறையாகக் கருதப்படுகிறது, இதன் மூலம் அனைத்து தரப்பு மற்றும் ஒவ்வொரு பின்னணியிலும் உள்ள மக்கள் எழுச்சி பெறவும், ஒரு சிறந்த உலக நிர்மாணிக்கவும் முடியும். இங்கு பயன்படுத்தப்படும் அதிகாரம் குறித்த கருத்தாக்கம், ஆதிக்கம் செலுத்தும் நோக்கத்துடன் அல்லது ஒருவரின் விருப்பங்கள் மற்றும் கோரிக்கைகளுக்கு இணங்கிடுமாறு மற்றவர்களைத் தூண்டும் நோக்கத்துடன் தொடர்புபடுத்தும் நடைமுறையில் உள்ள வரையறைகளிலிருந்து பெரிதும் வேறுபடுகிறது. இதற்கு மாறாக, மனித ஆவியின் சக்திகளின் வழிந்தோடலுக்கான கால்வாய்கள் ஆவதே இதன் நோக்கமாகும்: ஒற்றுமை, அன்பு, பணிவான சேவை, தூய செயல்களின் சக்தி. அத்தகைய ஒரு செயல்முறை மேம்பாடு காண்பதற்குத் தேவையான இயக்கவியலுக்கு எவ்வாறு பங்களிப்பது—இல்லை, தீவிரப்படுத்துவது—என்பது ஒரு பயிற்றுனாராகப் பணிபுரியும் செயலுக்கு மையமாகும், மற்றும் பயிற்சிப்பாடங்களைப் படிப்பாய்வில் ஒவ்வொரு குழுவாக ஈடுபடுத்தும் அனுபவத்தைக் கொண்டு, ஒவ்வொரு பயிற்றுநரும் தொடர்புள்ள பல ஊடாடும் காரணிகளின் காட்சிகளைப் பெற முடியும்.

முன்னதாக இந்தப் பிரிவில் உந்துவித்தல் என்னும் கருப்பொருளைப் பற்றி விவாதித்தோம். தனிநபரிடம் உள்ளார்ந்திருக்கும் ஆன்மிக மற்றும் அறிவுசார் சக்திகளை விடுவிக்கும் ஒரு கல்விச் செயல்முறையின் தன்மை பற்றிய சில ஆரம்ப நுண்ணறிவை நீங்கள் அங்கு பெற்றிருப்பீர்கள். இந்தச் செயல்முறையின் ஓர் அம்சம், உங்கள் நிலையான பிரதிபலிப்புக்கு ஒரு குறிக்கோளாக இருக்கும்; அது பணிவு மற்றும் சக்திக்கு இடையிலான இயக்கவியல் ஆகும். இந்தக் கருப்பொருளைப் பற்றி விவாதிக்கும் நூல் 5-இன் மூன்றாவது பாடப்பிரிவின் 19-வது பிரிவைப் படித்து, பணிவு என்னும் ஆன்மிக குணம் இல்லாத நிலையில், நாம் தேடும் சக்தி எவ்வாறு பயன்படுத்தப்படாமல் இருக்கும் என்பதைப் பற்றி சில வார்த்தைகளை எழுதுங்கள்.

வயது 12-க்கும் 15-க்கும் இடையில் உள்ளோருக்கு சக்தியூட்ட முனையும் ஒரு கல்விச் செயல்முறை, நூல் 5-இன் மூன்றாவது பாடப்பிரிவு பரிந்துரைப்பது போன்று, ஆன்மிகப் புலனறிவை மேம்படுத்துவது, வெளிப்படுத்தும் ஆற்றலை மேம்படுத்துவது மற்றும் ஓர் உறுதியான தார்மீகக் கட்டமைப்பை நிர்மாணிப்பது ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கும். இந்த விஷயத்தில், பயிற்றுநருக்கான அறிமுகக் குறிப்புகள் பின்வருமாறு தொடர்கின்றன:

இந்த நூலில், நிச்சயமாக, பயிற்றுநரின் அக்கறை அடுத்த தலைமுறைக்கும், இளம் பருவத்தினருக்கு அவர்களின் வெளிப்பட்டு வரும் சக்திகளை பலனளிக்கும் வகையில் செயல்படுத்தும் கல்வி செயல்முறையின் தன்மையின்பாலும் மேலும் விரிவடைகின்றது. இந்தச் செயல்முறையின் மையத்தில் சிந்தனை மற்றும் வெளிப்பாட்டின் பரஸ்பரமாக வலுவூட்டும் சக்திகள் உள்ளன. வளரிளம் பருவத்தில் வியத்தகு முறையில் அதிகரிக்கும் சுருத்தியலான சிந்தனையில் ஈடுபடும் மனதின் ஆற்றல் இளைய இளைஞர்களிடம் வலுவடைகிறது, அவர்கள் தங்களைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றிய பகுப்பாய்வுக்கும், அவர்களின் சமுதாயத்தின் மீதான ஆரம்ப செயல்பாடுகளுக்கும் தொடர்புடைய அறிவியல், தார்மீக மற்றும் ஆன்மிகக் கருத்துக்களைப் பயன்படுத்தக் கற்றுக்கொள்கிறார்கள். இருப்பினும், எவ்வளவுதான் முக்கியமானதாக இருந்தாலும், பகுத்தறிவுமிக்க பகுப்பாய்வு சக்திக்கு ஆன்மிகப் புலனுணர்வின் தேவை உள்ளது. அதன் மூலம், மனோ சக்திகளைப் பயன்படுத்துவதன் மூலம் மட்டுமே கிடைக்காத புரிதலுக்கான கால்வாய்கள் திறக்கப்படுகின்றன. எனவே, இளைய இளைஞர்கள், ஆன்மிக சக்திகளை அடையாளம் கண்டுகொள்ளவும், சரியான தார்மீகத் தேர்வுகளைச் செய்யவும் அவர்கள் எதிர்கொள்ளும் சூழ்நிலைகளில் ஆன்மிகக் கொள்கைகளை அடையாளம் காண்பதற்கு உதவப்பட வேண்டும். ஒரு நபரின் எண்ணங்களையும் நடத்தையையும் நிர்வகிக்கும் தார்மீக கட்டமைப்பு அவர்களின் சிந்தனையை வெளிப்படுத்தும் மொழியின் கட்டமைப்புடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது என்பது தொலைநோக்காகக் காணப்படும் கல்விச் செயல்முறையின் அடிப்படைக் கருத்தாகும். நூல் 5-இன் முதல் இரண்டு பாடப்பிரிவுகள் இந்தச் செயல்முறையில் என்ன நுண்ணறிவுகளை வழங்கியிருந்தாலும், மூன்றாவது பாடப்பிரிவின் 5 முதல் 19 வரையிலான பகுதிகள் திட்டத்தில் பயன்படுத்தப்படும் உரைகளில் இருந்து தேவையான உதாரணங்களை எடுத்துக்கொண்டு, அதன் பல்வேறு பரிமாணங்களைத் தெளிவாக்க முயல்கின்றன. ஒவ்வொரு பயிற்றுநரும் இந்தப் பகுதிகளின் மூலம் ஒரு குழுவை வழிநடத்திட ஆயத்தமாவதற்கு அப்பகுதிகளை கவனமாக மதிப்பாய்வு செய்வது நல்லது. பல்வேறு கலாச்சாரங்களில் உள்ள இளைய இளைஞர்களுக்கு ஆற்றலளிப்பதற்கான உரைகளின் இயல்திறனைப் பற்றிய புரிதலை பங்கேற்பாளர்கள் தங்கள் படிப்பாய்வில் இருந்து பெற்றிடுவர் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

இளைய இளைஞர் படிப்பாய்வு செய்த நூல்களை, மேற்கூறியபடி, பேசப்பட்ட கருப்பொருள்கள் மற்றும் கருத்துக்கள் மற்றும் பயன்படுத்தப்படும் மொழி ஆகியவற்றில் அவை எவ்வாறு திட்டத்தின் நோக்கங்களுக்கு பங்களிக்கின்றன என்பதைப் பார்ப்பதற்கு இது இடமல்ல. நூல் 5-ஐ மையமாகக் கொண்ட ஒரு பயில்வட்டத்தின் பின்னணியில் இதைச் செய்ய நீங்கள் தயாராக இருப்பதுடன், ஆன்மிகப் புலனுணர்வை உருவாக்கிக் கொள்வதற்கும், வெளிப்படுத்தும் சக்திகளை மேம்படுத்துவதற்கும், இளைய இளைஞர்களிடையே ஒரு நல்ல தார்மீகக் கட்டமைப்பை உருவாக்குவதற்கும் நூல்களின் இயல்திறனைப் பற்றிய சிறிது புரிதலைப் பெற அதன் உறுப்பினர்களுக்கு உதவிட வேண்டும். குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளிலும், பிரிவு 20 முதல் 23 வரையிலும் உள்ள பயிற்சிகளும் இந்த விஷயத்தில் உங்களுக்கு உதவும்.

ஒரு பயிற்றுநர் என்னும் முறையில் உங்கள் முயற்சிகளுடன் பொருந்தும் ஆன்மிகப் புலனுணர்வு குறித்த கருத்தாக்கத்தின் மீது பிரதிபலிப்பது உங்களுக்கு நன்மை பயக்கும். உண்மையான புரிதல் என்னும் கரைகளை அடைவதில் ஒவ்வொரு பயிற்சிக்கழகப் பாடங்களில் பங்கேற்பாளர்களுக்கு உதவிட வேண்டுமானால் ஆன்மாவின் சக்திகளுள் ஒன்றான ஆன்மிகப் புலனுணர்வை பயிற்றுநர் மேம்படுத்திட வேண்டும். இந்த அடிப்படையில், இந்தக் கருத்தை ஆராயும் நூல் 5-இன் மூன்றாவது பாடப்பிரிவின் 5 முதல் 7 வரையிலான பகுதிகளை நீங்கள் மதிப்பாய்வு செய்ய பரிந்துரைக்கப்படுகிறது. பின்னர், ஓர்

இந்த உள் ஆற்றலை எவ்வாறு கூர்மைப்படுத்தலாம் என்பதைப் பற்றி சில வார்த்தைகளைக் கூறுங்கள்.

## பகுதி 23

ஒருவரின் வாழ்க்கை முழுவதும் ஒரு சேவை பாதையில் நடப்பது என்பது தெளிவாகவே (சமயத்தைப்) போதித்தலைக் குறிக்கின்றது. பஹாவுல்லாவின் செய்தியைப் பரப்புவது நாம் மேற்கொள்ளக்கூடிய இன்றியமையா சேவைகளுள் ஒன்றாக இருப்பினும், (சமயத்தைப்) போதித்தல் என்பது ஓர் இருத்தல் நிலையும் ஆகும். அது, நம்மீது அபரிமிதமாகப் பொழியப்பட்ட ஒன்றை நாம் சதா பிறருடன் பகிர்ந்து கொள்கின்றோம். இக்கருப்பொருளின் ஆழமான இயல்பை கருத்தில் கொண்டு, நாம் சமயத்தைப் போதித்தல் என்னும் நூல் 6-ஐ விவாதிப்போம். அதை மூன்று பாடப்பிரிவுகளின் வழி செய்வோம், முதல் பாடப்பிரிவை இங்கும், மற்ற இரண்டு பகுதிகளையும் பகுதிகள் 24 மற்றும் 25-லும் பார்ப்போம்.

ஆரம்பத்தில், தனிப்பட்ட திட்டங்களின்படியோ கூட்டு நடவடிக்கையின் மூலமாகவோ கடவுளின் சமயத்தைக் கற்பிக்கும் திறனை ஒரே பாடத்தில் உருவாக்கப்பட முடியாது என்பது உங்களுக்கு தெளிவாக இருக்க வேண்டும். மனிதகுலத்தின் நிலைமைகள் இடத்திற்கு இடம் கணிசமாக வேறுபடுகின்றன, அத்துடன் ஒவ்வொரு கலாச்சாரமும், ஒவ்வொரு வயதினர் குழுவினரும், ஒவ்வொரு மக்களும் அதன் சொந்த சூழ்நிலைகளை முன்வைக்கின்றன, ஆதலால், சமயத்தின் போதனைகளை தங்கள் சக மனிதர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புவோர் அதைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். இருந்தாலும், பொருத்தமான திறனாற்றல் உருவாக்கப்படக்

கூடிய சில அடிப்படை சர்வலோக உண்மைகள் உள்ளன; அவைதான் நூல் 6-இன் மைய அக்கறையாகும்.

இந்த உண்மைகளில், "இருத்தல்" மற்றும் "செய்தல்" ஆகியவற்றின் நிரப்புத்தன்மையை விட வேறு எதுவும் இங்கு முக்கியமல்ல. நூலின் ஆசிரியராகப் பணியாற்றுவதில், அவ்விரண்டின் ஒன்று மற்றொன்றைச் சார்ந்திருப்பது பங்கேற்பாளர்களால் முழுமையாகப் பாராட்டப் படுவதை நீங்கள் உறுதிபடுத்த வேண்டும். உண்மையில், இந்தக் கருப்பொருள் பிரதான வரிசையால் பேணி வளர்க்கப்பட்ட கல்விச் செயல்முறையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது--இந்தச் செயல்முறையில் படிப்பும் செயலும் இணைந்துள்ளன. பொதுவாகப் பயிற்சிப்பாடங்களின் வரிசையானது பல அம்சங்களை ஒன்றாக இணைக்க முயற்சிக்கிறது, அவை சில சமயங்களில் ஒன்று மற்றொன்றிற்கு எதிராக வைக்கப்படுகின்றன, ஆனால் உண்மையில் அவை ஒரே யதார்த்தத்தின் நிரப்புப் பரிமாணங்களாகும். இந்த வழியில், தனிநபர்கள் படிப்புகள் மூலம் முன்னேறும்போது, யதார்த்தத்தை இருமைகளின் தொகுப்பாகக் குறைக்கும் போக்கு படிப்படியாகக் கடக்கப்படும் என நம்பப்படுகிறது. பயிற்றுநருக்கான அறிமுக உபகரணத்திலிருந்து கீழே உள்ள எடுபகுதி இந்தக் கருப்பொருளை வெளிச்சப் படுத்துகிறது:

> தமது சமயத்தைக் போதிக்க வேண்டும் என்னும் பஹாவுல்லா நமக்கு விதித்துள்ள கடமையின் தன்மையை ஆராய்வதில், முதலாம் பாடப்பிரிவு பல அடிப்படைக் கருத்துக்களை எடுத்துக் கொள்கின்றது. பாடிப்பிரிவின் ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப் பட்டவற்றில் "தூண்டப்படுதல்" என்னும் கருத்து உள்ளது. பங்கேற்பாளர்கள், போதித்தல் என்னும் நமது கடமை, நாம் செய்யும் செயல்களைப் போலவே நமது உள் நிலையிலும் அக்கறை கொண்ட ஒன்று என்பதை அங்கீகரிக்க ஊக்குவிக்கப்படுகின்றனர். "இருத்தல்" மற்றும் "செய்தல்" என்பது பஹாய் போதனைகளின்படி வாழும் வாழ்க்கையின் இரண்டு நிரப்பு அம்சங்களாகும்; இது பயிற்சிப்பாடங்கள் வரிசை முழுவதற்கும் அடிப்படையான கருப்பொருளாகும். இங்கே அது வெளிப்படையாக்கப்பட்டு, உண்மையில், நூலின் ஒட்டுமொத்த கட்டமைப்புக்கும் வடிவம் கொடுக்கிறது. இந்த யோசனை சமயத்தைப் போதிப்பது தொடர்பானது என்பதால், பாடப்பிரிவின் ஆரம்பப் பகுதிகள் பங்கேற்பாளர்களுக்கு இந்த யோசனையைப் பற்றிய ஆன்மிக நுண்ணறிவைப் பெற உதவிடும். திருமொழிகளில் காணப்படும் பல உருவகங்கள் "இருத்தல்" மற்றும் "செய்தல்" ஆகியவற்றுக்கு இடையே உள்ள தொடர்பைக் காண அவர்களுக்கு உதவுகின்றன--குறிப்பாக, ஒரு சுடரின் உருவகம், இது எவ்வளவு சிறியதாக இருப்பினும், அது வெப்பத்தையும் ஒளியையும் அளிக்கிறது. போதிக்கும் செயலானது, அது இருத்தல் நிலையின் இயல்பான வெளிப்பாடாகும் என பரிந்துரைக்கப்படுகின்றது; இது ஒரு தூண்டப்பட்ட நிலை என சிறப்பாக விவரிக்கப்படலாம்; இதில் கடவுளின் அன்பு நம் இதயங்களில் மிகவும் பிரகாசமாக எரிவதால், அவரது திருமொழியைப் பரப்பிட நாம் இடைவிடாது முயற்சி செய்கிறோம்.

நூல் 6-இன் முதல் பாடப்பிரிவின் 1 முதல் 13 வரையிலான பகுதிகளை இப்போது மதிப்பாய்வு செய்வது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். இந்தப் பகுதிகளில் உள்ள பத்திகளை ஆய்வு செய்வதன் மூலம் பங்கேற்பாளர்கள் எவ்வாறு "இருத்தல்" மற்றும் "செய்தல்" ஆகியவற்றின் நிரப்புத்தன்மையானது சேவைத் துறையில் நடைமுறை அடிப்படையில் எவ்வாறு வெளிப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்வதற்கு எவ்வாறு உதவுகிறது? இதில், இத்தகைய எதிரிணையான சிந்தனைகள் சமயத்தை மேம்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையை பங்கேற்பாளர்கள் கண்ணுறும் விதத்தில் தாக்கத்தை ஏற்படுத்தாமல் இருக்க வேண்டுமானால், இவ்விரண்டையும்

பிரிக்கும் பொதுவான சில கருத்துகளின் தாக்கங்கள் பங்கேற்பாளர்களுக்கு தெளிவாக இருக்க வேண்டும். பயிற்சிப்பாடத்தில் சேரும்போது அவர்களுக்குப் போதித்தல் பற்றிய சில யோசனைகள் கீழே உள்ளன. இந்தப் பகுதிகளைப் படிப்பாய்வு செய்வதன் மூலம் அவர்களின் சிந்தனை எப்படி மாறியிருக்கும்?

அ. “சமயத்தைப் பற்றிய ஆழ்ந்த அறிவுடையோர் மட்டுமே சமயத்தைப் போதிக்க வேண்டும்.”

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

ஆ. சமயத்தைப் போதிப்பதற்கு நாம் முழுமையாக ஆழம் அடையும் வரை காத்திருக்க வேண்டும்.

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

இ. “தேடுவோரிடம் சரியானவற்றைக் கூறுவதே முக்கியமாகும்; நமது ஆன்மிக நிலை அதற்கு அடுத்த முக்கியத்துவம் உடையது

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

ஈ. “உண்மையில் நமது உள் நிலையே முக்கியமானது; ஆதலால் ஓர் உண்மையான பஹாயினுடைய தன்மைகளை நாம் அடையும் வரை நாம் (சமயத்தை) போதிக்கலாகாது. அதன் பின்னர் நமது உதாரணமே சிறந்த போதகராக இருக்கும், அங்கு பேச்சுக்கு தேவை இருக்காது.”

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

இந்தப் பகுதிகளைப் பற்றி விவாதிப்பதில், பங்கேற்பாளர்கள், சேவை பாதையில் பிரவேசித்ததில் இருந்து பின்பற்றி வரும் இரட்டைத் தார்மீக நோக்கமானது அவர்கள் வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்தையும்--அவர்களின் அறிவைத் தேடல், தெய்வீக சட்டத்திற்குக் கீழ்ப்படிதல், அவர்களின் கடவுளுக்கு சேவை செய்வதற்கும், அவரிடம் நெருங்கி வருவதற்கும், ஆன்மிக குணங்களைப் பெறுவதற்கும், அவர்களின் குணத்தை மேம்படுத்துவதற்குமான முயற்சிகள்--இணைக்கின்றது என்பதை அவர்கள் காண வருவார்கள் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. சமயத்தைப் போதிக்கும் சூழலில் அவர்கள் இந்தத் தொடர்பை ஏற்படுத்துவதை நீங்கள் எவ்வாறு உறுதிபடுத்துவீர்கள்?

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

நூல் 6-ஐப் பற்றிய உங்கள் சொந்த ஆய்விலிருந்து நீங்கள் நினைவுகூர்வது போல, இந்தப் பாடப்பிரிவில் ஆராயப்பட்ட மற்றோர் உண்மை, போதித்தலின் புனிதத் தன்மையாகும், இது பேச்சு என்னும் திறவுகோலைக் கொண்டு பஹாவுல்லாவின் திருவெளிப்பாட்டிற்கு மனித இதயம் என்னும் மாநகரத்தை திறந்திடுவதாகக் காணப்படும். பகுதிகள் 14 முதல் 17 வரையிலான பகுதிகள் இந்தக் கருத்தைப் பங்கேற்பாளர்களுக்கு அறிமுகப்படுத்துகின்றன, அத்துடன் பயிற்றுநருக்கான அறிமுகக் குறிப்புகள் இந்த பகுதிகளின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன:

> இங்குள்ள பகுதிகளில், இச்செயலுடைய புனிதத்தன்மையின் உயர்த்தப்பட்ட உணர்வு எவ்வாறு களத்தில் முயற்சிகளின் செயல்திறனை மட்டுமே அதிகரிப்பதில்லை என்பதைப் பற்றி சிந்திக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மாறாக, மிக முக்கியமாக, இது உலக விவகாரங்களுக்கும் மேலாக இத்தகைய முயற்சிகளை உயர்த்திடுவதற்குத் தேவையான ஆன்மிக சக்திகளை வெளியிடுகிறது, அதன் மூலம், தனிப்பட்ட மற்றும் கூட்டான இரண்டு நிலையிலும் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய செயல்முறைகளை இயக்குகின்றது. பகுதி 17-இல் பங்கேற்பாளர்கள் இந்த உயர்த்தப்பட்ட நனவுணர்வின் தாத்பர்யங்களை ஆராய்ந்திட சிறிது நேரம் செலவிடுவர். பயிற்றுநர் அவர்களுள் எழக்கூடிய விஷயங்களுள் இரண்டு தனித்து நிற்பதை உறுதி செய்திட விரும்புவார்; முதலாவதாக, அவற்றின் புனிதத் தன்மையை சமரசம் செய்யக்கூடிய, அவர்களின் கற்பித்தல் முயற்சிகளின் அணுகுமுறைகள் மற்றும் நடைமுறைகளை அறிமுகப்படுத்தும் சில மனநிலைகளை--அவை சமூகத்தில் பரவலாக இருந்தாலும்— அவர்கள் அவற்றைப் பின்பற்றாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரு முற்போக்கான பொதுமை நோக்கத்திற்காக உறுப்பினர்களைச் சேர்ப்பது போல் (சமயத்தைப்) போதிக்கும் செயலை அணுகக்கூடாது, அதைவிட பயனருக்கு எவ்வளவுதான் நன்மை பயப்பதாக இருப்பினும் அதை ஒரு பொருள் விற்பனை போன்று கருதக்கூடாது. இரண்டாவதாக, சேவை பாதையில் அவர்களின் அனைத்து முயற்சிகளும் இதயங்களைக் கடவுள் திருமொழியுடன் தொடர்புபடுத்துவதை உள்ளடக்கியிருப்பதால், அம்முயற்சிகளும் இயல்பில் புனிதமானவை, அத்துடன் அவற்றை இந்த விழிப்புணர்வுடனேயே அணுக வேண்டும் என்பதை அவர்கள் அங்கீகரிக்க வேண்டும்.

இப்போது பிரிவுகள் 14 முதல் 17 வரை மதிப்பாய்வு செய்யவும். குறிப்பாகப் பிரிவு 17-ஐப் படிப்பதன் மூலம், போதித்தல் செயலின் புனிதத்தன்மையின் தாத்பர்யங்களைப் பற்றி பங்கேற்பாளர்கள் என்ன நுண்ணறிவுகளைப் பெறுவர் என நம்புகிறீர்கள்? (தற்போதைய) மேலாதிக்க கலாச்சாரத்தில் பொதிந்துள்ள கருத்துகள் மற்றும் அணுகுமுறைகளை போதிக்கும் செயலுக்குப் பயன்படுத்தும் போக்கை எதிர்த்திட அவர்களுக்கு என்ன வகையான எண்ணங்கள் உதவும்? சமயத்தைப் போதித்தல் குறித்து ஒருவருக்கு இருக்கக்கூடிய கீழ்க்காணும் எண்ணங்களைக் கவனியுங்கள். தெரிவிக்கப்படும் செய்தியைப் பற்றி ஒவ்வொன்றும் என்ன பரிந்துரைக்கின்றன?

அந்தச் செய்தியை நாம் பகிர்ந்து கொள்ள விரும்பும் மனிதரைப் பற்றிய என்ன கருத்தை அது கொண்டுள்ளது?

அ. “நமது செய்தி எப்படி பொட்டணப் படுத்தப் பட்டுள்ளது என்பதே முக்கியமாகும்.”

______________________________________________

______________________________________________

______________________________________________

ஆ. “சமயத்தைப் போதித்தல் என்பது ஒரு சமுதாய முன்னேற்ற இயக்கத்திற்கு மக்களைச் சேர்ப்பது போன்றதாகும். மக்களுடன் சமயத்தின் கோட்பாடுகளைப் பகிர்ந்துகொண்டால் போதுமானது, ஏனெனில் அதுவே மக்களைப் பெரும்பாலும் ஈர்க்கக்கூடியது.”

______________________________________________

______________________________________________

______________________________________________

இ. “நாம் இறைவனின் சமயத்தைப் போதிக்கும் போது, கடவுளுக்கே உரியதாகிய மனித இதயத்தின்பால் உரைக்கின்றோம், அத்துடன் நாம் நமது பேச்சு என்னும் திறவுகோலைக் கொண்டு அந்த இதயம் என்னும் மாநகரத்தின் கதவுகளை பஹாவுல்லாவின் திருவெளிப்பாட்டின்பால் திறக்கின்றோம்.”

______________________________________________

______________________________________________

______________________________________________

புனிதத்தன்மை பற்றிய விவாதத்தைத் தொடர்ந்து, பகுதி 18-ல் பாடப்பிரிவு மற்றொரு ஆழமான ஆன்மிக உண்மையை எடுத்துக்கொள்கிறது–மனித இதயம் என்னும் நகரத்தின் வாயில்கள் திறக்கப்பட்டு, இதயம் பஹாவுல்லாவின் வெளிப்பாட்டுடன் இணைக்கப்படும்போது, தன்மைமாற்றம் குறித்த ஒரு நீடித்த செயல்முறை தொடங்குகிறது. நிச்சயமாக, நூல் 5-இல், சமய திருமொழிகளில் தொலைநோக்காகக் காணப்பட்டுள்ள தனிநபர் மட்டத்திலும் சமூகத்தின் கட்டமைப்பிலும் உள்ள இரட்டை தன்மைமாற்றத்தைப் பற்றி நீங்கள் சிந்தித்தீர்கள். தனிநபரின் அறிவுசார் மற்றும் ஆன்மிக வளர்ச்சிக்கும் சமூக கட்டமைப்புகளில் உள்ள கரிம மாற்றத்திற்கும் இடையே ஒரு பரஸ்பர உறவு உள்ளது என்பது இப்போது உங்கள் சொந்த சிந்தனைக்கு ஒருங்கிணைந்ததாகும். இதில், மனித இதயத்தை சுற்றுச்சூழலில் இருந்து பிரிக்க முடியாது என்னும் பாதுகாவலரின் கூற்று உங்களுக்கு நினைவிருக்கும், ஏனெனில் தனிநபர்களின் தரங்களும் நடத்தைகளும் அவர்களின் சுற்றுச்சூழலை வடிவமைக்கின்றன, அத்துடன் அவை சமூக கட்டமைப்புகள் மற்றும் செயல்முறைகளால் வடிவமைக்கப்படுகின்றன. மனித இதயத்தைத் தன்மைமாற்றும் கடவுள் திருமொழியின் சக்தியைப் பற்றி, பிரிவு 18-இல் துவங்கி, நூல் 6-இன் முதல் பாடப்பிரிவில் உள்ள கலந்துரையாடலின் மூலம் இந்த ஆழமான கருத்தைப் புரிந்துகொள்வது எவ்வாறு மேம்பாடு காண்கிறது?

## பகுதி 24

"இருத்தல்" மற்றும் "செய்தல்" ஆகிய இரண்டையும் விளைவுத்திறமுடைய போதித்தல் எவ்வாறு உள்ளடக்குகிறது என்பதைப் பற்றி சிந்திக்க பங்கேற்பாளர்களுக்கு உதவிய பின் — ஒருவரின் உள்ளார்ந்த நிலை மற்றும் நிலையான செயல்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்துதல்— புத்தகம் 6 நேரடியாக நமது அக நிலைக்குத் திரும்புகிறது. இரண்டாவது பாடப்பிரிவு, போதித்தலுக்கு அவசியமான சில குணங்கள் மற்றும் மனப்பான்மைகளில் கவனம் செலுத்தி, ஒரு தனிநபரின் குணத்தின் பூரணத்துவம் இயற்கையாகவே மற்றவர்களுக்கு சேவை செய்வதற்கான முயற்சிகளில் வெளிப்படும் என்னும் கருத்தை வலியுறுத்துகிறது, அதே சமயம் மற்றவர்களுக்கு சேவை செய்வதற்கான ஒருவரின் விருப்பம் ஒருவரின் குணத்தின் செம்மைப்படுத்தலை மேம்படுத்துகின்றது. பயிற்றுநரைப் பொறுத்தவரை, ஒரு குழுவை படப்பிரிவின் வழி வழிநடத்திச் செல்லத் தயாராகும்போது, நாம் ஒவ்வொருவரும் நம்முடைய சொந்த சூழ்நிலைகளுக்கு ஏற்ப, சேவை பாதையின் ஆன்மிகத் தன்மையைப் பற்றி மீண்டும் சிந்திப்பதற்கு இது ஒரு வாய்ப்பாகும். இதன் வெளிச்சத்தில், பயிற்றுந ருக்கான அறிமுகப் பகுதி, ஆன்மிக குணங்கள் பற்றிய நூல் 3-இல் உள்ள விவாதத்தை, ஒரு விதத்தில், எடுத்துக்கொண்டு அதை விரிவுபடுத்துகிறது:

> ஆன்மிக குணங்களின் வளர்ச்சியும், அதனுடன் தொடர்புடைய மனப்பான்மையும், ரூஹி பயிற்சிக்கழகத்தின் பயிற்சிப்பாடங்களில் மீண்டும் மீண்டும் பேசப்படும் ஒரு கருப்பொருளாகும், ஆனால் எப்போதும் ஒரு குறிப்பிட்ட திறனை உருவாக்கிக்கொள்ளும் சூழலில் — எடுத்துக்காட்டாக, ஒரு சமூகத்தின் பக்தித் தன்மைக்குப் பங்களிக்கத் தேவையான திறன், பஹாவுல்லாவின் வெளிப்பாட்டின் ஞான முத்துக்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள, குழந்தைகளின் ஆன்மிக கல்விக்கான வகுப்புகளை நடத்துதல். இந்த வழியில், அவர்கள் ஒவ்வொன்றின் இயக்கவியலையும் ஒரு புதிய வெளிச்சத்தில் ஆராய்ந்தும் சில புதிய தளங்களில் அதன் செயல்பாட்டைக் காணும் போது, மனித ஆன்மாவின் இந்த அத்தியாவசிய பண்புகளைப் பற்றிய பங்கேற்பாளர்களின் புரிதல் காலப்போக்கில் விரிவடைந்து அதிக ஆழத்தை அடைகிறது.
>
> பாடப்பிரிவின் வழி ஒரு குழுவை வழிநடத்துவதில், ஆன்மிக குணங்களின் ஆய்விற்கு நடுமையமான ஒரு கருத்தாக்கத்தை மனதிற்கொண்டிட பயிற்றுநர் விரும்புவார். பிரதான வரிசையின் எல்லா பயிற்சிப்பாடங்களிலும் வீற்றிருக்கும் இந்தக் கருத்தாக்கம், இந்தப் பாடப்பிரிவில் முன்னணி வகிக்கின்றது—குறிப்பாக, இத்தகைய பண்புகள் அவற்றின் வெளிப்படுத்தலுக்கு அவை எவ்வாறு ஒன்று மற்றொன்றைச் சார்ந்துள்ளன; எவ்வாறு துணிச்சல் விவேகத்தைக் வலிந்து கோருகின்றது; எவ்வாறு துணிச்சலின்றி விவேகம் வெளிப்படாமல் இருக்கின்றது; எவ்வாறு தூய்மை உலகியல் இலட்சியங்களிலிருந்து பற்றின்மையையும் தன்னலமின்மையையும் வேண்டுகின்றது; பரிவிரக்கம் என்பது மக்களின் திறனாற்றல் மீதான மெய்நம்பிக்கையினால் மாற்றியமைக்கப்படவிடில், அது தந்தைமனப்பான்மையின் ஆதிக்கத்திற்கு ஆளாகிடக்கூடும், அல்லது எவ்வாறு, நேர்மையின்றி, அது உண்மையில், வெறும் கபடமேயன்றி வேறில்லை; என்னும் புரிதல் போதிக்கும் செயலுக்குக் குறிப்பான முக்கியத்துவம் உடையதாகும்.
>
> ஆன்மிக குணங்கள் தான் மனிதர்களாகிய நாம் யார் என்பதை உருவாக்கும் நிரந்தர கட்டமைப்புகள் என நூல் 3-இல் முன்வைக்கப்பட்டுள்ள யோசனையை பயிற்றுநர்கள்

இப்போது நன்கு அறிந்திருக்கின்றனர். இந்தக் குணங்களைப் பெற்றிருப்பவது, மற்றவர்களுடனான நமது தொடர்புகளில் சரியான அணுகுமுறைகளை வெளிப்படுத்தவும், நம் வளர்ப்பு மற்றும் கலாச்சாரத்தின் மூலம் நாம் பெற்றிருக்கக்கூடிய விரும்பத்தகாதவற்றைத் தவிர்க்கவும் உதவுகிறது. . . .

பயிற்றுநர்களாக பணியாற்றுபவர்கள், நிச்சயமாக, எந்தவொரு ஆன்மிக குணத்தின் உருவாக்கமும் பல தொடர்புடைய கருத்துக்களைப் புரிந்துகொள்வதை உள்ளடக்கியது என்பதையும் அறிந்திருக்கிறார்கள். மேன்மேலும் உயர்ந்த அளவிலான தூய்மையை அடைவதற்கு, ஓர் உதாரணத்தை எடுத்துக் கொள்வோமானால், மனித இதயம் எதைப் பிரதிபலிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது, அதன் பிரகாசத்தை மறைக்கக்கூடிய தூசி மற்றும் மாசுகள் என்ன, அதை அத்தகைய அசுத்தங்களிலிருந்து தூய்மையாக வைத்திருப்பதற்கு என்ன தேவை என்பதைப் பற்றிய சிறிது புரிதல் தேவைப்படுகிறது. ஆனால், அத்தகைய கருத்தாக்கங்களின் ஆழமான புரிதலுக்கும் அப்பால், ஒருவர் ஆன்மிக ரீதியில் முன்னேற சித்தமும் நேர்மையான ஆசையும் கொண்டிருக்க வேண்டும். சித்தமும் ஆசையும் வெறும் அறிவார்ந்த விவாதத்தால் உருவாக்கப்பட மாட்டாது; ஒவ்வொரு தனிமனிதனும் அவனது உள் நிலை குறித்து அவன் ஆழமாகவும் தீர்க்கமாகவும் பிரதிபலிக்க வேண்டும். அப்படியானால்—குற்ற உணர்வுகளைத் தூண்டாத, பாவ மன்னிப்பிற்கு அழைப்பு விடுக்காத, குற்றங்கள் சாட்டுவதை ஊக்குவிக்காத, ஒரு நண்பர்கள் குழு உணர்வெழுச்சியின்றி கருத்தியலான மற்றும் நடைமுறையான விஷயங்களைப் பற்றி விவாதிப்பதற்கு, ஒவ்வொருவரும் அவரவருக்கு என்ன தேவை என்பதைப் பற்றி தனிப்பட்ட முறையில் சிந்திப்பதற்கு—உகந்த பிரதிபலிப்பிற்கான சூழலைப் பேணி வளர்ப்பது ஆசிரியரின் பணியாகும்.

பல்வேறு சேவைச் செயல்கள் புரிவதில் நாம் உருரவாக்கிக் கொண்டிருக்கும் செயல்திறன்களைப் பயன்படுத்தும்போது, ஆன்மிக குணங்களைப் பற்றிய நமது புரிதல் விரிவடைகிறது என மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. நூல் 2-க்கு முன்பே பிரதிபலிப்புக்கு உட்பட்ட கீழ்க்காணும் இரண்டு குணங்களைக் கவனியுங்கள். சேவை பாதையில் நீங்கள் முன்னேறியும், உரையாடல்களில் ஈடுபடுவதற்காகவும் ஆன்மிக முக்கியத்துவமிக்க உரையாடல்களில் ஈடுபடவும், குழந்தைகளுக்கான வகுப்புகளை நடத்தவும் இளைய இளைஞர்கள் குழுவிற்கு அனிமேட்டராக உதவிடவும் இல்லங்களுக்கு விஜயம் செய்துள்ளதால், அவற்றைப் பற்றிய உங்கள் புரிதல் எவ்வாறு விரிவடைந்தது என்பது குறித்து சில வார்த்தைகளைச் சொல்ல முடியுமா?

பற்றின்மை: ____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

மனத்தாழ்வு: ____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

இனி மேலும் செல்வோம். முதல் ஆறு பயிற்சிக்கழகப் பாடங்களின் உள்ளடக்கத்துடன் நீங்கள் நன்கு பரிச்சயமாகியிருப்பீர்கள்: நீங்கள் முன்பு ஒரு பங்கேற்பாளராக இருந்துள்ளீர்கள்; , உங்கள் சொந்த வாழ்க்கையிலும் சமூகத்தின் வாழ்க்கையிலும் போதனைகளின் பயன்பாடு மற்றும் தாக்கங்கள் பற்றிய உங்கள் புரிதலை மேம்படுத்தும் சேவைச் செயல்களைச் செய்திருக்கிறீர்கள்; மற்றும் இங்கு கல்விச் செயல்முறையை வடிவமைக்கும் கருத்தாக்கங்கள் மற்றும் கோட்பாடுகளை இங்கே பிரதிபலிப்பு செய்துள்ளீர்கள். இந்த வளமான அனுபவத்தின் வெளிச்சத்தில், "செயல்திறன்கள்" என்ற கருத்தைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள், அதன் மேம்பாட்டிற்கு அறிவு, ஆன்மிக குணங்கள் மற்றும் பாராட்டத்தக்க மனப்பான்மைகள் மற்றும் பல திறன்களும் திறமைகளும் தேவை என நாங்கள் கூறியுள்ளோம். ஆன்மிக குணங்களைப் பேணி வளர்ப்பது மற்றும் புரிதலை வளர்ப்பது இல்லாவிடில், திறனாற்றல் உருவாக்கச் செயல்முறையானது ஒரு குறுகிய அர்த்தத்தில், தகவலைக் கையகப்படுத்துதலிலும் திறன்களை பெறுவதிலும் மட்டுமே அக்கறை கொண்டுள்ள தொழில்நுட்பப் பயிற்சியாக மாறிடும்.

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

இப்பொழுது, ஒவ்வொரு பயிற்சிக்கழக பாடத்திலும் ஓர் இன்றியமையாப் பகுதியாக இருக்கும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள எடுபகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள இவ்வகையான ஆழ்ந்த பிரதிபலிப்பில் ஈடுபடுவதற்கு படிப்புவட்ட பங்கேற்பாளர்களுக்கு உதவிடும் சூழ்நிலையை உருவாக்குவதற்கு போதுமானதும் பொருத்தமானதுமான கவனம் செலுத்தப்படுவதை ஒரு பயிற்றுநர் எவ்வாறு உறுதிபடுத்திட முடியும்?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

## பகுதி 25

புத்தகம் 6 இன் மூன்றாவது அலகு(unit) கற்பிக்கும் செயலில் கவனம் செலுத்துகிறது. சம்பந்தப்பட்ட திறனாற்றல்களில், இரண்டு பாடப்பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன: பஹாவுல்லாவின் செய்தியை அங்கீகரிக்கவும் அதற்கான விளைவுத்திறத்தைப் பேணி வளர்ப்பதற்குமான திறன் மற்றும் பஹாய் போதனைகளை சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான முறையில் உறுதியுடன் முன்வைக்கும் திறன். யூனிட்டின் மையமானது பிந்தையதற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது, அத்துடன் பங்கேற்பாளர்கள் அதன் இயல்பைப் பற்றி சிந்திக்க உதவுவதற்காக, ஒரு கற்பனையான சூழ்நிலையை அவர்களின் பகுப்பாய்வுக்காக

முன்வைக்கப்பட்டுள்ளது—இரண்டு இளைஞர்கள், அன்னா மற்றும் அவரது தோழி எமிலியா இடையேயான உரையாடல். ஒரு பயிற்றுநராக, பங்கேற்பாளர்கள் பரிசீலனையில் உள்ள திறனாற்றல் தொடர்பான இரண்டு முக்கிய விஷயங்களைப் பெற்றுச் செல்வதை உறுதிச்செய்ய வேண்டும், அவற்றில் முதலாவது கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

> . . . பங்கேற்பாளர்கள் பகுதிகள் 4 முதல் 6 வரையிலுள்ள கருத்தாக்கங்களுக்கும் தகவலுக்கும் இடயிலுள்ள வேறுபாட்டை பாராட்டுவதுடன் அந்த வேறுபாடு ஏன் முக்கியமாகின்றது என்பதையும் பாராட்ட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, வெறும் தகவல்களை மட்டும் உள்வாங்கிக்கொள்வதின்றி, கருத்துக்கள் மற்றும் ஆழமான உண்மைகளைப் புரிந்துகொள்வதே ஆன்மாக்கள் பஹாவுல்லாவுடன் நெருக்கமுற உதவுகிறது. போதிக்கும் செயல் எந்த அளவுக்கு நனவுணர்வை உயர்த்துவதிலும், புரிதலைப் பேணி வளர்ப்பதிலும் அக்கறை கொண்டிருக்கிறதோ, அது அந்த அளவுக்கு தனிமனிதர்களுக்கு அறிவுப்பூர்வமாகவும் ஆன்மிக ரீதியிலும் சக்தியளிக்க உதவும் ஒரு வழிமுறையாகக் கருதப்படுகிறது. இங்கே, பங்கேற்பாளர்கள் மற்றவர்களை உண்மை அறிவின் கரைகளை நோக்கி எவ்வாறு வழிநடத்துவது என எண்ணும் போது, பயிற்சிக்கழக செயல்முறைக்குள் பிரவேசித்ததில் இருந்து கடவுள் திருமொழியுடன் ஊடாடுவதற்கும் புரிதலை அடைவதற்கும் உருவாக்கி வந்த திறனாற்றல் இப்பொழுது செயல்பாட்டிற்கு வரும்.

நீங்கள் இப்பொழுது பகுதிகள் 4 முதல் 6 வரை மறுபடியும் படிக்குமாறு ஊக்குவிக்கப்படுகின்றீர்கள். கருத்தாக்கங்களுக்கும் தகவலுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை காண்பதற்கான திறன் எவ்வாறு

— நமது சக மனிதர்களுக்கு சமயத்தைப் போதிக்கும் நமது முயற்சிகளுக்கும் அவர்கள் உண்மை அறிவின் கரைகளை அடைவதற்கு உதவுவதிலும் பயன்படுகின்றது?

________________________________________

________________________________________

________________________________________

— பயிற்சிப்பாடங்கள் முழு வரிசைக்கும் மிகவும் மையமாக இருக்கும், புரிதலின் மேம்பாட்டிற்குப் பங்களிப்பதற்கான ஒரு பயிற்றுநரின் திறனை மேம்படுத்துகின்றது?

________________________________________

________________________________________

________________________________________

போதனைகளை சமயோசிதமான முறையில் முன்வைக்கும் திறனாற்றல் தொடர்பான இரண்டாவது விஷயத்தைப் பொறுத்தவரை, பங்கேற்பாளர்கள், பின்பற்றுவதற்கு எந்த ஒரு சூத்திரமும் இல்லை என்றாலும், யோசனைகளை ஒன்றிணைக்கும் ஒவ்வொரு வழியும் பயன்மிக்கதாக இருந்திடாது என்பதை உணர வேண்டும். எமிலியாவுடனான அன்னாவின் உரையாடலைப் பகுப்பாய்வு செய்தல், ஒரு திறமையான வழங்கல் எதை உள்ளடக்கியுள்ளது என்பதைப் பாராட்டிட அவர்களுக்கு உதவும். அவ்வுரையாடல், அவர்கள் கண்மூடித்தனமாக பின்பற்ற

வேண்டிய ஒரு நிலையான யோசனை வரிசையைப் பிரதிநிதிக்கவில்லை என்பதைப் பங்கேற்பாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும். உண்மையில், வெவ்வேறு பின்னணிகள் மற்றும் ஆர்வங்களுக்கு ஏற்ப வழங்கலை எவ்வாறு மாற்றியமைப்பது என்பதைப் பற்றி சிந்திக்க அவர்களை ஊக்குவிக்கும் வகையில் பயிற்சிகள் குறிப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இதில், அவர்கள் உணர வேண்டியது என்னவென்றால், சமயத்தின் அனைத்து பயன்விளைவுமிக்க விளக்கங்களும் பொதுவான சில பண்புக் கூறுகளைக் கொண்டுள்ளன. அன்னாவின் வழங்கலை மனதில் கொண்டு, பின்வருவனவற்றில் எது பயன்விளைவு மிக்க வழங்கலின் (ப) பண்புகள் மற்றும் எவை நிச்சயமாக (இ) இல்லை என்பதைத் தீர்மானிக்கவும்:

ஒரு பயன்விளைவு உடைய வழங்கல்

_______ எளிமையானது ஆழமிக்கது

_______ தெளிவானது

_______ தெளிவில்லாதது

_______ திறந்த மனப்பான்மையை வெளிப்படுத்துகிறது

_______ வழங்கல் செய்பவருடைய மெய்நம்பிக்கையின் ஆழத்தைப் பிரதிபலிக்கின்றது

_______ ஒரு சர்வலோக கல்வியாளர் என்னும் முறையில் பஹாவுல்லாவின் மீது கவனம் செலுத்துகின்றது, மற்றும் என்ன கூறப்படுகின்றது என்பதற்கான மூலாதரமாக அவரது போதனைகளை தெளிவாக அடையாளங் காண்கின்றது.

_______ சமயத்தில், கடவுளின் அன்பு மற்றும் பரிவிரக்கத்தின் வெளிபாடாக விளங்கும் சட்டங்கள் உள்ளன, அவற்றைப் பின்பற்றுதல் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்குமான மூலகாரணம் ஆகும்.

_______ ஒரு புதிய சமுதாயத்தை ஒன்றாக நிர்மாணிக்க செயல்பட்டுக்கொண்டிருக்கும் மூன்று பங்கேற்பாளர்களின்—தனிநபர், சமூகம், சமயத்தின் ஸ்தாபனங்கள்—பங்கு குறித்த ஒரு நுண்காட்சியை வழங்குவதுடன் அவற்றை ஒன்றுபடுத்தும் அவற்றுக்கிடையிலான அன்பு.

_______ பஹாய் சமூகம் இன்று இருப்பது போன்றே பூரணமானது என்னும் தோற்றத்தை உருவாக்குகின்றது.

_______ சமயத்தின் நடுநாயகர்களை அறிமுகப்படுத்துகின்றது.

_______ சமய சரித்திரத்தைப் பற்றி போதுமான அளவு விளக்கி செவிமடுப்போர் மற்றும் இரட்டை அவதாரங்களுக்கிடையில் ஒரு தொடர்பை ஏற்படுத்துகின்றது.

_______ பஹாவுல்லாவுக்கும் முன்னைய அவதராங்களுக்கும் இடையிலான உறவு குறித்த விரிவான பகுப்பாய்வை தவிர்க்கின்றது.

_______ உற்சாகத்தை உருவாக்குகின்றது.

_______ அழைப்புவிடுப்பதாக இருக்கின்றது.

_______ வற்புறுத்துவதாக இருக்கின்றது.

_______ திருமொழிகளிலிருந்து உரைப்பகுதிகளை பொருத்தமுற பயன்படுத்துகின்றது.

_______ உவமானங்களைப் பயன்படுத்துகின்றது.

_______ தர்க்கரீதியானது.

_______ பெரும்பாலும் தீர்க்கதரிசனங்களை அடிப்படையாகக் கொண்டது.

_______ வீண்வாதமாக இருக்கின்றது.

_______ செவிமடுப்போரின் இதயம் மற்றும் மனம் இரண்டையும் ஈர்க்கின்றது.

_______ செவிமடுப்பவரின் உணர்வுகளை சூழ்ச்சியுடன் கையாளுக்கின்றது.

_______ ஒரு பஹாய் ஆவது அதனுடன் பொறுப்புகளைக் கொண்டுவருகின்றது என்பதைத் தெளிவாக்குகின்றது.

_______ தேடுனரின் அச்சத்தை சூழ்ச்சியுடன் கையாளுகின்றது.

_______ அதிகமான விவரங்களைக் கொண்டு தேடுனர் மீது சுமை ஏற்படுத்துவதைத் தவிர்க்கின்றது.

_______ அதிக தகவல்களை வழங்குகின்றது.

_______ சிக்கலான விவரக்கூறுகளின் மீது கவனம் செலுத்துகின்றது.

_______ இக்கால கடவுளின் அவதாரத்தை கண்டுகொள்வதற்கான செவிமடுப்பவர் மெய்நம்பிக்கையைப் பிரதிபலிக்கின்றது.

சமயச்சூழலுக்குப் பொருத்தமான, சமயோசிதமான முறையில் விசுவாசத்தை முன்வைக்கத் தேவையான திறனை ஆராய்வதில் உள்ளார்ந்த வகையில், தனிப்பட்ட கற்பித்தல் முயற்சிகள் அல்லது கூட்டுப் பிரச்சாரங்களின் பின்னணியில் இத்தகைய உரையாடல்கள் நடைபெறலாம் என்ற புரிதல் உள்ளது. பங்கேற்பாளர்கள், முந்தையதைப் பற்றி சிந்திக்கும்போது, அத்தகைய முயற்சிகள் எவ்வாறு முழுமையாக்கப்படுகின்றன - மற்றும் உண்மையில், கூட்டுச் செயலில் பிணைக்கப்பட்டுள்ளன என்பதைப் பார்க்க ஊக்குவிக்கப்படுகிறார்கள். அவர்களின் சொந்த சூழ்நிலைகள் மற்றும் நம்பிக்கையை போதிப்பது இன்றியமையாப் பகுதியாக இருக்கும் ஒரு வாழ்க்கை முறையை உருவாக்குவதற்கான அவர்களின் முயற்சிகளைப் பிரதிபலிக்க அவர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். பிரிவு 26 மற்றும் 27 இந்த விஷயத்தில் அவர்களுக்கு உதவும் நோக்கம் கொண்டது. பிரிவு 26 இல் பயிற்றுநர் பயிற்சிகளை மேற்கொள்வதும், பிரிவு 27ல் தனது சொந்த கற்பித்தல் திட்டத்தை வகுத்திருப்பதும், ஓர் ஆய்வு வட்டத்தின் பங்கேற்பாளர்களை ஊக்குவிப்பதில், செயல்பாட்டின் மூலம் காலப்போக்கில் மாற்றியமைக்கப்படும் திட்டமாகும். அதையே செய்ய?

நீங்கள் வாழும் அண்டைப்புறம் அல்லது கிராமத்தின் சூழலில், சமயத்தைப் போதிக்கும் சுய முயற்சிகள் அதன் விரிவாக்கம் மற்றும் வலுப்படுத்தலில் கவனம் செலுத்தப்படும் கூட்டு முயற்சியை எவ்வாறு நிரப்பம் செய்கின்றன என்பதை விவரிக்கவும்.

கூட்டு செயல்பாடு குறித்த கருப்பொருள் பகுதி 28-இல் எடுத்துக்கொள்ளப்படுகின்றது, மற்றும் அது பாடப்பிரிவின் எஞ்சியுள்ள பகுதிகளின் கவன மையமாகவும் இருக்கின்றது. இங்கு பயிற்சிகள் விரிவானவை அன்று, மற்றும் பங்கேற்பாளர்கள் தாங்கள் படிப்பாய்வு செய்தவற்றை தங்களின் சொந்த அனுபவங்களுடன் தொடர்புப்படுத்துவதற்கு உதவிடும் கடமை பயிற்றுநரைச் சார்ந்ததாகும். அவர்கள், கூட்டு செயல்பாட்டில், ஒவ்வொரு தனிநபரும், அதிகரிக்கும் அளவிலான ஒற்றுமையை, அதன் பல்வேறு பரிமாணங்களில் அடையாளப்படுத்தும் ஒரு சுற்றுச்சூழலுக்கு ஒவ்வொரு தனிநபரும் பங்களிக்க வேண்டும் என்பதைக் காண வருவர். தனிநபர் முயற்சிகளுடன் சேர்ந்து, அடித்தட்டில் ஒன்றுபட்ட செயல்பாடானது எவ்வாறு, பஹாய் சமூகம் ஈடுபட்டுள்ள உலகளாவிய பெருமுயற்சியை மேம்பாடு அடையச் செய்திட உதவுகின்றது என்பது குறித்த ஒரு தொலைநோக்கை அவர்கள் பெற்றிட வேண்டும்.

இந்த முடிவிற்கு, பங்கேற்பாளர்களின் பரிசீலனைக்காக பல கேள்விகளை பகுதிகள் முன்வைக்கின்றன. கூட்டு செயல்பாட்டின் தன்மை யாது? கூட்டு செயல்பாடு ஒன்றுபட்டதாக இருக்க வேண்டும் என்பதன் அர்த்தமென்ன? உலகளாவிய நிலையில் சமய வளர்ச்சிக்கான அணுகுமுறையின் அம்சங்கள் யாவை, தீவிர பரப்பியக்கங்களின் பங்கு என்ன? அவர்கள் கிராமவாசிகளோ ஓர் அண்டைப்புறத்தில் வாழ்ந்துவரும் அல்லது கிளஸ்டர் முழுவதும் பரவிக்கிடக்கும் ஏற்புத்திறமுடைய மக்களே ஆயினும் அவர்கள் பணிபுரியும் மக்களின் சில பண்புக்கூறுகள் சில யாவை? பஹாவுல்லாவின் உலக ஒழுங்கமைப்பு குறித்த தொலைநோக்கை நோக்கி மக்கள் தொகையினரை உந்தித்தள்ளுவதற்கான அவர்களின் கூட்டு செயல்பாட்டினால் உருவாக்கப்படும் ஆற்றல்கள் எவ்வளவு வலுவானவை? குழந்தைகள், இளைய இளைஞர்கள், இளைஞர்கள் மற்றும் முதியோரினால் ஊக்குவிக்கப்படும் கல்விச் செயல்முறையின் மூலம் உருவாக்கப்படும் திறனாற்றல் சமயத்தின் வளர்ச்சியுடன் எவ்வளவு அணுக்கமாகத் தொடர்கொண்டுள்ளது? விளைவுத்திறமிக்க கூட்டு செயல்பாட்டிற்குத் தேவைப்படும் சூழ்நிலைகள் உருவாக்கப்படுகின்றனவா? தோழமையின் பந்தங்கள் தொடர்ச்சியாகப் பலப்படுத்தப்படுகின்றனவா? கூட்டு செயல்பாட்டில் பங்கேற்பாளரிடையே நோக்கத்தில் ஒற்றுமை அடையப்படுகின்றதா? அது களிப்புமிக்க தீவிர நடவடிக்கையில் வெளிப்படுத்தப்படுகின்றதா? வளர்ச்சி குறித்த கற்றலுக்கான அவர்களின் அணுகுமுறை எந்த அளவிற்கு செயல்பாடு, செயல்பாடு மீதான பிரதிபலிப்பு, மற்றும் கலந்தாலோசனையினால் வரையறுக்கப்படுகின்றது. இந்த கடைசி கேள்வியின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்த முடியாது, ஏனெனில், அத்தகைய அணுகுமுறை எந்த அளவிற்கு நண்பர்களின் விரிவடையும் அணுக்கருவின் செயல்பாட்டு முறையாக மாறுகிறதோ அந்த அளவிற்கு அவர்கள், வளர்ச்சியின் ஒரு கட்டத்தில் இருந்து அடுத்த கட்டத்திற்கு முன்னேற என்ன தேவை என்பதை அவர்கள் கண்டறிவதற்கு மிகவும் அவசியமான மேன்மேலும் உயர்ந்த அளவிலான சிந்தனை ஒற்றுமையை உருவாக்க முடியும்.

ஒரு குழுவினரோடு பாடப்பிரிவின் இறுதிப் பகுதிகளை படிப்பாய்வு செய்வதில், மேற்கண்ட கேள்விகளைச் சுற்றி கலந்துரையாடலை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகளை கண்டுணர்வது

பயிற்றுநருக்கு முக்கியமாகும். இதை அடைவதற்கு, அவை ஒவ்வொன்றையும் உங்கள் குழு உறுப்பினர்களுடன் இன்று பரிசீலிப்பது உங்களுக்குப் பயனுடையதாக இருந்திடும். அவ்வாறு செய்யும் போது கருத்தியலான கலந்துரையாடலில் ஈடுபடுவதைத் தவிர்த்து, உங்களுக்கு நேரடி அனுபவமுள்ள உதாரணங்களைப் பயன்படுத்துங்கள். உங்களின் சொந்த அண்டைப்புறம் அல்லது கிராமத்தின் சூழலில், கீழ்க்காணும் கேள்விகள் பற்றி சிந்திப்பது உங்களுக்குக் குறிப்பாகப் பயன் தருவதாக இருக்கும்.

வரலாற்றின் இந்த தருணத்தில், சமயத்தின் வளர்ச்சியானது, பயிற்சிக்கழகப் பயிற்சிப்பாடங்களால் ஊக்குவிக்கப்பட்ட கல்விச் செயல்முறையின் மூலம் உருவாக்கப்பட்ட திறனாற்றலிலிருந்து, குறிப்பாக இளைஞர்கள் பிராதன பயிற்சி வரிசையின் வழி மேம்பாடு காணுப்போது அவர்களின் திறனாற்றலிலிருந்து எவ்வாறு பிரிக்க முடியாததாக இருக்கின்றது?

ஒரு கிராமத்தில் அல்லது அண்டைப்புறத்தில் பணிபுரியும் நண்பர்களின் மையக்கருவினிடையே செயல்பாடு, செயல்பாட்டின் மீது பிரதிபலிப்பு மற்றும் கலந்தாலோசனை ஆகியவை கற்றலுக்கான கூட்டு உடைமையைப் பெறுவதற்கு அவர்களுக்கு உதவுகிறது. அத்தகைய முறை உந்தித் தள்ளும் கற்றல் செயல்முறையானது, நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கான பரப்பியக்கங்களைத் திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்தல் என குறைத்திட முடியுமா? இந்த செயல்முறை இயந்திரம் போன்று பல படிகளைப் பின்பற்றுவதை உள்ளடக்கிய செயல்முறையிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது? நண்பர்கள் தங்களைக் காணும் குறிப்பிட்ட யதார்த்தத்திற்குள் தனிப்பட்ட மற்றும் கூட்டு மாற்றத்திற்கான நுண்ணறிவுகளை உருவாக்குவதற்கு அத்தகைய முறை எந்த வழியில் அனுமதிக்கிறது?

## பகுதி 26

ரூஹி பயிற்சிக்கழகத்தின் முதல் ஆறு புத்தகங்களின் இந்த மேலோட்டம், அதன் பாடத்திட்டத்தை நிர்வகிக்கும் சில கல்விக் கோட்பாடுகள், குறிப்பாக ஒரு சேவை பாதையில் நடப்பது போன்ற திறனாற்றல் மேம்பாட்டின் செயல்முறையைச் சுற்றி எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது என்பதைப் பற்றிய நுண்ணறிவை உங்களுக்கு வழங்கியிருக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. நீங்கள் இப்போது பயின்றுக்கொண்டிருக்கும் நூல் 7, கல்விச் செயல்முறையின் விரிவாக்கத்திற்கு

முக்கியமானது என நாங்கள் கூறியுள்ள சேவைச் செயலுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது—அதாவது, ஒவ்வொரு குழுவாகப் பிரதானத் தொடரைப் பயில்வதற்கு உதவுதல். உங்களுக்குத் தெரிந்தபடி, பிரதான வரிசை இங்கு முடிவடையவில்லை, ஆனால் மேலும் பலக்கியமான சேவைச் செயல்கள் மீது கவனம் செலுத்தும் பல பயிற்சிப்பாடங்களுடன் தொடர்கிறது. எனினும் இந்த நேரத்தில் நாம் அவற்றைக் கருத வேண்டியதில்லை. தற்போதைக்கு, பயிற்சிப்பாட வரிசையின் மூலம் முறைமையுடன் திறனாற்றலை உருவாக்குவதன் முக்கியத்துவத்தைப் பற்றி சிந்திக்க சிறிது நேரம் ஒதுக்குமாறு ஊக்குவிக்கப்படுகிறீர்கள். உலக நீதிமன்றம் எழுதிய 27 டிசம்பர் 2005 எனத் தேதியிட்ட செய்தியிலிருந்து பின்வரும் பகுதியைப் படிக்கவும். இது முந்தைய ஆண்டுகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது:

> **“அப்போதிலிருந்து நடைபெற்றுள்ள அபிவிருத்திகள் யாவும் சேவையாற்றுவதற்கான ஆற்றலை வளர்த்திடுவதை நோக்கமாகக் கொண்ட வரிசைக் கிரமமான பயிற்சிகளின் சக்தியை மேலும் சித்திரித்தன. புனித வாசகங்களை ஆழமாகக் கற்றதினால் பெற்ற உட்பார்வைகளை நடைமுறையில் அமலாக்கம் செய்வதில் உன்னிப்பான கவனம் செலுத்தியதன் பயனாக இது அடையப்பட்டது. சேவைச் செயல்களை மேற்கொள்வதற்குத் தேவைப்படும், ஒன்று மற்றொன்றுடன் தொடர்புடைய பழக்ககங்கள், மனப்பாங்குகள், தரங்கள் ஆகியவற்றை பேணி வளர்க்கவல்ல அறிவின்பால் பங்கேற்பாளர்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, குறிப்பிட்ட திறன்களையும் ஆற்றல்களையும் கூர்மைப்படுத்திக் கொள்ள உதவப்படுகின்றனர். எழுச்சியூட்டவல்லதும், கருத்தூன்றிய நிலையுமிக்க சூழ்நிலை கொண்ட பயிலக வட்டத்தில் நடைபெறும் படைப்புச் சக்திமிக்க திருவாக்கைப் பற்றிய விவாதிப்புகள், சமயத்தின்பால் ஒருவருக்குள்ள கடமையை அறிந்திருத்தலை அதிகரிக்கச் செய்து, சமயத்தைப் போதித்தலிருந்தும், அதன் நலன்களுக்குச் சேவை செய்வதிலிருந்தும் கிடைக்கும் மகிழ்ச்சியை உருவாக்குகின்றன. குறிப்பிட்ட காரியங்களுக்கான அழைப்பு உள்ளடக்கியுள்ள ஆன்மிக அம்சம், அவற்றிற்கு முக்கியத்துவங்களை வழங்குகின்றது. சிக்கலானதும், கூடுதல் உழைப்பை விழைவதுமான சேவைச் செயல்களில் நண்பர்கள் முன்னேற்றகரமான வகையில் ஈடுபடுகையில், தன்னம்பிக்கை மிக பொறுமையாக நிர்மாணிக்கப்படுகின்றது. அவ்வாறிருந்தும், யாவற்றிற்கும் மேலாக, அவர்களுடைய முயற்சிகளில் அவர்களை உய்விப்பது, இறைவனையே நம்பியிருத்தலாகும். நடுக்கத்துடன் போதனை அரங்கில் நுழைந்திடும் நண்பர்கள், எல்லாப்பக்கங்களிலிருந்தும் உறுதிபாடுகள் தங்களுக்கு ஆதரவளிப்பதாக எடுத்துரைக்கப் பட்டுள்ள வரலாறுகள்தாம் எத்துனை! தங்களுக்கு முன்னால் உள்ள வாய்ப்புகளையும், சாத்தியக்கூறுகளையும் புதிய கண் கொண்டு பார்க்கும் அவர்கள், தாங்கள் பயிற்சிகளில் கற்றுக்கொண்டவற்றை நடைமுறையில் அமுல்படுத்திட முயன்று, தங்களது எதிர்பார்ப்புகளுக்கு அப்பால் வெற்றிகளை அடையும்போது, தெய்வீக சக்தியினை தாங்களாகவே கண்ணுறுகின்றனர். இறைவனுடைய திருவாக்கினுடன் கொண்ட மிக அணுக்கமான தொடர்பிலிருந்து பெறும் இறைவிசுவாச உணர்வு ஆன்மாக்களின் மீது ஏற்படுத்தும் பாதிப்பு புதிதான ஒன்றல்ல. இங்கே நம்பிக்கையளித்துக் கொண்டிருப்பது என்னவெனில், சமயத்தினுடைய தன்மை மாற்றத்தினை பெருமளவிலான எண்ணிக்கைக் கொண்ட நண்பர்கள் அனுபவிப்பதில் பயிற்சியக செயல்முறை துணைபுரிகின்றது என்பதுதான்.”[5]**

ரூஹி பயிற்சிக்கழகத்தின் பயிற்சிப்பாடங்களினால் திறந்துவிடப்பட்ட சேவை பாதையில் நடப்பதெனும் உங்கள் சொந்த அனுபவத்தின் அடிப்படையில், அந்த நூல் ஒவ்வொன்றும் அதற்கு முந்தைய நூலின் அடிப்படையில் தொடர்ந்து நிர்மாணித்து, அதிகரிக்கும் அளவில் பலக்கியமான செயல்களை மேற்கொண்டிட பங்கேற்பாளர்களுக்கு எவ்வாறு உதவுகின்றது என்பது பற்றி சில வார்த்தைகள் கூறவும்.

பயிற்சிப்பாடங்கள் வரிசையின் உள்ளடக்கும் மற்றும் ஒழுங்கமைப்பை வடிவமைத்த மைய கருத்தாக்கங்கள் மற்றும் அடித்தல கோட்பாடுகள் குறித்து நீங்கள் அடைந்துள்ள நுண்ணறிவுகளை உறுதிபடுத்துவதற்கு, உலக நீதிமன்றத்தின் பின்வரும் செய்தியின் மீது பிரதிபலிக்கவும்.

> **விதிவிலக்கின்றி, பயிற்சிக்கழகச் செயல்பாட்டின் தன்மைமாற்ற தாக்கங்களை நேரடியாகக் கண்ணுற்ற நிலையில், அத்தகைய கிளஸ்டர்களில் நண்பர்கள் அச்செயல்பாட்டில் பொதிந்துள்ள வலிமையம்சங்களை முழுதாக மதித்துணர முயலுகின்றனர்- அது உருவாக்கும் தோழமையின் உயிராற்றல், அது பயன்படுத்திக் கொள்ளும் பங்கேற்பு முறையிலான அணுகுமுறை, அது பேணி வளர்க்கும் புரிந்தறிதலின் ஆழம், அது பரிந்துரைக்கும் சேவைச் செயல்கள், யாவற்றுக்கும் மேலாக, இறைவனுடைய திருவாக்கை நம்பியிருத்தல் ஆகியவையே அந்த வலிமையம்சங்களாகும். பயிற்சியகப் பாடங்கள் தெளிவாக முன்வைக்கும் "இருந்தல்" மற்றும் "செய்தல்" என்னும் ஒன்று மற்றொன்றுடன் இசைந்துபோகும் மனக்கப்போக்கையும், அறிவு மற்றும் அந்த அறிவை அம்லபடுத்துவதற்கான அந்தப் பாடங்கள் வழங்கிடும் முதன்மை நிலையும், போலியான எதிர்மறைகளைத் தவிர்த்திட வேண்டும் என்பதில் அப்பாடங்கள் செலுத்தும் வலியுறுத்தலும், படைப்பு சக்திமிக்க திருவாக்கை மனனம் செய்ய வேண்டும் என்பதில் அப்பாடங்கள் காட்டிடும் முக்கியத்துவத்தையும் தான் என்னும் அகந்தையை தடடியெழுப்பிடாத வண்ணம் விழிப்புணர்வை உயர்த்துவதில் அப்பாடங்கள் காட்டிடும் அக்கறையும் அச்செயல்பாட்டில் பிரதிபலிக்கப்படுவதை உறுதி செய்ய எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன."[6]**

பயிற்சிக்கழக செயல்முறை திறக்கும் சேவை பாதையில் நீங்கள் தொடர்ந்து நடக்கும்போது, பயிற்சிக்கழக செயல்முறையின் இயக்கவியல் பற்றிய கூடுதல் நுண்ணறிவுகளை நீங்கள் நிச்சயமாகப் பெறுவீர்கள். நீங்கள் இதுவரை பெற்றுள்ள பயிற்சிப்பாடங்களின், பின்வரும் நோக்கங்களைப் பற்றிய சில எண்ணங்களை எழுதுங்கள்:

அ. "இருத்தல்" மற்றும் "செய்தல்" இரண்டின் நிரப்புந்தன்மையை வெளிப்படையாக்குதல்: ________________________________________

ஆ. அறிவு மற்றும் அதன் பயன்பாடு இரண்டிற்கும் நடுமையத்துவத்தை வழங்குதல்:___

______________________________________________________________________________

______________________________________________________________________________

இ. தவறான இருமைநிலையைத் தவிர்த்தலை வலியுறுத்துவது: ______________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

ஈ. படைப்பாற்றல்மிக்க திருமொழியை மனனம் செய்தலை வலியுறுத்துவது: ________

______________________________________________________________________________

______________________________________________________________________________

உ. வலியுறுத்தும் தன்னகத்தை எழுப்பிடாமல் நனவுணர்வை உயர்த்துவதில் கவனம் செலுத்தல்: _______________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

பின்வருவன ஒவ்வொன்றின் தொடர்பில் பயிற்சிப்பாடங்கள் பேணி வளர்த்திட முயலும் கல்விச் செயல்முறையின் இயல்பு குறித்து சில வார்த்தைகள் கூறவும்:

அ. கல்விச் செயல்முறை உருவாக்கிடும் தோழமை உணர்வு: _________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

ஆ. அது ஊக்குவிக்கும் பங்கேற்பு அணுகுமுறை: ____________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

இ. அது பேணி வளர்த்திட முயலும் ஆழமான புரிதல்: ________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

ஈ. அது பரிந்துரைக்கும் சேவைச் செயல்கள்: _______________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

உ. கல்விச் செயல்முறை ஊக்குவிக்கும் கடவுள் திருமொழியினைச் சார்ந்திருத்தல்: __

______________________________________________________________________________

______________________________________________________________________________

## பகுதி 27

ரூஹி பயிற்சிக்கழகத்தின் கல்வித்திட்டம் குறித்த கலந்துரையாடலை நாம் முடிப்பதற்கு முன், அதன் பிரதான வரிசையிலிருந்து கிளைத்திடும் பயிற்சிப்பாடங்களைச் சுருக்கமாகக் கலந்துரையாடுவது பயனுடையதாக இருக்கும். பிரதான வரிசையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, சேவை பாதையின் தன்மை, குறிப்பிட்ட செயல் துறைகளில் தேவைப்படும் அறிவு, ஆன்மிக பண்புகள் மற்றும் திறன்கள் ஆகியவற்றுடன் தொடர்புடைய விசேஷ பாதைகளை அனுமதிக்கிறது. தற்போது, இரண்டு கிளை பயிற்சிப்பாடங்கள் ரூஹி பயிற்சிக்கழகத்தினால் விரிவு செய்யப்படுகின்றன. இதன் தொடர்பில், 12 டிசம்பர் 2011 எனத் தேதியிட்ட ஒரு கடிதத்தில் உலக நீதிமன்றம் விளக்கமளிக்கின்றது:

> **அப்பயிற்சிகளைக் கற்று வருகையில், ஒரு தனிநபர் தனது சேவைப்பாதையில் ஈடுபடுவதற்காகத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்குத் தற்பொழுது குறிப்பாக இரண்டு அம்சங்கள் கைவமுள்ளன. அவற்றில், முதலாவது அம்சம், 3வது நூலில் காணப்படுகின்றது. அந்நூலைக் கற்று முடித்துள்ள நண்பர்களுள் சிலர் முதலாம் நிலையில் சிறுவர்களுக்கான ஆன்மீகக் கல்வியை வழங்குவதற்காக, ஓர் எளிமையான பாலர் வகுப்பைத் தொடங்கியதோடு, ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டினர் இச்சேவைக்களத்தில் தங்களை அர்பணித்துக் கொண்டு, குழந்தைகள் கல்வித் தொடர்பான 2-ம் கிரேட் முதல் 6-ம் கிரேட் வரையிலான கடினமான கிளைப் பயிற்சிகளைக் கற்று முடிப்பார்கள். இக்கிளைப் பயிற்சிகளை அவர்கள் மேற்கொண்டு வருவதனால், அவர்கள் முதன்மையான பாட நூல்களைத் தொடர்ந்து கற்பதைக் கைவிட்டு விடுவர் என்பது இதன் பொருளன்று. உண்மையில், சேவைப்பாதைகளில் ஈடுபடுவதற்காக விசேஷ பயிற்சிகளைக் கற்றுத் தங்களைத் தயார் செய்திடும் பங்கேற்பாளர்கள், மற்ற முதன்மைப் பாடங்களையும் தங்களுடைய வசதிக்கேற்ப தொடர்ந்து கற்று வருகின்றனர். இளைய இளைஞர் குழுக்களுக்கான அனிமேட்டர்களை உருவாக்க விழையும் நூல் 5, பயிற்சிப்பாடங்கள் கிளைத்திடும் இரண்டாவது அமசத்தை உள்ளடக்குகின்றது.**
>
> **மற்ற முதன்மைப் பாடநூல்கள் தொடர்பான சேவை பாதைகளும் எதிர்காலத்தில் உரிய நேரத்தில் சந்தேகமின்றி உருவாகும். அவற்றில் சில, மேற்கூறப்பட்ட இரண்டு உதாரணங்களைப் போன்று அனைவரும் பங்கேற்க முடிந்த பொதுவான சேவை பாதைகளாகும். அதே நேரத்தில், மற்றவை, உள்ளூர் தேவைகளுக்கு ஏற்ப ஒரு வரம்புக்கு உட்பட்டு அமைந்திடக் கூடும். முதன்மையான பாடநூல்களைப் போன்று, அவ்வப்போதைய சுய விருப்பத்தின் அடிப்படையிலல்லாமல், செயலரங்கில் பெறப்படும் தொடர்ச்சியான கூட்டு அனுபவத்தின் அடிப்படையில் அமைந்து சமயத்தினுடைய ஸ்தாபனங்களினால் இப்பயிற்சிகள் வழிகாட்டப்படுகின்றன. அத்தகைய அனுபவத்தின் உருவாக்கம் ஜனத்தொகையின் மேன்மேலும் ஒரு பெரிய அளவிலான சக்தியின் ஒன்றிணைப்பபை விழைகின்றது. "[7]**

கிளைப் பயிற்சிப்பாடங்கள் பற்றிய பிரச்சினையை நாம் இங்கு விரிவாக ஆராய வேண்டிய அவசியமில்லை. நாம் உணர வேண்டியது என்னவென்றால், மேலே உள்ள பத்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி, கிளைப் பயிற்சிப்பாடங்கள் சமயத்தின் ஸ்தாபனங்கள் மற்றும் முகவாண்மைகளின் வழிகாட்டுதலின் கீழ் கூட்டு அனுபவத்திலிருந்து வெளிப்பட வேண்டும். 1 ஜனவரி 2022 எனத் தேதியிட்ட செய்தியில் நீதிமன்றம் இந்த விஷயத்தை மேலும் விரிவாகக் கூறுகின்றது:

> **நாம் கடந்த காலத்தில் பிரதான வரிசையை--அதனின்று கிளைக்கின்ற பிற பயிற்சிகளை ஆதரிக்கும், அக்கிளைகள் ஒவ்வொன்றும் குறிப்பிட்ட சில நடவடிக்கை துறையை குறித்துரைக்கும்--ஒரு மரத் தண்டுடன் ஒப்பிட்டுள்ளோம். இத்தகைய கிளைப் படிப்புகளின் தயாரிப்பு, காலப்போக்கில் செயல் மற்றும் பிரதிபலிப்பினால் குறிக்கப்பட்ட--களத்தில் கருத்துருவாக்கமும் நடவடிக்கையும் கைகோர்த்துச் செல்லும்-- ஒரு முறையின் மூலம்**

**நிகழும். இப்பணியை மேற்கொள்ளும் பயிற்சிக்கழகங்களுக்கு, பல முன்தேவைகள் உள்ளன. அவை பயிற்சிக்கழகத்தின் பிரதான வரிசை மற்றும் சம்பந்தப்பட்ட கற்பித்தல் கொள்கை ஆகியவற்றின் உள்ளடக்கத்தை ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும், மற்றும் நடவடிக்கைகள் முன்னேறும் போது அடித்தட்டில் எழும் அனுபவத்தை தெளிவாகப் பகுப்பாய்வு செய்திட வேண்டும்; சமூக நிர்மாணிப்பு செயல்முறையின் குறிப்பிட்ட அம்சங்களின் மேம்பாட்டிற்காகத் தங்களை அர்ப்பணித்துள்ள நண்பர்கள் குழுக்களுடன் உடனுழைக்க வேண்டும், ஒரு கற்றல் முறையில் செயல்பட வேண்டும், மற்றும் உபகரணங்களின் தயாரிப்பிற்குத் தேவையான திறன்களுள்ள தனிநபர்களை தங்கள் பணிகளுக்குள் ஈர்த்திட வேண்டும். நடைமுறைக்கு வந்ததும், கிளைப் பயிற்சியானது, தொடர்புடைய நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நண்பர்களுக்கு அவர்களின் திறனாற்றலை மேலும் வலுப்படுத்த உதவிடும்; இது மக்களின் வாழ்க்கையில் தொடர்புடைய கற்றல் செயல்முறையை விரிவுபடுத்துவதற்குப் பங்களிக்கும். இந்தப் பாடத்திட்டம், குவிந்துவரும் அறிவின் களஞ்சியமாகவும், அதன் பரவலுக்கான ஒரு வழிமுறையாகவும்செயல்படும்."[8]**

ரூஹி பயிற்சிக்கழகம் பின்பற்றும் பாடத்திட்ட மேம்பாட்டிற்கான அணுகுமுறை இந்தப் பயிற்சிப்பாடத்தின் அக்கறையல்ல. இருப்பினும், அதன் நூல்களுக்கான ஆர்வமுள்ள பயிற்றுநராக, அவை எந்தவொரு தனிநபரின் மனதிலும் விளைந்தவையோ நடைமுறையிலிருந்து விலக்கப்பட்ட, கருத்தியல் முறையில் மேற்கொள்ளப்படும் ஒரு குழுவின் கலந்தாலோசனையின் மூலம் வெளிப்பட்டவையோ அன்று என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். மாறாக, அவை பல தசாப்தங்களாக, ஒரு தீவிரமான செயல்-பிரதிபலிப்பு செயல்முறையின் மூலம், சமயத்தின் முன்னேற்றத்திற்காகவும் சமூகத்தின் முன்னேற்றத்திற்காகவும் மனித வளங்களை எவ்வாறு முறையாக அதிகரிப்பது என்பதைப் பயிற்சிக்கழகம் கற்றுக்கொண்டது. இந்த அணுகுமுறையை ஒருவர் பின்பற்றினால், உபகரணத்தின் விரிவாக்கம் அவசியமாக நீண்ட நேரம் எடுக்கும். செயல்முறை படிப்படியாகவும் கரிமமுறையானதாகவும் இருக்கும், ஆனால் அதற்குத் தேவைப்படும் பொறுமையானது நீடித்த பலனைத் தரும்.

## பகுதி 28

இந்த பாடப்பிரிவில் இதுவரை நீங்கள் ரூஹி பயிற்சிக்கழகத்தின் கல்வி அணுகுமுறை, அது உருவாக்கிய உபகரணங்கள் ஆகியவற்றை சற்று ஆழமாக ஆராய்ந்துள்ளீர்கள். ஆரம்பத்திலிருந்தே பயிற்சிக்கழகம் பங்கேற்பு முறையுடன் இணைத்த மதிப்பு குழு படிப்பாய்வுக்கான இந்த உபகரணங்களை உருவாக்கிட வழிகாட்டியது. வெவ்வேறு நபர்களின் கற்கும் வேகத்தை அதன் அணுகுமுறை மதிக்க வேண்டும் என்பதையும் அது ஆரம்பத்திலேயே உணர்ந்தது. ஒவ்வொருவரும் அவரவர் சாத்தியக்கூறுகளுக்கு ஏற்ப முன்னேறுவர், மற்றும் ஒவ்வொருவரும் கல்விச் செயல்முறையில் முன்னேறும்போது இது மேலும் பரிணமிக்கும். இந்தச் செயல்முறையில் போட்டிக்கு இடமில்லை.

அப்படியானால், கல்வி அணுகுமுறையுடன் தொடர்புடைய மற்றொரு விஷயம் இங்கே கலந்துரையாட தக்கதாகும் -- அதாவது, பயிற்சிப்பாடங்களை வழங்குவதற்கான ஒரு முறைமை, உபகரணங்களின் பண்புகளில் உள்ளார்ந்ததாகும். இம்முறைமை கல்விச் செயல்முறை அடித்தட்டில் தன்னை நிலைநிறுத்திக்கொள்ளவும் விரிவுபடுத்தவும் உதவுகின்றது. ஒரு படிப்பு வட்டம் மற்றும் ஒரு பயிற்றுநரின் கருத்தாக்கங்களைச் சுற்றி ஒழுங்கமைக்கப்பட்ட இந்த முறைமை, ஒருவர் மற்றவருக்கு ஆதரவளிக்கும் மற்றும் துணையாக இருக்கும் தனிநபர்களின் தொடர்ந்து வளர்ந்து வரும் குழுக்களை சேவைக்கான திறனாற்றலை உருவாக்கிக்கொள்ள அனுமதிக்கின்றது. இந்தக் குழுக்களின் ஒரு பகுதியாக, இந்த முறைமைப் பற்றி நீங்கள் ஏற்கனவே ஓரளவு அறிந்திருக்கிறீர்கள், அத்துடன் இந்தப் பாடப்பிரிவின் மூலம் நீங்கள் மேம்பாடு கண்டுள்ளதால் அதன் செயல்பாடுகள்

பற்றிய கூடுதல் நுண்ணறிவை நீங்கள் பெற்றுள்ளீர்கள். இந்தத் தொலைதூரக் கல்வி முறைமையின் விளைவுகள் மற்றும் அதிக எண்ணிக்கையிலான மக்களைச் சென்றடையும் அதன் திறனைப் பற்றி குறிப்பிடுகையில், உலக நீதிமன்றம் பின்வருமாறு கூறுகிறது:

> **“சமயத் திருவாசகங்களைக் கற்பதில் இவ்வாறாக உருவாக்கப்பட்ட சாத்தியங்களை எவரும் மதித்துணரத் தவறி விடாமலிருக்கட்டுமாக. மெத்தனப்போக்கு எனும் மனப்போக்கு, சமுதாயத்தின் இன்றைய அழுத்தத்தினால் ஈன்றெடுக்கப்படுகின்றது. வெறுமனமே அதிகபட்ச உணர்ச்சிகளைத் தூண்டிவிடுவதில் எவர் திறமைசாளிகளாக விளங்குகின்றார்களோ, அவர்களையே தங்களை வழிநடத்த அனுமதிக்க ஆர்வம் காட்டும் தலைமுறைகளை உருவாக்கிய நிலையில், தாங்கள் மனமகிழ வைக்கப்பட வேண்டும் எனும் ஆவல் குழந்தைப்பருவம் முதல் பேணி வளர்க்கப்பட்டு வருகின்றது. பல கல்விமுறைகளில் கூட தகவல்களைப் பெறுவதற்காக வடிவமைக்கப்பட்ட கொள்கலன்களாகவே மாணவர்கள் நடத்தப்படுகின்றனர். அனைவரும் ஒன்றாக இணைந்து முன்னேறுதல், ஒவ்வொருவரும் பெற்றுள்ள அறிவு குறித்து எந்நேரத்திலும் மதிப்பளித்தல், சமய அறிவில் ஆழக்கற்றோர் மற்றும் அறிவு குறைவானோர் என நம்பிக்கையாளர்களை பாகுபடுத்தும் எவ்வழிமுறைகளையும் தவிர்த்தல் ஆகிய நிலையில், ஒரு கல்விமுறையை மேற்கொள்வதில் பஹாய் உலகம் வெற்றியடைந்துள்ளது. இவ்வெற்றியானது, பெரும் கூறுகளின் ஒரு சாதனையாகும். அதனுள்தான், அடக்கப்படவியலா ஓர் இயக்கத்தின் வலிமை உள்ளது.”[9]**

முறைமையின் பொதுவான அம்சங்களை வர்ணிக்கும் பின்வரும் பத்திகளை ஆராய்ந்து உங்கள் குழுவில் கலந்துரையாடும்படி நீங்கள் ஊக்குவிக்கப்படுகின்றீர்கள்:

> *ஒரு பயிற்சி வட்டமானது, பயிற்சி நிலையத்தின் மனித வள மேம்பாட்டிற்கான திட்டத்தை, உள்ளூர் மட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்காக உருவாக்கப்பட்டு, பயிற்சி நிலையத்தினால் நிர்வகிக்கப்படும் ஓர் தொலைதூர கல்வி முறையின் ஓர் அங்கமாகும். அது பொதுவாக, ஒரு குறிப்பிட்ட இடத்திலுள்ள பல நண்பர்களைக் கொண்டு, ஓர் பயிற்றுனரின் உதவியுடன் ஒன்றாக சேர்ந்து, தங்களுடைய சொந்த வேகத்தில், பயிற்சிப்பாடங்களைப் பயில்கின்றனர். அக்குழுவின் உறுப்பினர் என்னும் முறையில், பயிற்றுநரும் பிறரைப் போன்றே கற்றல் செயல்முறையில் தாமும் அதே அளவில் ஈடுபடுகின்றார். ஆனால், தேவைப்படும் பயிற்சிப்பாடங்களைப் பூர்த்தி செய்தும் ஓரளவு அனுபவமும் அடைந்துவிட்ட அவர், பயிலப்படும் பயிற்சிப்பாடத்தின் நோக்கம் அடையப்படுவதை உறுதிபடுத்திட அவர் உதவலாம். இந்த முடிவுக்காக, பங்கேற்பாளர் எண்ணிக்கை பெரிதாக இருப்பின், அவர் அக்குழுவை இரண்டு அல்லது மூன்று சிறிய குழுக்களாகப் பிரித்து அவற்றுடன் அவர் சம நேரத்தில் செயல்படக்கூடும்.*
>
> *ஒரு குழுவின் செயல்பாட்டிலும் உறுப்பியத்திலும் அதிக நெகிழ்வுத்தன்மை உள்ளது. சில குழுக்கள் வாரத்திற்கு ஒரு முறை என நீண்ட காலத்திற்கு சந்திக்க விரும்பலாம், மற்றவர்கள் தினமும் அல்லது வார இறுதியில் சந்திக்கலாம். ஒரு பயிற்சிப்பாடத்தை முடித்தவுடன், உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து அடுத்த பயிற்சிக்கு செல்லலாம். ஆனால் சிலர் குழுவிலிருந்து வெளியேறியும், பிற்காலத்தில் மற்றொரு குழுவில் சேரவும் செய்யலாம். ஒரே பயிற்றுநர் ஒரு பயிற்சிப் பாடத்திலிருந்து அடுத்த பயிற்சிப்பாடத்திற்கு அதே குழுவுடன் தங்கலாம். ஆனால் ஒரு பாடத்தின் முடிவில் பயிற்றுநர் மாறுவதும் சாத்தியமாகும்.*
>
> *பங்கேற்பாளர்கள் எத்தனையோ வழிகளில் படிப்பு வட்டத்தில் சேர்ந்துகொள்ளலாம். சமயத்தின் தீவிர ஆதரவாளர்களின் அதிகரித்துவரும் மையக்கரு இருக்கும் கிராமங்கள் மற்றும் அண்டைப்புறங்களில், மூன்று மாத சுழற்சிகள் மூலம் சமூகத்தை விரிவுபடுத்துவதற்கும் வலுப்படுத்துவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் சூழலில் படிப்பு வட்டங்கள் பெரும்பாலும் உருவாக்கப்படுகின்றன. பள்ளிகள், மன்றங்கள் மற்றும்*

*உள்ளூர் அமைப்புகளை அணுகுவதற்கான முயற்சிகள் பலனளிக்கும் போது, பங்கேற்பாளர்கள், சேவை அரங்கில் நுழைய ஆர்வமுள்ள, பயிற்சிப்பாடங்களைப் படிப்பதன் மூலம் தங்கள் திறனை வளர்த்துக் கொள்ள விரும்பும் இளைஞர்களின் வரிசையில் இருந்து ஈர்க்கப்படுகின்றனர். இளைய இளைஞர்களின் ஆன்மிக சக்தியூட்டும் திட்டத்தை முடித்துள்ள இன்னும் சிலர் பதினைந்து அல்லது பதினாறு வயதுடையவர்கள் ஆவர் மற்றும், இவர்கள் ஏற்கனவே இரட்டைத் தார்மீக நோக்கம் குறித்த ஒரு வலுவான உணர்வைக் கொண்டவர்களாக இருப்பர்.*

*இதன் விளைவாக, பள்ளி விடுமுறை நாட்களில் முகாம்கள் பயிற்சிப்பாட படிப்பாய்விற்கான மற்றொரு அமைப்பாக மாறிவிட்டன. இவையும் பயிற்சிக்கழக பரப்பியக்கங்களும் ஒரு மைய இடத்தில் ஒன்று அல்லது இரண்டு பயிற்றுநர்களின் உதவியுடன் சிறு சிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவும் பல்வேறு பயிற்சிப்பாடங்களின் தீவிர ஆய்வில் ஈடுபடும் பெரிய எண்ணிக்கையினரை ஒன்றுதிரட்டுகின்றது. உண்மையில், இதுபோன்ற பரப்பியக்கங்கள், முகாம்கள் மற்றும் தொடர்ந்து நடத்தப்படும் படிப்பு வட்டங்களின் கலவையே மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இந்த வெவ்வேறு விநியோக முறைகளால் வழங்கப்படும் நெகிழ்வுத்தன்மை, ஒவ்வொரு பங்கேற்பாளரும் அவரவர் சொந்த சூழ்நிலைகளுக்கு ஏற்ப பொருத்தமான லயத்தில் கல்விச் செயல்பாட்டில் முன்னேறுவதை சாத்தியமாக்குகிறது. இயற்கையாகவே, பயிற்சிப்பாடங்களின் வரிசையில் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ ஒரே நிலையை அடைந்துள்ள தனிநபர்களின் சிறிய குழுக்கள் ஒன்றாகப் பயிற்சிப்பாடத்தை முடிக்கின்றன. அத்துடன், இறுதியில், சிலர் தாங்கள் பயிற்றுநர்களாகச் செயல்படும் நிலையை அடைய முடியும் மற்றும் படிப்பு வட்டங்களின் பெருக்கத்திற்கும் பங்களிக்க முடியும்.*

*ஒரு தொலைதூர கல்வி முறைமையின் அம்சம் என்னும் முறையில், படிப்புவட்டத்திற்கு இரண்டு இன்றியமையா செயல்பாடுகள் உள்ளன: ஒன்று உபகரணங்களைப் படிப்பாய்வு செய்தல், மற்றது அனுபவத்துடன் தொடர்புடையது. பங்கேற்பாளர்கள் பாடத்திட்டங்களில் கருதப்படும் சேவைக்கான செயல்திறன்களை உருவாக்கிக் கொள்ள வேண்டுமானால், அவர்கள் உபகரணங்களை வெறுமனே படிப்பாய்வு செய்து, பயிற்சிகளைப் பூர்த்தி செய்து, தங்கள் குழுவில் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளை மேற்கொள்வது மட்டும் போதாது. அவர்கள் நடைமுறையான அனுபவத்தைப் பெறுவதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும். உதாரணமாக, நூல் 2-இன் மூன்றாவது பாடப்பிரிவின் நோக்கமான, ஒரு படிப்புவட்டத்தின் உறுப்பினர்கள், நண்பர்கள் மற்றும் அண்டையருடன் சமூக வாழ்க்கையின் மையக் கருப்பொருள்களை ஆராயும் திறனாற்றலை உருவாக்கிக் கொள்ள வேண்டுமானால், அவர்கள் தங்களுக்குள்ளாக மட்டும் பயிற்சி செய்வதில் திருப்தி கொள்ளக் கூடாது. அவர்கள் குடும்பங்களின், குறிப்பாக குழந்தைகள் மற்றும் இளைய இளைஞர்களின் வீடுகளுக்கு, அதிக அனுபவமுள்ள நண்பருடன் சென்று—தனிநபர்கள் என்னும் முறையில் தங்கள் சொந்த வாழ்க்கைக்கு ஒருங்கிணைவான ஒரு செயலும், ஒவ்வொரு சுழற்சியாக, கிராமம் அல்லது அண்டைப்புறத்தின் மேம்பாட்டிற்காக வேலை செய்யும் அதிகரித்து வரும் மையக்கருவினரின் கூட்டு முயற்சிகளில் வெளிப்படும் ஒன்றுமான—இந்தச் சேவையை செய்வதில் அனுபவத்தைப் பெறுவதற்கான வாய்ப்புகள் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் அவர்கள் தோளோடு தோள் சேர்ந்து சேவை செய்கின்ற போது, விரிவடையும் மையக்கருவின் இயக்கவியலுக்குள், ஒரு பயிற்றுநர் பங்கேற்பாளர்களுக்கு உறுதியான ஆதரவையும் உதவியையும் வழங்கிட முடியும்.*

*ஒரு பயிற்றுநரின் பணி, பங்கேற்பாளர்கள் உபகரணத்தைப் படிக்க ஒன்றாக வரும் சந்தர்ப்பங்களைச் சார்ந்தது மட்டுமல்ல. குறிப்பாக ஆரம்ப கட்டங்களில், தொடர்புடைய சேவைச் செயலைச் செய்வதில் அவர்கள் உடன்செல்லப்படுவதை அவர் உறுதி செய்கிறார். ஸ்தாபனங்கள் மற்றும் முகவாண்மைகள், குறிப்பாக வட்டாரப் போதனைக் குழு மற்றும் பயிற்சிக்கழக ஒருங்கிணைப்பாளர்கள், குறிப்பிட்ட சேவைத் துறைகளில் தனிநபர்கள்*

*மற்றும் குழுக்களுக்கு ஆதரவை வழங்குவதற்காக அவர்கள் இருக்கின்றனர்: பக்திக் கூட்டங்களை நடத்துதல், இல்லங்களுக்கு முறையான வருகைகள் மேற்கொள்வது, குழந்தைகள் வகுப்பு ஆசிரியர்களாகப் பணிபுரிவது, இளைய இளைஞர் குழுக்களின் அனிமேட்டர்களாகப் பணியாற்றுதல், அல்லது படிப்பு வட்டங்களின் ஆசிரியர்கள் ஆகியவற்றில். எந்தவொரு சேவைச் செயலாக இருந்தாலும், பங்கேற்பாளர்களால் மேற்கொள்ளப்படும் படிப்பாய்வும் செயலும் அவர்களைத் தோழமையுடன் இணைக்கவும், அவர்களின் கற்றல் முறைக்கு மற்றவர்களை ஈர்க்கவும் உதவிட வேண்டும்.*

உங்கள் குழுவில் மேற்காணும் பத்திகளை விவாதித்த பிறகு, உங்கள் மண்டலத்தில் பணிபுரியும் பயிற்சிப்பாடங்களுக்கான வழங்கும் முறைகளை விவரிக்கவும். இத்தகைய முறைகள் எவ்வாறு வளர்ந்து வரும் எண்ணிக்கையினர் ஒரு சேவை பாதையில், படிப்பாய்வு மற்றும் செயலால் வேறுபடுத்தப்படும் ஒரு சேவை பாதையில் முன்னேற உதவுகின்றன?

## பகுதி 29

பயிற்சிப்பாடங்களை வழங்குவதற்கான பல்வேறு முறைகளைப் பற்றி சிந்தித்து, கல்வி முறைமை கட்டமைக்கப்பட்டுள்ள மைய அம்சங்களில் ஒன்றாகிய, குறிப்பாகப் படிப்பு வட்டத்தைப் பார்ப்பதுடன் அஃது எவ்வாறு செயல்படுகிறது என்பதை ஒரு பயிற்றுநரின் கண்ணோட்டத்திலிருந்து சுருக்கமாக ஆராய்வோம். ஒரு குழு கடைப்பிடிக்க வேண்டிய நிலையான நடைமுறைகள் எதுவும் கிடையாது என்பதை நீங்கள் ஏற்கனவே அறிந்துள்ளீர்கள். எனவே, நாம் ஒரு படிப்பு வட்டத்தின் நடவடிக்கைகளுள் குறிப்பிட்ட சிலவற்றை பரிசீலிப்போம். சித்தரிக்கப்பட்ட சூழ்நிலைகள் பலவகையாக இருப்பதுடன் ஒரு பயிற்றுநராகப் பணியாற்றுவதில் நீங்கள் சந்திக்கும் சூழ்நிலைகள் போன்றே இருக்காது. ஆனால், ஒவ்வொன்றின் முடிவிலும் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கருத்தில் கொள்வது, நீங்கள் எதிர்கொள்ளும் இதுபோன்ற சூழ்நிலைகளுக்கு நீங்கள் எவ்வாறு பதிலிறுக்கலாம் என்பதைப் பற்றி சிந்திக்க உதவிடும்.

1. நீங்கள் எட்டு இளைஞர்களுடன் ஒரு படிப்பு வட்டத்தைத் தொடங்கியுள்ளீர்கள். அவர்கள் 16 முதல் 19 வரையிலான வயதுடையோர். வழிபாடுகளுக்குப் பிறகு, பொதுவாக பயிற்சிக்கழகப் பாடங்களின் தன்மையைப் பற்றி நீங்கள் சில வார்த்தைகளைச் சொல்லிவிட்டு, அவர்கள் பகிர்ந்து கொள்ள விரும்பும் எண்ணங்கள் ஏதேனும் உள்ளதா என கேளுங்கள். அவர்களில் மூன்று பேர் மட்டுமே கருத்துகளை வழங்குகிறார்கள், மற்றும் மற்றவர்கள் தயங்குவதைப் பார்த்து, அவர்களும் அவ்வாறு தங்கள் கருத்துகளை வழங்க வேண்டும் என நீங்கள் வலியுறுத்தவில்லை. நூல் 1-இன் முதல் பாடப்பிரிவை

அறிமுகப்படுத்தி, அதன் நோக்கம் மற்றும் உள்ளடக்கத்தை விளக்குகிறீர்கள். நீங்கள் என்ன சொல்வீர்கள்?

2. உங்கள் அறிமுகத்திற்குப் பிறகு, அதே அமர்வில், பங்கேற்பாளர்கள் முதல் பாடப்பிரிவின் பகுதி 1-ஐப் பயிலத் தொடங்குகின்றனர். பங்கேற்பாளர்களுள் ஒருவரிடம் முதல் மேற்கோளை உரக்கப் படிக்கச் சொல்லியும், பின்னர் அதைத் தொடர்ந்து வரும் கேள்வி மற்றவர்களிடம் கேட்பதே அப்பகுதியைப் பயில்வதற்கான சிறந்த வழி என நீங்கள் முடிவு செய்கிறீர்கள். மேற்கோள்களின் பயன்பாடு மற்றும் தாக்கங்களைப் பற்றி சிந்திக்கும் முன், மேற்கோளின் உடனடி மற்றும் வெளிப்படையான அர்த்தத்தில் கவனம் செலுத்த அவர்களுக்கு உதவுவதே இந்தப் பயிற்சியின் நோக்கம் என நீங்கள் விளக்குகின்றீர்கள். அவர்கள் அனைவரும் மேற்கோளைத் திரும்பிப் பார்க்கின்றனர், அவர்களில் இருவர் அதை திரும்பவும் உச்சரிப்பதன் மூலம் கேள்விக்குப் பதிலளிக்கின்றனர். நீங்கள் மற்றொரு பங்கேற்பாளரிடம் இரண்டாவது மேற்கோளுடன் இதையே செய்யும்படி கேட்டுக்கொள்கிறீர்கள், மற்றும் பிரிவின் இறுதி வரை இதே வழியில் தொடர்கின்றீர்கள். பின்னர், பிரிவு 3-இல் உள்ள மேற்கோள்களின் அடுத்த தொகுப்பை நீங்கள் அடையும்போது, பங்கேற்பாளர்களை இரண்டு பேர் கொண்ட நான்கு குழுக்களாகப் பிரித்து, இந்தச் செயலை ஜோடிகளாகச் செய்திடும்படி அவர்களை அழைக்கின்றீர்கள். இது நடந்து கொண்டிருக்கும் போது நீங்கள் என்ன செய்வீர்கள்? ஒவ்வொரு ஜோடியும் இந்தச் செயலை எவ்வாறு மேற்கொள்கிறது என்பதை நீங்கள் அவதானிப்பீர்களா? ஒரு ஜோடியினர் பயிற்சி எளிதாக இருப்பதைக் கண்டு, அதை முழுமையாக ஆனால் விரைவாகச் செய்திடுவதைக் காணும் போது நீங்கள் என்ன செய்வீர்கள்?

3. பல வாரங்களுக்குப் பிறகு அதே குழு, ஆன்மாவிற்கும் உடலுக்கும் இடையிலான உறவைப் பற்றி விவாதிக்கும் நூல் 1-இன் மூன்றாவது பாடப்பிரிவின் பகுதி 3-ஐப் பயில்கிறது. அறிமுகப் பத்தியும் மேற்கோளும் உரக்க வாசிக்கப்பட்டும், வெளிப்படுத்தப்பட்ட கருத்துகளைப் பற்றிப் பிரதிபலித்திடவும் சிறிது நேரம் கொடுக்கப்பட்டுள்ளது. இப்போது ஒவ்வொருவரும் தனித்தனியே பயிற்சிகளை மேற்கொள்கின்றனர். அறையில் அமைதி நிலவுகிறது, சூழ்நிலை தீவிரமும் கட்டுப்பாடும் மேவிய பிரதிபலிப்பால் நிறைந்துள்ளது. அத்தகைய சூழ்நிலையை உருவாக்கிடுவதற்கு உதவியாக நீங்கள் என்ன செய்தீர்கள்?

4. ஒரு கிராமம் அல்லது அண்டைப்புறத்தில் உள்ள இளைஞர்களால் ஆன ஒரு படிப்பு வட்டத்தில் நீங்கள் ஒரு பயிற்றுநராகப் பணியாற்றுகிறீர்கள், அங்கு சமூக நிர்மாணிப்புச் செயல்முறை இன்னும் ஆரம்ப கட்டத்திலேயே உள்ளது. சில இளைய இளைஞர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, ஆன்மிக அதிகாரமளித்தல் திட்டத்தில் பங்கேற்பாளர்களின் வீடுகளுக்குச் செல்லும் நடைமுறை பிடிபடத் தொடங்கியுள்ளது. இதன் விளைவாக, அவர்கள் குடும்பங்களில் பலர் சமயத்தின் போதனைகளின்பால் ஈர்க்கப்படுகின்றனர். படிப்பு வட்டத்திலுள்ள இளைஞர்களுடன் நூல்1-ஐ நீங்கள் இப்போதுதான் படித்து முடித்திருக்கிறீர்கள். இந்தக் குடும்பங்களில் சிலவற்றைச் சந்தித்து அவர்களுடன் பிரார்த்தனைகளைப் பகிர்ந்துகொள்ளும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள அவ்விளைஞர்கள் ஆர்வமாக இருக்கின்றனர். அவ்வாறு செய்திட அவர்களுக்கு நீங்கள் எவ்வாறு உதவுவீர்கள்?

5. உங்கள் கிராமம் அல்லது அண்டைப்புறத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் குழுவுடன் நீங்கள் நூல் 2-ஐப் படிக்கின்றீர்கள். "ஊக்குவிக்கும் உரையாடல்கள்" என்னும் இரண்டாவது பாடப்பிரிவிற்கு அவர்கள் செல்லும்போது, பள்ளியில் தங்கள் சகாக்களுடன் சமூக மற்றும் ஆன்மிக முக்கியத்துவம் வாய்ந்த கருப்பொருள்களில் உரையாடல்களில் ஈடுபடுவதன் மூலம் அவர்கள் கற்றுக்கொண்டதைப் பயன்படுத்திட முயலுமாறு நீங்கள் பரிந்துரைக்கின்றீர்கள். ஆன்மிகம் சார்ந்த விஷயங்களில் உரையாடும் திறன் அதிகரிக்கத் தொடங்குவதை உறுதிபடுத்திட நீங்கள் என்னென்ன செய்ய முடியும்? எடுத்துக்காட்டாக, ஒவ்வொரு பங்கேற்பாளரும் பாடப்பிரிவைப் படிக்கும் போது, குறைந்தபட்சம் ஓர் அறிக்கையையாவது தேர்வு செய்து, அதிலுள்ள யோசனைகளைப் பற்றி உரையாடிட ஓரிரண்டு நண்பர்களை அடையாளம் காண நீங்கள் முதலில் உதவுவது ஏன் அவசியம்?

6. சில வாரங்களுக்குப் பிறகு, அதே இளைஞர் குழு நூல் 2-இன் மூன்றாவது பாடப்பிரிவுக்குள் நுழைந்து, பிரிவு 3-ஐத் தொடங்கியுள்ளது. அதில் அவர்கள் கடவுளின் நித்திய திருவுடன்பாடு பற்றிய அறிக்கை ஒன்றைப் படிக்கின்றனர். அறிக்கையைப் படித்த பிறகு, பங்கேற்பாளர்கள் அதைப் பத்திப் பத்தியாகப் பிரதிபலிக்கவும், அதில் உள்ள யோசனைகளின் வரிசையை அடையாளம் காணவும், அவற்றைத் தெளிவாக வெளிப்படுத்தவும் கற்றுக்கொள்வது ஏன் முக்கியம்?

7. நூல் 2-இன் மூலம் நீங்கள் வழிநடத்தி வந்த ஒரு குழு இப்போது அதன் படிப்பாய்வை முடித்துள்ளது, அத்துடன் இல்லங்களுக்குச் செல்வதன் மூலமும், கருப்பொருள்களின் வரிசை ஒன்றைச் சுற்றி குடும்பங்களுடன் கலந்துரையாகளில் ஈடுபடுவதன் மூலமும் அவர்கள் கற்றுக்கொண்டதை நடைமுறைப் படுத்துவதற்கான நேரம் வந்துவிட்டது. நீங்கள் வசிக்கும் சூழ்நிலைகளை மனதில் கொண்டு, ஒவ்வொரு இளைஞரும் அத்தகைய வருகைகளுக்கு ஆயத்தமாவதிலும் அவற்றை மேற்கொள்வதிலும், குறிப்பாக ஆரம்பக் கட்டங்களில், அவர்களின் திறனாற்றல் உருவாக்கப்படும் போது, அவர்கள் எவ்வாறு உடன்வரப் படுவர்? இல்ல விஜயங்களுக்கான முறையான திட்டத்தில் அவர்கள் பங்கேற்பது சமூக வாழ்க்கை வடிவத்தை வலுப்படுத்த உதவுகிறது என்பதை எவ்வாறு உறுதிபடுத்துவது சாத்தியமாகும்?

8. மற்றொரு சந்தர்ப்பத்தில், நீங்கள் நண்பர்கள் குழு ஒன்றிற்கு நூல் 3-ஆன ‘*குழந்தைகளுக்கான வகுப்புகளுக்குப் போதித்தல், கிரேட் 1-ஐப்* பயின்றிட உதவுகின்றீர்கள். அவர்கள் வகுப்புகளுக்கான இருபத்தி நான்கு பாடங்களை உள்ளடக்கிய இரண்டாவது பாடப்பிரிவில் ஈடுபடுகின்றனர். நான்கு பாடங்கள் அடங்கிய முதல் தொகுப்பை சற்று விரிவாகப் படித்த பிறகு, பகுதி 5-இல் பரிந்துரைக்கப்பட்டுள்ளபடி பங்கேற்பாளர்களை, தங்களுக்குத் தெரிந்த சில குழந்தைகளுக்கு—அவர்களின் சொந்தப் பரந்த குடும்பங்களிலோ அல்லது அண்டை வீடுகளிலோ—பாடங்களைக் வழங்கிட முயலுமாறு ஊக்குவிக்கிறீர்கள். இதற்கான செயல் திட்டத்தை வகுப்பதில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் எப்படி உதவுவீர்கள்? அடுத்த முறை படிப்பு வட்டம் சந்திக்கும் போது அவர்கள் எடுத்த நடவடிக்கையைப் பற்றிப் பிரதிபலிப்பதற்கு அவர்களுக்கு உதவிட நீங்கள் என்ன அணுகுமுறையைப் பயன்படுத்துவீர்கள்?

9. நீங்கள் நூல் 4-இன் இரண்டாவது யூனிட்டை இளைஞர்கள் குழுவுடன் படித்து முடித்திருக்கிறீர்கள். அவர்கள் பாடப்பிரிவின் பல்வேறு பகுதிகளைப் பயின்றிருப்பதனால், அவர்கள் பாப் பெருமானாரின் வாழ்க்கையின் ஒவ்வொரு அத்தியாயத்தையும் மொழிந்திட பயிற்சி செய்துள்ளனர். அவர்கள் இப்போது அவர் வெளிப்படுத்திய இரண்டு பிரார்த்தனைகளை மனனம் செய்து, உயிர் அட்சரங்களுக்கு அவர் வழங்கிய உரையை மனனம் செய்திடவும் முயல்கின்றனர். பாப் பெருமானார் பிரகடனத்தின் ஆண்டு நிறைவு அணுகி வருகிறது, மற்றும் சமூகத்தில் புனித தின கொண்டாட்டத்திற்கான திட்டத்தை குழுவினர் தாங்கள் ஏற்பாடு செய்திட முன்வருகின்றனர். தாங்கள் கற்றுக்கொண்டதைப் பயன்படுத்திட துடிக்கின்றனர். நிரலைத் திட்டமிடவும், நிகழ்வுக்குத் தயாராகிடவும் அவர்களுக்கு நீங்கள் எப்படி உதவ முடியும் ஒரு பயபக்தி மிக்க மற்றும் மகிழ்ச்சியான ஒன்றுகூடலை உருவாக்கிட குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் பங்களிக்க முடியும் என்பதை உறுதிபடுத்த ஒரு பயிற்றுநர் என்னும் முறையில் நீங்கள் என்ன செய்ய முடியும்?

10. பிரதான வரிசைக்கான ஒருங்கிணைப்பாளரின் வேண்டுகோளின் பேரில், நீங்கள் நூல் 5-இன் வழி ஒரு சிறிய இளைஞர் குழுவை வழநடத்துகிறீர்கள். இரண்டாவது பாடப்பிரிவு பூர்த்தியானதும், இந்த வயதில் உள்ளவர்கள் சில குறிப்பிடத்தக்க கருப்பொருள்களைப் பற்றி எப்படி சிந்திக்கின்றனர் என்பதைப் பற்றிய சில நுண்ணறிவுகளைப் பெறுவதற்காக சில இளைய இளைஞர்களுடன் உரையாடல்களை நடத்துவதற்கு நீங்கள் அவர்களுக்கு உதவுகிறீர்கள். இதைச் செய்வதற்கு நீங்கள் அவர்களுக்கு எப்படி உதவுவீர்கள்? உதாரணத்திற்கு, அவர்கள் இளைய இளைஞர்களுடன் தனித்தனியாக பேசுவார்களா? அவர்கள் உரையாடல்களில் இருவர் இருவராக ஈடுபடவார்களா, மற்றும் அவர்களோடு யார் உடன் செல்வது? அவர்கள் தங்களின் அனுபவத்தைப் பற்றி பிரதிபலித்திட நீங்கள் அவர்களை எவ்வாறு வழிநடத்துவீர்கள்?

11. நீங்கள் ஓர் இளைஞர் குழுவுடன் நூல் 6-இன் மூன்றாவது பாடப்பிரிவைப் பார்க்கிறீர்கள். அவர்கள் அனைவரும் உங்கள் கிராமத்திலோ அண்டைப்புறத்திலோ பணிபுரியும் நண்பர்களின் விரிவடைந்து வரும் ஒரு மையக்கருவின் ஒரு புதிய மூன்று மாதச்

செயல்பாடு விரைவில் தொடங்கவுள்ளது, அத்துடன் விரிவாக்கக் கட்டத்தின் போதான முயற்சிகள் பயிற்சிக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகளில் ஆர்வமுள்ள இளைஞர்களின் குடும்பங்களுக்கு சமயத்தைக் கற்பிப்பதில் கவனம் செலுத்தும். பங்கேற்பாளர்கள் அன்னாவுக்கும் எமிலியாவுக்கும் இடையிலான உரையாடலைப் படிப்பாய்வு செய்து, தங்களுக்குள் அந்த யோசனைகளைக் கூற பயிற்சி செய்கின்றனர். பரப்பியக்கத்தின் போது, அவர்கள் சமயத்தின் போதனைகளை யோக்கியமான முறையில் முன்வைப்பதில் அனுபவத்தைப் பெறுவதற்கு அவர்கள் என்ன உதவியைப் பெறுவார்கள் என்பதை உறுதிபடுத்துவீர்கள்?

## பகுதி 30

பயிற்சிப்பாடங்களின் வரிசை, படிப்பு வட்டம், பயிற்றுநர் ஆகியவை ரூஹி பயிற்சிக்கழகத்தின் கல்வி முறைமையின் மூன்று மைய அம்சங்களை உருவாக்குகின்றன. இந்த முறைமையில் பயிற்றுநர் வகிக்கும் முக்கிய பங்கு பற்றிய விழிப்புணர்வை முந்தைய பகுதிகள் தெளிவாக்கியுள்ளன. நீங்கள் இதுவரை இங்கு படித்தவற்றை மறுபரிசீலனை செய்து, நீங்கள் மேற்கொள்ளவிருக்கும் முயற்சியைப் பற்றி ஒன்று அல்லது இரண்டு பத்திகள் எழுதுவதற்கு இது சரியான நேரமாக இருக்கலாம்.

நீங்கள் எழுதியதைப் பார்க்காமல், உங்கள் விளக்கம் சேவை குறித்த கருத்தாக்கத்தைச் சுற்றி வலம் வரும் என நாம் நிச்சயமாக அனுமானிக்கலாம். சேவக ஸ்தானம் பற்றிய பின்வரும் இரண்டு மேற்கோள்களை நீங்கள் மனனம் செய்ய பரிந்துரைக்கப்படுகிறது. முதலாவது, பஹாவுல்லாவின் எழுத்துக்களில் இருந்தும், இரண்டாவது 'அப்துல்-பஹாவினால் வெளிப்படுத்தப்பட்ட நிருபத்திலிருந்தும்:

**“வழிபடுகின்றவர் மற்றும் பக்தியுடன் வணங்கப்படுவர் ஆகியோருக்கிடையேயும், படைப்பினம் மற்றும் படைத்தவர் ஆகியோருக்கிடையேயும் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சேவையின் பந்தமே, மனிதர்களுக்காக அவருடைய கிருபையுள்ள சலுகையின் ஓர் அடையாளமாகக் கருதப்பட வேண்டுமே தவிர, அவர்கள் கொண்டிருக்கக் கூடிய எந்த ஒரு தகுதியின் அறிகுறி அன்று. ஒவ்வொரு உண்மையான மற்றும் பகுத்துணரக் கூடிய நம்பிக்கையாளரும் இதற்கு சாட்சியமளிக்கிறார்.”** [10]

**“கடவுள் அன்பர்களின் ஊழியரே! நண்பர்களின் ஊழியன் திவ்ய பேரழகின் ஊழியனாவான். அவரை நேசிக்கும் எவரும் அவரது அன்பர்களுக்குச் சேவை செய்பவராவர். இந்த ஊழியன் இதயத்தின் ஆழ்ந்த ஆசை என்னவென்றால், நான், அப்ஹா அழகின் நண்பர்களுடைய சேவையில், விசுவாசமும் இணக்கமும் உடைய ஊழியனாக ஆகிட வேண்டும், இரவும் பகலும் சேவை என்னும் கச்சையை கட்டிக்கொண்டு, இருப்பெனும் விருட்சத்தின் கனியை அறுவடை செய்திட வேண்டும். நண்பர்களுக்கு சேவை செய்யும் பாதையில் வளைந்து கொடுக்காத உடற்கூடு மரித்துப்போன மரத்துண்டாகும், அவர்களுக்காக கஷ்டங்களைத் தாங்கியதால் கூண் விழாத முதுகு வெறும் மலட்டு மரக்கட்டையே. ஆதலால், நீங்கள் நண்பர்களின் சேவையை மேற்கொள்வதும், அவர்களின் விசுவாசமிக்க சேவகனாக இருப்பதும் உங்களுக்கு நன்மை பயப்பதாகும். இதுவே இரு உலகங்களிலும் இறையாண்மை மற்றும் இம்மையிலு மறுமையிலும் மகிமையாகும்.”** [11]

## பகுதி 31

இந்த பிரிவில் வழங்கப்பட்டுள்ள பல்வேறு கருப்பொருள்கள் பற்றிய உங்கள் கலந்துரையாடல்கள், பயிற்றுநராகப் பணியாற்றுவதற்கான திறன்கள் காலப்போக்கிலும் அனுபவத்தின் மூலமும் மட்டுமே பெறப்படுகின்றன எனும் நம்பிக்கையை நீங்கள் பெற்றிருக்கக்கூடும் இந்த நூலின் நோக்கம், சில கருத்தாக்கங்களை உங்களுக்கு அறிமுகப்படுத்துவதும், ரூஹி பயிற்சிக்கழகத்தின் பிரதான வரிசைப் பயிற்சிப்பாடங்களின் மூலம் ஆரம்ப நூல்களிலிருந்து நூல் 7-க்கும் அப்பால், ஒவ்வொரு குழுவாக உதவுவதற்கான உங்கள் திறனாற்றலை அதிக அளவில் மேம்படுத்துவதும் ஆகும். இந்தச் சேவைச் செயலுக்குத் தேவைப்படும் ஆன்மிக குணங்கள், மனப்பான்மைகள், திறன்கள் மற்றும் திறமைகளைப் பற்றிய நுண்ணறிவுகளைப் பெறுவதற்கும், தொடர்புடைய கருத்தாக்கங்களைப் பற்றிய உங்கள் புரிதலை மேலும் மேம்படுத்துவதற்கும், உங்கள் மண்டலத்தில் உள்ள பயிற்சிக்கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்றுநர்களுடைய வழக்கமான கூட்டங்களில் கலந்துகொள்வது மிகவும் பயனுள்ள வழிகளில் ஒன்றாகும். இத்தகைய கூட்டங்களில், பலவகையான அனுபவங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டும், கேட்கப்படும் பல கேள்விகளுக்கான பதில்கள் தேடப்படும்.

“பயிற்றுநர்களுக்கு சில சிந்தனைகள்”, என்னும் ஒவ்வொரு நூலிலும் காணப்படும் அறிமுகப் பகுதிகள், இந்த ஒன்றுகூடல்களில் அனுபவத்தின் அடிப்படையில் அடிக்கடி ஆராயப்படுகின்றன. இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒரு தனி விஷயம் உள்ளது. இந்தப் பகுதிகள் பெரும்பாலும் பயிற்றுநர்களாகப் பணியாற்றுபவர்களுக்காகவே உள்ளன, அத்துடன் பங்கேற்பாளர்கள் ஒரு நூலைப் படிப்பாய்வு செய்வதில் அப்பகுதிகளைப் படிக்க வேண்டிய அவசியமில்லை. உண்மையில், அவ்வாறு செய்வது எதிர்விளைவை உண்டாக்கிடலாம். இருப்பினும், ஒரு நூலில் உள்ள ஒவ்வொரு பாடப்பிரிவின் ஒட்டுமொத்த நோக்கத்தையும், சில பயிற்சிகளின் நோக்கத்தையும் பங்கேற்பாளர்கள் பாராட்டுவதற்கு உதவுவதில், அத்தகைய பகுதிகளில் அடங்கியுள்ள சில யோசனைகளின் பயனைப் பெறுதல் ஒரு பயிற்றுந ருக்குப் பயனுள்ளதாக இருக்கும். ஆனால் இது எப்போதும், குழுவில் வெளிப்படும் போதித்தல்-கற்றல் அனுபவத்திற்குப் பதிலளிக்கும் வகையில் அளவுக்குட்பட்ட முறையில் செய்யப்படும்.

இப்போது ஒரு பயிற்றுநர் ஒன்றுகூடலின் தன்மையைப் பரசீலிப்போம். ஒன்றுகூடலில் ஒரு பகுதி, பயிற்சிக்கழகப் பாடங்கள் தொடர்பான சில முக்கியக் குறிப்புகளின் கலந்துரையாடலுக்கு அர்ப்பணிக்கப்படலாம், அவற்றில் பலவற்றை நூல் 1-ன் "பயிற்றுநருக்கான சில சிந்தனைகள்" என்பதிலிருந்து பெறலாம். இவற்றில் பல கீழே கொடுக்கப்பட்டுள்ளன. பட்டியலில் மேலும் வேறு குறிப்புகளை நீங்கள் சேர்த்திட விரும்பலாம்.

— ரூஹி பயிற்சிக்கழகப் பாடங்களின் பங்கேற்பாளர்கள் அனைவரும், அவர்கள் உபகரணங்களை முதன்முதலாகப் பயின்றாலோ பயிற்றுநர்களாகச் செயல்பட்டாளோ, அவர்கள் ஒரு பரஸ்பரமான கற்றல் செயல்முறையில் ஈடுபடுகின்றனர்.

— கற்றலுக்கான பொறுப்பு ஒவ்வொரு பங்கேற்பாளரையும் சார்ந்தது.

— பயிற்றுநர், கலந்துரையாடலில் ஒரு பற்றற்ற, ஈடுபாடில்லா ஓர் ஒருங்கிணைப்பாளராக இருப்பதற்கு மாறாக, பயிலப்படும் உபகரணம் குறித்த ஒரு போதி அளவு புரிதலைப் பெற்றிட குழுவின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் உதவுகின்றார்.

— போதித்தல்-கற்றல் செயல்பாட்டில் பங்கேற்பாளர்களை விளைவுத்திறத்துடன் ஈடுபடுத்தும் பயிற்றுநரின் திறனாற்றல் மேம்படுகிறது, அவர் பயிற்சிப்பாடங்கள் மூலம் ஒவ்வொரு குழுவையும் வழிநடத்தி, ஒவ்வொரு நூலும் பரிந்துரைக்கும் சேவைச் செயல்களை மேற்கொள்வதில் சில ஆரம்ப அனுபவத்தைப் பெறுவதற்கு அதன் உறுப்பினர்களுக்கு உதவுகிறார்.

— ஒரு கல்விச் செயல்முறையில், சாதாரன திறன்களைப் பெறுவதுடன் சம்பந்தப்பட்ட ஒன்றிற்கு மாறாக, அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதன் அர்த்தம் மற்றும் முக்கியத்துவம் குறித்து பங்கேற்பாளர்கள் அதிகரிப்புடன் விழிப்புணர்வு பெறுவது இன்றியமையாததாகும்.

— பயிற்சிக்கழகத்தின் பயிற்சிப்பாடங்கள் மானிடத்திற்கான ஒரு சேவை பாதையை வரைகின்றன. அதன் மீது ஒவ்வொரு பங்கேற்பாளரும் தங்களின் சொந்த வேகத்தில் பயணிப்பதுடன், பிறரால் உதவப்படுவதுடன், அவர்கள் பிறருக்கும் உதவுகின்றனர்.

— இந்தப் பாதையில் நடப்பதில், பங்கேற்பாளர்கள் ஓர் இரட்டைத் தார்மீக நோக்கத்தைப் பின்தொடர்கின்றனர்—தங்களின் சொந்த ஆன்மிக மற்றும் அறிவாற்றல் வளர்ச்சியில் ஈடுபடுகின்றனர், சமுதாயத்தின் தன்மைமாற்றத்திற்குப் பங்களிக்கின்றனர்.

— இந்தப் பாதையில் மேம்பாடு என்பது, புரிதல் மற்றும் அறிவு, ஆன்மிக குணங்கள் மற்றும் பாராட்டுக்குரிய மனப்பான்மைகள், அத்துடன் பல திறமைகள் மற்றும் திறன்கள் போன்ற பல செயல்திறன்கள் உருவாக்கப்படுவதைக் கோருகின்றது.

— ரூஹி பயிற்சிக்கழகத்தின் நூல்கள் அறிவுக்கான இரண்டு மூலாதாரங்களிலிருந்து ஈர்க்கின்றன: பஹாய் சமயத்தின் போதனைகள் மற்றும் லௌகீக மற்றும் ஆன்மிக நாகரிகத்தை மேம்படுத்துவதில் உலகளாவிய பஹாய் சமூகத்தின் குவிந்துவரும் அனுபவம்.

— நாம் நிர்மாணிக்கவிருக்கும் நாகரிகம் பற்றிய பஹாவுல்லாவின் தொலைநோக்கு நாம் ஆகிடக்கூடிய அந்தத் தனிநபருக்கும் பயிற்சிக்கழகத்திற்கும் உத்வேகமூட்டுகின்றது, அத்துடன் ஒவ்வொரு நூலினுடைய ஒவ்வொரு பாடப்பிரிவிலும் வெளிப்படையாக உள்ள இந்தத் தொலைநோக்கை அவர்களின் பின்னணியைக் கருதாமல், அனைத்து பங்கேற்பாளர்களும் சுயாதீனமாக, ஏற்பிசைவுடையோர் என கருதப்படுகிறது.

— பயிற்சிக்கழகப் பாடத்திட்டங்களால் திறக்கப்பட்ட சேவை பாதையில் நடப்பதானது, உபகரணங்கள் ஐயத்திற்கிடமின்றி முன்வைத்திட முயலும் பஹாவுல்லாவின் போதனைகளைப் பற்றிய தொடர்ந்து ஆழப்படும் புரிதலைக் கோருகிறது,

— பயிற்சிக்கழகத்தின் பாடங்கள் அனைத்திற்கும் மையமான நூல் 1-இன் முதல் பாடப்பிரிவு புரிதல் பற்றிய கேள்வியைப் பரிசீலிக்கின்றது.

— முதலில், பங்கேற்பாளர்கள் திருமொழிகளில் இருந்து வரும் பத்திகளின் உடனடி அர்த்தத்தைப் புரிந்துகொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன் அடிப்படையில், அவற்றின் சில தாக்கங்களைக் கருத்தில் கொண்டு, அவர்களின் புரிதலை மேலும் மேம்படுத்துவதற்கு முன், அவற்றில் அடங்கியுள்ள கருத்துக்கள் எவ்வாறு ஆணித்தரமான வெளிப்பாட்டைக் காண்கின்றன என்பதைக் காண்பதற்கு அவர்கள் உதவப்படுகிறார்கள்.

— திருமொழிகளிலிருந்து வரும் பத்திகளின் உடனடி மற்றும் வெளிப்படையானஅர்த்தத்தின் மீது கவனம் செலுத்தும் திறன், பஹாய் சமூகங்களில் ஒற்றுமையை உருவாக்குவதற்குப் பங்களிக்கின்றது.

— தனி வார்த்தைகளின் அர்த்தத்தை, படிப்பாய்வு செய்யப்படும் உபகரணத்தின் சூழலுக்கு வெளியே நீண்ட நேரம் விவாதிப்பது எதிர்மாறான விளைவை உண்டாக்கிடக் கூடும்.

— ஒவ்வொரு பயிற்சிப்பாடத்தின் படிப்பாய்விலும் மேம்பாட்டின் ஒரு லயம் ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

— படிப்பாய்வுக் குழுக்கள், ஒருபுறம், பயிற்சிகள் கவனமாக பகுப்பாய்வு செய்யப்படாத ஒரு மேலோட்டமான அணுகுமுறையையும், மறுபுறம், அலகின்(unit) முக்கிய

நோக்கத்திலிருந்து திசைதிருப்பும் ஒரு யோசனை குறித்த நீண்ட விவாதத்தையும் தவிர்த்திட வேண்டும்.

— சில கேள்விகள் ஒரு தெளிவான முறையில் பதிலளிக்கப்பட முடியாது, மற்றும் அவை ஒரு கருப்பொருள் குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதை நோக்கமாக மட்டுமே கொண்டுள்ளன.

— ______________________________________________________________________
______________________________________________________________________

— ______________________________________________________________________
______________________________________________________________________

— ______________________________________________________________________
______________________________________________________________________

— ______________________________________________________________________
______________________________________________________________________

— ______________________________________________________________________
______________________________________________________________________

## பகுதி 32

பயிற்றுநர்களுடைய கூட்டங்களில் மேற்கொள்ளப்படும் மற்றொரு நடவடிக்கை, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாடப் பிரிவுகளில் பரிசீலிக்கப்பட்டு, அவற்றில் இருக்கும் விஷயங்கள் சற்று விபரமாக ஆராயப்பட்டு, குறிப்பிட்ட பத்திகளும், பயிற்சி குறிப்புகளும் கலந்தாய்வு செய்யப்படுகின்றன. இக்கூட்டங்களின்போது நீங்கள் ஈடுபடவிருக்கும் கலந்துரையாடலின் விதத்தை எடுத்துக்காட்டும் வகையில், கணிசமான அனுபவம் பெற்ற நபர் ஒருவரும், பயிற்றுநர்களின் குழுமம் ஒன்றும், தோழமை, பணிவு மற்றும் கற்றல் ஆகியவை நிறைந்த வழக்கமான சூழ்நிலையில் கலந்துரையாடிக் கொண்டிருக்கும்போது, அவர்களுக்கிடையே நடைபெறும் ஒரு சில கற்பனை உரையாடல்களை இப்பகுதியிலும், அடுத்த மூன்று பகுதிகளிலும் நாம் உங்களுக்காக வழங்குகின்றோம். நீங்கள் மேற்கொள்ள வேண்டிய ஓரிரு பயிற்சி குறிப்புகள், ஒவ்வொரு உரையாடலையும் தொடரும். இந்த பக்கங்களின் நோக்கத்திற்காக, “அ”, “ஆ”, “இ” ஆகியவை கூட்டத்தில் பங்கேற்கும் மூன்று பயிற்றுநர்களையும் “உ” என்பது பயிற்சித் தொடர்வரிசையின் ஒருங்கிணைப்பாளரையும் குறிக்கும். “ஆன்மாவின் வாழ்வு பற்றிய சிந்தனைகள்” என்ற நூலின் முதலாவது பாடப்பிரிவில் உள்ள முதல் மேற்கோள்களின் வரிசைக்குப் பிறகு காணப்படும் பயிற்சி குறிப்புகளைப் பற்றிய அவர்கள் கலந்தாய்வு செய்கின்றனர். அந்தப் பகுதியை நீங்கள் இப்போது பார்ப்பது, உங்களுக்கு உதவியாக இருக்கும்.

*அ. நூல் 1-இன் “பயிற்றுநருக்கு சில சிந்தனைகள்” என்ற பகுதியிலுள்ள ஒரு கருத்து எனக்கு மிகவும் உதவியாக இருந்தது என்பதை நான் கூற விரும்புகிறேன். அஃது இரண்டாவது பகுதியின் மூன்றாவது பயிற்சி குறிப்புடனும் “இவ்வுலகில் மிகச் சில நல்ல மனிதர்களே இருப்பதால், அவர்களது செயல்கள் எவ்வித பயனையும் ஏற்படுத்துவதில்லை” என்ற*

*கூற்றுடனும் சம்பந்தப்பட்டுள்ளது. நான் பயிற்றுனராக சேவை புரிந்த குழுமத்தில் இருந்த அனைவருமே சரியாகவே, இக்கூற்று தவறானது என்று கூறினர். ஏன் என்று நான் கேட்டபோது, அவர்கள் பல காரணங்களைக் கூறினர். அவை அனைத்தும் நன்றாக இருந்தன ஆனால், இறுதியாக நான், சென்ற பகுதியின் முதல் மேற்கோளினைப் பார்த்து, அதன் அடிப்படையில் இக்கூற்றினை மதிப்பீடு செய்யுமாறு கேட்க வேண்டியிருந்து. பிறகு அனைவருமே, இக்கூற்றானது, பஹாவுல்லாவின் திருவாசகங்களுக்கு மாறாக இருப்பதை உணர்ந்தனர். இந்த உணர்வானது, குழுமத்தற்கு நம்பிக்கையும் ஆர்வக்கிளர்ச்சியையும் கொடுத்தது.*

*ஆ. ஆனால் அனைத்து பயிற்சி குறிப்புகளுக்கான இதுபோன்ற தெளிவான பதில்கள் மேற்கோள்களில் காணப்பட முடியாது. அதே பயிற்சி குறிப்பில் உள்ள அடுத்த கூற்றினை "ஒரு செயல் மற்றவர்களின் கருத்துக்களோடு ஒத்துவரும்போது, அது சரியானதாக இருக்கும்." அதற்கு முன்பிருக்கும் எந்த மேற்கோள்களும், இவ் விஷயத்தைப் பற்றி தெளிவாக கூறுவதில்லை இக்கூற்று தவறானது என பொதுவாக அனைவரும் கூறுகின்றனர். இந்த பதிலை ஒருவர் வெறுமென ஏற்றுக்கொள்ள வேண்டுமா அல்லது சற்று, கலந்தாய்வு தேவைப்படுகிறதா?*

*உ. இக்கூற்றின் தாத்பரியங்கள் பற்றி ஒரு சிறிய கலந்தாய்வு, பங்கேற்பாளர்களின் புரிந்துணர்வை ஆழப்படுத்தியுள்ள, சில குழுமங்கள் எனக்கு தெரியும். இறைவனுடைய போதனைகள், எது சரி, எது தவறு என்பதை நிர்ணயிக்கின்றன எனபது எனக்கு தெரியும், ஆனால் நாம் மக்களுடைய கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்கள் ஆகியவற்றை கேட்க வேண்டிய தேவையும் உள்ளது. இருப்பினும் இந்த அபிப்பிராயங்களுக்கு நாம் எவ்வளவு முக்கியத்துவம் வழங்க வேண்டும், மற்றும் அவற்றை நாம் எந்த அளவிற்கு நம்மீது செல்வாக்கினை செலுத்த அனுமதிக்க வேண்டும் ஆகியவை சிந்திக்க வேண்டிய விஷயங்களாகும். உதாரணத்திற்காக நான் பயிற்றுனராக செயல்பட்ட ஒரு குழுமத்தில், கலந்தாய்வானது, விவேகம் மற்றும் நல்லொழுக்க சக்திபெறுதல் போன்ற விஷயங்களைத் தொட்டது ஆனால், உங்களுக்கு உண்மையை கூறப்போனால், அந்த கலந்துரையாடலானது பிரகாசமுடையதாக இருந்த போதிலும், அது பெரும்பாலும் கோட்பாட்டளவில் இருந்தது. நான் கலந்தரையாடலினை நிச்சயமாக ஒரு விநயமுள்ள மற்றும் அன்பான முறையில் இன்னும் விரைவில் முடிவுக்கு கொண்டுவந்திருக்க வேண்டும்.*

*இ. அப்பகுதியிலுள்ள ஐந்தாம் பயிற்சி குறிப்பானது, சில செயல்கள் ஒரு பஹாயின் சொற்களுடன் இசைந்திருக்கதகின்றனவா, என்று கேட்கிறது. இதற்கான உடனடி பதில்கள் சுலபமானவையே, அவை அவ்வாறு இருப்பதற்காகவே வழங்கப்பட்டுள்ளன என நான் நினைக்கிறேன். ஆனால் இப்பயிற்சி குறிப்பிற்குப் பின் ஒரு நோக்கம் உள்ளது என்று எனக்கு தோன்றுகிறது. சில வேளைகளில், நாம் மக்களுக்கு அவர்கள் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்று கூறும் பழக்கத்தில் இறங்கிவிடலாம். மது அருந்தாதீர்கள். கற்புடனிருங்கள், பொய் பேசாதீர்கள் ரூஹி பயற்சி நிலையத்தின்*

*நூல்கள் மக்களுக்கு பிரச்சாரம் செய்வதை தவிர்க்கின்றன என்பதை நான் காணமுடிகின்றது. அவை மக்களை சிந்திக்க வைத்து, அவர்கள் நல்லொழுக்கஞ்சார்ந்த முடிவுகளை எடுக்க உதவுகின்றன. இந்த பயிற்சி குறிப்பு சம்பந்தமாக, ஒரு குறிப்பிட்ட வழியில் நடந்துக்கொள்ளும்போது, அவை எவர்களது "சொற்கள் தங்களுடைய செயல்களிலிருந்து வேறுபடுகின்றனவோ" அவர்களின் வரிசையில் பஹாவுல்லாவிடமிருந்து இவ்வளவு கடுமையானதோர் எச்சரிக்கையைப் பெற்றுள்ளவர்களின் வரிசையில்-தங்களையே சேர்த்துக்கொள்கின்றனர் என்ற உணர்வானது, என்னுடைய பயிற்சி குழுமத்தின் உறுப்பினர்களின் மீது ஓர் ஆழமிக்க விளைவினை ஏற்படுத்தியது. இப்பயிற்சி குறிப்பினால் நான் மகிழ்ச்சியடைந்தேன், ஏனெனில், நாம் நல்லொழுக்கஞ்சார்ந்த சில சட்டங்களின் விவேகத்தைப் பற்றி பற்றறுக்கப்பட்ட ஓர் முறையில், பங்கேற்பாளர்களின் கௌரவத்தை மதித்து, பேச முடிந்தது.*

உ. *நீங்கள் ஒரு நல்ல விஷயத்தை எழுப்பியுள்ளீர்கள். இங்கு சுலபமாக இருப்பது போல் இருக்கும் ஒரு பயிற்சி குறிப்பு உள்ளது. அது வெளிப்படையாக கூறாமல், பஹாய் நடத்தையின் முன்மாதிரி உயர்வுநயத்தை முன்வைக்கிறது. இன்னுஞ்சரியாக சொல்லப்போனால் அது, மாணவர்கள் தாங்களே, சமயத்தின் நல்லொழுக்கஞ்சார்ந்த சட்டங்களைப் பற்றி சற்று புரிந்துணர்வைப் பெற்றிட, அனுமதிக்கிறது. அந்த பயிற்சி குறிப்பினைத் தொடரும் ஐந்து கேள்விகள், அவ்வளவு ஒளிவுமறைவற்றவை என்றாலும் இதேபோன்றதோர் விளைவினைக் கொண்டுள்ளன என்பதை நீங்கள் அநேகமாக கண்டுபிடித்துள்ளீர்கள். நிச்சயமாக கலந்துரையாடலானது பல திசைகளில் செல்ல நீங்கள் விரும்ப மாட்டீர்கள், ஆனால் நல்லொழுக்கஞ்சார்ந்த நடத்தைப்பற்றி சிந்திப்பதற்காக, மாணவர்களுக்கு ஒரு வாய்ப்பு தேவைப்படுகிறது. ஒருவருடைய செயல்கள் உலகினையும் மனித குலத்தின் நல்வாழ்வினையும் பாதிக்கிறது என்ற ஓர் விழிப்புணர்வையும் அவர்கள் பெற வேண்டும், மற்றும் ஒருவர், தன்னுடைய செயல்களுக்கு பொறுப்பேற்க வேண்டும் என்ற உண்மையையும் நாம் உணர்ந்திருக்க வேண்டும்.*

1. பயிற்றுநர் "ஆ" என்பவரால் மேலே கூறப்பட்ட கருத்தினைக் கவனிக்கவும். வெறுமனே உபகரணங்களிலுள்ள மேற்கோள்களைப் படிப்பதால், பயிற்சிக் குறிப்புகளிலுள்ள கேள்விகளுக்கான பதில்கள் அனைத்துக் குறிப்பீடுகளிலும் காணப்படுமெனக் கூற முடியாது. நீங்கள் அறிந்துள்ளபடி, சில பயிற்சிக் குறிப்புகள், வாசகங்களிலிருந்து பத்திகளை, ஒருவருடைய அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிப்பது பற்றிப் பங்கேற்பாளர்கள் சிந்திக்க உதவும் நோக்கத்தினைக் கொண்டுள்ளன. திருவெளிப்பாட்டில் பயிற்சி பெறுவதென்பது, போதனைகளை உபயோகப்படுத்துவதற்காக ஒருமுகப்பட்ட முயற்சிக்கு அழைத்துச் செல்ல வேண்டும், இது சிந்தித்தல், கலந்துரையாடல் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் ஒருவருடைய புரிந்துணர்வைக் கூர்ந்தாராய்தல் ஆகியவற்றைத் தேவைகளாகக் கொண்டுள்ளது. இந்தச் செய்முறை சரியாகப் புரிந்துகொள்ளப்படவில்லை என்றால், ஒரு தனிநபரில் அல்லது ஒரு சமூகத்திலும் கூட, ஆரோக்கியமற்ற குணாதிசயங்கள் தோன்றக்கூடும். உதாரணத்திற்காக, "சமய நூலிலிருந்து ஒருவர், தொடர்ச்சியாக மேற்கோள்களை எடுத்துக் கூறி, அறிவின் மற்றெல்லா மூலாதாரங்களையும் அலட்சியப்படுத்தி,

குவிக்கப்பட்ட அனுபவத்திற்கு எவ்வித முக்கியத்துவத்தையும் வழங்கவில்லை என்றால், அவர் குறுகிய மனப்பான்மையைப் பெற்றிருக்கும் ஒரு போக்கினைக் கொண்டிருப்பார். மறுபுறத்தில், அனுபவம் மற்றும் மனித அபிப்ராயங்கள் ஆகியவற்றிற்கு மிக அதிகமான முக்கியத்துவத்தை வழங்கி, புனித வாசங்களின் அதிகாரத்தைக் குறைவாக மதிக்கும் ஒரு நபர், அனைத்துமே கலாச்சாரம் அல்லது சொந்த விருப்பமெனக் கருதும் சார்பியலான நிலையின் வகைக்குத் தம்மையே பலியாக்கிக் கொள்கிறார். இவ்விரண்டு நிலைகளும், எவ்வாறு மூடநம்பிக்கை, சகிப்புத்தன்மையற்ற நிலை மட்டுமீறிய உணர்ச்சியார்வம் மற்றும் அரைகுறையான நிலை ஆகியவற்றை விளைவிக்கும் என்பதை உங்கள் குழுமத்தில் கலந்தாய்வு செய்யவும்.

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

2. பயிற்றுநர் “ஆ” என்பவருக்கு, பிரதான பாடவரிசையில் பயிற்றுநராக பணியாற்றுபவருக்கு பயிற்சித் தொடர்வரிசையின் ஒருங்கிணைப்பாளரின் பதிலானது சிந்திக்கத்தக்கது. “ஒரு செயல் மற்றவர்களின் கருத்துக்களோடு ஒத்து வரும்போது அது சரியானதாக இருக்கும்.” என்ற கூற்றினை வெறுமென தவறு என குறித்துக் கொள்வது, உங்களுடைய பயிற்சி வட்டங்களில் பங்கேற்பவர்களுக்குப் போதுமானதாக இருக்காது. வாழ்க்கையின் பல சூழ்நிலைகளில், உதாரணத்திற்காக, சில விஷயங்களில் ஆலோசனைகளை நாடுவதில், மற்றவர்கள் கூறுவதைக் கேட்பதன் முக்கியத்துவத்தை நீங்கள் அவர்களுடன் கலந்தாய்வு செய்ய வேண்டியிருக்கலாம். இது போன்றதோரு கலந்தாய்வினை நடத்துவதற்காக, நீங்கள் இயற்கையாகவே, இவ் விஷயத்தைப் பற்றிச் சற்றுச் சிந்தித்திருப்பீர்கள். கீழ்க்காணும் எந்த விஷயங்களில் ஒருவருடைய அறிவுரையை நாட வேண்டும் என நீங்கள் நினைக்கிறீர்.

_______ ஒருவரின் வருங்காலக் கல்வி

_______ ஒருவரின் கல்விக்கும் சமயத்திற்கான சேவைக்கும் எவ்வாறு பொருத்தமான கவனம் செலுத்துவது

_______ ஒருவர் சமயத்திற்கு சேவை செய்வதா கூடாதா என்பது

_______ ஒருவர் கண்ட கனவிற்கான அர்த்தம்

_______ ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைக்கு சமயத்தின் சட்டங்களைப் பயன்படுத்துவது

_______ சமயத்தின் சட்டங்களுக்கு ஒருவர் கீழ்ப்படிவதா கூடாதா

_______ ஒருவர் தமது குழந்தைகளை எவ்வாறு வளர்ப்பது

_______ ஒருவர் இழைத்த தவறுக்காக அவரை மன்னிப்பதாக கூடாதா

_______ உதவி தேவைப்படும் ஒருவருக்கு உதவுவலாமா வேண்டாமா

_______ ஓர் உடல் நோய்க்கான சிகிச்சை

_______ ஒருவர் தமது நண்பருடன் கொண்டுள்ள பிர்ச்சினை

_______ தமக்கு நன்கு அறிமுகமில்லா ஒருவருக்கு ஒரு முக்கிய பொறுப்பைக் கொடுப்பதா இல்லையா

3. பயிற்றுநர் “இ” என்பவரால் கூறப்பட்ட கருத்துகள் பற்றியும் அதனைத் தொடர்ந்து, சமயோசித உபாயம் கொண்ட நபரின் குறிப்புகள் பற்றியும் சிந்திப்பது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். பெரும்பாலான வேளைகளில், ஒருவர் ஒரு கருத்தைத் தெரிவிக்கும்போது, மக்களுக்கு “பிரச்சாரம்” செய்யும் பழக்கத்தில் விழுந்து விடுகின்றனர். ஆனால் இந்த அணுகுமுறையானது விளைவுகளை ஏற்படுத்துவது அரிது. “இ” என்பவரால் கலந்தாய்வு செய்யப்படும் பயற்சிக் குறிப்பினைப் பாருங்கள். பயிற்சி குறிப்பினை முடித்தபிறகு, பங்கேற்பாளர்கள், பஹாய்களாக இருப்பதால் அவர்கள் செய்யக்கூடாதவற்றின் பட்டியல் ஒன்றினைத் தயாரிக்குமாறு, பயிற்றுநர் கேட்டுக் கொண்டு, நடத்தையின் முக்கியத்துவம் குறித்துச் சற்று விரிவாக அவர்களிடம் பேசி, நிர்வாக தண்டனைகள் எனும் கருத்தை அறிமுகப்படுத்தலாம். இது போன்றதோர் அணுகுமுறை ஏன் பயன்தராது, ஏன் விரும்பத்தகாதது என்பதை விளக்கவும்

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

## பகுதி 33

பயிற்றுநர்களின் கூட்டத்தில் பங்கேற்பவர்களுக்கிடையே நடைபெறும் கற்பனை உரையாடலுக்குத் திரும்புவோம். அவர்கள், நூல் 1ன் முதலாம் பிரிவின் எஞ்சியுள்ள பகுதிகளைப் பற்றி இப்போது கலந்தாய்வு செய்கிறார்கள்..

*அ. பகுதி 4-இன் நான்காவது கேள்வி சற்றுக் கடினமாக இருக்கக் கண்டேன். ஒருவர் தமக்குத் தாமே பொய் சொல்வதென்பது சாத்தியமா என்பதைப் பற்றி, என்னுடைய பயிற்சி வட்டத்தின் பங்கேற்பாளர்கள், பல்வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தனர். கருத்திசைவினை எட்டுவதென்பது கடினமாக இருந்தது.*

*உ. சிந்தனை மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றைத் தூண்டும் நோக்கத்தினைக் கொண்டுள்ள பல கேள்விகள், பல்வேறு பாடப் பிரிவுகளில் காணப்படுகின்றன. இவற்றுடன் சம்பந்தப்பட்ட விஷயங்கள், பல பாகங்களைக் கொண்டிருக்கின்றன, அவற்றைப் பற்றி உடனடியாக முடிவெடுக்க முடியாது, ஒருவர் இவ் விஷயங்கள் ஒன்றினைப் பற்றிய தமது அபிப்ராயத்தை, வருகின்ற வருடங்களில் பலமுறை மாற்றக்கூடும் நீங்கள் குறிப்பிடும் கேள்விக்கான பதில். இயல்பாய் அமைந்ததல்லா*

ஒன்று. ஒருவர் தமக்குத்தாமே பொய் கூற முடியும்; பலர் அவ்வாறு செய்கின்றனர். எனினும் இறுதியாகக் கூர்ந்தாராயும்போது. நபர் ஒருவர், தாம் பொய் கூறுவதைத் தெரிந்திருக்கிறாரென நினைப்பவர்களும் உண்டு. இது சுலபமாக முடிவுக்கு கொண்டுவரவேண்டிய விஷயம் அன்று. நாம் என்ன செய்ய முடியும் என்றால், சில சூழ்நிலைகளின் உதாரணங்களைக் கொடுத்து, ஒவ்வொன்றும், தமக்குத்தாமே பொய் கூறும் ஒரு சூழ்நிலையாக விளங்குகின்றதா என்பதை முடிவு செய்யுமாறு, நாம் நம்முடைய குழுமங்களைக் கேட்டுக் கொள்ளலாம். பிறகு நாம் அனைத்து பதில்களையும் ஏற்றுக்கொண்டு, கேள்வியானது கலந்தாய்வு செய்யப்பட்டதற்கும், அனைவரும் தமது புரிந்துணர்வில் முன்னேறியுள்ளதற்கும் மன நிறைவு அடைய வேண்டும். முடிவாக நோக்கினால் கேள்வியானது, நடத்தையின் மட்டத்தில் கேட்கப்படுகிறது, தத்துவ ரீதியில் அன்று.

இ. நான் முன்னோக்கி முந்துவதாக இருக்கலாம். ஆனால், நான் ஒரு அனுபவத்தை உங்களுடன் பகிர்ந்து கொண்டு, பிறகு கேள்வி ஒன்றை கேட்க விரும்புகிறேன். நம்முடைய குழுமத்தில், கடைசிப் பகுதியின் 4-ம் பயிற்சி குறிப்புக்கு வந்தபோது, அனைவரும் சரியா/தவறா கூற்றுகளை வேகமாகப் படித்து முடிப்பதை உணரத் துவங்கினேன். ஆகவே, நான் சற்று நிறுத்தி, அந்தப் பயிற்சிக் குறிப்பின் விஷயமான புறங்கூறுதலை வெல்வதற்காகத் தேவைப்படும் ஒழுக்கத்தைப் பற்றிப் பேசலாமென ஆலோசனை கூறினேன். கலந்தாய்வு கவரக்கூடியதாக இருந்தது. புறங்கூறுதலானது உண்மையிலேயே ஒரு சமுதாய பழக்கம்; அது நம்முடைய கலாச்சாரத்தின் ஒரு பாகம் என்பதை நாம் உணர்ந்தோம். புறங்கூறுதலைத் தவிர்ப்பதில் நமக்கு உதவும் சில செயல் ரீதியான நடவடிக்கைககளைக் கண்டுபிடிக்க முயன்றோம். இந்த உரையாடல் பதினைந்து நிமிடங்கள் எடுத்தது. பிறகு நாம் பயிற்சிக் குறிப்புக்கு மீண்டும் திரும்பினோம், இப்போது இந்தப் பயிற்சிக் குறிப்பு மேலும் சிறந்த புரிந்துணர்வுடன் மேற்கொள்ளப்பட்டதுபோல் நான் உணர்ந்தேன். இது போன்றதொரு கலந்தாய்வினை நான் கோரியது நியாயமா?

உ. நீங்கள் முழுமையில் நியாயமான புரிந்துணர்வை அதிகரிப்பதற்காக, உபகரணங்களின் ஒரு முக்கிய தன்மையான வளையுந்தன்மையைப் பயன்படுத்திக் கொண்டீர்கள். நிச்சயமாக, இந்தப் பாடப்பிரிவுகளில் உள்ள சரியா/தவறா பயிற்சிக் குறிப்புகள், பள்ளியில் தேர்வுகளுக்காக மாணவர்கள் பெறுகின்றவைப் போல் இல்லை என்பது நாம் அனைவரும் அறிந்ததே. அவை அடிக்கடி மறைநுட்பங்களை வெளியே கொண்டு வந்து, சொற்கள் மற்றும் செயல்கள் ஆகியவற்றின் தாத்பரியங்களைத் தெளிவுபடுத்துகின்றன.

அ. நீங்கள் செய்ததை நானும் என்னுடைய குழுமத்தில், மேற்கொண்டிருக்க வேண்டுமென விரும்புகின்றேன். நாம் அண்மையில் சந்தித்த

*ஒற்றுமையின்மையின் சில சம்பவங்களை மதிப்பிடும்போது, நண்பர்களின் ஒரு குழுமத்தில் புறங்கூறுதல் உண்டாக்கக் கூடிய தீங்கினை நாம் முழுமையாக உணர்வதில்லை.*

ஆ. *எனக்கு நிகழ்ந்த ஒரு சம்பவம் உங்களுக்கு ஆர்வமூட்டலாம். நான் இந்தப் பாடப்பிரிவினை முதல் முறையாக படித்தபோது, வாசங்களிலிருந்து ஒரு பத்திக்கு நேர்மாறான சில சூழ்நிலைகளை மக்களுக்கு அவ்வப்போது வழங்குவதன் மூலம், அப்பத்தியின் சரியான உபயோகம் பற்றிச் சிந்தனையைத் தூண்டுவது அவசியம் என்பதை நான் உணர்ந்தேன். எனவே, நான் இப்போது பயிற்றுநராக சேவை புரிந்துவரும் குழுமமானது, பகுதி ௭ன் இரண்டாவது பயிற்சிக் குறிப்பினை வந்தடைந்தபோது நான் சொந்தமாகச் சில கூறுகளைத் தயாரித்தேன. நீங்கள் அறிந்துள்ளபடி, இப்பயிற்சிக் குறிப்பானது, பங்கேற்பாளர்களை, பல சொற்றொடர்களைப் பரிசீலித்து, அவை ஓர் "அன்பு கனிந்த நா" விலிருந்து தோன்றுகின்றனவா என்பதை முடிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறது. பங்கேற்பாளர்களில் ஒருவர் பெரிதளவில் கூர்மையான நாவினைக் கொண்டிருக்கிறார்; அவர் அடிக்கடி பயன்படுத்தும் சில வாக்கியங்களை நான் பயிற்சிக் குறிப்புகளுடன் சேர்த்தால், அவர் தமது சொந்த தீய பழக்கத்தைப் பற்றி விழிப்புணர்வு பெறுவார் என நான் நினைத்தேன். சரி, நான் அவரைப் புண்படுத்தினேனா? முதல் வாக்கியத்தை நான் வாசித்தபோது, ஒரு விசனமுள்ள மௌனம், குழுமத்தைச் சூழ்ந்து, அவர் என்னை ஆச்சரியத்துடன் பார்ப்பதைக் கண்டேன். திடீரென்று நான் நானே அன்புக்கனிவு இல்லாமல் செயல்பட்டதை உணர்ந்து மிகவும் வருத்தப்பட்டேன். இந்த ஒரு செயலை நான் இனி ஒருபோதும் மேற்கொள்ளமாட்டேன்.*

உ. *எதிர்மறையான சூழ்நிலைகளை வருணிக்கும் பயிற்சிக் குறிப்புகள், பற்றறுக்கப்பட்ட முறையில் கூர்ந்தாராயப்பட்டால்தான் பயனுள்ளதாக இருக்கின்றன. அவை ஒருவரை சுட்டிக்காட்டினால் இது முடியவே முடியாது. முதல் பாடப்பிரிவு பற்றிய நமது கலந்தாய்வினை நாம் முடிப்பதற்கு முன், நான் ஒரு கடைசி விஷயத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தினமும் திருவாசகங்களைப் படிப்பது பற்றிப் பாடப்பிரிவின் இறுதியிலுள்ள சுருக்கமான கூற்றைத் கடந்து செல்லாமல் இருப்பது முக்கியமாகும். நீங்கள் இதனை, உங்கள் குழுமங்களில் படிக்க வேண்டியிருக்கும், தேவைப்படுமாயின், பங்கேற்பாளர்கள், சில நாட்களுக்கு, காலையிலும், மாலையிலும் படிக்கக் கூடிய பத்திகளைத் தேர்ந்தெடுக்க அவர்களுக்குத் துணை புரியலாம். இந்நோக்கத்திற்காக, அவர்கள் குறைந்த பட்சம் "மறைமொழிகள்" என்ற நூலின் ஒரு பிரதியைக் கொண்டிருப்பதை நீங்கள் நிச்சயிக்க வேண்டும். இல்லையெனில், அவர்கள், ஒன்றை வாங்க முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். பயிற்சி வட்டத்தின் தொடரும் கூட்டங்களில், அவர்கள்*

*படித்த பத்திகள் சிலவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்பினால், அவ்வாறு செய்யலாம் என்று கேட்டுக்கொள்ளலாம்.*

1. பிரிவு 4-இல் நான்காவது கேள்வி தொடர்பான "அ" இன் கருத்துகளுக்குப் பதிலளிக்கையில், ஒருங்கிணைப்பாளர், பாடங்கள் முழுவதிலும் உள்ள பல கேள்விகளில் இதுவும் ஒன்று என்று விளக்குகிறார். பங்கேற்பாளர்கள் தங்கள் புரிதலில் மேம்பட உதவுவதற்கு பயிற்றுநர்கள் தயாராக இருக்க வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு, பயிற்றுநர் ஒருவர் சில சூழ்நிலைகளின் உதாரணங்களை வழங்குவதும், ஒவ்வொருவரும் தனக்குத்தானே பொய் சொல்வதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும்படி குழுவிடம் கேட்பது இந்த குறிப்பிட்ட வழக்கில் பயனுள்ளதாக இருக்கும் என்று ஒருங்கிணைப்பாளர் பரிந்துரைக்கிறார். ஓர் ஆய்வு வட்டத்தின் உறுப்பினர்களின் சிந்தனையைத் தூண்டுவதற்கு நீங்கள் அவர்களுக்கு வழங்கக்கூடிய சில உதாரணங்களைக் கொண்டு வர முயற்சிக்கவும்.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

2. ஒருங்கிணைப்பாளர் "உ" குறிப்பிட்டுள்ளபடி, ரூஹி பயிற்சி நிலையத்தின் உபகரங்ணகளில் காணப்படும் சரியா/தவறா பயிற்சிக் குறிப்புகள் பள்ளிகளில் தேர்வுகளுக்காகக் கொடுக்கப்பட்டு அவற்றிற்கு அடிக்கடி மேலோட்டமான பதில் அளிக்கப்படக்கூடிய பயிற்சிக் குறிப்புகளிலிருந்து வேறுபடுகின்றன. மாணவர்களை, சிந்தனைகளின் ஒரு வரிசையில் அழைத்துச் செல்வதற்கும், அல்லது ஒரு கருத்துப்படிவத்தினை, பல்வேறு கோணங்களிலிருந்து ஆராய்வதற்கும் அவை உருவாக்கப்பட்டுள்ளன. நூல்1ன் முதல் பாடப்பிரிவிலுள்ள சரியா/தவறா பயிற்சிக் குறிப்புகளை, உங்கள் குழுமத்துடன் பரிசீலித்து, இந்த செய்முறையானது, புரிந்துணர்வை அதிகரிக்க எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதற்காகக் குறிப்பான உதாரணங்களை வழங்குமாறு ஆலோசிக்கப்படுகிறது.

## பகுதி 34

நூல் 1ன் முதல் பாடப்பிரிவில் இருக்கும் விஷயங்களைப் பற்றி, பயிற்றுநர்களின் குழுமம் மற்றும் சமயோசித உபாயம் கொண்ட ஒரு நபர், ஆகியோரின் கருத்துகளைப் பற்றி சிந்தித்துள்ள நீங்கள், இப்போது, “பிரார்த்தனை” என்ற இரண்டாம் பாடப் பிரிவு பற்றி நிகழக்கூடிய ஓர் உரையாடலைக் கேட்க விரும்பலாம்.

*அ : நான் பணிபுரிந்து வந்த குழு இரண்டாவது பாடப்பிரிவைத் தொடங்க ஆர்வமாக இருந்தது. நீண்ட பத்திகளைப் படிப்பாய்வு செய்வது, பிரார்த்தனையின் முக்கியத்துவத்தைப் பற்றிச் சிந்திப்பது ஆகியவற்றுக்கான வாய்ப்பை அவர்கள் வரவேற்றனர். ஆரம்பத்திலேயே, அவர்கள் "சேவை பாதை" மற்றும் "இரட்டை தார்மீக நோக்கம்" குறித்த கருத்துகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது மிகவும் அர்த்தமுள்ளதாக இருந்தது, அவர்கள் பகுதிவாரியாக மேம்பாடு காணும் போது பிரார்த்தனைக்கும் சேவைக்கும் இடையிலுள்ள நெருக்கமான உறவைப் பற்றிய நுண்ணறிவைப் பெற இஃது அவர்களுக்கு உதவியது. பிரிவு 1-இல் உள்ள நான்கு மேற்கோள்களையும், அவற்றுடன் தொடர்புடைய கேள்விகளையும் முதல் யூனிட்டில் செய்ததைப் போலவே மேற்கொண்டோம். பத்திகளின் உடனடி அர்த்தத்தின் புரிதல், அவற்றின் அடிப்படையிலான இரட்டைத் தார்மீக நோக்கம் ஆகியற்றின் ஒரு நுண்காட்சியை அவர்கள் விரைவாகப் பெற்றனர். நாங்கள் பயிற்சி 5-க்கு வந்தபோது, மேற்கோள்களின் அடிப்படையில் வழங்கப்பட்ட அறிக்கைகளை இடைநிறுத்தி ஆராய்வது அவசியமாக இருந்தது. எடுத்துக்காட்டாக, பங்கேற்பாளர்களில் சிலர் இந்தக் கூற்றினால் சவாலிடப்பட்டனர்: "நீங்கள் எப்போதும் மற்றவர்களுக்கே உதவி செய்தால், உங்கள் சொந்த இலக்குகளை நீங்கள் இழக்க நேரிடும்.” இந்தக் கலந்துரையாடல் "மற்றவர்களுக்குச் சேவை செய்தல்" மற்றும் "தனிப்பட்ட இலக்குகள்" ஆகியவை தன்னலமான முறையில் வரையறுக்கப்பட்டால் மட்டுமே அவை ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன என்பதைக் காண அனைவருக்கும் உதவியது. நமது நோக்கங்கள் தூய்மையாக இருக்கும் போது, பிறருக்குச் சேவை செய்ய வேண்டும் என்னும் உன்னதமான இலக்குகளை நாமே அமைத்துக் கொள்வோம் என்பதும் நாம் உருவாக்கப்பட்டதன் நோக்கம் உலக மேம்பாட்டிற்காகப் பாடுபடுவதே என்பதையும் உணரும்போது, ஆன்மிக ரீதியிலும் அறிவார்ந்த ரீதியிலும் நமது தனிப்பட்ட வளர்ச்சிக்கான நாட்டம் சமூகத்தின் முன்னேற்றத்திற்கான நமது பங்களிப்பிலிருந்து பிரிக்க முடியாததாகக் கருதப்படுகிறது என்பது அவர்களுக்குத் தெளிவாகத் தெரிந்தது.*

*ஆ :எங்கள் குழுவிலும் அறிக்கைகளுடன் நாங்கள் அதையே செய்தோம். நிச்சயமாக, விவாதம் நீடிக்காமல் இருப்பதையும், பயிற்சி எதை அடைய முயல்கிறது என்பதில் கவனம் செலுத்தப்படுவதையும் நான் உறுதிசெய்தேன். உதாரணமாக, இன்று பலர் "நீங்களே உங்களுடைய மிகவும் நெருங்கிய நண்பர்" என்னும் கூற்றை நம்புகின்றனர். கடவுள் கருணையின் சூழலில்தான் அதன் உட்பொருளை நாம் ஆராய வேண்டியிருந்தது—அந்தப் பகுதியில் கடைசி மேற்கோளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, தூய்மையான இதயம் எவ்வாறு அவரது அருட்கொடையின் பெறுநர் ஆகிறது என்பது.*

*பங்கேற்பாளர்கள் இயற்கையாகவே கடவுளே நமது உண்மையான நண்பர் என முடிவு செய்தனர்.*

*இ : பகுதி 2-இல் மேற்கோள் காட்டப்பட்டுள்ள மறைமொழிகளில் உள்ள பத்தியைப் படிக்கும்போது, நாம் "செல்வந்தராகப்" படைக்கப்பட்டுள்ளோம் என்பதன் அர்த்தம் என்ன என்பதைப் பற்றி ஆழமாக விவாதித்தோம், லௌகீக சொத்துக்கள் நம்மை செல்வந்தர் ஆக்கவில்லை, மாறாக, பணிவு, உண்மைத்தன்மை மற்றும் பெருந்தன்மை போன்ற ஆன்மிக குணங்களை வெளிப்படுத்துவதற்கான இயல்திறனே நம்மை செல்வந்தர் ஆக்குகிறது என்பதை உணர்ந்தோம். "கடவுளைத் தவிர அனைத்திலிருந்தும் அன்பு மற்றும் `விடுபட்டிருத்தல் என்னும் மெருகேற்றலினால் தூய்மைப்படுத்தப்பட்ட இதயத்தின் பண்புகளுடன் இந்த யோசனையை இணைத்து, அவரைத் தவிர அனைத்திலிருந்தும் நம் இதயங்களைத் தூய்மைப்படுத்துவதற்கான முயற்சிகளில், அனைத்து அறிவின் மூலாதாரமும் நமது உண்மையான நண்பருமான நமது படைப்பாளரிடமிருந்து "அறிவொளியைத்" தேடுவது இயற்கையானதே என்பதைப் பற்றி நாம் பிரதிபலிக்கலாம். கடவுளுடனான நமது உறவின் தன்மை அன்பு குறித்ததாகும் என்பது பற்றிக் கூடுதல் நுண்ணறிவுகளைப் பெற நமது கலந்துரையாடல் நமக்கு உதவியது, இது "நாம் ஏன் பிரார்த்திக்கின்றோம்" என்னும் பகுதி 3-இல் வரும் நமது கலந்தாய்வுகளுக்கு வழி வகுத்தது.*

*உ : நீங்கள் பாடப்பிரிவை ஒன்றாகப் படித்த பங்கேற்பாளர்கள் இந்த ஆரம்பப் பகுதிகளில் மேற்கோள் காட்டப்பட்ட திருமொழிகளை ஆழமாகப் பிரதிபலித்துள்ளதாகவும், பயிற்சிகள் ஒரு சிறந்த கலந்துரையாடலை எளிதாக்கின மற்றும் ஆய்வு செய்யப்பட்ட கருத்துகளைப் பற்றிய அவர்களின் புரிதலை மேம்படுத்தியுள்ளதாகவும் தோன்றுகிறது.*

*இ : பயிற்சிகள் தொடர்பாக, குறிப்பிட்ட வார்த்தைகளின் அர்த்தம் பற்றிய பயிற்சிகளை மேற்கொள்ளப் பங்கேற்பாளர்கள் ஆர்வமாக இருப்பதைக் கண்டேன்—"ஓதுதல்", "ஒப்புவித்தல்", "தூவுதல்", "கட்டாயமான". ஒவ்வொரு சொல்லின் அர்த்தமும் தெளிவாக இருப்பதை உறுதிசெய்திட அச்சொற்கள் ஒவ்வொன்றையும் பயன்படுத்தி வாக்கியங்கள் அமைத்தோம், அதற்கு ஓரிரண்டு முறை அகராதியைப் பயன்படுத்தினோம்.*

*உ : நீங்கள் செய்தது நன்றாக இருக்கிறது என நினைக்கின்றேன். "பயிற்றுநருக்கான சில சிந்தனைகள்" பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளபடி, அவ்வப்போது அகராதிகளைப் பயன்படுத்துவதற்கு எதிராக எந்த விதியும் இல்லை. சொற்களை அவற்றின் சூழலில் புரிந்து கொள்ள வேண்டும், குறிப்பாகத் திருமொழிகளிலிருந்து வரும் பத்திகள் சம்பந்தப்பட்ட இடங்களில். இல்லையெனில், ஒரு வார்த்தையின் அர்த்தம் அல்லது இரண்டு ஒத்த சொற்களின் பொருள் மற்றும் அவற்றை வேறுபடுத்துவது என்ன என்பது பற்றிய விவாதம் தேவைக்கு மேல் மிக அதிகமாகக் கொண்டு செல்லப்படலாம். சில நேரங்களில், மக்கள் மேற்கோள்களை ஒவ்வொரு வார்த்தையாகப் பார்க்க முயலும் முயற்சியில், பத்தியின் பொருளைப் புரிந்துகொள்வதெனும் முக்கிய நோக்கம்*

*மறந்துவிடும். எனவே, எடுத்துக்காட்டாக, பிரார்த்தனைப் பகுதி பிரிவு 6-இல், மேற்கோள் பத்தியில் உள்ள சில கருத்தாக்கங்களின்பால் பங்கேற்பாளர்கள் கவனம் செலுத்த, "ஓதுதல்", "ஒப்புவித்தல்", "தூவுதல்" ஆகிய வார்த்தைகளின் பொருள் தொடர்பான கேள்விகள் உள்ளன; அவை சொல் அகராதி குறித்த பயிற்சிகள் அன்று.*

*ஆ :நான் ஏற்கனவே குறிப்பிட்ட, படிப்பு வட்டத்தின் உறுப்பினர்கள் விளைவுத்திறம் மிக்கதாகக் கருதிய பகுதி 2-இல் அறிமுகப்படுத்தப்பட்ட மற்றொரு விதமான பயிற்சி உள்ளது. அது, திருமொழிகளில் இருந்து வரும் ஒரு பத்தியின் அடிப்படையில் அமைந்துள்ள வாக்கியங்களில் உள்ள காலியிடங்களைப் பூர்த்தி செய்யும்படி பங்கேற்பாளர்கள் கேட்டுக்கொள்ளப்படும் ஒன்றாகும்.*

*இ : நூல்களின் பல்வேறு பாடப்பிரிவுகள் முழுவதும் இவ்விதமான ஒரு யுக்தி பயன்படுத்தப்படுவதை நான் கண்டுள்ளேன். பங்கேற்பாளர்கள் சில முக்கிய வார்த்தைகளில் கவனம் செலுத்த வைப்பதன் மூலம் ஒரு பத்தியைப் பற்றிச் சிந்திப்பதற்கு அஃது உதவுகின்றது.*

*உ : இப்போது சில பயிற்சிகளின் நோக்கத்தைப் பற்றி விவாதித்துள்ளதால், பாடப்பிரிவில் உள்ள மற்றொரு முக்கியமான கருத்தாக்கத்தைக் கருத்தில் கொள்வோம். பகுதி 5-இல் அறிமுகப்படுத்தப்பட்ட "பிரார்த்தனை நிலை" என்னும் கருத்துக்குப் பங்கேற்பாளர்கள் எவ்வாறு பதில்வினையாற்றினர்?*

*ஆ :என்னுடன் பாடப்பிரிவைப் படித்து வந்த பங்கேற்பாளர்களில் பலர் அதற்கு முன் பிரார்த்தனையை அவ்வாறு நினைத்துப் பார்த்ததில்லை. நான் முதன்முதலில் பாடப்பிரிவைப் படித்தபோது என்னைப் போலவே, அவர்களும் பிரார்த்தனையைப் பற்றி நாம் எதோ ஒன்றைச் செய்கின்றோம் என்னும் அடிப்படையில் மட்டுமே நினைத்தனரேயொழிய அடைய வேண்டிய நிலையையன்று. எனவே, அடுத்த பகுதிக்குச் செல்வதற்கு முன் நாங்கள் அந்த யோசனையைப் பற்றி உரையாடினோம்.*

*இ : பிரிவு 8-இல் எனக்கும் இதே போன்ற அனுபவம் இருந்தது. அதில், பகுதி 3-இல் ஆரம்பிக்கும் பிரார்த்தனையின் நோக்கம் பற்றிய விவாதம் மேலும் தொடரப்படுகின்றது. பங்கேற்பாளர்களுள் சிலருக்குக் கடவுள் சித்தத்துடன் நம்மை இணைத்துக் கொள்ள வேண்டுமெனும் எண்ணம் புதிதாக இருந்தது. முதலில், நாம் கடவுளிடம் எவ்வாறு பிரார்த்திப்பது, நமது தேவைகளை நிறைவேற்றும்படி கேட்டுக்கொள்வது, அதே நேரத்தில் அவர் சித்தம் கொண்டதைக் கொண்டு திருப்தி அடைவது எப்படி என்பது அவர்களுக்குத் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், 'அப்துல்-பஹாவின் மேற்கோள் மீது அதிகம் பிரதிபலித்த பிறகு, இந்தக் கேள்வி குறித்துச் சில ஆன்மிக நுண்ணறிவுகளைப் பெற முடிந்தது.*

*உ : இந்தக் கருத்துகள் அனைத்தும் ஆராயப்படுவது முக்கியமாகும். துரதிர்ஷ்டவசமாக, உலகில் மத உணர்வு மேலோட்டமான ஒன்றாகிவிடுவதால், அதிகமான மக்கள்*

*பிரார்த்தனை செய்வதில்லை அல்லது பிரார்த்தனையை ஒரு சடங்கு போல் பார்க்கின்றனர். ஒருவருக்கு நெருக்கடி ஏற்படும் போது மட்டுமே பிரார்த்தனை செய்யும் போக்கும் உள்ளது. அதனால்தான், கடவுளை மையமாகக் கொண்ட வாழ்க்கையையும் அவரது பாதையில் சேவையையும் நாடிச் செல்வோருக்கு பிரார்த்தனை தொடர்பான முக்கியமான கருத்துக்களைப் பற்றிய பிரதிபலிப்பு அவசியமாகின்றது. இந்த உணர்வில், சேவைக்கும் பிரார்த்தனைக்கும் இடையே உள்ள நெருக்கமான உறவைப் பற்றிய நுண்ணறிவைப் பாடப்பிரிவின் ஆய்வு எவ்வாறு வழங்குகிறது என்பதைப் பற்றி, நமது பிரதிபலிப்பின் ஆரம்பத்தில் நாம் கூறியது மிகவும் முக்கியமானது. பங்கேற்பாளர்கள் பாடப்பிரிவை முடிக்கும்போது, அவர்கள் இந்த உறவைப் பற்றிய அதிகரித்த விழிப்புணர்வைப் பெற்றிருக்க வேண்டும்—உண்மையான பிரார்த்தனை இதயத்தை எவ்வாறு சுத்தப்படுத்தி, அதை அறிவு மற்றும் பரலோக பண்புகளின் பெறுநராக்குகிறது, அத்துடன் சமயத்தின் முன்னேற்றத்திற்கும் மனிதகுலத்தின் முன்னேற்றத்திற்கும் பங்களிப்பதற்குத் தன்னலமில்லா சேவை செயல்கள் தனிநபர் இந்தப் பண்புகளைப் பெற்றிட எவ்வாறு உதவுகின்றன. பிரார்த்தனை கடவுளுக்குச் சேவைசெய்வதற்கான ஆர்வத்தைத் தீவிரப்படுத்துகிறது, அத்துடன் சேவையானது அவரிடம் மன்றாடும் தருணங்களில் உருவாகும் தீயை, அவரது அழகிலிருந்து நம்மை மறைத்திடும் திரைகளை எரிக்கும் தீயைத் தூண்டிவிடுகின்றது.*

*அ : எனக்குப் பகுதி 7 குறித்து ஒரு கேள்வி உள்ளது. அதில் நீண்ட கட்டாய பிரார்த்தனையிலிருந்து எடுக்கப்பட்ட இரண்டு பத்திகளை மனனம் செய்யும்படி பங்கேற்பாளர்கள் கோரப்படுகின்றனர். நான் ஒரு வேளை அந்தக் கட்டாயப் பிரார்த்தனை முழுவதையும் மனனம் செய்யும்படி பங்கேற்பாளர்களை ஊக்குவித்திருக்க வேண்டுமா?*

*உ : வேறு பல விஷயங்களைப் போன்றே, இது பங்கேற்பாளர்களைப் பொறுத்த ஒன்றாகும். சிலர் ஒவ்வொரு நாளும் பிரார்த்தனை செய்யும் பழக்கத்தை அப்போதுதான் பெறத் தொடங்கியிருப்பர், ஆதலால் பரிந்துரைக்கப்பட்ட இரண்டு பத்திகளை மட்டும் மனனம் செய்வது போதுமானதாக இருக்கும். பின்னர், அவர்கள் முழு பிரார்த்தனையையும் கற்றுக்கொள்ளலாம். நிச்சயமாக, சிலர் ஏற்கனவே நீண்ட கட்டாய பிரார்த்தனையை மனனமாக அறிந்து வைத்திருக்கலாம். எவ்வாறாயினும், பயிற்சிப்பாடத்தின் பயிற்றுநர்களாகிய நாம் ஒவ்வொருவரும் ஏற்கனவே அவ்வாறு செய்யாதிருப்பின், அதை மனனம் செய்வது நல்லதென நான் உணர்கிறேன்.*

1. பிரிவு 8-ஐப் படிக்கும் போது, ஒரு படிப்பு வட்டத்தின் உறுப்பினர்கள் மேலே உள்ள "இ" என்பவரின் மூலம் குறிப்பிடப்பட்ட கருத்துக்களில் சிரமப்படுகிறார்கள் என வைத்துக்கொள்வோம். பிரார்த்தனையின் இயக்கவியல் பற்றிய நுண்ணறிவைப் பெற நீங்கள் அவர்களுக்கு எப்படி உதவுவீர்கள்? அது தொடர்புடைய கருத்துகளைப் பற்றிய அவர்களின் புரிதலை மேம்படுத்திட, அந்தப் பகுதியில் உள்ள மூன்று மேற்கோள்களின் அடிப்படையில் என்ன கேள்விகள் அவர்களிடம் கேட்கப்படக்கூடும்.?

2. மனனம் செய்வதன் முக்கியத்துவத்தைப் பற்றி இந்தப் பாடப்பிரிவு உட்பட பல சந்தர்ப்பங்களில் நாம் பேசியுள்ளோம். இதுவரை, நீங்களே பல பத்திகளை இதயப்பூர்வமாகக் கற்றுக்கொண்டுள்ளீர். அத்துடன், தனிப்பட்ட பிரதிபலிப்பின் தருணங்களில், கஷ்ட காலங்களில் அல்லது சமயத்தைப் போதிப்பதில் ஆக்கமிக்க திருவார்த்தையின் சக்தியைப் பெறுவதன் மதிப்பை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் பெற்றுள்ள அனுபவத்தின் பெரும்பகுதி இப்போது படிப்பு வட்டத்தின் உறுப்பினர்களுடன் பணியாற்ற உங்களுக்கு உதவியாக இருக்கும். இந்தக் கட்டத்தில், திருவாக்குகளில் இருந்து பத்திகளை மனனம் செய்வதற்கான முயற்சியில் ஈடுபட அவர்களை எப்படி ஊக்குவிக்கலாம் என்பதை நீங்கள் ஆராய்வது பயனுள்ளது. அவ்வாறு செய்த பிறகு, பின்வரும் குறுகிய பத்தியை மனனம் செய்திட நீங்கள் விரும்பலாம்:

**"...அவரது வார்த்தைகளை மனதிற் பதிய வைக்கும் ஒவ்வொரு நெஞ்சத்தையும், ...இறைவன் தமது அன்பினால் நிறைந்திடச் செய்வார்."**[12]

## பகுதி 35

நூல் 1-இன் மூன்றாவது பாடப்பிரிவான "வாழ்வும் மரணமும்", பங்கேற்பாளர்கள் மற்றும் பயிற்றுநர்களுக்கு ஒரு சிறப்புச் சவாலாக இருக்கும். ஒரு பயிற்றுநர்கள் குழு எவ்வாறு பாடப்பிரிவை மதிப்பாய்வு செய்யலாம் என்பதைப் பார்ப்போம். நீங்கள் இப்போது அந்தப் பாடப்பிரிவுக்குத் திரும்பலாம்.

*அ : இந்தப் பாடத்திட்டத்திற்கு நான் பயிற்றுநராகப் பணியாற்றுவது கடினமாக இருந்தாலும், அது பலனளிப்பதைக் கண்டேன். பயிற்றுநருக்கும் மற்ற பங்கேற்பாளர்களுக்கும் இடையிலான உறவு ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையிலான உறவு அன்று. இதில் எல்லாருமே கற்றுக்கொள்ள முயல்கின்றனர். அனைவரும் விழிப்புணர்வுடன் ஒரு செயல்பாட்டில் ஈடுபட்டுள்ளனர் என "பயிற்றுநருக்கான சில சிந்தனைகள்" பகுதியில் உள்ள அறிக்கையின் அர்த்தம் என்ன என்பதை இப்போது நான் புரிந்துகொள்கிறேன். குழுவுடன் உள்ளடக்கத்தைப் படித்ததில் நான் பல நுண்ணறிவுகளைப் பெற்றேன். எடுத்துக்காட்டாக, மூன்றாவது பகுதியில் உள்ள பயிற்சிகள் மிகவும் நேரடியானவை என நான் நினைத்தேன். ஆதலால், பங்கேற்பாளர்களில் சிலர் பயிற்சி 2-இல் "வாழ்க்கை என்பது நமக்கு அன்றாடம் நடக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் உள்ளடக்கியது" என்பதற்கு "உண்மை" எனக் குறிப்பிட்டபோது நான் ஆச்சரியப்பட்டேன். "தொடர்ந்து வந்த*

*பகுதியில் இதேபோன்ற பயிற்சியை நாங்கள் அடைந்தபோது, அதே பங்கேற்பாளர்களுள் இருவர் "மரணமே வாழ்க்கையின் முடிவு" மற்றும் "வாழ்க்கை மரணத்துடன் முடிவடைகிறது" என்னும் கூற்றுகளை உண்மையெனக் குறித்தனர். இந்தக் கருப்பொருளை மேலும் கொஞ்சம் விவாதிக்க வேண்டும் என்பதை உணர்ந்தேன். எங்கள் கலந்தாலோசனையின் போது கூறப்பட்ட சில கருத்துகள் மிகவும் சுவாரஸ்யமாக இருந்ததுடன் பங்கேற்பாளர்களின் மனதில் அவை தெளிவை ஏற்படுத்தின.*

*ஆ :இந்தப் பயிற்சிகள் உண்மையில் யோசனைகளின் மூலம் சிந்திக்க எங்களுக்கு உதவின என்பதையும் நான் கண்டேன். பிரிவு 9-இல், பங்கேற்பாளர்களுள் பலர் "ஒருவர் இறந்து தெய்வீக ராஜ்யத்திற்குச் செல்லும் போது உண்மையான வாழ்க்கை தொடங்குகிறது" என்னும் கூற்றை உண்மை எனக் குறித்தனர். பின்னர் அவர்கள் அடுத்த கூற்றுக்கு வந்தனர், "உண்மையான வாழ்க்கை இந்த உலகில் தொடங்கி, பௌதீக மரணத்திற்குப் பிறகு தொடர்கிறது", மற்றும் அந்த அறிக்கை உண்மையாக இருப்பின், மேலே உள்ள கூற்று, தாங்கள் நினைத்தது போல் நேரடியானது அன்று என்பதை உணர்ந்தனர். ஒவ்வொருவரும் ஆன்மாவின் தன்மையைப் பற்றி ஆழமாகச் சிந்தித்துக் கொண்டிருப்பதை என்னால் காண முடிந்தது. அன்று அந்த பகுதியின் முடிவில் நாங்கள் இடை நிறுத்த வேண்டியிருந்தது, ஒருவேளை அது என் கற்பனையாக இருக்கலாம், ஆனால் அடுத்த வாரம் நாங்கள் சந்தித்தபோது அனைவரிடமும் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளதை நான் கவனித்தேன்.*

*அ : பாடப்பிரிவு எங்கள் குழுவில் உள்ள பங்கேற்பாளர்கள் மனித ஆவியின் சக்திகளை முழுமையாகப் புரிந்துகொள்வதற்கு உதவியது. ஆழமான ஆன்மிக உண்மைகளைப் பிரதிபலிக்கும் முதல் சில பகுதிகள், குறிப்பாக, ஆன்மாவைப் பற்றிய சில தவறான எண்ணங்களை அகற்ற உதவின—ஆன்மா உடலுக்குள் நுழைவதில்லை அல்லது வெளியேறுவதும் இல்லை; உணர்தலுக்கும் செல்வாக்குச் செலுத்துவதற்கும் உடல் சார்ந்த கருவிகளைப் பயன்படுத்தும் போது, அஃது அத்தகைய கருவிகள் இல்லாமலும் செயல்பட முடியும்; கண்ணாடி மற்றும் ஒளியின் உருவகம் உடலுடனான அதன் உறவைச் சிறப்பாக விவரிக்கின்றது. கண்ணாடி ஒளியைப் பிரதிபலிக்கிறது, ஆனால் கண்ணாடி தூசியால் மூடப்பட்டிருந்தாலும் அல்லது அஃது உடைந்தாலும் ஒளி தொடர்ந்து பிரகாசிக்கவே செய்கின்றது.*

*உ : மக்கள் இந்தப் பாடப்பிரிவு உத்வேகம் அளிப்பதாகக் கருதுவதற்குக் காரணம், இது கடவுளின் இவ்வுலகம் மற்றும் மறுவுலகங்களில் ஆன்மாவின் வாழ்க்கைப் பற்றிய பல கேள்விகளை முன்வைக்கின்றது. பஹாய் போதனைகளால் வரையறுக்கப்பட்ட வாழ்க்கையை வாழ்வது தொடர்பாக, முதலில் செய்ய வேண்டியது ஆன்மிக தாகத்தைப் பெறுவேண்டும் என அப்துல்-பஹா கூறியதாகக் கூறப்படுகிறது. இந்தத்*

*தாகத்தைப் பெற, ஒருவர் மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கையைப் பற்றித் தியானிக்க வேண்டுமென அவர் பரிந்துரைத்துள்ளார்.*

*இ : நாங்கள் பிரிவு 12-ஐப் படிக்கும் போது, "ஓர் ஆன்மா தனது பரலோக இருப்பிடத்தை இந்த உலகத்தின் தூசிக்கு ஏன் மாற்றுகிறது?" என்னும் கேள்வியைப் பற்றி நாங்கள் மிகவும் சுவாரஸ்யமாகக் கலந்துரையாடினோம். குழுவின் ஓர் உறுப்பினர், ஆன்மிகம் என்பது ஒருமுறை சாதிக்கப்பட்டால் போதுமானது என்பதன்று. ஒருவர் தமது தாழ்ந்த இயல்பைக் கட்டுப்படுத்துவதில் ஒருவர் தொடர்ந்து எப்போதும் உழைத்து வர வேண்டும். "எப்போதுமே ஏதோ ஒன்று நம்மைக் கீழே இழுத்துத் தள்ள முயல்கிறது," என அவர் பரிந்துரைத்தார். இது மற்றொரு பங்கேற்பாளரை ஆசை பற்றிய கேள்வியை எழுப்பிடத் தூண்டியது. ஆசைப்படுதல் மனித இதயத்தின் இயல்பில் உள்ளார்ந்துள்ளது எனவும் வீண் ஆசைகளிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் எடுத்துரைத்தார். பின்னர் ஆசையின் தன்மை பற்றி விவாதித்தோம். சில ஆசைகள் நல்ல ஆசைகள் என்னும் பொருண்மைப் பற்றிப் பேசினோம், உதாரணமாக, ஒருவரின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்குத் தேவைப்படும் கடின உழைப்புக்கான ஆசை. ஆனால் இவற்றுக்கும் சில வரம்புகள் இருக்க வேண்டுமென முடிவு செய்தோம். ஒருவர் தமது பொருளாதார வசதியை மேம்படுத்துவதற்குக் கடினமாக உழைத்தால், அது மனிதகுலத்திற்கான ஒருவரின் சேவையில் குறுக்கிடுகிறது எனும்போது, அந்த ஆசை வேறொன்றாக மாறிவிட்டது, ஒருவேளை அது பேராசையாக இருக்கலாம். அப்போது ஒருவர், "கடவுளைப் பிரியப்படுத்த விரும்புவது பற்றி என்ன கூறலாம்?" எனக் கேட்டார். நாம் குறைக்க முயலக் கூடா ஆசைகள் உள்ளனவென நாங்கள் உணர்ந்தோம். உண்மையில், ஆன்மிக ஏக்கங்கள் வலுப்பெற்றால், அவை நம் வீண் ஆசைகளைக் கட்டுப்படுத்தி, அவற்றை உரிய இடத்தில் வைத்திருக்குமென நாங்கள் முடிவு செய்தோம்.*

*அ: ஆசை பற்றி நீங்கள் சொன்னது யூனிட்டில் உள்ள மற்றொரு பகுதியை எனக்கு நினைவூட்டுகிறது, அதில் நான் சில சிரமங்களை எதிர்நோக்கினேன். பிரிவு 18-இல், பங்கேற்பாளர்கள் சில "வீண் கற்பனைகளை" பெயரிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். என்ன காரணத்தினாலோ, எங்கள் குழுவில் உள்ளவர்கள் எதையும் யோசிப்பதில் சிரமங்களை எதிர்நோக்கினர். அவர்கள் சிலவற்றைப் பெயரிடுவரென நான் எண்ணியிருந்ததால், நான் முன்பாகவே என்னைத் தயார்படுத்திக் கொள்ளவில்லை. நிலைமை சற்று சங்கடமாக இருந்தது.*

*உ: அவ்வப்போது இத்தகைய சங்கடமான தருணங்கள் ஏற்படுவதால் பாதகம் ஒன்றுமில்லை. அதனால் நீங்கள் சோர்வடையக் கூடாது. "அனுபவம் அடைதல்" என்பதன் அர்த்தம் இதுதான். நீங்கள் உங்கள் அனுபவத்தை எங்களுடன் பகிர்ந்துகொண்டுள்ளதால், எங்களுக்கும் இது போன்ற ஒருநிலைமை ஏற்படுமாயின்*

*“வீண் கற்பனைகளின்” ஒரு சிறு பட்டியலை வைத்திருப்பது ஒரு நல்ல யோசனை என்பதை இப்போது நாங்கள் அறிவோம்.*

*B: நான் நூலைப் படிப்பாய்வு செய்த நண்பர்களிடையே பகுதி 19-இல் நடந்த கலந்துரையாடலைப் பற்றிக் கொஞ்சம் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். மரணமடைந்த ஆன்மாக்களின் மேம்பாட்டில் பிரார்த்தனையின் தாக்கம் பற்றி ‘அப்துல்-பஹா கூறுவதைப் படித்தது அவர்களுக்கு ஞானமூட்டுவதாக இருந்தது. உலகத்திற்கு அப்பால் உள்ள தங்கள் அன்புக்குரியவர்களுக்கு உதவ முடியும் என்னும் எண்ணம், சமீபத்தில் இழப்பை அனுபவித்த இரண்டு பங்கேற்பாளர்களுக்கு மிகுந்த ஆறுதலையும் மகிழ்ச்சியையும் அளித்தது.*

1. மேலே உள்ள பரிமாற்றத்தில், பிரதான வரிசையின் படிப்பாய்வுக்கான பயிற்றுநர், பங்கேற்பாளர்கள் பகுதி 18-இல் ஒரு பயிற்சியை மேற்கொள்ள உதவுவதற்காக, "வீண் கற்பனைகள்" குறித்த எடுத்துக்காட்டுகளின் ஒரு சிறிய பட்டியலை முன்கூட்டியே தயாரிப்பது நல்லதென அறிவுறுத்துகிறார். அந்தப் பகுதியைப் பார்த்து, கீழே உள்ள இடத்தில் அத்தகைய பட்டியல் ஒன்றை உருவாக்குவது உங்களுக்குப் பயனுடையதாக இருக்கலாம்.

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

2. சந்தேகமின்றி, பாடப்பிரிவில் பங்கேற்பாளர்களுக்கு சவாலாக விளங்கும் வேறு பல பயிற்சிகள் உள்ளன. அவற்றில் சிலவற்றை நீங்கள் இங்குப் பட்டியலிட விரும்பலாம்.

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

## பகுதி 36

அறிவிற்கான தாகம் மற்றும் அழகின் மீதான ஈர்ப்பு உள்ளிட்ட சில முதன்மை மூலாதாரங்களை ஆராய்வதன் மூலம், உந்துவிப்புப் பற்றிய விஷயத்தை சுருக்கமாகப் பார்த்து இந்தப் பாடப்பிரிவைத் தொடங்கினோம். இது பங்கேற்பு பிரச்னை பற்றிய விவாதத்திற்கு இயல்பாகவே எங்களைக் கொண்டு சென்றது. ரூஹி இன்ஸ்டிட்யூட்டின் பயிற்சிப்பாடங்கள் பேணி வளர்க்கப் பாடுபடும் போதித்தல்-கற்றல் இயக்கவியல் மற்றும் இந்தப் பயிற்சிப் பாடங்களுக்கு வடிவம் கொடுக்கும் சில கருத்துகள், கொள்கைகள் ஆகியவற்றை நாம் ஆய்வு செய்தோம். இது பயிற்சிக்கழகத்தின் கல்வி முறைமையின் மூன்று மையக் கூறுகளைப் பரிசீலிப்பதற்கான வழியைத் திறந்தது: பயிற்சிப் பாடங்களின் பிரதான வரிசை, படிப்பு வட்டம் மற்றும் பயிற்றுநர். நூல் 7-இன் படிப்பாய்வு உங்களை ஒரு பாதையில் நிர்மாணிக்கின்றது என நாங்கள் குறிப்பிட்டுள்ளோம், அதில் நீங்கள் பயிற்சிப்பாடங்கள் மூலம் ஒவ்வொரு குழுவாக நடத்திச் செல்வதற்கான திறனை அதிகரிக்கும் அளவில் உருவாக்கிக் கொள்வீர்கள். இதுபோன்ற தொடர்ச்சியான அனுபவங்கள் மூலமாகவும், பயிற்றுநர்களுக்கான அவ்வப்போதான பிரதிபலிப்புக் கூட்டங்களில் பங்கேற்பதன் மூலமாகவும், பயிற்றுநராகப் பணியாற்றுவதற்கான உங்கள் திறன்களை நீங்கள் தொடர்ந்து மேம்படுத்தி வருவீர்கள். இந்தக் கூட்டங்கள் எதை உள்ளடக்கியிருக்கும் என்பதன் ஒரு சிறு காட்சி இப்போது உங்களுக்குக் காட்டப்பட்டுள்ளது. இந்தக் கட்டத்தில், நீங்கள் இந்த சேவையை ஆரம்பிக்க ஆர்வமாக இருப்பீர்கள் என எதிர்ப்பார்க்கப் படுகிறது. உங்கள் சமூகத்தில் பணிபுரியும் அனுபவம் வாய்ந்த பிற பயிற்றுநர்கள் அல்லது பிரதான வரிசைப் பயிற்சியின் கிளஸ்டர் ஒருங்கிணைப்பாளர் உங்களுக்கு உதவ தயாராக இருக்கிறார்கள்.

> **அதிமுக்கியத்துவம் கொண்டது என்னவெனில், அடுத்து வரும் வருடம் முழுவதிலும், பயிலக வட்ட நிலையில் பேணி வளர்க்கப்படும் கல்விச் செயல்பாட்டின் தரம் குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர வேண்டும் என்பதுதான். அதனால், உள்ளூர் மக்களின் அத்தகைய ஆற்றல்களை உருவாக்கும் வாய்ப்புக்கள் நடைமுறையில் நிறைவேறும். இது தொடர்பாக, பயிற்றுநர்களாக சேவையாற்றுகின்றவர்களுக்குப் பெறும் பொறுப்பு உள்ளது. பயிற்சியகப் பாடங்களில் தொலைநோக்குக் காட்சியாகக் காண்பிக்கப்பட்டிருக்கும் ஒரு கல்வியளிப்புச் சூழலை வழங்க வேண்டியது அவர்களுடைய சவாலாகும். அந்தக் கல்வியளிப்புச் சூழல் தனிநபருடைய ஆன்மிக சுய ஆற்றலளிப்புக்குப் பொருத்தமான ஒரு சூழலாகும். அந்நிலையில், அத்தனிநபர்கள் தங்களை சொந்தக் கற்றலின் துடிப்பான பங்கேற்பாளர்களாகவும், கற்றுக் கொள்ளும் அறிவைத் தனிப்பட்ட மற்றும் கூட்டுத் தன்மைமாற்றத்திற்காக அதனைச் செயல்படுத்த சதா முயலும் நடவடிக்கையில் தங்களைப் பிரதான செயல் வீரர்களாகவும் காண்பர். இதனைச் செய்ய நாம் தவறிவிட்டால், எத்தனை எண்ணிக்கையிலான பயிலக வட்டங்கள் அமைக்கப்பட்ட போதிலும், மாற்றத்தைத் தூண்டி விடுவதற்கான உரிய ஆற்றல் உருவாக்கப்பட மாட்டாது."[13]**

ஒரு தனிநபரில் தார்மீக மற்றும் ஆன்மிக ரீதியில் சக்தியூட்டும் ஒரு கல்விச் செயல்முறை தனிநபரில் பேணி வளர்த்திடும் சில அம்சங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன.

— நேரிய நடத்தை

— கடவுளைச் சார்ந்திருத்தல்

— அபரிமிதமான மகிழ்ச்சியும் பிரகாசமான இதயமும்

— ஆன்மாவின் தாராளத்தன்மை, இதயத் தூய்மை, மற்றும் மனத் தெளிவு

— பஹாவுல்லாவின் திருவெளிப்பாட்டில் பொதிந்துள்ள வழிகாட்டல் குறித்த ஆழமான புரிதல்

— மேம்படும்

— அறிவுக்கான தொடர்ந்து வளர்ந்துவரும் தாகம்
— கடவுள் திருமொழியின் தன்மைமாற்றும் சக்தியைச் சார்ந்திருத்தல்
— பஹாவுல்லாவின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிதலின் மூலம் சுதந்திரம் அடைதல்
— அழகு மீதான ஈர்ப்பினால் தூண்டப்பட்டு அதிசிறப்பை அடைவதில் ஓர் ஆசை .
— மனிதகுல ஒருமை குறித்த நனவுணர்வும் மானிடத்தின்பால் ஓர் ஆழ்ந்த அன்பும் கொண்டிருத்தல்
— வரலாறு குறித்த ஒரு வலுவான உணர்வு மற்றும் அதில் ஒருவரது இடம்
— சமயத்தைப் போதிப்பதற்கும் மனிதகுலத்திற்கு சேவை செய்யவுமான பேரார்வம் மற்றும் கொழுந்துவிடும் ஆசை
— ஒரு கற்றல் நிலைப்பாடு.
— ஓர் இரட்டைத் தார்மீக நோக்கத்தைப் பின்பற்ற ஆசை—தனது சொந்த ஆன்மிக மற்றும் அறிவார்ந்த வளர்ச்சியில் கவனம் செலுத்துவதோடு சமுதாய தன்மைமாற்றத்திற்குப் பங்களித்தல்
— ஒருவரின் சொந்த விருப்பத்தைக் கடவுள் விருப்பத்திற்கு சரண் செய்வதற்கான திறன்.
— சோதனைகள் மற்றும் எதிர்ப்புகள் மத்தியில் பற்றுறுதி
— போதனைகளை ஒருவரின் வாழ்க்கையில் பயன்படுத்துவதற்கான அர்ப்பணிப்பு
— ஒருவர்தம் மக்களின் ஆன்மிக மேம்பாட்டின்பால் ஓர் உயர்ந்த அளவிலான அர்ப்பணிப்பு
— ஒவ்வொரு தனிநபரும் ஆன்மிக சக்திகளை ஈர்த்து பயன்பெறமுடியும் என்பது குறித்த
— நனவுணர்வு
— சமூக நடவடிக்கையில் ஓர் உறுதிமிக்க ஆயினும் பணிவான பங்கேற்பாளராகும்
— திறன்
— கலந்தாலோசனையின் வழி ஒருமித்த கருத்து மற்றும் உடன்பாட்டிற்குப் பங்களிக்கும்
— திறனாற்றல்
— ________________________________________
— ________________________________________
— ________________________________________
— ________________________________________
— ________________________________________
— ________________________________________
— ________________________________________
— ________________________________________
— ________________________________________
— ________________________________________
— ________________________________________

## பகுதி 37

நீங்கள் பயிற்றுநராகப் பணியாற்றும் படிப்பு வட்டங்களின் பல்வேறு அம்சங்கள், நீங்கள் அடையாளம் கண்டுள்ள பண்புகளின் வளர்ச்சிக்கு பங்களிக்கும். இந்த அம்சங்களுள் சில கீழே உள்ளன. ஒவ்வொன்றிற்கும், மேலே உள்ள ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட பண்புகளை அஃது எவ்வாறு மேம்படுத்துகிறது என்பதை விவரிக்கும் இரண்டு வாக்கியங்களை எழுதுங்கள். ஒவ்வொரு சூழ்நிலையிலும், உங்களுக்கு உதவிட ஓர் உதாரணம் கொடுக்கப்பட்டுள்ளது.

1. ஒரு படிப்பு வட்டத்தை ஊடுருவியிருக்கும் அன்பெனும் சூழ்நிலை:

   அ. ஒரு படிப்பு வட்டத்தை ஊடுருவியிருக்கும் அன்பினால் நிறைந்த சூழ்நிலை மானிடத்தின்பாலான பங்கேற்பாளர்களின் அன்பை வலுப்படுத்துகின்றது.

   ஆ. ________________________________________________________________

   ________________________________________________________________

   இ. ________________________________________________________________

   ________________________________________________________________

2. ஒரு படிப்பு வட்டத்தின் பங்கேற்பாளரிடையே உருவாக்கப்படும் தோழமை உணர்வு:

   அ. ஒரு படிப்பு வட்டத்தில் நிலவும் தோழமை உணர்வு தங்கள் மக்களின் ஆன்மிக மேம்பாட்டிற்கான பங்கேற்பாளர்களின் அர்ப்பணிப்பை வலுவூட்டுகிறது.

   ஆ. ________________________________________________________________

   ________________________________________________________________

   இ. ________________________________________________________________

   ________________________________________________________________

3. ஆன்மீக ஒழுங்கு நிறைந்த ஒரு சூழ்நிலையில் சந்திக்கும் ஒரு படிப்பு வட்டம்:

   அ. ஆன்மிக ஒழுங்கு நிறைந்த சூழ்நிலையில் கூடும் ஒரு படிப்பு வட்டம், பங்கேற்பாளர்கள், பஹாவுல்லாவின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிவதன் மூலம் சுதந்திரம் பெற அவர்களுக்கு உதவுகிறது.

   ஆ. ________________________________________________________________

   ________________________________________________________________

   இ. ________________________________________________________________

   ________________________________________________________________

4. ரூஹி பயிற்சிக்கழகம் பயன்படுத்தும் பங்கேற்பு அணுகுமுறை:

அ. பயிற்சிக்கழகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பங்கேற்பு அணுகுமுறை இரட்டை தார்மீக நோக்கத்தைப் பின்பற்றும் விருப்பத்தைத் தூண்டுகிறது — ஒருவரின் சொந்த ஆன்மிக மற்றும் அறிவார்ந்த வளர்ச்சியில் கலந்துகொள்வதோடு சமூகத்தின் தன்மைமாற்றத்திற்கும் பங்களித்தல்.

ஆ. ______________________________________________________________________

______________________________________________________________________

இ. ______________________________________________________________________

______________________________________________________________________

5. ஒவ்வொரு குழுவிலும் நிர்மாணிக்கப்படும் படிப்பாய்வின் லயம் (rhythm):

அ. ஒவ்வொரு குழுவிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ள படிப்பாய்வின் லயம் (rhythm), சமூக நடவடிக்கையில் ஓர் உறுதியான ஆனால் பணிவான பங்கேற்பாளராக ஆவதற்கு உறுப்பினர்களின் திறனை வலுப்படுத்துகிறது.

ஆ. ______________________________________________________________________

______________________________________________________________________

இ. ______________________________________________________________________

______________________________________________________________________

6. புனித வாசகங்களின் ஆய்வுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்:

அ. புனிதவாசகங்களின் ஆய்வுக்கு முக்கியத்துவம் கொடுத்தல் என்பது உள்ளத்தில் மகிழ்ச்சியையும் பிரகாசத்தையும் உருவாக்குகிறது.

ஆ. ______________________________________________________________________

______________________________________________________________________

இ. ______________________________________________________________________

______________________________________________________________________

7. புனிதவாசகங்களிலிருந்து பிரார்த்தனைகளையும் புனிதவாசகங்களையும் மனனம் செய்தல்:

அ. புனிதவாசகங்களிலிருந்து பிரார்த்தனைகளையும் பகுதிகளையும் மனனம் செய்தல் மனத் தெளிவிற்குப் பங்களிக்கிறது.

ஆ. ______________________________________________________________________________

______________________________________________________________________________

இ. ______________________________________________________________________________

______________________________________________________________________________

8. திருமொழிகளில் இருந்து எடுக்கப்படும் பத்திகளின் உடனடி அர்த்தத்தை மையமாகக் கொண்ட பகுதிகளின் மீது கவனம் செலுத்தும் பயிற்சிகள்:

அ. திருழிகளிலிருந்து எடுக்கப்படும் பத்திகளின் உடனடி அர்த்தத்தை மையமாகக் கொண்ட பகுதிகளின் மீது கவனம் செலுத்தும் பயிற்சிகள் கலந்தாலோசனையின் மூலம் பங்கேற்பாளர்களின் கருத்தொருமிப்பு அடையும் திறனாற்றலை அதிகரிக்கின்றது.

ஆ. ______________________________________________________________________________

______________________________________________________________________________

இ. ______________________________________________________________________________

______________________________________________________________________________

9. பங்கேற்பாளர்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் திருமொழிகளின் ஆணித்தரமான வெளிப்பாட்டைக் காண உதவும் பயிற்சிகள்:

அ. பங்கேற்பாளர்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் திருமொழிகளின் ஆணித்தரமான வெளிப்பாட்டைக் காண உதவும் பயிற்சிகள் நடப்பில் இருக்கும் காரியத்திற்காகப் போதனகளைப் பயன்படுத்தும் அவர்களின் அர்ப்பணிப்பை வலுப்படுத்துகின்றன.

ஆ. ______________________________________________________________________________

______________________________________________________________________________

இ. ______________________________________________________________________________

______________________________________________________________________________

10. திருமொழிகளிலிருந்து எடுக்கப்படும் பத்திகளின் தாக்கங்கள் குறித்த நுண்ணறிவை வழங்கிட முயலும் பயிற்சிகள்:

அ. திருமொழிகளிலிருந்து எடுக்கப்படும் பத்திகளின் தாக்கங்கள் குறித்த நுண்ணறிவை வழங்கிட முயலும் பயிற்சிகள் பஹாவுல்லாவின் திருவெளிப்பாட்டில் கோவில் கொண்டுள்ள வழிக்காட்டல் பங்கேற்பாளரின் புரிதலை ஆழப்படுத்துகிறது.

ஆ. ______________________________________________________________________________

______________________________________________________________________________

இ. ______________________________________________________________________________

______________________________________________________________________________

11. ரூஹி பயிற்சிக்கழகத்தின் கல்வி அணுகுமுறையில் உள்ளார்ந்துள்ள நெகிழ்வுத்தன்மை:

அ. கல்வி அணுகுமுறையில் உள்ளார்ந்த நெகிழ்வுத்தன்மை, கற்றல் நிலைக்கு அவசியமான மனப்பான்மைகளின் வளர்ச்சிக்குப் பங்களிக்கிறது.

ஆ. ______________________________________________________________________________

______________________________________________________________________________

இ. ______________________________________________________________________________

______________________________________________________________________________

12. ஒரு படிப்பு வட்டத்தின் உறுப்பினர்கள் மேற்கொள்ளும் குறிப்பிட்ட சேவை செயல்கள்:

அ. ஒரு படிப்பு வட்டத்தின் உறுப்பினர்கள் மேற்கொள்ளும் சேவை செய்வதற்கான

அவர்களின் ஆவல் அவர்கள் உற்சாகத்துடனும் மும்முரமான ஆசையுடனும் சமயத்தைப் போதிப்பதிலும் மனிதகுலத்திற்குச் சேவை செய்வதிலும் ஈடுபடுவதில் வெளிப்படுகிறது .

ஆ. ______________________________________________________________________________

______________________________________________________________________________

இ. ______________________________________________________________________________

______________________________________________________________________________

## பகுதி 38

முந்தைய இரண்டு பிரிவுகளில் உள்ள பிரதிபலிப்புகள், திறமையான பயிற்றுநராக மாறுவதற்கு, ஒருவர் மற்றவர்களைப் பேணி வளர்க்கக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதோடு ஒரு படிப்பு வட்டத்திற்குள் அதன் பங்கேற்பாளர்களின் தார்மீக மற்றும் ஆன்மிக சக்தியளிப்பிற்கு உகந்த சூழலை உருவாக்க வேண்டுமெனும் உங்கள் திடநம்பிக்கையை மீண்டும் உறுதிபடுத்தியிருக்க வேண்டும். நீங்கள் ஊக்கமளிக்கும் கலையைக் கற்றுக்கொள்ள வேண்டும் இஃதோடு இயல்திறனை அடையாளம் கண்டு அதை வெளிப்படுத்தும் திறனாற்றலை உருவாக்கிக் கொள்ள வேண்டும். உங்கள் சொந்த சாதனைகளிலிருந்து உங்களைப் பற்றறுத்து, உங்கள் நண்பர்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டில் மகிழ்ச்சியடைந்தால் மட்டுமே இது சாத்தியமாகும். உண்மையில், இஃதே ஒரு சிறந்த பயிற்றுநருக்கான இரகசியமாகவும் இருக்கக் கூடும்.

அப்துல்-பஹாவின் திருமொழிகளிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் இரண்டு பத்திகளைப் பிரதிபலிப்பதன் மூலம் இந்தப் பாடப்பிரிவை நாம் முடிப்போம்.

> “நண்பர்களே, உங்கள் விசுவாசத்தை வெளிக்காட்டுங்கள்! என் அன்புக்குரியவர்களே, உங்கள் பற்றுறுதியையும் உங்கள் நிலைத்தன்மையையும் வெளிப்படுத்துங்கள்! அவரது நாமத்தை வழிபட்டு வேண்டிக் கொள்பவர்களே, அவர்பால் திரும்பி, அவரைப் பற்றிக்கொள்ளுங்கள்! உங்கள் இதயங்களை உயர்த்தி, அவரது உதவியை வேண்டுபவர்களே, அவரைப் பற்றிக்கொண்டு அவரது வழிகளில் நடப்பீராக! ஒருவர் மற்றவரை ஊக்கப்படுத்துவதற்கும், அவரது தெய்வீக நறுமணங்களைப் பரப்புவதற்கும் மட்டுமின்றி அவரது திருமொழியை மேன்மைப்படுத்துவதிலும் முழு முயற்சியோடு மேற்கொள்வது, நம் ஒவ்வொருவருடைய கடமையாகும். அவரது அன்புக் கருணை என்னும் ரோஜாத் தோட்டத்திலிருந்து வீசும் தென்றலால் நாம் எல்லா நேரங்களிலும் கிளர்ந்தெழ வேண்டும், அத்துடன் அவரது கருணை என்னும் மாய மலர்களின் நறுமணத்தால் மணங்கமழ்ந்திட வேண்டும். நாம் நேர்மையாளர்களின் இதயங்களுக்கு ஊக்கத்தையும் பேரானந்தத்தையும் வழங்கிட வேண்டும், அஃதுடன் நம்பிக்கையாளர்களின் ஆன்மாக்களுக்கு மகிழ்ச்சியையும் பரவசத்தையும் கொண்டு வர வேண்டும்.” [14]

> “. . . புராதன அழகரின் சமயம் அன்பின் சாராம்சம், ஒருமைப்பாட்டின் கால்வாய், அதனால் எல்லாருமே ஒரே கடலின் அலைகளெனவும், அதே முடிவற்ற வானத்தின் பிரகாசமிக்க விண்மீன்களாகவும் தனிமை என்னும் கிளிஞ்சலில் உள்ளிருக்கும் முத்தாகவும் ஒற்றுமையெனும் சுரங்கத்திலிருந்து அகழ்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒளிரும் நகையாகவும் இருக்கக்கூடும்; அதனால், அவர்கள் ஒருவர் மற்றொருவருக்குச் சேவகராகக் கூடும், ஒருவர் மற்றொருவரை நலம்பாராட்டியும் ஒருவர் மற்றொருவரை ஆசிர்வதித்தும் ஒருவர் மற்றொருவரைப் போற்றவும் கூடும்; அதனால், ஒருவர் எந்தத் தடையுமின்றி எல்லாரையும் புகழ்வதற்கெனவே தனது நாவின் உச்சரிப்பு இருப்பதற்கும் நன்றியுடைமைக்கு மற்றெல்லாரின் ஒரே குரலாகவும் ஆகக்கூடும்; அதனால், மகிமையெனும் தொடுவானத்தின்பால் தங்களது கண்களை உயர்த்தவும் அவர்கள் புனித வாயிலுடன் இணைக்கப்பட்டுள்ளனர் என்பதை நினைவிற்கொள்ளவும் கூடும்; அதனால், மற்றொருவரின் நல்லதைத் தவிர வேறெதனையும் கண்ணுறாதிருக்கவும் ஒருவரின் போற்றுதலையன்றி வேறெதனையும் செவிமடுக்காதிருக்கவும், ஒருவரின் புகழைப் பற்றியல்லாது வேறெதற்கும் ஒரு சொல்லைப் பேசாதிருக்கவும் கூடும்.” [15]

# குறிப்பீடுகள்


1. ‘Abdu’l-Bahá, in *Bahá’í Education: Extracts from the Bahá’í Writings*, compiled by the Research Department of the Universal House of Justice (Ingleside: Bahá’í Publications Australia, 2020), no. 27, pp. 18–19.

2. ‘Abdu’l-Bahá, in *Bahá’í Prayers: A Selection of Prayers Revealed by Bahá’u’lláh, the Báb, and ‘Abdu’l-Bahá* (Wilmette: Bahá’í Publishing Trust, 2002, 2020 printing), pp. 113–14.

3. *Gleanings from the Writings of Bahá’u’lláh* (Wilmette: Bahá’í Publishing Trust, 1983, 2017 printing), CLI, pars. 3 and 5, pp. 363–65.

4. Shoghi Effendi, *God Passes By* (Wilmette: Bahá’í Publishing, 1974, 2022 printing), p. 340; also cited in *The Kitáb-i-Aqdas: The Most Holy Book* (Wilmette: Bahá’í Publishing, 1993, 2021 printing), p. 18.

5. From a message dated 27 December 2005 to the Conference of the Continental Boards of Counsellors, published in *Turning Point: Selected Messages of the Universal House of Justice and Supplementary Material, 1996–2006* (West Palm Beach: Palabra Publications, 2006), no. 35.5, pp. 196–97.

6. From a message dated 28 December 2010 to the Conference of the Continental Boards of Counsellors, published in *Framework for Action: Selected Messages of the Universal House of Justice and Supplementary Material, 2006–2016* (West Palm Beach: Palabra Publications, 2017), no. 16.16, pp. 103–4.

7. From a message dated 12 December 2011 written by the Universal House of Justice to all National Spiritual Assemblies, ibid., no. 20.5–6, p. 131.

8. From a message dated 1 January 2022 written to all National Spiritual Assemblies, published in *The Nine Year Plan, 2022–2031: Messages of the Universal House of Justice* (West Palm Beach: Palabra Publications, 2022), no. 7.7, pp. 79–80.

9. From the Riḍván 2010 message of the Universal House of Justice to the Bahá’ís of the world, published in *Framework for Action* , no. 14.10, p. 79.

10. *Gleanings from the Writings of Bahá’u’lláh* , XCIV, par. 4, p. 219.

11. From a Tablet of ‘Abdu’l-Bahá. (authorized translation)

12. *Selections from the Writings of the Báb* (Wilmette: Bahá’í Publishing Trust, 2006, 2014 printing), no. 3:27:2, p. 128.

13. From the Riḍván 2010 message of the Universal House of Justice to the Bahá’ís of the world, published in *Framework for Action* , no. 14.11, p. 79.

14 *Light of the World: Selected Tablets of 'Abdu'l-Bahá* (Haifa: Bahá'í World Centre, 2021), no. 56.7, pp. 139–40.

15. *Selections from the Writings of 'Abdu'l-Bahá* (Wilmette: Bahá'í Publishing, 2010, 2015 printing), no. 193.5, p. 317.



# அடித்தட்டில் கலைகளை ஊக்குவித்தல்

## நோக்கம்

பயிற்சிக்கழகப் பாடங்களால் பேணி வளர்க்கப்படும்
கல்வி செயல்முறையை மேம்படுத்துவதிலும், அதனால்
வடிவமைக்கப்படும் சமூக வாழ்வுமுறைகளை வலுப்படுத்துவதிலும்
கலை சார்ந்த முயற்சிகளின் பங்கை மதித்துணர்தல

## பகுதி 1

ஒரு வளர்ச்சியடைந்து வரும் சமூகத்தின் உறுப்பினரெனும் முறையில், அதன் கூட்டு வாழ்க்கையை வலுப்படுத்துவதில் கலைகளின் சக்தியை எப்படிப் பயன்படுத்துவது என்பதையும்—திருமொழிகளின் உத்வேகம் பெற்ற இனிமையான பாடல்கள், வழிபாட்டுக் கூட்டங்களில் பாடப்படும்போது இதயங்கள் எவ்வாறு பின்னிப் பிணைக்கப்படுகின்றன என்பதையும் புனித நாள்கள் மற்றும் பிற சந்தர்ப்பங்களில் சமய வரலாற்றிலிருந்து சில அத்தியாயங்கள் விவரிக்கப்படுவதால் எவ்வாறு பணியுணர்வு பலப்படுத்தப்படுகிறது என்பதையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள். உலக நீதிமன்றம், 30 டிசம்பர் 2021 தேதியிட்ட செய்தியில் எல்லா இடங்களிலும் கிராமங்கள் மற்றும் அண்டைப்புறங்களிலும் நடைபெற்று வரும் பணிகளைப் பற்றி இவ்வாறு எழுதுகிறது:

> **“சில சமயங்களில் முகாம்களும் விழாக்களும் உட்பட, உத்வேகமூட்டும், நன்கு ஏற்பாடு செய்யப்பட்ட சமூக ஒன்றுகூடல்கள், அதிகரிக்கும் விகிதத்தில் நடைபெறுகின்றன. இசையும் பாடல்களும் இத்தகைய நிகழ்ச்சிகளில் முக்கிய அம்சமாகத் திகழ்கின்றன. ஆரம்பத்திலிருந்தே ஓர் ஒட்டுமொத்த சமூகத்தினுடைய அபிவிருத்தியின் ஓர் ஒன்றிணைந்த பகுதியாக இருக்கும் கலைகள், மகிழ்ச்சியை உருவாக்குதல், ஒற்றுமையின் பந்தங்களை பலப்படுத்துதல், அறிவைப் பரப்புதல், புரிதலை வலுப்படுத்துதல், சமயத்தின் கொள்கைகளைப் பரந்த சமுதாயத்தில் உள்ளோருக்கு அறிமுகப்படுத்துதல் ஆகியவற்றிற்கான முக்கிய வழிமுறையாக இருக்கின்றன.”[1]**

கலைமுறை நடவடிக்கைகள் அடித்தட்டில், குறிப்பாக இளைய தலைமுறையினருக்காகப் பேணி வளர்க்கப்படும் கல்விச் செயல்பாட்டில் பிணைக்கப்பட்டுள்ளன என்பதை நீங்கள் அறிவீர்கள். பஹாய் குழந்தைகள் வகுப்புகளில் கதை சொல்லும் கலையில் தங்கள் திறமைகளை வளர்த்துக்கொள்ள ஊக்குவிக்கப்படுகின்றனர், இது செவிமடுப்போரின் இதயத்தில் மென்மையான உணர்ச்சிகளைக் கிளறி ஆன்மிக உணர்வுகளைத் தூண்டிடும். பாடங்களில் கற்பிக்கப்படும் கருப்பொருள்களை வலுப்படுத்தும் அதே வேளையில், இளைஞர்களைப் பாடலில் வழிநடத்த கற்றுக்கொள்கிறார்கள். உங்கள் மண்டலத்தில் நடைபெறும் குழந்தைகள் விழாக்களில், நீங்கள் அவர்களின் குரல்களின் இனிமையால் மயங்கியுள்ளீர்கள் மற்றும் உயர்தர நிலைகளில் பெற்றத் திறமைகளை வெளிப்படுத்தும் வியத்தகு விளக்கக்காட்சிகளால் ஈர்க்கப்பட்டீர்கள் என்பதில் சந்தேகமில்லை. இளைய இளைஞர் குழுவின் அனிமேட்டராக நீங்கள் பணியாற்றுகிறீர்கள் என்றால், புத்தகம் 5-இல் பரிந்துரைக்கப்பட்டுள்ளபடி, அவர்களின் கற்றலை வளப்படுத்தக் கலைகளைப் பயன்படுத்துவதற்கான வழிகளைத் தேடியுள்ளீர்கள்—மொழியின் மீதான அவர்களின் புலமை அதிகரித்துள்ளதால் கவிதை எழுதுவதன் மூலமாக, அல்லது அவர்களின் பாரம்பரியத்தின் பயனைப் பெற்று ஒரு கைவினையின் மூலம் அவர்களின் ஒழுங்குணர்வு மற்றும் சமச்சீர்மை உணர்வை வலுப்படுத்தி, அவர்களின் கைகளால் வேலை செய்யும் திறனைத் துல்லியமாக்கிடலாம். இந்தத் திறன் எந்தவொரு தனிநபரின் ஒட்டுமொத்த பயிற்சிக்குப் பங்களிக்கும் ஒரு முக்கியமான கல்வி நோக்கமுமாகும். நீங்களும் உங்கள் நண்பர்களும் பிரதான வரிசையின் பயிற்சிப்பாடங்களில் முன்னேறும்போது, உலகின் எல்லாப் பகுதிகளிலும் காணப்பட்ட, திருமொழிகளிலிருந்து இசைப் பகுதிகளை அமைக்கும் பயிற்சியை மேற்கொள்ள நீங்கள் ஊக்குவிக்கப்பட்டிருக்கலாம். இந்தப் பாடல்கள் உங்கள் படிப்பு வட்டங்களில் பாடப்படும் போது, கூட்டுறவான பிணைப்புகளை வலுப்படுத்த உதவியுள்ளது, மகிழ்ச்சியான மற்றும் உன்னிப்பான கற்றலை வழிநடத்துவதுடன், அதிசிறப்பைப் பின்தொடர்வதை ஊக்குவிக்கிறது.

ஒட்டுமொத்தமாகக் கல்விச் செயல்முறையை மேம்படுத்துவதிலும், அது வடிவமைக்கும் சமூக வாழ்க்கையை மேம்படுத்துவதிலும் அடிமட்டத்தில் உள்ள கலை முயற்சிகள் ஆற்றக்கூடிய

பங்கிற்கு உங்களின் மதிப்புணர்வுகளை ஆழப்படுத்த இந்தப் பாடப்பிரிவு முயல்கிறது. அதன் பக்கங்களைப் படித்தல், சேவை பாதையில் ஈடுபடுபவர்களுக்கு அதே மாதிரியான மதிப்புணர்வுகளைப் பெறுவதற்கும் சேவையாற்றுவதற்கும் - அவர்களின் திறமைகள் மற்றும் திறன்கள் அனுமதிக்கும் அளவிற்கு- பஹாவுல்லாவின் வெளிப்பாடு பற்றிய ஆழ்ந்த புரிதலினால் ஊக்குவிக்கப்பட்ட கலை வெளிப்பாட்டின் மலர்ச்சிக்குப் பங்களிப்பதற்கு உதவும் ஓர் ஆசிரியராக உங்களது உறுதியையும் வலுப்படுத்தும் என நம்பப்படுகிறது.

## பகுதி 2

சில குறிப்பிட்ட கலை வடிவங்களைப் பரிசீலிக்கும் முன்—இசை, கதைசொல்லுதல், நாடகம் மற்றும் கைவினைகள்—இந்தப் பகுதிகளிலும் அதைத் தொடர்ந்து வரும் பகுதிகளிலும் பல மேற்கோள்களை நாம் படிப்பாய்வு செய்து அவற்றின் அர்த்தத்தைப் பற்றிச் சிந்திப்போம். அப்துல்-பஹா கூறுகின்றார்:

> **“கலைகள் அனைத்துமே, புனித ஆவியின் பரிசாகும். இவ்வொளியானது இசைக்கலை அறிஞர் ஒருவருடைய மனதின் மூலம் பிரகாசிக்கும்போது, அஃது அழகிய கீதங்களாக வெளிப்படுத்தப்படுகிறது. மீண்டும், கவிஞர் ஒருவருடைய மனதின் மூலம் பிரகாசிக்கும்போது, அது நேர்த்தியான கவிதை மற்றும் கவிதை சார்ந்த உரைநடை ஆகியவற்றில் காணப்படுகிறது. மெய்மையின் சூரியனுடைய ஒளியானது ஓர் ஓவியரின் மனதிற்கு எழுச்சியூட்டும்போது, அவர் அற்புதமான படங்களை உருவாக்குகிறார். இறைவனுடைய திருப்புகழை வெளிப்படுத்தும்போது, இந்தப் பரிசுகள், தங்களுடைய மிக உயர்ந்த நோக்கத்தை நிறைவேற்றுகின்றன.”[2]**

1. மேற்கண்ட மேற்கோளின் அடிப்படையில், பின்வரும் கேள்விகளுக்குப் பதிலளியுங்கள்:

   அ. கலையுணர்வு வெளிப்பாட்டின் அதிவுயர்ந்த நோக்கம் என்ன? ______________________

   ______________________________________________________________________________

   ஆ. கலை என்னும் பரிசு எங்கிருந்து வருகின்றது? ______________________________________

   இ. ஓர் இசை கலைஞனின் மனதின் வழி கலை என்னும் பரிசு எவ்வாறு தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது? _______________________________________________________

   ______________________________________________________________________________

   ______________________________________________________________________________

   ஈ. ஓர் ஓவியனின் மனதின் வழி கலை என்னும் பரிசு எவ்வாறு தன்னை வெளிப்படுத்துகிறது? ______________________________________________________________

   ______________________________________________________________________________

   ______________________________________________________________________________

2. உங்கள் குழுவின் பிற உறுப்பினர்களுடன் சேர்ந்து, உங்களுக்குத் தெரிந்த பாடல்களிலிருந்து, கடவுளை வாழ்த்துவது என்னும் நோக்கத்தை நிறைவேற்றும் ஒன்றை அடையாளம் காணவும். இஃது எவ்வழியில் பரிசுத்த ஆவியின் பரிசாகும்?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

# பகுதி 3

அப்துல்-பஹா கூறுகிறார்:

**“சமசீரமைவு, நல்லிணக்கம் மற்றும் பரிபூரணத்துவம் ஆகியவற்றை எடுத்துக்காட்டும் அனைத்திலும் மனமகிழ்ச்சியும் உவகையும் பெறுவதென்பது உள்ளத்திற்கும், ஆன்மாவிற்கும் இயல்பானதாகும். உதாரணமாக: ஓர் அழகான இல்லம், நன்கு வடிவமைக்கப்பட்ட ஒரு பூந்தோட்டம், சமசீரமைவுடைய ஒரு கோடு, ஒரு நேர்த்தியான செயல், நன்றாக எழுதப்பட்ட ஒரு நூல், அழகான ஆடைகள் - உண்மையாகவே, தமக்குள்ளே வசீகரம் அல்லது அழகினைக் கொண்டிருக்கும் அனைத்துமே, உள்ளத்திற்கும், ஆன்மாவிற்கும் மகிழ்ச்சியாக இருக்கின்றன.”[3]**

1. இதயமும் ஆவியும் எதில் மகிழ்ச்சி காண்கின்றன? ______________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

2. பின்வரும் சூழ்நிலைகளில் எது நல்லிணக்கத்தைச் சித்தரிக்கிறது?

_______ இரண்டு பேர் தாங்கள் படித்த ஒரு பத்தியில் வெளிப்படுத்தப்பட்ட ஒரு கருத்தைப் பற்றி வாதிடுகின்றனர், மற்றொருவர் அமைதியாக அதன் அர்த்தத்தைப் பற்றிச் சிந்திக்கிறார்.

_______ மற்றப் பிள்ளைகள் அமைதியாக விளையாடிக் கொண்டிருக்கும் போது, ஒரு தாயார் தன் குழந்தையைப் பாடித் தூங்க வைக்கிறார்.

_______ கலந்தாலோசனையின் போது ஒருவர் தொடர்ந்தாற் போன்று மற்றவர்களுக்கு இடையூறு செய்கிறார்.

_______ தொலைகாட்சிப் பெட்டி ஓடிக்கொண்டிருக்கும் போது மக்கள் ஒரு முக்கிய விஷயத்தைப் பற்றிய கருத்தாடலில் ஈடுபட்டுள்ளனர் .

_______ மூத்த பிள்ளைகள் தங்கள் இளைய உடன்பிறப்புகளுடன் விளையாடிக் கொண்டிருக்கும் அதேவேளையில் அவர்களின் பெற்றோர் ஒரு சமூகக் கூட்டத்தில் பங்கேற்கின்றனர்.

_______ ஓர் ஆசிரியர் ஒரு மாணவனிடம் ஒழுங்காக நடத்துகொள்ளும்படி கத்துகிறார்.

_______ ஒரு கப்பலின் தலைமை மாலுமி கட்டளைகளைப் பிறப்பிக்கிறார், மாலுமிகள் குழுவினர் உத்தரவுகளை நிறைவேற்றுகின்றனர்.

_______ ஒரு கிராமத்தின் இளைஞர்கள் அறுவடையைக் கொண்டு வருகின்றனர், மூத்த

_______ கிராமத்தினர் அவற்றைச் சந்தைக்குத் தயார் செய்கின்றனர்.

3. சமச்சீர், நல்லிணக்கம் மற்றும் பரிபூரணத்தை வெளிப்படுத்தும் அனைத்து விஷயங்களிலும் ஒருவரின் இதயமும் ஆவியும் எவ்வாறு இன்பமும் மகிழ்ச்சியும் அடைகின்றன என்பதை எண்ணிப் பாருங்கள். உங்கள் அன்றாட வாழ்க்கையில் நீங்கள் பார்க்கும் அல்லது செவிமடுக்கும் இதயத்திற்கும் ஆவிக்கும் மகிழ்ச்சியளிக்கும் சில விஷயங்கள் என்ன? நீங்கள் சமூக விவகாரங்களில் பங்குபற்றியபோது அல்லது பயிற்சிக்கழகப் பயிற்சிப் பாடங்களைப் பயிலும்போது நீங்கள் அனுபவித்த, நயமும் அழகுமுடைய சில விஷயங்கள் என்ன?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

## பகுதி 4

முந்தைய பகுதியில் நாம் படித்தது போல், " நயம் அல்லது அழகு உள்ள அனைத்தும் இதயத்திற்கும் ஆவிக்கும் மகிழ்ச்சி அளிக்கின்றன". அழகின் மீதான ஈர்ப்பு ஆன்மிக சக்திகளில் ஒன்றாகும் என்பதை உந்துதல் பற்றிய நமது கருத்தாடல்களிலிருந்து நாம் அறிவோம். அது நம்மை உள்ளமையின் உயர்ந்த பகுதிகளுக்குக் கொண்டுச் செல்கிறது. இந்தச் சக்திதான் நமது அன்றாட வாழ்விலும் மற்றவர்களுடனான உறவுகளிலும் நல்லிணக்கத்தைத் தேடத் தூண்டுகிறது. அது போன்றே, கண்கவர் கலைகள், இசை, கைவினைகள் ஆகியன மனித ஆன்மாவின் இந்த அத்தியாவசிய ஏக்கத்தின் வெளிப்பாடாகும். இவ்வுலகில் அழகின் வெளிப்பாடுகள் அதி அன்பிற்குரிய அழகரின் பிரதிபலிப்பு என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். அவை அனைத்தும் அழிந்து போகின்றன, ஆனால், புனிதப் பேரழகர் நித்தியமானவர், ‘அப்துல்-பஹா நம்மிடம் கூறுவதாவது:

> **“மாளுந்தன்மையுடைய அழகு வாடிவிடும், ரோஜக்கள் முள்களுக்கு வழிவகுக்கும், மற்றும் அழகும் இளமையும் தங்களுடைய வாழ்நாள் கழிந்து, இல்லாமல் ஆகிடும். ஆனால்**

**நிலையாக நிலைத்திருப்பது, மெய்மையானவரின் ஆழகே, ஏனெனில் அதனுடைய புகழொளி அழிவதில்லை, அதன் மகிமை என்றுமே நிலைத்திருக்கும்; அதன் வசீகரம் சர்வ சக்தி வாய்ந்தது, அதன் ஈர்ப்பு எல்லையற்றது. ஆகவே, அன்பிற்குரியவருடைய ஒளியின் புகழொளியை பிரதிபலிக்கும் அந்த வதனம் நலமடையுமாக! இறைவன் போற்றப்படுவாராக, நீங்கள் இந்த ஒளியினால் அறிவொளியூட்டப்பட்டு, உண்மையான அறிவு எனும் முத்தைப் பெற்று, உண்மை எனும் திருசொல்லினை பேசியுள்ளீர்கள்."[4]**

1. பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்யவும்.

அ. _______________________ அழகு _________________________

ஆ. _________________ முள்களுக்கு வழிவகுக்கும்.

இ. அழகும் _______________________ தங்களுடைய ______________ கழித்து, ______________ __________________

ஈ. நிலையாக நிலைத்திருப்பது, _______________________ ______________

உ. உண்மையானவருடைய அழகின் மகிமை __________________________________________.

ஊ. மெய்மையானவர் அழகின் மகிமை ________________________________________________.

எ. மெய்மையானவர் அழகின் வசீகரம் __________________________________________________.

ஏ. மெய்மையானவர் அழகின் ஈர்ப்பு ___________________________________________________.

2. நீங்கள் கலையுணர்வு நடவடிக்கையைப் பற்றியும் அழகின்பாலான ஈர்ப்பின் ஆற்றல் பற்றியும் சிந்திக்கும்போது, வெளி வடிவமானது அதன் மதிப்பை உள்ளார்ந்த நிலையிலிருந்து பெறுகிறது என்பதை நினைவில் கொள்வது முக்கியம். இதன் தொடர்பில் அப்துல்-பஹா கூறுகின்றார்:

**"ஆன்மா இல்லா உடலானது, உண்மையான சாதனையை அடைய முடியாது. அஃது எத்துணை அழகு மற்றும் சீர்சிறப்பு ஆகியவற்றின் உச்ச நிலையில் இருந்தாலுங்கூட அதற்கு ஆன்மா தேவைப்படுகிறது. விளக்கு சிமினி எத்துணைதான் மெருகேற்றப்பட்டு, பரிபூரணமாக இருந்தாலும், அதற்கு ஒளி தேவைப்படுகிறது. ஒளியில்லாமல் விளக்கோ, மெழுகுவர்த்தியோ பிரகாசமளிப்பதில்லை."[5]**

மேற்கண்ட பத்தியைப் பற்றிச் சிந்திக்கையில், நீங்கள் ஒரு வரலாற்றுக் கதையைக் கேட்ட போது அங்குள்ளோரின் கற்பனையைத் தூண்டிவிடும் அளவிற்கு அது சொல்லப்பட்டதை நினைத்துப் பார்க்கவும். அநேகமாக, கதைச் சொன்ன முறை சரியாக இருந்திருக்கும்; சொற்கள் தெளிவாக உச்சரிக்கப்பட்டிருக்கும்; சரியான இடங்களில் நிறுத்தங்கள் இருந்திருக்கும்; ஒரு சரியான லயம் பராமரிக்கப்பட்டிருக்கும். சில விஷயங்களை வலியுறுத்துவதற்காக, குறிப்பிட்ட சில சைகைகள் பயன்படுத்தப்பட்டிருக்கும். ஆனால், செவிமடுப்போருக்கு உத்வேகமூட்டியது இவை மட்டுமாகவே இருந்திருக்காது. தன்னலம், ஆசை ஆகியவற்றிலிருந்து தூய்மைப்படுத்தப்பட்ட ஓர் உயர்ந்த உணர்வு அந்த மொழியினூடே வழிந்து வந்திருக்க வேண்டும். ஆவியின் ஈர்ப்புகள் அங்குக் கிளரப்பட்டிருக்க வேண்டும். அந்தக் கிளர்ச்சியின் தோற்றுவாய்க் குறித்து உங்கள்

குழுவினருடன் கலந்துரையாடவும். ஆய்ந்துப் பார்த்தால் இறுதியில், அது பேரன்பிற்குரியவரின் ஆழகே அல்லவா?

## பகுதி 5

மேற்கண்ட எண்ணங்களை மனதிற்கொண்டு, இசையில் தொடங்கி, பல்வேறு கலை வடிவங்களைப் பார்ப்போம். இன்றைய உலகில், அழகு என்ற பெயரில் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் அசிங்கமே அதிகமாக உள்ளது. உயர்ந்த இயல்பை ஈர்க்கும் கலை வெளிப்பாடுகளைத் தேர்ந்தெடுப்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும் மற்றும் தாழ்வுக்கு வழிவகுக்கும் வெளிப்பாடுகளின்பால் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கித்தாப்-இ-அக்டாஸில் இருந்து பஹாவுல்லாவின் பின்வரும் வார்த்தைகள் இந்த நடவடிக்கைக்கான அடிப்படை வழிகாட்டுதலைக் கொண்டிருக்கின்றன:

**“நீங்கள் இசையையும் பாடலையும் செவிமடுப்பதை யாம் சட்டபூர்வமானதென ஆக்கியுள்ளோம். ஆயினும், கவனம் இருக்கட்டும், இல்லையெனில் அவற்றைக் கேட்பது ஒழுங்கு முறைமை, கௌரவம் ஆகியவற்றின் வரம்புகளை மீறச் செய்திடப் போகின்றது. உங்களின் மகிழ்வானது உள்ளத்திற்குப் பெருங்களிப்பூட்டி இறைவனின் அண்மையை அடைந்த அனைவரின் உள்ளங்களையும் பரவசத்தினால் நிரப்பும் ஒரு நாமமாகிய எமது அதி உயரிய நாமத்திலிருந்து தோன்றிடும் மகிழ்வாய் இருக்கட்டும். யாம் மெய்யாகவே, இசையை உங்கள் ஆன்மாக்களுக்கு ஏணியாகவும், அதனைக் கொண்டு அவர்கள் மேலுக அரசின்பால் உயரக்கூடிய கருவியாகவும் ஆக்கியுள்ளோம். ஆதலின் தன்னல உணர்ச்சி, ஆசை ஆகியவற்றிற்கு இட்டுச் செல்லும் ஒன்றாக அதனை ஆக்கிடாதீர். உண்மையாகவே, நீங்கள் அறிவிலிகளின் எண்ணிக்கையில் சேர்க்கப்படுவதை யாம் வெறுக்கின்றோம்.”[6]**

இசையின் தன்மை பற்றி, அப்துல்-பஹா இவ்வாறு கூறுகிறார்:

**“. . . இப்புதிய யுகத்தில், வெளிப்படுத்தப்பட்ட ஒளியானவர் தமது புனித நிருபங்களில், இசையானது, பாடப்பட்டாலோ அல்லது வாசிக்கப்பட்டாலோ அது ஆன்மாவிற்கும், உள்ளத்திற்கும் ஆன்மிக உணவாகும் என்று குறிப்பாகப் பிரகடனப்படுத்தியுள்ளார்.”[7]**

**“. . . கீதங்கள் லௌகீகமானவை என்றாலும், அவை ஆன்மிகத்துடன் தொடர்புடையவை, ஆகவே, அவை ஓர் ஆற்றல் மிக்க பயன்விளைவினை ஏற்படுத்துகின்றன. கீதத்தின் ஒரு குறிப்பிட்ட வகை, ஆன்மாவை மகிழ்வுறச் செய்கிறது, மற்றொரு வகை, அதனை துக்கப்படுத்துகிறது, மற்றொன்று அதனை செயலுக்குத் தூண்டுகிறது.”[8]**

**“கீதங்களைப் பாடுவதென்பது, மானிட உலகிற்கு உயிரியக்கம் மற்றும் மகிழ்ச்சி ஆகியவற்றைக் கொண்டு வரும். கேட்பவர்கள், அகமகிழ்வடைந்து, உவகையூட்டப்படுவார்கள் என்பதோடு அவர்களுடைய ஆழ்ந்த மன உணர்ச்சிகள் தூண்டப்படும். ஆனால் இந்த மகிழ்ச்சி இந்த உணர்வெழுச்சி தற்காலிகமானது; அஃது ஒரு குறுகிய காலத்திற்குள்ளேயே மறக்கப்படும். எனினும், இறைவன் போற்றப்படுவாராக, நீங்கள் உங்களுடைய இராகங்களை, இராஜ்யத்தின் கீதங்களுடன் சேர்த்து ஒன்றாக்கியுள்ளீர்கள், ஆன்மாவின் உலகிற்கு ஆறுதல் அளிப்பீர்கள் மற்றும் ஆன்மிக உணர்வுகளை என்றென்றும் தூண்டுவீர்கள்.”[9]**

1. பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்யவும்:

அ. இசையில் மூழ்கிடும் போதும், பாடல்கள் பாடும் போதும் நாம் ________________ ________________ ஆகியவற்றின் வரம்புகளை __________________ கவனமாக இருந்திட வேண்டுமென பஹாவுல்லா கூறுகிறார்.

ஆ. இசையை நமது ஆத்மாக்களுக்கு ஏணியாக நினைக்கும்படி ஊக்குவிக்கப்படுகின்றோம், அதனைக் கொண்டு நாம் மேலுக ________________ ________________ _______________ ஆக்கி உள்ளோம்

இ. இசையை _______________, ____________ ஆகியவற்றிற்கு நடத்திச் செல்லும் _______________ ஆக்கிடாதிருக்க எச்சரிக்கப்படுகின்றோம்.

ஈ. இப்புதிய யுகத்தில், பஹாவுல்லா ______________ ______________ ________________, __________________, பாடப்பட்டாலோ அல்லது வாசிக்கப்பட்டாலோ அது __________________, _________________ ஆன்மிக உணவாகும் என குறிப்பாக பிரகடனப்படுத்தியுள்ளார்.

உ. பஹாவுல்லா, இசையானது, ____________ அல்லது ____________ அஃது ஆன்மாவிற்கும், உள்ளத்திற்கும் ____________ ____________ என குறிப்பாக பிரகடனப்படுத்தியுள்ளார்.

ஊ. கீதங்கள் _______________ என்றாலும், அவை ________________ தொடர்புடைவை என அப்துல்-பஹா கூறுகின்றார்.

எ. லௌகீகமானவை என்றாலும், அவை ஆன்மிகத்துடன் ________________, ஆதலால் அவை ஓர் ஆற்றல்மிக்க ________________ ____________________.

ஏ. கீதத்தின் ஒரு குறிப்பிட்ட வகை, ஆன்மாவை ______________ செய்கிறது.

ஐ. மற்றொரு வகையான இசை ஆன்மாவை _______________ படுத்துகின்றது.

ஒ. வேறொரு வகையான இசை ஆன்மாவை _______________ தூண்டுகிறது.

2. பின்வரும் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்:

அ. இராகங்களை, இராஜ்யத்தின் கீதங்களுடன் சேர்த்து ஒன்றாக்குவது என்பதன் அர்த்தம் என்ன? ________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

ஆ. இந்த “ஒன்றாக்குவது” என்ன செய்கின்றது? ___________________________________________

______________________________________________________________________________________________

______________________________________________________________________________________________

3. இசை ஒரு சக்திவாய்ந்த ஆற்றலாகும், அது நியாயமான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். “மேலுக அரசின்பால் உயர்த்திடும்” சில பாடல்களையும், “தன்னல உணர்ச்சி, ஆசை” ஆகியவற்றிற்கான ஒன்றாக விளங்கும் சில பாடல்களையும் அடையாளம் காணவும்.

## பகுதி 6

மேலே உள்ள பகுதிகள் ஆன்மிக மேம்பாட்டிற்கு இசை கணிசமான பங்களிப்பை வழங்குகிறது என்பதை எந்தச் சந்தேகத்திற்கும் இடம் இன்றி தெளிவாக்கியுள்ளன. 'அப்துல்-பஹா'வின் பின்வரும் கூற்று, தெரிவிக்கப்படும் ஒரு செய்திக்கு, ஆன்மிக ரீதியிலான ஏற்புத்திறனை அதிகரிக்க ஏதுவாக, எந்தச் சூழலோ நோக்கமோ எதுவாக இருப்பினும், அதற்கான சூழ்நிலைகளை உருவாக்கும் இசையின் திறனை விளக்குகிறது:

> “. . . **இசையென்பது ஒரு லௌகீக விவகாரம் என்றாலும், அதன் மகத்தான விளைவு ஆன்மிகமானது, அதனுடைய முதன்மையான பற்று ஆன்மாவின் இராஜ்யத்துடன் இருக்கிறது. ஒரு நபர், சொற்பொழிவாற்ற விரும்பினால், அஃது இசை கீதங்களுக்கு பிறகு மேற்கொள்ளப்பட்டால், விரும்பிய பயன்விளைவித்தலில் மேலும் வெற்றியைக் காண இயலும். பண்டைய கிரேக்கர்களும், பாரசீக தத்துவவாதிகளுங்கூட, தங்களுடைய சொற்பொழிவுகளை பின்வரும் விதத்தில் வழங்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர்:- முதலில், ஒரு சில இசை கீதங்களை வாசித்து, அதனால் கேட்போர் கூட்டம் ஒரு குறிப்பிட்ட ஏற்புத் திறம் பெற்றவுடன் அவர்கள் உடனே தங்கள் இசைக் கருவிகளை அப்பால் வைத்துவிட்டு, தங்கள் சொற்பொழிவினைத் துவங்குவர். பாரசீக நாட்டின் மிகவும் புகழ்பெற்ற இசைக்கலை அறிஞர்களுள் ஒருவர், பார்போத் என்பவராவார். எப்போதெல்லாம் மன்னரின் அரசவையில் ஓர் முக்கியமான விஷயம் மன்றாடப்பட்டு, மன்னரை அறிவுறுத்தி இணங்க வைப்பதில் மந்திரிசபை தோல்வியடைந்தபோது, அவர்கள் உடனே அவ் விஷயத்தை பார்போத்திடம் குறிப்பிடுவார்கள். அதன் பின்னர், அவர் தம்முடைய கருவியுடன் அரசவைக்குச் சென்று, மிகவும் பொருத்தமான மனதைத் தொடும் இசையினை வாசிப்பார், விளைவு உடனே அடையப்படும். ஏனெனில், மன்னர் மனதைத் தொடும் இசை கீதங்களால் உடனே மனமிளகி, தாராளத்தின் சில உணர்வுகள்** அவருடைய உள்ளத்தில் பொங்கியெழுந்து, அவர் இசைவு தெரிவிப்பார். . . . . “[10]

1. பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்யவும்:

அ. இசையென்பது ____________________ விவகாரம் என்றாலும், அதன் மகத்தான __________________ ஆன்மிகமானது,

ஆ. ________________ ஒரு லௌகீக விவகாரம் என்றாலும், அதன் மகத்தான ____________ ஆன்மிகமானது மற்றும் அதனுடைய ________________ பற்று ___________________ _________________ இருக்கிறது.

இ. ஒரு நபர், ____________________ விரும்பினால், அது ____________ _______________ பிறகு மேற்கொள்ளப்பட்டால், விரும்பிய _________________ மேலும் _____________ காண இயலும்.

2. பாடல்கள் ஒரு சக்தி வாய்ந்த கற்பித்தல் கருவியாக செயல்படும் என்பதை நூல் 3 இல் உங்கள் படிப்பாய்வின் மூலம் நீங்கள் ஏற்கனவே அறிந்திருக்கிறீர்கள். ஒரு பாடலின் கருப்பொருள் பரிசீலனையில் உள்ள கருப்பொருளிற்கு பொருத்தமானதாக இருந்தால், அதைப் பாடுவது உபகரணம் பற்றிய ஆய்வுக்கு துணைபுரியும் மற்றும் அதன் விளைவுத்திறத்தை அதிகரித்திடும். நூல் 1-இன் படிப்பை முழுமைச் செய்யும் வகையில் உங்கள் மண்டலத்தில் இயற்றப்பட்ட பாடல்கள் ஏதேனும் உங்களுக்குத் தெரியுமா?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

## பகுதி 7

சமயத்தின் போதனைகளால் உத்வேகம் பெறும் போதும், கடவுளின் திருமொழிகளைக் கூட பயன்படுத்திடும் போதும் இசையின் சக்தியானது, பன்மடங்கு அதிகரிக்கிறது. அப்துல்-பஹா நமக்குக் கூறுகின்றார்:

> **“இசை மனித குலத்தின் கல்விக்கும் மேம்பாட்டிற்கும் ஒரு முக்கிய வழிமுறையாகும், ஆனால் இதற்கு உண்மையான ஒரே வழி இறைவனுடைய போதனைகளின் மூலமாகும். இசை, பரிபூரணத் தூய்மையுடனும் மெருகேற்றப்பட்டும் இருக்கின்ற இந்தக் கண்ணாடிக் குவளையைப் போன்றது. அது நம்முன் இருக்கின்ற சரிநுட்பமாக, இத்தூய்மையான கிண்ணத்தைப் போன்றது, இறைவனுடைய போதனைகளும், இறைவனுடய திருமொழிகளும் தண்ணீரைப் போன்றது. கண்ணாடிக் குவளை அல்லது கிண்ணம் முற்றிலும் தூய்மையாகவும் தெளிவாகவும் இருக்கும்போது, தண்ணீர் பரிபூரணமாக புத்தம்புதியதாகவும், தெளிவாகவும் இருக்கும்போது, அது வாழ்வு அளிக்கும்; இந்தக் காரணத்தால், இறைவனுடைய போதனைகள், அவை கீதங்களாகவோ, உரையாடல்களாகவோ அல்லது பிரார்த்தனைகளாகவோ, வடிவெடுத்தாலும், அவை இனிய கீதத்துடன் பாடப்படும்போது, மனதில் ஆழ்ந்து பதியத்தக்கதாக இருக்கின்றன.”[11]**

1. பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்யவும்:

அ. இசை மனித குலத்தின் _____________ மற்றும் ______________ ஆகியவற்றிற்கான ஓர் முக்கிய வழிமுறையாகும்.

ஆ. கல்வி மற்றும் மேம்பாட்டிற்கான வழிமுறையாக ________________________ பணியாற்றுவதற்கான ஒரே ________________ வழி போதனைகள் மூலம் மட்டுமே.

இ. இசை _______________ _________________ போன்றது, அதே வேளை இறைவனுடைய போதனைகள் ________________ போன்றது.

ஈ. கண்ணாடி முற்றிலும் _________________ ________________ இருக்கும்போது, தண்ணீர் _____________________ _____________________, தெளிவாகவும் இருக்கும்போது, அது _________________ அளிக்கும்.

உ. இறைவனுடைய போதனைகள், அவை ___________________, _____________________ அல்லது ________________, வடிவெடுத்தாலும், அவை ______________ __________________ ________________, மனதில் ஆழ்ந்து பதியத்தக்கதாக இருக்கின்றன.

2. மேலே உள்ள மேற்கோளுக்கு இணங்க, உலகின் ஒவ்வொரு பகுதியிலும் துடிப்பான சமூகங்களை நிர்மாணிப்பதற்கான முயற்சிகள் வேகத்தில் அதிகரிக்கும் போது, புனித வாசகங்களுக்கு ஏற்ற வகையில் அனைத்து மொழிகளிலும் அதிக எண்ணிக்கையிலான பிரார்த்தனைகள் மற்றும் திருமொழிகளின் பகுதிகள் இசையுடன் அமைக்கப்படுகின்றன. பயிற்சிக்கழக பரப்பியக்கங்கள் அல்லது முகாம்களின் போதும் மற்றும் படிப்பு வட்டங்களில் கூட, பங்கேற்பாளர்கள் இவற்றில் பலவற்றைக் கற்றுக் கொள்ளலாம் என்பதோடு அது போன்ற வேறு பலவற்றை உருவாக்குவதற்குப் பங்களிக்கலாம். பஹாய் உலகம் முழுவதும் மிகவும் விரும்பப்படும் ஒரு பாடல் கீழே உள்ளது, ஆனால் இன்னும் பலவற்றை நீங்கள் நிச்சயமாக அறிவீர்கள். உங்கள் குழுவின் மற்ற உறுப்பினர்களுடன் இப்போது சிலவற்றைப் பாடுங்கள்.

**ஆசீர்வதிக்கப்பட்ட ஸ்தலம்**

கடவுளின் நாமம் மொழியப்பட்டு
அவரது புகழ் பாடப்படும்
ஸ்தலமும், இல்லமும்,
இடமும், நகரமும்,
இதயமும், மலையும்,
புகலிடமும், குகையும்,
பள்ளத்தாக்கும் தேசமும்
கடலும் தீவும், புல்வெளியும்,
ஆசீர்வதிக்கப்பட்டதாகும்.

3. பயிற்சிக்கழகப் பாடங்களின் பங்கேற்பாளர்களின் திறமைகள் மற்றும் அவர்களின் இசை அறிவு ஆகியவை வெவ்வேறு அளவுகளில் மேம்பாடு கண்டிருக்கும், சிலர் மிகவும் திறமையானவர்களாகவும் பிறர் இசையில் நாட்டம் இல்லாதவர்களாகவும் இருப்பர். சிலர் மற்றவர்களுக்கு முன்னால் பாடுவதற்குக் கூச்சப்படலாம். சிலர் மிகவும் தாழ்ந்த குரலில் ஒரு பன்னை மட்டும் பாட விரும்புவர். அவர்களின் விருப்பங்கள் மற்றும் திறமைகள் எதுவாக இருப்பினும், நீங்கள் அனைவரையும் ஏற்றுக்கொண்டு ஊக்கப்படுத்தவும், அத்துடன் யாரும் சங்கடப்படாமல் இருப்பதைப் பார்த்துக் கொள்ளவும் விரும்புவீர்கள். இந்த வகையில், ஒரு திறமையான தனிநபரின் செயல் திறன் குறித்த விஷயத்தைக் குழுப் பாடலில் இருந்து பிரிப்பது உங்களுக்கு முக்கியம். இரண்டும் மதிப்புமிக்கவை. ஆனால் சில சமயங்களில் ஒருவர் நாடும் பரிபூரணத்துவம் மற்றவர்களின் பங்கேற்பை நசுக்குவதாக இருந்திடும். கலைகளின் கூட்டு வெளிப்பாடு, குறிப்பாக இசை, அடித்தட்டில்

வெளிப்படுவதற்கு உருவாக்கப்பட வேண்டிய இயக்கவியல் பற்றி உங்கள் குழுவுடன் கலந்துரையாடுங்கள்.

## பகுதி 8

இப்போது, இந்தப் பகுதிகளில் நீங்கள் படிப்பாய்வு செய்த மேற்கோள்களின் கண்ணோட்டத்தில், வெவ்வேறு சமூக நிகழ்வுகளுக்கு எந்த வகையான இசை மிகவும் பொருத்தமானது என்பதைப் பற்றி நீங்கள் இடைநிறுத்தி யோசிப்பது பயனுள்ளதாக இருந்திடும். பக்தி கூட்டங்களின் போது எந்த வகையான பாடல்கள் ஆன்மாவுக்கு உற்சாக மூட்டி ஆன்மிக சூழ்நிலைக்கு பங்களிக்கும்? பிரதிபலிப்பு கூட்டங்களில் எந்தப் பாடல்கள் பொருத்தமாக இருக்கும்? தீவிர பயிற்சிக்கழக நடவடிக்கையின் போது எந்தப் பாடல்கள் குறிப்பாகப் பொருத்தமுடையதாக இருந்திடும்? போதனைப் பரப்பியக்கங்களுக்கு எந்த வகையான பாடல்கள் பொருத்தமானவை? முழு சமூகமும் அதன் விவகாரங்களைப் பற்றி கலந்தாலோசிக்க ஒன்றுகூடும் சந்தர்ப்பங்களுக்கு மிகவும் பொருத்தமான பாடல்களின் எடுத்துக்காட்டுகள் யாவை? குழந்தைகள் மற்றும் இளைய இளைஞர்களுக்கான விழாக்களில் பாடுவதற்கு எது பொருத்தமாக இருக்கும்? சமயத்தின் வரலாற்றைப் பற்றிய நண்பர்களின் அறிவையும், பஹாவுல்லா மீதான அவர்களின் அன்பையும் அதிகரிக்கும் மற்றும் அவர்களின் இதயங்களைத் தொட்டு, அவர்களைச் சேவையில் ஈடுபடத் தூண்டும் பாடல்களின் சில எடுத்துக்காட்டுகள் யாவை? புனித நாள்களைக் அனுசரிப்பதற்கும் பத்தொன்பது நாள் விருந்தைக் கொண்டாடுவதற்கும் எந்தப் பாடல்கள் பொருத்தமானவை? உங்கள் எண்ணங்களில் சிலவற்றை இங்கே எழுதுங்கள்.

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

## பகுதி 9

கதை சொல்வதென்பது, உத்வேகமூட்டி, உயிர்ப்பூட்டி கற்பனையைத் தூண்டி, ஆழமான கருத்தாக்கங்களைத் தெரிவித்து, ஆன்மிக நுண்ணறிவுகளை வழங்கிடக்கூடிய ஒரு கலையாகும். கதைகள் பல்வேறு சூழல்களில்—குடும்ப விஜயங்களின்போது, சமூக ஒன்றுகூடல்களிலும் விழாக்களிலும் சமயத்தின் வரலாற்றுடன் இளைஞர்களின் தொடர்பை வலுப்படுத்த பரப்பியக்கங்களின் மாலை வேளைகளின் போது பயன்படுத்தப்படலாம்.

ஈர்க்கும் வகையிலும் பரவசமூட்டும் வகையிலும் கதைகள் கூறும் திறமையானது, ஒருவர் அனுபவத்தின் மூலம் வளர்த்துக்கொள்ளக்கூடிய ஒன்றாகும். அடிக்கடி கவனிக்காது விடப்படும் இக்கலையினுடைய வடிவத்தின் செய்முறைகள் பற்றி நூல் 3 சில குறிப்புகளை வழங்குகின்றன. நாம் இங்கு, அவசியமான திறமைகள் பற்றி கலந்தாய்வு செய்யப் போவதில்லை. கற்றுக்கொள்வதற்காக, பரிந்துரைக்கப்பட்ட கதைகளின் நீளமான பட்டியல் ஒன்றிற்கான இடமும் இதுவன்று. ஒரு பயிற்றுநர் என்னும் முறையில் நூல் 5-திலிருந்து நீங்கள், தனிநபர் மற்றும் கூட்டு அடையாளத்தை வடிவமைக்கும், சமய வரலாற்றின் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த அத்தியாயங்களை நினைவில் வைத்திருக்க வேண்டியதும் மற்றும் ஒரு பயிற்றுநரெனும் முறையில் நீங்கள் மனதில் கொள்ள வேண்டியதுமாகும். இதுபோன்ற சம்பவங்களின் மூலாதாரமாக "உதயத்தை வென்ற வீரர்கள்" என்னும் நூல் தனிச்சிறப்பு வாய்ந்த மதிப்புடையது. பாதுகாவலர், இந்த நூலினை போதனைத் திட்டங்களின் ஓர் "அவசியமான துணை நிறைவு " என்றும், கோடைக்கால பள்ளிகளில் ஓர் "சவாலிட முடியாத பாடநூல்" என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், அவர் அதனை, "அனைத்து இலக்கிய மற்றும் கலை நாட்டங்களில் அகத்தூண்டுதலின் ஆரம்பம்" என்றும், "ஓய்வு வேளைகளில் விலைமதிக்கமுடியாத் தோழன்" என்றும், "பஹாவுல்லாவுடைய தாய் நாட்டிற்கு எதிர்கால யாத்திரைக்கான இன்றியமையாத முன்னேற்பாடு என்றும், "கடுந்துன்பங்களைப் போக்குவதற்காகவும் ஓர் இடராந்த மற்றும் நம்பிக்கை குலைந்த மனித குலத்தின் தாக்குதல்களை எதிர்த்து நிற்பதற்காகவும் ஒரு தவறமுடியாத கருவி" எனவும் அழைத்துள்ளார். மாபெரும் வரலாற்று ஆசிரியரான நபிலினால் நமக்காக வழங்கப்பட்ட அந்த நூலின் முக்கியத்துவம் குறித்து ஷோகி எஃபெண்டி இவ்வாறு எழுதியுள்ளார்:

> **"நபிலுடைய எழுச்சியூட்டும் விலைமதிப்புமிக்க கதைக்கூற்று கொண்டிருக்கும் உபகரண செல்வத்தினை உங்களால் எவ்வளவு முடியுமோ, அவ்வளவு விரிவாகப் பயன்படுத்தி, உங்களுடைய அற்புதமான, உங்களுடைய ஓயா முயற்சிகளின் வெற்றி அதனை இறுதியாகச் சார்ந்திருக்கச் செய்து, ஒவ்வொரு பஹாய் உள்ளத்திலும் ஒளிரும் உற்சாகத்தின் சுடருக்கு ஊட்டமளிப்பதற்கான பிரதான கருவியாக அஃது இருக்கட்டும்."[12]**

அவர் சார்பாக எழுதப்பட்ட ஒரு கடிதத்தில், பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது :

> **"நபிலுடைய கதைக்கூற்றானது, வெறுமென ஒரு கதைக்கூற்று அன்று; அஃது ஒரு தியான நூலாகும். அது போதிப்பது மட்டுமன்று, அஃது உண்மையாகவே எழுச்சியூட்டி, செயலுக்குத்**

**தூண்டுகிறது. அது நம்முடைய செயலற்ற சக்திகளைத் தூண்டி உயிர்பெறச் செய்து, நாம் ஓர் உயர் நிலைக்கு பறந்திடச் செய்கிறது. ஆகவே, அது, வரலாற்று ஆசிரியருக்கும், சமயத்தைப் போதிப்பவர் மற்றும் விரிவாக எடுத்துக் கூறுபவர் ஆகிய ஒவ்வொருவருக்கும், விலைமதிக்கமுடியாத ஓர் உதவியாக இருக்கிறது."[13]**

சமயத்தின் வரலாற்றிலிருந்து நீங்கள் ஏற்கனவே பல சம்பங்களை அறிந்திருந்து, அவற்றைச் சற்று விரிவாக எடுத்துக்கூற முடியும் என்றபோதிலும், நாம் இப்பாடத்தில் *"உதயத்தை வென்ற வீரர்கள்"* என்ற நூலிலிருந்து ஒரு பத்தியை சேர்த்துள்ளோம். ஒரு பயிற்சி குறிப்பாக, நீங்கள் அதனை பல முறை படித்து, பிறகு அதனை எத்துணை திட்பநுட்பத்துடன் முடியுமோ அத்துணை திட்பநுட்பத்துடன் கூறுவதில் கவனமாக இருந்து, அதை எடுத்துரைக்கவும். உங்களுடைய பயிற்சி முகாம்களிலும் கூட்டுப் பரப்புரையிலும் பயன்படுத்துவதற்காக, நீங்கள் கற்றுக்கொள்ள விரும்புகின்ற வகையின் ஒரு நல்ல உதாரணத்தை இந்தப் பத்தி உங்களுக்கு வழங்குகின்றது, ஏனெனில், சந்தர்ப்பம் கோருவதற்கேற்ப, அது முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ கூறப்படுவதற்கான வாய்ப்பினை அஃது அளிக்கின்றது.

இந்தப் பத்தியைப் படிப்பதற்கு முன், பாப் பெருமானாரின் சுருக்கமான ஆனால் வியத்தகு அருட்பணியைச் சூழ்ந்துள்ள சூழ்நிலைகளை நீங்கள் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும் – 1844-இல் தம்மை வாக்குறுதியளிக்கப்பட்டவராக அவர் அறிவித்ததைத் தொடர்ந்து, ஆயிரக்கணக்கானோர் புதிய சமயத்தை ஏற்றுக்கொண்டு அவரது செய்தியைப் பகிர்ந்து கொள்ளத் தொடங்கினர், ஈரானின் தலைவர்கள் மத்தியில், அது பயத்தையும் பொறாமையையும் தூண்டியது. அவர்கள் அவரது செல்வாக்கின் எழுச்சியைத் தடுக்கும் நம்பிக்கையில், அவரை நாட்டின் தொலைதூர மூலைக்கு விரட்டியடித்தனர். இருப்பினும், உங்களுக்குத் தெரிந்துள்ளது போல் அவர்களின் முயற்சிகளுக்கு இடையில், அவரது செய்தி தொடர்ந்து பரவியது, எனவே, ஜூலை 1850-இல், அவரது விசுவாசமான சீடர்களுள் ஒருவரான அனிஸுடன் அவர் கொல்லப்பட்டார். ஏற்கனவே, அந்தச் சோகமான நிகழ்வுக்கு முன்பு, அவரைப் பின்பற்றுபவர்கள் மிகவும் வெட்கக்கேடான கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டனர்; அவர்கள் தங்கள் நம்பிக்கையைத் துறந்திட வேண்டுமென்பதற்காக அவர்கள் அடித்துத் தாக்கப்பட்டனர் மற்றும் சிறையில் அடைக்கப்பட்டனர். இறுதியில், ஆயிரக்கணக்கானோர் தங்கள் பேரன்பரின் பாதையில் தங்கள் உயிரைக் கொடுக்க அழைக்கப்பட்டனர். உண்மையில், பாப் பெருமானாரின் தியாகமரணத்திற்கு நான்கு மாதங்களுக்கு முன்பு, தெஹரான் நகரில் ஒரு "சோகநாடகம்" அரங்கேறியது. இது "படுகொலையின் களியாட்டத்திற்கு ஒரு முன்னோடி" என்பதை நிரூபித்திடும் என்றும், இஃது "அதன் குடிமக்களை" பதற்றப்படுத்திடும் என்பதோடு "வெளி மாகாணங்கள்வரை திகைப்பையும்" விதைத்திடுமென பாதுகாவலர் கூறியுள்ளார். "அந்த சோகநாடகத்தின் வீரர்கள்", "தெஹ்ரானின் ஏழு உயிர்த்தியாகிகள்" என அவர் நமக்குக் கூறுகிறார்.

அனைவரும் நன்கு மதிக்கப்படும் தொழில்களிலிருந்து வந்தவர்கள், இந்த ஏழு புனித ஆன்மாக்களும் கைது செய்யப்பட்டு இருபத்திரண்டு நாள் சிறையில் அடைக்கப்பட்டனர், அப்போது அவர்களின் மெய்நம்பிக்கையை நிராகரிக்குமாறு அவர்களை நம்பவைக்கும் முயற்சியில் ஒவ்வொரு வகையிலும் அவர்கள் மிக மோசமான நடத்தப்பட்டனர். இறுதியாக, பிரதமரின் உத்தரவின் பேரில், அவர்கள் கொலைசெய்யப்படுவர் என்று அச்சுறுத்தப்பட்டனர். ஆனால், அவர்களின் செல்வாக்குமிக்க சக ஊழியர்களின் "மீண்டும் மீண்டும் தீவிரமான பரிந்துரைகள்" அல்லது அவர்களின் விடுதலைக்காக வழங்கப்பட்ட "கணிசமான தொகைகள்" அல்லது "அரசு அதிகாரிகளின் உணர்ச்சிபூர்வமான வேண்டுகோள்கள்" ஆகியவை அவர்கள் தியாக மரணமெனும் கிரீடத்தை பெறுவதைத் தடுத்திட முடியவில்லை. துன்புறுத்துவோருக்கு அவர்கள் அளித்த "எதிர்மறையான பதில்கள்", அவர்களின் மரண பீடத்தை நெருங்கும்போது அவர்கள் வெளிப்படுத்திய "ஆனந்தக் களிப்பு", அவர்கள் தங்களைத் தூக்கிலிடப்போவரை எதிர்கொள்ளும் போது அவர்கள் எழுப்பிய "மகிழ்ச்சி பரவசக் கூக்குரல்"", அவற்றில் அவர்களின் கடைசித் தருணங்களில் உச்சரிக்கப்பட்ட "வசனங்களின் வலிமை ", அஃதுடன் பார்வையாளர்களின் கூட்டத்திற்கு அவர்கள் ஆற்றிய "மேல்முறையீடுகள் மற்றும் சவால்கள்" - இவை "தெஹரானின் ஏழு தியாகிகளின் சோகத்தின் முக்கிய

அம்சங்களில்" அடங்கும், இது பஹாவுல்லாவின் சமயத்தின் ஆரம்ப வெளிப்பாட்டின் போது காணப்பட்ட மிகக் கொடூரமான காட்சிகளுள் ஒன்றென" பாதுகாவலர் விவரிக்கின்றார். அவர்களின் கதைகளை நபில் இவ்விதமாக விவரிக்கின்றார்:

"1. இவர்களுள் முதலாமவர் பாப் பெருமானாரின் தாய்மாமனும் ஷிராஸ் நகரின் தலை சிறந்த வியாபாரிகளுள் ஒருவரான காஹ்ல்-இ-அஸாம் என்னும் பட்டப் பெயரால் அழைக்கப்பட்ட ஹாஜி மிர்ஸா சையிட் அலி என்பவர் ஆவார். பாப் பெருமானாருடைய தந்தையார் இறந்த பிறகு இந்த மாமனின் பொறுப்பில்தான் பாப் பெருமானார் ஒப்படைக்கப்பட்டார். பாப் பெருமானார் புனித யாத்திரையிலிருந்து ஹிஜாஸ் நகருக்கு திரும்பியவுடன் ஹுசைய்ன் காஹ்னினால் கைது செய்யப்பட்டதால் பாப் பெருமானாரின் தாய்மாமன் தமது இன்றியமையாக் கடமையாகப் பாப் பெருமானாரைப் பார்த்துக் கொள்வேனென எழுத்து மூலம் வாக்குறுதி அளித்தார். பாப் பெருமானாரின் சீடர்கள், கூட்டம் கூட்டமாக ஷிராஸ் நகருக்கு பாப் பெருமானாரைப் பார்க்க வருகையில் இவர் தான் பாப் பெருமானாருக்கும் அவர்களுக்கும் இடையீட்டாளராக இருந்து கொண்டு மிகுந்த பக்தியுடனும், அர்ப்பண உணர்வுடனும் பாப் பெருமானாருடன் எப்பொழுதும் இருந்து தவறாமல் பாதுகாப்பளித்து வந்தார். இவருடைய ஒரே குழந்தையான, சையிட் ஜவாட், குழந்தைப் பருவத்திலேயே இறந்துவிட்டது. இதே ஹாஜி மிர்ஸா சிஹ்ரிக் கோட்டைக்குச் சென்று பாப் பெருமானாரைச் சந்தித்தார். அப்போதிலிருந்து அவருக்குத் தலையாயப் பணி ஏதும் இல்லாதபோதும் அவர் தெஹ்ரான் நகருக்குச் சென்று, கிளர்ச்சி வெடித்து, முடிவில் அவரது உயிர்த்தியாகம் நிகழும் வரை அந்நகரிலேயே தங்கியிருந்தார்.

"அவரை வேகமாக நெருங்கிய துன்பங்களிலிருந்து தப்பித்துக் கொள்ளுமாறு அவருடைய நண்பர்கள் அவருக்கு வேண்டுகோள் விடுத்தபோதும் அவர்களுடைய ஆலோசனைகளை அவர் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். இறுதி நேரம்வரை அவர் ஆட்பட்டிருந்த கொடுமைக்குத் தம்மை முழுமையாக எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்காமல் அர்ப்பணித்துக் கொண்டார். அவரது செல்வம் மிகுந்த வணிக நண்பர்களுள் பலர் அவருக்காகப் பிணைப் பணத்தைக் கட்டிட முன்வந்தனர். ஆனால் அவர் அதனை ஏற்க மறுத்து விட்டார். இறுதியாக அவர் அமிர்-நிஸாம் முன் கொண்டுவரப்பட்டார். மகா வஸீர், இம்மண்டலத்தின் தலைமை நீதிபதி "தீர்க்கதரிசி முகமது நபி வழியில் தோன்றிய சந்ததியினரைத் தண்டிப்பதற்கு மிகவும் வருந்துவதாகத் தெரிவித்தார். ஷிராஸ் மற்றும தெஹரான் நகரங்களின் தலைசிறந்த வணிகர்கள் உங்களை மீட்பதற்கான பணத்தைக் கட்டுவதற்கு விருப்பமும் ஆவலும் கொண்டிருக்கின்றனர். உங்கள் சார்பாக மாலிக்குட்-துஜ்ஜார் கூட தலையிட்டுள்ளார். உங்களை விடுதலை செய்து, மதிப்புடன் உங்கள் சொந்த நகரத்துக்குத் திரும்பிச் செல்வதை உறுதிசெய்வதற்கு, நீங்கள் சமயத்தை மறுக்கும் ஒரு வார்த்தை மட்டுமே உங்களிடம் இருந்து வந்தால் போதுமானது. தாங்கள் இணங்கினால் தங்களுடைய வாழ்நாளில் மீதமுள்ள நாட்களை மதிப்போடும், மரியாதையோடும் தங்களது மன்னரின் ஆட்சித் தலைமை என்னும் குடையின் நிழலில் கழிக்கலாம் என வாக்குறுதி அளிக்கிறேன்" என்றார். அதற்கு ஷாஜி மிர்ஸா சைய்யிட் அலி தைரியமாக, "மேன்மைமிக்கவரே, என்னிடம் கேட்டதைப் போன்றதொரு வேண்டுகோளை எனக்கு முன்னால் உள்ள மற்றவர்கள் நிராகரித்து உயிர்த்தியாகம் என்னும் கோப்பையை மகிழ்ச்சியுடன் அருந்தியிருக்கும் பொழுது நானும் கட்டாயம் இவ்வேண்டுகோளை நிராகரிக்கும் விருப்பத்தில் சற்றும் குறைந்தவனல்ல என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். இந்த சமயத்தில் கோவில் கொண்டிருக்கும் உண்மைகளை நான் துறப்பது, இதற்கு முன்னர் வந்துள்ள திருவெளிப்பாடுகளைத் துறப்பதற்குச் சமமாகும். சைய்யிட்-இ-பாப் பெருமானாரின் சமயத்தை நான் ஏற்க மறுப்பது, என்னுடைய முன்னோர்கள் ஏற்றுக்கொண்ட சமயங்களின் தெய்வீகத் தூதுவர்களான முகமது நபி, இயேசு, மோசஸ் மற்றும் அதற்கு முன்பு வந்துள்ள எல்லாத் தீர்க்கதரிசிகள் வெளியிட்டவைகளை ஏற்க மறுப்பது போலாகும். அத்தூதுவர்கள் வெளிப்படுத்திய அத்தனையும் நான் என் அன்பிற்குரிய உறவினராகிய இவரிடமிருப்பதை அவருடைய சிறிய வயதிலிருந்து இந்த முப்பதாவது வயதுவரை தரிசிக்கும் பேறு பெற்றவன் என்பது

கடவுளுக்குத் தெரியும். அவரைப் பற்றிய அனைத்தும் அவருடைய புகழ் வாய்ந்த முன்னோரையும் அவருடைய சமயத்தின் பல இமாம்களின் வாழ்க்கை வரலாற்றையும் எனக்கு நினைவுபடுத்துகிறது. நான் வேண்டுவதெல்லாம் என் அன்புக்குரிய உறவினரின் சமயத்திற்காகத் தங்கள் உயிரைத் தியாகம் செய்ய விரும்பியவர்களுள் முதலாமவராக இருந்திட என்னை நீர் அனுமதிக்க வேண்டுமென்பதே” எனத் தலைமை அமைச்சரிடம் கூறினார்.”

“இத்தகையதொரு பதிலைக்கேட்ட தலைமை அமைச்சர் அமீர் அதிர்ச்சியடைந்தார். ஆவேசம் வந்தவராக வார்த்தை எதுவும் கூறாமல், வெளியே கூட்டிச்சென்று சிரச்சேதம் செய்திடுமாறு அவர் சைகை செய்தார். பலிகொடுப்பதற்காக அவரைக் கொண்டு செல்லும்பொழுது ஹஃபீஸின் பின்வரும் வார்த்தைகளை அவர் பலமுறை கூறினார். ‘என் கடவுளே நான் கேட்டிருந்த அனைத்தையும் அபரிமிதமாக வழங்கியதற்காக நான் மிகுந்த நன்றி கூறுகிறேன். அவரைச் சுற்றி நெருக்கமாக இருந்த மக்கள் கூட்டத்தினரிடம், “மக்களே! நான் கூறுவதைக் கேளுங்கள், என உரக்கமாகக் கூறினார். இறைவனது சமயமெனும் பாதையில் முழுவிருப்பத்துடன் என்னையே நான் அர்ப்பணித்துள்ளேன்: முழு ஃபார்ஸ் மாகாணமும் பாரசீக நாட்டின் எல்லைகளைத் தாண்டியுள்ள இராக் ஆகியவை எனது தூய நடத்தைக்கும் உண்மையான பக்திக்கும் எனது புனித பரம்பரைக்கும் தடையின்றி சாட்சியம் கூறும். வாக்களிக்கப்பட்ட கா’யிமை வெளிப்படுத்துமாறு ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நீங்கள் அடிக்கடி பிரார்த்தனைகள் செய்து வந்துள்ளீர்கள். அந்தத் தீர்க்கதரிசியின் பெயரைக் கேட்டதும். எத்தனை முறை உங்கள் இதயத்தின் அடித்தளத்திலிருந்து, இறைவா! அவரின் வருகையை துரிதப்படுத்துவீராக, அவருடைய தோற்றத்திற்குத் தடைகளாக இருக்கும் ஒவ்வொன்றையும் அகற்றிடுவீராகவென உரக்கக் கூறியுள்ளீர்கள். ஆனால், இப்பொழுதோ அவர் தோன்றிட்டப் பிறகு அஸர்பைஜானில் இருக்கும் ஒரு தூரமான இடத்திற்கு, அவரை நாடுகடத்தி தனிமையில் உழலும்படியாகச் செய்துவிட்டதுடன் அவரது சீடர்களைப் பூண்டோடு அழித்திட நீங்கள் எழுந்துள்ளீர்கள். கடவுள் உங்களைச் சபித்திடுமாறு நான் வேண்டுவேனாகில், பழிதீர்க்கும் அவரது தண்டனை உங்களைக் கடுமையாகத் தாக்கிடும். ஆனால், என் பிரார்த்தனை அப்படிப்பட்டதல்ல. என்னுடைய கடைசி மூச்சு வரை, நான் வேண்டுவது எல்லாம் இறைவன் உங்கள் பாவங்களை மன்னித்து கவனமின்மையெனும் துயிலிலிருந்து விழிப்புறச் செய்ய வேண்டுமென்பதேயாகும்.”

“இந்த வார்த்தைகள் அவரது கொலையாளியை வெகு ஆழமாகக் கலக்கமடையச் செய்துவிட்டது. அவர் தனது கைகளில் தயாராக வைத்திருந்த வாள் சரியாக தீட்டப்படவில்லை என பொய் சொல்லிவிட்டு, மீண்டும் திரும்பி வரவே கூடாதெனும் தீர்மானத்துடன் அவசரமாக வெளியேறினார். அவர் அழுது கொண்டே இன்னொருவரிடம், “நான் இந்தப் பணிக்கு நியமிக்கப்படும் பொழுது, கொலைக் குற்றம் புரிந்தவர்களையும் வழிப்பறி கொள்ளைகளில் ஈடுபடுவோரையும் என்னிடம் ஒப்படைத்தனர். ஆனால் இப்பொழுது இமாம் மூஸேய்-இ-காஸிமுக்கு சற்றும் குறையாப் புனிதத்தன்மையுள்ள ஒருவரைக் கொல்லக் கட்டளையிட்டுள்ளனர்,” என்றார். அதன்பிறகு சிறிது காலத்தில் அவர் குராஸான் நகருக்குச் சென்று சுமை தூக்குபவராகத் தனது வாழ்வாதாரத்தைச் சம்பாதித்தார். அந்த மாகாணத்தில் இருந்த நம்பிக்கையாளர்களிடம் இந்தச் சோகக்கதையை நினைவு கூர்ந்து கொடிய செயல் புரிய வற்புறுத்தப்பட்டதை நினைத்து வருந்தினார். ஒவ்வொரு முறையும் அவர் அச்சம்பவத்தை நினைவுகூர்ந்தப் போதெல்லாம், ஹாஜி மிர்ஸா சைய்யித் அலியின் பெயர் அவருக்குக் கூறப்படும் போதெல்லாம் அவரது கண்களிலிருந்து கண்ணீர் கட்டுப்பாடின்றி வழிந்திடும். அந்தத் தூய மனிதன் அவரது இதயத்தில் ஏற்படுத்தியிருந்த அன்பிற்கு இந்தக் கண்ணீர்த் துளிகளே சாட்சி.”

“2. மிர்ஸா குர்பான்-அலி சமூகத்தில் மிகுந்த மதிப்புடன் நிமத்துல்லாஹி என்னும் பெயரால் அழைக்கப்பட்டார். இவர் மஸிந்தரான் மாகாணத்திலுள்ள பார்ஃபுருஷ் என்ற ஊரைச் சேர்ந்தவர். அவர் தூய்மையான பக்தியுடைய, இயல்பான பெருந்தன்மை அருளப்பட்ட ஒரு

மனிதராவார். மஸிந்தரான், குராஸான் மற்றும் டெஹ்ரான் நகரங்களிலுள்ள முக்கியஸ்தர்கள் இவரை நற்குணங்களின் இருப்பிடமென வெகுவாகப் போற்றும் அளவிற்கு இவரது வாழ்க்கை புனிதமானதாக இருந்தது. அவரை நற்பண்புகளின் உருவகம் எனக் கருதி அவருக்குத் தங்கள் விசுவாசத்தை உறுதிபடுத்தினர். கார்பிலா நகருக்கு இவர் புனித யாத்திரைக்காகச் சென்றபோது பற்றுதல்மிக்க ரசிகர்களின் பரந்த கூட்டம் அவருக்கு வாழ்த்துத் தெரிவிப்பதற்காக வழிநெடுகிலும் பெருமளவில் திரண்டிருந்தனர். ஹமாடான், கிர்மான்ஷா ஆகிய ஊர்களைச் சேர்ந்த பெரும்பான்மையான மக்கள் அவரது ஆளுமையினால் ஈர்க்கப்பட்டு அவரது சீடர்களோடு தாங்களும் சேர்ந்து கொண்டனர். அவர் எங்கெல்லாம் சென்றாரோ அங்கெல்லாம் மக்களின் நல் ஆதரவுடனான வாழ்த்துக்களைப் பெற்றார். ஆனால் இத்தகைய பொது உற்சாகத்தின் வெளிப்பாடுகள் அவருக்கு மிகவும் வெறுக்கத் தக்கதாக இருந்தது. கூட்டத்தையும், தலைமைத்துவம் சார்ந்த ஆடம்பரம், மற்றும் சூழலைத் தவிர்த்தார். கார்பிலா நகருக்குச் செல்லும் வழியில், மண்டாலிஜ் என்னும் ஊரின் வழி சென்றபோது அங்கிருந்த மிகுந்த செல்வாக்குள்ள ஒரு ஷேய்க் அவர்பால் மிகவும் ஈர்க்கப்பட்டு, அவர் அதுவரை போற்றிவந்த அனைத்தையும் துறந்துவிட்டு, தமது நண்பர்கள் மற்றும் சீடர்களையும் கைவிட்டு, மிர்ஸா குர்பான்-அலியை யா'க்குபிய்யா வரை பின்தொடர்ந்தார். ஆனால், மிர்ஸா குர்பான்-அலி அவரை மாண்டலிஜ்க்கு திரும்பிச் செல்லும்படி ஊக்குவித்து அவர் கைவிட்டு வந்த பணிகளைத் தொடருமாறு கேட்டுக்கொண்டார்.

"புனித யாத்திரையை முடித்துக்கொண்டு திரும்பியபோது மிர்ஸா குர்பான் அலி, முல்லா ஹுஸேய்னைச் சந்தித்து அவர் மூலம் புதிய சமயத்தைப் பற்றிய உண்மையை அறிந்து அதை ஏற்றுக்கொண்டார். நலக்குறைவின் காரணமாக அவர் மாஸிந்தரான் வரை சென்று தபார்ஸி கோட்டையைத் தற்காத்து வந்தவர்களுடன் சேர்ந்துகொள்ள முடியவில்லை. இல்லையெனில் அதன் பாதுகாப்பாளர்களுடன் சேர்ந்துகொள்வதில் அவரே முதலாமவராக இருந்திருப்பார். பாப் பெருமானாரின் சீடர்களுள் முல்லா ஹுசேய்னுக்கு அடுத்துபடியாக அவர் வாஹிட்டின் மீது மிகுந்த பற்றுக் கொண்டிருந்தார். எனது தெஹரான் விஜயத்தின்போது, வாஹிட் சமயத்திற்காக சேவை செய்திடத் தமது வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டதாகவும் எடுத்துக்காட்டான அர்ப்பணிப்புடன் சமயத்தின் நலன்களை பரவலாக மேம்படுத்திட எழுந்துள்ளார் எனவும் கேள்விப்பட்டேன். மிர்ஸா-குர்பான்-அலி தெஹரானில் இருக்கும்பொழுது, தமக்கு இடையூறாக வந்த நோயைப் பற்றி அடிக்கடி புலம்புவதைக் கேட்டேன். "எவ்வளவு அதிகமாக நான் வருந்துகிறேன்" என்று அடிக்கடி குறிப்பிட்டார். முல்லா ஹுசைனும் அவரது தோழர்களும் அருந்தி மகிழ்ந்த கோப்பையில் என்னால் பங்குபெற முடியாமைக்கு, நான் எத்துணை வருந்துகிறேன் என அவர் பலமுறை கூறக் கேட்டிருக்கிறேன். நான் வாஹிட்டுடன் சேர்ந்து அவரது பதாகையின் கீழ் இணைந்து கொண்டு என் முன்னைய தோல்விக்குப் பரிகாரம் தேட விரும்புகிறேன்" என்றார். அவர் தெஹரானை விட்டுப் புறப்பட ஆயத்தம் செய்து கொண்டிருந்தபோது திடீரென கைது செய்யப்பட்டார். அவரது அடக்கமான உடை அவரது பற்றின்மையின் அளவிற்கு சாட்சியம் கூறியது. தன்னைக் கைது செய்த காவலர்களுடன் அவர் தெருக்களில் நடந்து வருகையில் அராபியர்களைப் போல வெண்மை நிற உடையணிந்து தளர்வான மற்றும் முரடான மேலங்கி அணிந்து ஈராக் நாட்டு மக்களைப் போல் தலைப்பாகை அணிந்து, பற்றின்மையின் உருவகமாகவே அவர் விளங்கினார். அவர் தமது சமயத்தின் அனைத்து அனுசரிப்புகளையும் துல்லியமாகக் கடைப்பிடித்தார், அத்துடன் முன்மாதிரியான பக்தியுடன் தமது வழிபாடுகளை மேற்கொண்டார். 'பாப் பெருமானாரே தமது சமயத்தின் அனுசரனைகளை அவற்றின் நுண்ணிய விவரங்களுக்கு இணங்க கடைப்பிடிக்கின்றார்,' என அவர் அடிக்கடி குறிப்பிடுவார். 'எனது பங்கிற்கு என் தலைவர் செய்தவைகளை நான் நிராகரிக்கலாமா?'

"மிர்ஸா குர்பான்-அலி கைது செய்யப்பட்டு அமிர்-நிஸாமின் முன்னால் கொண்டு வரப்பட்டபோது தெஹரான் நகர், முன்னெப்போதும் சந்தித்திரா அமைதியின்மை

ஆர்ப்பரித்தது. பெருந்திரளான மக்கள் இவருக்கு என்ன நிகழுமோ என்று தெரிந்து கொள்ள அரசாங்கத்தின் தலைமையகத்தின் முன்பாகக் குழுமியிருந்தனர். அவரைப் பார்த்ததும் அமிர், “நேற்று இரவிலிருந்து மாநிலத்தின் எல்லா அதிகாரிகளும் உங்களுக்காகத் தீவிரமாக இடையீடு செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். நீங்கள் வகிக்கும் பதவி, உங்களது வார்த்தைகளின் ஈர்க்கும் தன்மை பற்றி எனக்குத் தெரிந்தவரை, நீர் சைய்யிட்-இ-பாபிற்கு சற்றும் குறைந்தவரல்ல. உங்களைவிட கட்டாயமாக அறிவில் குறைந்தவருக்கு உங்களது விசுவாசத்தைக் காட்டுவதைவிட நீங்களே தலைமைப் பதவிக்குக் கோரிக்கை விடுத்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்” எனக் கூறினார். அதற்கு மிர்ஸா குர்பான்-அலி, “நான் பெற்றுள்ள அறிவு நான் தலைவராகவும் இறைத்தூதராகவும் ஏற்றுக் கொண்டுள்ள அவரின் முன் விசுவாசத்துடன் தலை வணங்குவதற்கே வழிகாட்டுகிறது. “நான் மனிதனாக முதிர்ச்சி அடைந்ததிலிருந்து நீதியையும், நடுநிலைமையையும் எனது வாழ்வின் அதிகாரம் செலுத்தும் நோக்கங்களாகக் கருதுகிறேன். அவரை நான் நடுநிலைமையோடு கணித்துள்ளேன். உண்மையில் சொல்லப் போனால், இளைஞர்களாலும், விரோதிகளாலும் ஒருமனதாகப் போற்றப்படும் இந்த இளைஞரின் தலைசிறந்த சக்தி பொய்யென்றால் நினைவுக்கெட்டாத காலம் முதல் இக்காலம் வரை உள்ள ஒவ்வொரு இறைவனின் தீர்க்கதரிசிகளும் பொய்மையின் உருவகங்களே என கண்டனம் செய்யப்பட வேண்டும்! ஆயிரத்திற்கும் மேற்பட்ட அபிமானிகளின் சந்தேகத்திற்கு இடமில்லாப் பக்தியை நான் உறுதியாக நம்புகிறேன். இருப்பினும் அவர்களுள் மிகச்சிறிய எண்ணிக்கையினரின் இதயத்தையும் மாற்றிட நான் சக்தியற்றவனாக இருக்கின்றேன். ஆனால், இவ்விளைஞரோ மனிதர்களில் மிகத் தாழ்ந்தவர்களின் ஆன்மாக்களைக்கூட தமது அன்பெனும் அமுதத்தினால் முற்றிலும் மாற்ற வல்லமை பெற்றிருக்கின்றாரென நிரூபித்துள்ளார். என்னைப் போன்ற ஆயிரக்கணக்கானவர்களை யாருடைய உதவியுமின்றி தன்னந்தனியாக அவருடைய தரிசனத்தைப் பெறாமலேயே, தங்களது சொந்த ஆசைகளைத் துறந்துவிட்டு அவரது சித்தத்திற்கு ஈர்க்கும் அத்தகைய செல்வாக்குப் படைத்தவர். அவரது திருச்சபையில் நினைவு கூர்ந்திடப்படுமெனும் நம்பிக்கையில் தங்கள் பக்தியை வெளிக்காட்ட இன்னொரு சான்றாக, தாங்கள் இதுவரை செய்த தியாகங்களின் போதாமை குறித்து முழுமையாக உணர்ந்து அவருக்காகத் தங்களது வாழ்க்கையையே அர்ப்பணிப்பதற்கு மிகுந்த ஆவலோடு காத்திருக்கின்றனர்” என்றார்.

“உங்கள் வார்த்தைகள் இறைவனுடையதோ இல்லையோ, இவ்வளவு உயர்ந்த நிலையில் இருக்கும் ஒருவரைக் கொல்லச் சொல்வதில் எனக்கு விருப்பம் இல்லை” என அமிர்-நிஸாம் கூறினார். “ஏன் இன்னும் தயங்குகிறீர்கள்? எனப் பொறுமையிழந்த மிர்ஸா குர்பான்-அலி வெடித்தார். எல்லா நாமங்களும் சொர்க்கத்திலிருந்து வருகின்றன என உங்களுக்குத் தெரியாதா? எவரது பாதையில் எனது உயிரைத் தியாகம் செய்கிறேனோ, அலி என்னும் நாமம் கொண்ட அவர் நினைவுக்கு எட்டாக் காலம் முதல் குர்பான்-அலியெனும் எனது பெயரை அவரது தேர்ந்தெடுக்கப்பட்ட உயிர்த்தியாகிகளின் சுருள் ஓலையில் பொறித்துள்ளார். அவருடைய வழியில் என் மெய்நம்பிக்கையை, என் உயிர் இரத்தத்தால் முத்திரையிடும் நாளான இஃது, உண்மையில் நான் குர்பான் விழாவைக் கொண்டாடும் நாளாகும். ஆகவே தயங்க வேண்டாம். உங்களது இந்தச் செயலுக்காக நான் எப்பொழுதுமே உங்களைக் குற்றம் சொல்ல மாட்டேன் என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள். எவ்வளவு சீக்கிரம் என் தலையைத் துண்டிக்கிறீர்களோ அவ்வளவு அதிகமாக நான் உங்களுக்கு நன்றி நவின்றிடுவேன்” என்றார். இந்த இடத்தை விட்டு இவரைக் கொண்டு செல்லுங்கள்” என அமீர் கூச்சலிட்டார். “இன்னும் ஒரு கணம் இந்தத் துறவி இங்கு இருந்தால் அவர் என்னையே வசியப்படுத்திடுவார்” என்றார். அதற்கு மிர்ஸா குர்பான்-அலி, “நீர் தூய்மையான உள்ளம் கொண்டோரை மட்டுமே கவர்ந்திடக் கூடிய அந்த மந்திரத்திற்கு எதிரான ஒரு நிரூபணம் ஆவீர்’ என குர்பான்-அலி பதிலளித்தார். நீரும் உம்மைப் போன்றோரும் அந்தத் தெய்வீக அமுதத்தின் மனதைக் கவரும் சக்தியைக்

கண்டுணர முடியாது. அது, கண் சிமிட்டும் நேரத்திற்குள் மனிதர்களின் ஆன்மாக்களை மாற்றிடக் கூடியதாகும்.’

“அப்பதிலினால் எரிச்சலுற்ற அமீர் நிஸாம் தமது இருக்கையிலிருந்து எழுந்தார். ஆத்திரத்தால் உடல் பதறிடக் கூச்சலிட்டார்: ‘இப்பதிலால் மிகவும் கோபமடைந்த அமிர்-நிஸாம் தனது இருக்கையிலிருந்து எழுந்து தனது முழு உடலும் கோபத்தால் துடிக்க, வாளின் முனையைத் தவிர வேறெதுவும் இந்த ஏமாற்றுப் போர்வழிகளின் வாயை மூடிட முடியாது!’ என்றார். ‘இந்த வெறுக்கத்தக்க மதப்பிரிவினரை என் முன் இனி கொண்டுவர வேண்டியதில்லை,’ என அங்குப் பணியிலிருந்த கொலையாளிகளிடம் கூறினார். அவர்களின் விடாப்பிடியான பிடிவாதத்தை வென்றிடும் சக்தி வார்த்தைகளுக்கு இல்லை. யாரையெல்லாம் அவர்களின் புதிய சமயத்தை மறுப்பதற்குத் தூண்டிட முடியுமோ அவர்களை விடுதலை செய்து விடுங்கள்; மற்றவர்களைப் பொறுத்தவரை அவர்களின் தலைகளை வெட்டிவிடுங்கள்” என்றார்.

“மிர்ஸா குர்பான்-அலி தமது மரணத்தின் கொலைக்களத்தை அணுகிய போது, தமது அன்புக்குரியவருடன் மீண்டும் ஒன்றிணையப் போகும் தருணத்தின் அணுக்கத்தினால் போதையுற்றவராகப் பெருங்களிப்புமிக்க சொற்களை உச்சரித்தார். “சீக்கிரம் என் சிரசைத் துண்டியுங்கள்” எனப் பேரின்பத்துடன் கூக்குரலிட்டார். இந்த மரணத்தின் மூலம் எனக்கு என்றும் நிலையான வாழ்க்கையை நீங்கள் எனக்கு வழங்கிடுவீர். பலவீனமாக எனது மூச்சுக்காற்றை நீங்கள் இப்பொழுது அணைத்துவிட்டாலும் பல்லாயிரக்கணக்கான வாழ்வுகளை எனது அன்புக்குரியவர் எனக்கு வெகுமதியாக அளித்திடுவார்; எந்த இதயத்தினாலும் அந்த வாழ்வுகளைக் கணித்திட முடியாது. கூட்டமாக நின்ற பொதுமக்களின் பக்கம் தனது பார்வையைத் திருப்பிய அவர், “இறைத்தூதரைப் பின்பற்றுபவோரெனக் கூறிக்கொள்பவர்களே எனது வார்த்தைகளைச் செவிமடுப்பீராக. முற்காலத்தில் ஹிஜாஸ் நகரிலிருந்து தோன்றி பகல் நட்சத்திரமும் தெய்வீக வழிகாட்டுதலும் வழங்கிய முகம்மது நபி, இன்று அலி முகம்மது என்ற பெயருடன் ஷிராஸ் நகரெனும் பகலூற்றிலிருந்து தோன்றி, அதே பிரகாசத்தைப் பொழிந்தும் அதே அரவணைப்பையும் அளிக்கின்றார். ரோஜா எந்தத் தோட்டத்தில் பூத்தாலும், எந்த நேரத்தில் பூத்தாலும் அது ரோஜா தான். “அவருடைய அழைப்பைச் செவிமடுக்காத எல்லாப் பக்கங்களிலும் உள்ள மக்களைப் பார்த்துச் சப்தமாக அவர், இந்தத் தலைமுறையினரின் முறைகேடுதான் எத்தகையது. அந்த அழிவற்ற ரோஜா பொழிந்துள்ள நறுமணத்தின்பால் எத்துணைக் கவனமின்மையுடன் இருக்கின்றனர்! மிகுந்த மகிழ்ச்சியால் எனதான்மா ததும்புகிறது. ஆனால், அந்தோ! அதன் அழகை பகிர்ந்து கொள்ள எந்த இதயத்தையும் என்னால் காணமுடியவில்லை, அதன் மகிமையைப் புரிந்து கொள்ள யாரும் இல்லை.

தலை துண்டிக்கப்பட்டு தமது காலடியில் இரத்தம் கசியக் கிடந்த ஹாஜி மிர்ஸா சைய்யிட் அலியின் உடலைக் கண்டவுடன், அவரது அளவுகடந்த உற்சாகம் அதன் அதி உச்சத்தினை அடைந்தது. 'வாழ்க,' என்று அவர் கூச்சலிட்டார், அவர் அதன் மீது தன்னை வீழ்த்திக் கொண்டார், 'பரஸ்பர மகிழ்ச்சியின் நாள் வாழ்க, நமது அன்பருடன் நாம் மீண்டும் இணையும் நாள்! "அணுகவும்," அவர் கொலையாளியை நோக்கி சப்தமிட்டார், அவர் அவ்வுடலைத் தமது கைகளில் வைத்தபடி, "உங்கள் கொடுவாளினால் வெட்டுங்கள், ஏனெனில் என் விசுவாசமிக்க தோழர் என் அரவணைப்பிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள விரும்பவில்லை. அவருடன் பேரன்பரின் சபைக்கு விரைந்திட என்னை அழைக்கிறார். கொலையாளியின் வெட்டு மிர்ஸா குர்பான்-அலியின் பின் கழுத்தில் ஓங்கி விழுந்தது. சில நொடிகளில் இந்த மகத்தான மனிதனின் உயிர் பிரிந்து விட்டது. அக்கொடிய வெட்டு, அங்கிருந்தோரின் உள்ளங்களில் கோபமும் அனுதாபமும் கலந்த உணர்வுகளைக் கிளறிவிட்டது. துக்கம் மற்றும் புலம்பலின் கூக்குரல்கள் கூட்டத்தினர் இதயங்களிலிருந்து எழுந்தன, அத்துடன் ஒவ்வோர் ஆண்டும் 'அஷுரா தினத்தை மக்கள் வரவேற்கும் துயரக் கூச்சல்களை நினைவூட்டும் ஒரு துயரத்தைத் தூண்டின.

"3. பின்னர் ஃபராஹானைப் பூர்வீகமாகக் கொண்ட ஹாஜி முல்லா இஸ்மாயில்-இ-குமி-யின் முறை வந்தது. அவரது இளமைப் பருவத்தில், அவர் விடாமுயற்சியுடன் தேடிக் கொண்டிருந்த உண்மையைக் கண்டறிவதற்காகக் கர்பிலாவுக்குச் சென்றார். நஜாஃப் மற்றும் கர்பிலாவின் அனைத்து முன்னணி உலமாக்களுடன் அவர் தொடர்பு கொண்டார், சையிட் காஸிம்-இன் காலடியில் அமர்ந்திருந்தார், அத்துடன் அவரிடமிருந்து அறிவையும் புரிதலையும் பெற்றார். சில ஆண்டுகளுக்குப் பிறகு, ஷிராஸில் இருந்தபோது, பாப் பெருமானாரின் திருவெளிப்பாட்டை ஒப்புக் கொள்ள முடிந்தது. அவர் தமது மெய்நம்பிக்கையின் உறுதியினாலும் பக்தியின் தீவிரத்தாலும் தம்மை வேறுபடுத்திக் கொண்டார். பாப் பெருமானாரின் உத்தரவு, அவரைப் பின்பற்றுவோரைக் குராசான்பால் விரைவடைய வேண்டி வந்த செய்திக்கு, அவர் ஆர்வத்துடன் பதில்வினையாற்றினார். படாஷ் மாநாட்டிற்குச் சென்று கொண்டிருந்த தோழர்களுடன் சேர்ந்து, அங்கு சிருல்-வுஜூட் என்னும் பட்டப்பெயர் பெற்றார். அவர்களோடு இருந்தபோது, சமயத்தைப் பற்றிய அவரது புரிதல் ஆழமாகியதுடன் அதற்கு இணைவாக அதன் மேம்படுத்திக் கொள்வதற்கான அவரது ஆர்வமும் அதிகரித்தது. அவர் பற்றின்மையின் உருவகமாகவே வளர்ந்தார், மற்றும் அவரது சமயம் அவரில் தூண்டிய ஆர்வ எழுச்சியைத் தகுந்த முறையில் வெளிப்படுத்துவதற்கு மேன்மேலும் பொறுமையற்றிருப்பதை உணர்ந்தார். குரானின் வசனங்கள் மற்றும் இஸ்லாத்தின் மரபுகளின் அர்த்தத்தை விளக்குவதில், அவர் ஒரு சிலரே அவருடன் போட்டியிடக்கூடிய நுண்ணறிவை வெளிப்படுத்தினார். மேலும் சொல்லாற்றலுடன் அந்த உண்மைகளை அவர் வெளிப்படுத்திய விதம் அவரது சக சீடர்களின் பாராட்டைப் பெற்றது. பாப் பெருமானார் சீடர்களின் அணிதிரளும் மையமாக தபார்சி கோட்டை மாறிய நாள்களில், அவர் தனது உதவியை வழங்கவும், அதன் பாதுகாப்பிற்காகத் தனது பங்கை ஆற்றவும் முடியாமல் நோயுற்று சோக வயப்பட்டு படுக்கையில் தவித்தார். அவர் குணமடைந்த உடனேயே, அந்த மறக்கமுடியா முற்றுகை தனது சக சீடர்களின் படுகொலையுடன் முடிவடைந்ததைக் கண்டறிந்து, சமயத்திற்கு ஏற்பட்ட இழப்பை தனது சுய தியாக உழைப்பால் ஈடுசெய்ய கூடுதல் உறுதியுடன் எழுந்தார். அந்த மனவுறுதியே அவரை இறுதியில் தியாக பீடத்திற்குக் கொண்டு சென்று அதன் கிரீடத்தையும் அவருக்கு வென்று தந்தது.

"தண்டனைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அவர் மரண தண்டனைக்கான தருணத்திற்காகக் காத்திருந்தபோது, அவர் தமக்கு முன்னிருந்த இரட்டை தியாகிகளை நோக்கித் தமது பார்வையைத் திருப்பினார். அவர்கள் இருவரும் இன்னும் ஒருவர் மற்றவரின் அரவணைப்பிலேயே இருந்தனர். 'நன்று, அன்புத் தோழர்களே!' என தமது பார்வையை அவர்களின் மகிமை பொருந்திய சிரசுகளின் மீது பதித்தவாறு அவர் உரக்கக் கூறினார். 'நீங்கள் தெஹரானைச் சுவர்க்கமாக மாற்றிவிட்டீர்கள்! நான் உங்களை முந்தியிருப்பேனாயின்!' தமது சட்டைப் பையிலிருந்து ஒரு நாணயத்தை எடுத்து, அதைக் கொலையாளியிடம் கொடுத்து, அவரது வாய்க்கு இனிப்பூட்டக் கூடிய ஏதாவது ஒன்றைத் தமக்கு வாங்கித் தரும்படி கெஞ்சினார். அதில் கொஞ்சம் எடுத்துக் கொண்டு மீதியை அக்கொலையாளியிடமே கொடுத்து, 'உன் செயலை மன்னித்துவிட்டேன்,' உங்கள் தண்டனையை நிறைவேற்றவும்,' எனக் கூறினார். இந்தப் புனிதப்பட்ட நாளைக் காண முப்பது வருடங்களாக நான் ஏங்கி வந்துள்ளேன், இந்த ஆசை நிறைவேறாமல் என்னுடன் அதை என் கல்லறைக்கு எடுத்துச் செல்வேனோ என பயந்தேன். 'சுவர்க்கத்தின் பக்கம் திரும்பி என் கடவுளே, என்னை ஏற்றுக்கொள்வீர். நான் தகுதியற்றவனாக இருப்பினும், தியாகமெனும் பலிபீடத்தில் தங்கள் உயிரைக் கொடுத்த அந்த அமரர்களின் ஓலைச் சுருளில் என் பெயரையும் பொறித்திட விரும்புகிறேன்.' அவர் இன்னும் தமது பிரார்த்தனையை ஓதிக் கொண்டிருந்தார். கொலையாளி, அவரது வேண்டுகோளின் பேரில், திடீரென அவரது பிரார்த்தனையைத் துண்டித்தார்.

“4. அவர் இன்னும் இறந்திடா நிலைலயில், முஜ்தாஹிட்-ஆன ஸையித் ஹுசைன்-இ-துர்ஷிஸி, அடுத்து அவரது பங்கிற்குக் கொலைப்பீடத்திற்கு அழைத்து வரப்பட்டார். அவர் குராசானில் உள்ள ஒரு கிராமமான துர்ஷிஸைப் பூர்வீகமாகக் கொண்டவர், அத்துடன் அவரது பக்தி மற்றும்

நேர்மையான நடத்தைக்காக அவர் மிகவும் மதிக்கப்பட்டிருந்தார். அவர் நஜாஃபில் பல ஆண்டுகள் படித்தார். மேலும் அவரது சக முஜ்தாஹிட்களால் குராசானுக்குச் செல்லவும், அவர் கற்பித்த கொள்கைகளை அங்குப் பிரச்சாரம் செய்யவும் நியமிக்கப்பட்டார். அவர் காஸிமேய்ன் வந்தடைந்தபோது, கிர்மானின் முதன்மை வணிகர்களுள் ஒருவராகத் திகழ்ந்த அவர், குராசானில் தமது வணிகக் கிளையைத் தொடங்கிய அவருக்கு ஏற்கனவே அறிமுகமான ஹாஜி முஹம்மத்-தாக்கிய்-இ-கிர்மானியைச் சந்தித்தார். அவர் பாரசீகத்திற்குச் சென்று கொண்டிருப்பதால் வழியில், அவரோடு உடன் செல்ல முடிவு செய்தார். இந்த ஹஜி முஹம்மத்-தாக்கி, பாப் பெருமானாரின் தாய்வழி மாமா ஹஜி மிர்ஸா சையிட் அலியின் நெருங்கிய நண்பராக இருந்தார். அவர் மூலம் 1264-ஆம் ஆண்டு ஷிராஸிலிருந்து இருந்து கர்பிலாவுக்குச் செல்லத் தயாராகிக் கொண்டிருந்த போது அவர் மூலம் சமயத்தை ஏற்றுக்கொண்டார். பாப் பெருமானாரைச் சந்திப்பதற்கான ஹாஜி மிர்சா சையிட் அலியின் ஷிரீக் செல்வதற்கான பயணத்தைப் பற்றித் தெரிவிக்கப்பட்டபோது, தாமும் அவருடன் செல்வதற்கான தமது தீவிர ஆசையை வெளிப்படுத்தினார். ஹாஜி மிர்ஸா சையிட் அலி தமது முந்தைய நோக்கத்தை மேற்கொண்டு, கர்பிலாவுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தினார். அங்கு அவருடைய கடிதத்திற்காகக் காத்திருக்கும்படியும், அக்கடிதம் அவர் தம்மோடு உடன் வருவது நல்லதா அல்லவா என்பதை அவருக்குத் தெரிவிக்கும் எனக் கூறினார். ஷிஹ்ரீக்கில் இருந்து, ஹாஜி மிர்சா சையிட் அலி, தலைநகரில் சிறிது காலம் தங்கிய பிறகு, தமது தமக்கை மகனுக்கான விஜயத்தை மீண்டும் மேற்கொள்ள முடியுமெனும் நம்பிக்கையில், தெஹரானுக்குப் புறப்படும்படி கட்டளையிடப்பட்டார். ஷிஹ்ரீக்கில் இருந்தபோது, அவர் ஷிராஸுக்குத் திரும்புவதற்கு எதிரான தமது தயக்கத்தை வெளிப்படுத்தினார். ஏனெனில், அதன் குடிமக்களின் அதிகரிக்கும் ஆணவத்தை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவர் தெஹரானுக்கு வந்ததும், ஹாஜி முஹம்மத்-தாக்கியிடம் தம்முடன் சேர்ந்துக் கொள்ளுமாறு அவரைக் கேட்டுக் கொண்டார். சையிட் ஹுஸேய்ன் அவரோடு பாக்தாத்திலிருந்து தலைநகருக்குச் சென்றார், அவர் மூலமாகச் சமயத்தையும் ஏற்றுக்கொண்டார்.

"அவரது தியாக மரணத்தைக் காண தம்மைச் சுற்றித் திரண்டிருந்த மக்களை அவர் எதிர்கொண்ட போது, சையிட் ஹுஸேய்ன் தமது குரலை உயர்த்திக் கூறினார்: 'இஸ்லாத்தின் விசுவாசிகளே, கேளுங்கள்! எனது பெயர் ஹுஸேய்ன், நான் ஸையிடுஷ்-ஷுஹதாவின் வழித்தோன்றல் ஆவேன், அவரும் அந்தப் பெயரைக் கொண்டிருந்தார். புனித நகரங்களான நஜாஃப் மற்றும் கர்பிலாவின் முஜ்தாஹிட்கள், அவர்கள் சமயத்தின் சட்டம் மற்றும் போதனைகளின் அங்கீகரிக்கப்பட்ட விளக்கவுரையாளர் என்னும் எனது நிலைப்பாட்டிற்கு ஒருமனதாக சாட்சியமளித்துள்ளனர். சமீப காலம்வரை நான் சையிட்-இ-பாப் என்னும் பெயரைக் கேள்விப்பட்டதே இல்லை. இஸ்லாமிய போதனைகளின் நுணுக்கங்களில் நான் பெற்ற தேர்ச்சி, சையிட்-இ-பாப் கொண்டு வந்த செய்தியின் மதிப்பை மதித்துணர எனக்கு உதவியுள்ளது. அவர் வெளிப்படுத்திய உண்மையை நான் மறுப்பேனாயின், அச்செயலின் மூலம் அதற்கு முந்திய ஒவ்வொரு வெளிப்பாட்டின் மீதான எனது விசுவாசத்தையும் நான் துறந்தவனாவேனென நான் உறுதியாக நம்புகிறேன். இந்த நகரின் உலாமாக்கள் மற்றும் முஜ்டாஹிட்களை அழைத்து ஒரு கூட்டத்தை கூட்டுமாறு உங்கள் ஒவ்வொருவரையும் நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் முன்னிலையில் இந்தச் சமயத்தின் உண்மையை நான் நிலைநாட்டிட முனைவேன். பாப் பெருமானார் முன்வைத்த உரிமைகோரல்களின் செல்லுபடியை நான் நிரூபித்துள்ளேனா அல்லவா என்பதை அவர்கள் தீர்மானிக்கட்டும். எனது வாதத்திற்கு ஆதரவாக நான் முன்வைக்கும் ஆதாரங்களில் அவர்கள் திருப்தி அடைந்தால், அப்பாவிகளின் இரத்தம் சிந்துவதை அவர்கள் தவிர்க்கட்டும். நான் தோல்வியுற்றால், எனக்கு உரிய தண்டனையை அவர்கள் வழங்கட்டும்.' அவர் சொல்லி முடிப்பதற்குள் அமீர்-நிஸாமின் சேவையில் இருந்த ஓர் அதிகாரி ஆணவத்துடன் குறுக்கிட்டு: 'தெஹரானின் அங்கீகரிக்கப்பட்ட முஜ்டாஹிட்களில் ஏழு பேர், தங்கள் சொந்தக் கையெழுத்தின் மூலம் உங்களைக் காஃபிரென பிரகடனம் செய்து, உங்கள் மரண தண்டனை உத்தரவினை கையொப்பமிட்டு சீல் வைக்கப்பட்டுள்ள உத்தரவினைக் கொண்டு வந்துள்ளேன். உங்கள் இரத்தத்திற்காக நியாயத் தீர்ப்பு நாளில் நானே கடவுளுக்குப்

பதிலளிப்பேன். மேலும் யாருடைய தீர்ப்பில் நாங்கள் நம்பிக்கை வைக்கும்படி கேட்கப்படுகிறோமோ, யாருடைய முடிவுகளுக்கு நாங்கள் அடிபணிய வேண்டிய கட்டாயத்தில் உள்ளோமோ அந்தத் தலைவர்கள் மீது பொறுப்பைச் சுமத்திடுவேன்.' இந்த வார்த்தைகளுடன், அவர் தனது குத்துவாளை வெளியே எடுத்து, சையிட் ஹுஸேய்னைப் பலமாகக் குத்தினார். அதன் விளைவாக அவர் உடனடியாக அவரது காலடியில் வீழ்ந்து மடிந்தார்.

"5. அதனைத் தொடர்ந்து உடனடியாகவே, ஹாஜி முஹம்மட்-தாக்கி-யி-கிர்மானி கொலைக்களத்திற்கு அழைத்து வரப்பட்டார். அவர் அங்குக் கண்ட காட்சியின் கொடூரம் அவருள் ஒரு கடுமையான கோபத்தைத் தூண்டியது. 'தன்னைத் துன்புறுத்தியவரின் பக்கம் திரும்பியபோது அவர் வெடித்துச் சிதறி, அடப்பாவியே, இதயமற்ற கொடுங்கோலனே என்னை அணுகிடு,' 'என்னை விரைந்து கொன்றுவிடு, ஏனெனில் என் அன்பான ஹுசேய்னுடன் சேர்ந்துகொள்ள நான் பொறுமையிழந்து இருக்கிறேன். அவருக்குப் பிறகு வாழ்வது என்பது என்னால் தாங்க முடியாத ஒரு சித்திரவதையாகும்."

"6. ஹாஜி முகம்மட்-தாக்கி, இந்த வார்த்தைகளைக் கூறியவுடன், ஸஞ்ஜானின் புகழ்பெற்ற வணிகர்களுள் ஒருவராகத் திகழ்ந்த சையிட் முர்த்தாடா, தமது தோழர்களுக்கு முன் செல்ல விரும்பி விரைந்தார். ஹாஜி முகம்மட்-தாக்கியின் உடலின் மேல் வீழ்ந்து, தான் ஒரு 'சையிட்' ஆக இருப்பதனால் தமது தியாக மரணமானது கடவுளின் பார்வையில், ஹாஜி முகமது தாக்கியின் தியாக மரணத்தைவிட மேலும் மெச்சத்தகுந்ததாக இருக்கும் எனக் கூறி வாதிட்டார்." மரண தண்டனையை நிறைவேற்றுபவர், தமது வாளை உறையிலிருந்து எடுக்கையில், சையிட் முர்த்தடா, முல்லா ஹுசேய்னின் அருகிலேயே இருந்து போராடி, தியாக மரணமெய்திய தமது சகோதரரைப் பிரார்த்தனையில் நினைவு கூர்ந்தார்; மேலும், அவரைப் பற்றிய இவரது குறிப்புகள் எப்படி இருந்தனவென்றால், அங்குக் கூடியிருந்த மக்கள், அவரது தளரா உறுதிக்கு உத்வேக மூட்டிய மெய்நம்பிக்கையினைப் பார்த்து ஆச்சரியமடைந்தனர்.

"7. சையிட் முர்த்தடாவின் கிளர்ச்சியூட்டும் வார்த்தைகள் ஏற்படுத்திய பரபரப்புக்கிடையே, முகம்மட்-ஹுசேய்ன்-இ-மராகி விரைந்து முன்னால் சென்று தமது தோழர்கள் வாளுக்கு இரையாவதற்கு முன் உடனடியாகத் தான் தியாக மரணமடைய அனுமதி வழங்குமாறு கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். அவரது கண்கள், தான் மிகவும் ஆழமாக நேசித்த ஹாஜி முல்லா இஸ்மாயில்-இ-குஃமியின் உடலைக் கண்டதும், உணர்ச்சியினால் உந்தப்பட்டு, அவர் மீது வீழ்ந்து, அவரைத் தழுவியணைத்தவாறு, ஆச்சரியத்துடன் இவ்வாறு கூறினார்: 'யாரிடம் நான் முழு நம்பிக்கை கொண்டிருந்தேனோ, யாரிடமிருந்து உண்மையான மற்றும் ஆழமான அன்பின் பல அடையாளங்களைப் பெற்றிருந்தேனோ, அத்தகைய என் அன்பு நண்பரிடமிருந்து என்னைப் பிரிக்க நான் ஒருபோதும் அனுமதியேன்!'

தங்கள் சமயத்திற்காகத் தங்கள் உயிரை அர்ப்பணிப்பதில், ஒருவர் மற்றவரை முந்திக் கொள்ளும் ஆவல், அங்கிருந்த பெருந்திரளான மக்களை ஆச்சரியப்பட வைத்தது. மேலும், இம்மூவரில் யார் தன் தோழர்களுக்கு முன் தேர்ந்தெடுக்கப்படுவாரென அறிந்து கொள்ளும் ஆவலுடன் அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தனர். மூன்று நண்பர்களும், மிகுந்த ஆர்வத்துடன், கேட்டுக் கொண்டதால் முடிவில் மூவரும் ஒரே சமயத்தில் தலைகள் துண்டிக்கப்பட்டு, மரணத்தைத் தழுவினர்.

"இப்படிப்பட்ட ஓர் உயர்ந்த நம்பிக்கை, கட்டவிழ்க்கப்பட்ட கொடுமைகளின் அத்தகைய சாட்சியங்கள் ஆகியவற்றை மனிதக் கண் அரிதாகவே கண்டுள்ளது. அவர்கள் எண்ணிக்கையில் குறைந்திருந்தாலும், அவர்களது தியாகமரணத்தின் சூழ்நிலைகளை நாம் நினைவுகூர்கையில், தன்னையே தியாகம் செய்திடத் தூண்டும் அந்த அரிய உணர்வை தூண்டிடக் கூடிய, அந்த உந்து சக்தியின் பிரமிப்பூட்டும் தன்மையை நாம் ஒப்புக் கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகிறோம்." இவ்வஞ்சிக்கப்பட்டோர் வகித்த உயர்ந்த பதவிகளை நினைவுகூர்கையில், அவர்களது பற்றின்மையின் அளவினையும், அவர்களது

நம்பிக்கையின் பலத்தையும் நாம் காணும்போது, அவர்களது உயிர்களை அச்சுறுத்திய அபாயத்தை நினைவுக்குக் கொண்டு வருகையில், எல்லாவற்றிற்கும் மேலாக, இதயமற்ற எதிரிகள் மிகவும் கேவலமாகத் தங்களையேத் தாழ்த்திக் கொண்டு, அவர்கள் மீது விளைவித்த கொடுமைகளுக்கு, சவால் விடுத்த அந்த மன தைரியத்தை நாம் நம் மனக் கண்முன் கொண்டு வருகையில், இந்த சமயத்தின் வரலாற்றுக் குறிப்புகளில் மிகுந்த சோக நிகழ்வுகளாக அவற்றைக் கருதும் வண்ணம் நாம் உந்தப்படுகிறோம்." [14]

## பகுதி 10

கலையின் மற்றொரு சக்திவாய்ந்த வடிவம் நாடகமாகும். நாடக தயாரிப்புகள், விரிவான அரங்கமேடைப் பின்னணி அமைப்புகள், நாடக உடைகள் மற்றும் நாடகமேடைப் பொருள்கள் ஆகியவற்றைக் கொண்டு பிரம்மாண்டமாக இருக்கலாம். நாடகத்தைப் பற்றி இவ்வளவு பலக்கியத்தன்மை (complexity) கொண்ட சொற்களில் நாம் சிந்திக்கவில்லை. அதற்காக, நாம் முற்றிலும் நாடக உபரிபாகங்களைத் தவிர்க்க வேண்டுமென சொல்லவில்லை; சில நேரங்களில் ஒரு சிறிய சைகை, ஒரு தொப்பியைப் அணிவது போன்ற செயல்பாட்டின் வியத்தகு மதிப்பை அதிகரித்திடும். ஆனால், நாடகத்தின் மிக அடிப்படையான பயன்பாடு கூட ஆழமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும். ஏனெனில், கலையெனும் அதன் மதிப்போடு இஃதொரு முக்கியமான கற்பித்தல் கருவியுமாகும். அதன் மூலம், ஒருவர் தன்னைக் கற்பனையான சூழ்நிலைகளில் பார்க்க முடிவதுடன் ஒருவரின் சொந்த நடத்தை மற்றும் பழக்கவழக்கங்களை தான் அறியாமலேயே ஆய்வு செய்யலாம்.

உண்மையில், குழந்தைகள் தங்கள் ஆன்மிகக் கல்விக்கான திட்டத்தின் மூலம் மேம்பாடு காணும்போது பாடங்கள், அவர்கள் உருவாக்கிக் கொள்ள முயலும் ஆன்மிகக் குணங்களின் வெளிப்பாடான பழக்கவழக்கங்களையும் நடத்தை முறைகளையும் பேணி வளர்ப்பதில் இந்தக் கருவியைப் பயன்படுத்துகின்றன. அத்துடன் ஆசிரியர்களுக்கு இந்த நோக்கத்திற்காகப் பொருத்தமான காட்சிகள் வழங்கப்படுகின்றன. எனினும் ஆசிரியர்கள் பாடத்தில் உயர் நிலையில் சமயத்தின் வரலாற்றை அடையும்போது, இந்த விஷயத்தை மிகுந்த கவனத்துடன் அணுகும்படி எச்சரிக்கப்படுகிறார்கள். அவர்கள் பின்வரும் கல்விச் செயல்பாட்டின் அனைத்து நிலைகளுக்கும் சமமாகப் பொருந்தும் மற்றும் பொதுவாகக் கலைச் செயல்பாடுகளுக்கு மிகவும் பரந்த அளவில் பொருந்தும் வழிகாட்டுதல் மீது பிரதிபலிப்பர். முதலாவதாக உள்ளது ஷோகி எஃபெண்டியின் சார்பாக எழுதப்பட்ட கடிதத்தின் ஒரு பத்தியாகும்:

**"பஹாய் வரலாற்று நிகழ்வுகளை நாடகமாக்கும் ஆலோசனை குறித்த உங்கள் கேள்வியைப் பொறுத்தவரை: சந்தேகத்திற்கு இடமின்றி, மகத்தான கற்பித்தல் மதிப்புடையதாக இருக்கும் இத்தகைய இலக்கியத் தேடல்களில் ஈடுபட வேண்டுமென பாதுகாவலர் நிச்சயமாக ஒப்புதல் அளிப்பதுடன், நண்பர்களை ஊக்குவிக்கவும் செய்வார். நம்பிக்கையாளர்கள் தவிர்க்க வேண்டுமென அவர் விரும்புவது யாதெனில், பாப் பெருமானார், பஹாவுல்லா, 'அப்துல்-பஹா' ஆகியோரை நாடகப் பாத்திரங்கள் ஆக்குவதாகும். அஃதாவது, அவர்களை மேடையில் தோன்றும் கதாபாத்திரங்கள் ஆக்குவதைத் தவிர்க்க வேண்டும். ஏற்கனவே சுட்டிக் காட்டியுள்ளபடி, இது மிகவும் அவமரியாதையாக இருக்குமென அவர் உணர்கிறார். அவர்கள் நாடகக் காட்சியில் தோன்றுகிறார்களெனும் விஷயமே, அவர்களின் மிகவும் உயர்ந்த நிலையுடன் எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஓர் அவமரியாதையான செயலாக அமைகிறது. அவர்களின் செய்தி அல்லது அவர்கள் உண்மையிலேயே உச்சரித்த வார்த்தைகள், மேடையில் தோன்றும் அவர்களின் சீடர்களால் அறிவிக்கப்படவும் கொண்டு செல்லப்படவும் வேண்டுமென்பது விரும்பத்தக்கதாகும்."** [15]

உலக நீதிமன்றத்தின் சார்பாக எழுதப்பட்ட ஒரு கடித்தத்திலிருந்து வரும் பின்வரும் மேற்கோள் இந்த யோசனை குறித்து மேலும் விவரிக்கின்றது:

**ஓவியங்களில், சித்திரங்களில் அல்லது நாடகங்களில் கடவுள் அவதாரங்களைச் சித்தரிப்பதன் மீது விதிக்கப்பட்டுள்ள தடை எல்லா கடவுள் அவதாரங்களுக்கும் பொருந்தும். கடந்த திருவெளிப்பாடுகள் குறித்த பல மகத்தான மற்றும் அற்புதமான கலை படைப்புகள் உள்ளன. அவற்றில் பல, கடவுளின் அவதாரங்களைப் பக்தியுடனும் அன்புடனும் சித்தரித்துள்ளன. இருப்பினும், இந்தத் திருவெளிப்பாட்டில் மானிடத்தின் பெரும் முதிர்ச்சியும் (கடவுளின்) மகா அவதாரங்களுக்கும் அவரது ஊழியர்களுக்கும் இடையிலான உறவு குறித்த அதிகரித்த விழிப்புணர்வு, கடவுள் அவதாரங்களெனும் திருவுருக்களை ஓவியங்களில், சிற்பங்களில் அல்லது நாடக சித்தரிப்புகளில் எந்த ஒரு மனித உருவிலும் அறவே சித்தரிக்க முடியதென்பதை உணர்ந்திட நமக்கு உதவுகின்றது. பஹாய் தடையை குறிப்பிடுவதில், அன்பார்ந்த பாதுகாவலர் இந்தச் சாத்தியமில்லாமையைக் குறிப்பிடுகின்றார்.[16]**

உலக நீதிமன்றத்தின் பின்வரும் கடிதத்திலிருந்து வரும் எடுபகுதி கூடுதல் வழிகாட்டலை வழங்குகிறது.

**“…அன்பார்ந்த பாதுகாவலரின் கடிதங்களின் ஆய்வு, கடவுள் அவதாரம் என்னும் திருவுருவையோ மாஸ்டர் அவர்களையோ (நாடக) மேடையில் ஒரு பாத்திரமாக்குதல் அனுமதிக்கப்படவில்லை என்பதை தெள்ளத் தெளிவாக்குகின்றது. . . ”**

**“அதிகப் பிரகாசமான அல்லது வெவ்வேறு வர்ணங்களில் ஒளியைப் பயன்படுத்துதலும் உங்களின் கவனமான பரிசீலனையை வேண்டுகிறது. ஒளியின் பயன்பாடு கடவுள் அவதாரத்தை உருவகப்படுத்துவதாக எவ்வகையிலாவது பரிந்துரைத்தால், அது பயன்படுத்தப்படக் கூடாது. ஆனால், அது அவதாரத்தை பிரதிநிதிப்பதாகவோ உருவகப்படுத்துவதாகவோ எந்த வகையிலும் ஒரு தோற்றத்தை ஏற்படுத்தாமல் இருக்கும் போது அது பயன்படுத்தப்படலாம்.” [17]**

இது சம்பந்தமாக, சமயத்தின் ஆரம்ப நாட்களின் இருந்து சில நிகழ்வுகள் மீண்டும் நடித்துக்காட்டப்படக் கூடும், மற்றும் இது மிகவும் கவனமாக செய்யப்பட வேண்டும். உதாரணமாக, சில நிகழ்வுகளைப் பொறுத்த வரை, ஒரு நபர் கதை சொல்பவரின் பாத்திரத்தை ஏற்றுக்கொள்வது சாத்தியமாகும். இது நிகழ்வுகள் நிரலுக்கான கட்டமைப்பை வழங்குவதுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளைப் பிறர் நடித்துக் காட்டுவதற்கு ஏதுவாக பொருத்தமான தருணங்களில் இடைநிறுத்துகிறது. இன்று உங்கள் குழுவின் உறுப்பினர்களுடன், சமயத்தின் ஆரம்பகால வரலாற்றில் இருந்து ஒரு நிகழ்வைத் தேர்வுசெய்து, கதையின் எந்தப் பகுதிகள் விவரிக்கப்பட வேண்டும் என்றும் எந்தப் பகுதிகள் நடித்துக் காட்டப்பட வேண்டும் என்பதையும் தீர்மானிக்கவும். பிரதான வரிசை படிப்பாய்வின் எந்தக் கட்டத்தில் இது போன்ற நாடகத்தை உருவாக்க ஓர் இளைஞர் குழுவுக்கு உதவுவது பயனுள்ளதாக இருக்கும் என்பதைக் கலந்தாய்வு செய்யவும் .

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

நடிப்பு சார்ந்த நடவடிக்கைகள், வரலாற்றை மறுபடியும் நடித்துக்காட்டுவதோடு மட்டும் மட்டுப்படுத்தப்பட வேண்டிய அவசியமில்லை. முன்பே குறிப்பிட்டுள்ளது போன்று, எளிய நாடக வடிவங்கள் கற்பித்தல்-கற்றல் அனுபவத்தை மேம்படுத்தும் கருவியாகச் செயல்படும். எவ்வாறாயினும், அத்தகைய கருவி பயனுள்ளதாக இருக்க, ஒரு படிப்பு வட்டமோ, ஒரு பயிற்சிக்கழக பரப்பியக்கமோ, ஒரு முகாமே ஆயினும், ஒரு குழு படிப்பாய்வு செய்து பிரதிபலித்திடும் சூழ்நிலையை அற்பத்தனம் மற்றும் ஏளனங்களிலிருந்து விடுபட்ட அன்பு மேவிய உணர்வு ஊடுருவுவது அவசியமாகும். தேவையான ஆன்மிகக் கட்டுப்பாடு அதன் உறுப்பினர்களிடையே நிலவும்போது, ஆர்வமும் திறமையும் உள்ளவர்கள், பயிற்சிக்கழகப் பயிற்சிப்பாடங்களில் தாங்கள் படிக்கும் சில கருத்தாக்கங்கள் மற்றும் ஆன்மிகக் கோட்பாடுகளுக்கு ஆணித்தரமான வெளிப்பாட்டைக் கொடுக்கும் சிறுதுணுக்குகள் மற்றும் பாத்திர-நாடகங்களை உருவாக்கி நடிக்கலாம். நூல் 1-இன் முதல் பாடப்பிரிவைப் பற்றி யோசித்து, எந்தெந்த யோசனைகள் மற்றும் ஆன்மிகக் கருத்தாக்கங்களை சிறுதுணுக்குகள் மற்றும் பாத்திர-நாடகங்கள் மூலம் வலுப்படுத்தலாம் என்பதைக் கலந்துரையாடவும். துரதிர்ஷ்டவசமாக அற்பத்தனமும் மனித உன்னதத்தின்பால் மரியாதையின்மையும் இந்தக் கலை வடிவத்தை இழிவுபடுத்துகின்றன. இவையெல்லாம் இல்லாமல், இந்த நடவடிக்கை நளினத்துடனும் அழகுடனும் மேற்கொள்ளப்படுவதை நீங்கள் எவ்வாறு உறுதிபடுத்துவீர்கள்?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

ஒரு படிப்பு வட்டத்தின் உறுப்பினர்கள் பார்வையாளர்களுக்காக அவர்கள் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சியில் நாடகம் சேர்க்க விரும்பும் சந்தர்ப்பங்கள் இருக்கும். ஒரு பயிற்சிப்பாடத்தை முடித்தவுடன் நடத்தப்படும் கொண்டாட்டம் அத்தகைய ஒரு சந்தர்ப்பமாகும். பொதுவாக, இந்நிகழ்ச்சிக்குப் பங்கேற்பாளர்களின் குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் அழைக்கப்படுகின்றனர். ஒரு பாடப்புத்தகத்தைப் படித்து முடிக்கும்போது ஓர் இளைய இளைஞர்கள் குழுவும் இதே நடைமுறையைப் பின்பற்றுகிறது. இதுபோன்ற நிகழ்வுகளில், உறுப்பினர்கள் நாடகங்களை வழங்குவது மட்டுமின்றி, கவிதைகள் வாசிப்பார்கள், உரை நிகழ்த்துவார்கள், கதைகளைச் சொல்வார்கள், இசை நிகழ்ச்சிகளை நடத்துவார்கள்.

## பகுதி 11

கலை வெளிப்பாடானது கைவினைக் கலை என்று குறிப்பிடப்படும் மனித முயற்சியின் பரந்த பகுதியை உள்ளடக்கியதாகும். இங்கு தோல் கம்பளி, பருத்தி, பட்டு, கல், களிமண், கண்ணாடி, உலோகம், மரக்கட்டை, மெழுகு, வைக்கோல், உலர்ந்த பூக்கள், போன்ற எண்ணற்ற மூலப்பொருட்கள், அவற்றின் தன்னியல்பான பண்புகள் குறைக்கப்படாமல், அழகினை உருவாக்குவதற்காக, கைவினைஞர்களின் திறமைமிக்க கைகளால், பல்வேறு வழிகளில், செயலாக்கம் கொண்ட பொருள்களாகவும், செயலாக்கம் கொண்டிராத பொருள்களாகவும் மாற்றப்படுகின்றன. கைவினைக் கலைகளின் பட்டியல், மெய்யாகவே நீளமானதாகும். அவற்றில் புகழ்பெற்றவை, நெசவு வேலை,

நெய்தல், சித்திரத் தையல் வேலை, ஊசிப்பின்னல் வேலை, கொக்கி ஊசியைக் கொண்டு சால்வைப் பின்னுதல், தையல், சாயம் தோய்த்தல், மண்பாண்டத் தொழிலுக்குரிய கலை, அணிமணி செய்வது, தோல் வேலை, கூடை பின்னுதல், சிற்ப வேலை, மரவேலை, படச்சட்டங்கள் செய்வது, மெழுகுவர்த்தி செய்தல், பொம்மைகள் உருவாக்குதல் பொம்மலாட்ட பொம்மைகளை உருவாக்குதல், அச்செழுத்து உருவாக்குதல், சரிகை செய்தல் மற்றும் இணைப்புப் பஞ்சுறை உருவாக்குதல் ஆகியனவாகும். இப்பட்டியலில் மேலும் சிலவற்றை நீங்கள் சேர்க்க முடியும். இதைச் செய்தப் பிறகு, உங்கள் வட்டாரத்தில் மிகவும் பிரபலமாக உள்ள கைவினைக் கலைகள் எவை, என்பது குறித்து உங்கள் குழுவினருடன் கலந்தாய்வு செய்யவும்:

__________________________________________________________________

__________________________________________________________________

__________________________________________________________________

__________________________________________________________________

__________________________________________________________________

__________________________________________________________________

__________________________________________________________________

இளைய இளைஞர்கள் குழுவின் அனிமேட்டராக நீங்கள் பணியாற்றியிருந்தால், சில உள்ளூர் கைவினைப்பொருட்கள் பற்றி அறிந்துகொள்ள அவர்களுக்கு உதவுவதில் உங்களுக்கு சில அனுபவம் இருக்கலாம். இளைஞர்கள் மற்றும் பெரியவர்களுக்கான கல்விச் செயல்பாட்டில் கைவினைத் தயாரிப்பை எவ்வாறு திறம்பட அறிமுகப்படுத்தலாம் என்பதைக் கவனமாகச் சிந்திக்க வேண்டும். குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரின் சூழ்நிலைகள், அவர்களின் திறமைகள், வளங்களின் இருப்பு என்பன போன்ற பலவற்றை நீங்கள் கருத்தில் கொள்வது கட்டாயமாக இருக்கும். மேலும், நீங்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கைவினைகளில் நிபுணத்துவம் பெற்றிருந்தால் தவிர, உங்களுக்கு உதவிட, தேவையான அறிவுள்ள ஒருவரை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும், அத்துடன் ஒரு முகாம் அல்லது தீவிர பரப்பியக்கத்தின் போது ஒரு குறிப்பிட்ட கைவினைத் திறனைக் கற்றுக்கொள்ள பங்கேற்பாளர்களுக்கு பல அமர்வுகளை அமைப்பதற்கான வாய்ப்புகள் நேரலாம். இந்த வகையான கலை வெளிப்பாட்டின் முக்கியத்துவத்தைப் பற்றிச் சிந்திக்க உங்களுக்கு உதவிட, புனிதவாசகங்களில் இருந்து பின்வரும் இரண்டு மேற்கோள்களைப் படித்து, அவற்றை உங்கள் குழுவின் மற்ற உறுப்பினர்களுடன் கலந்தாலோசிக்கவும்.

> **“இறைவனுடைய திருநாமங்களில் ஒன்று உருவாக்குபவர் என்பதாகும். அவர் கைவினைத் திறனை விரும்புகிறார். ஆகவே, அவருடைய ஊழியர்களுள் எவர் ஒருவர் இப்பண்பினை வெளிப்படுத்துகிறாரோ, அவர், இத்தீங்கிழைக்கப்பட்டோனின் பார்வையில் ஏற்றுக்கொள்ளப்படுவார். கைவினைத்திறன் என்பது, தெய்வீக விஞ்ஞானங்களின் நூல்களிடையே உள்ள ஒரு நூலாகும். மற்றும் அவருடைய தெய்வீக மெய்யறிவு என்னும் பொக்கிஷங்களில் ஓர் பொக்கிஷமாகும். இஃது, அர்த்தத்தைக் கொண்டிருக்கும் ஓர் அறிவாகும். ஏனெனில் சில விஞ்ஞானங்கள் வார்த்தைகளால் உருவாகி வார்த்தைகளிலேயே முற்றுப்பெறும்.[18]**

> **“ஒரே உண்மையான இறைவன், அவர் மேன்மைப்படுத்தப்படுவாராக, தமது அன்பிற்குரியவர்களால் உருவாக்கப்படும் உயர்ந்த கைவினைத்திறன் வாய்ந்த கைவேலைப்பாடுகளைக் காண விரும்புகிறார். நீங்கள் ஆசீர்வாதிக்கப்பட்டுள்ளீர்கள், ஏனெனில், உங்களுடைய திறமை உருவாக்கியுள்ளதானது நாடுகடத்தப்பட்டவரும், தீங்கிழைக்கப்பட்டவருமான, உங்களுடைய பிரபுவின் முன்னிலையை அடைந்துள்ளது. இறைவன் தயை செய்து அவருடைய நண்பர்கள் ஒவ்வொருவரும், கைவினை கலைகளில்**

**ஒன்றைக் கற்றுக் கொண்டு, எல்லா மகிமையும் கொண்டுள்ளவரும், சர்வ ஞானியுமான இறைவனின் திருநூலில் விதிக்கப்பட்டுள்ளது எதுவோ, அதனைப் பற்றிக்கொள்வதில் உறுதிபடுத்தப்படுவாராக."[19]**

## பகுதி 12

மேற்கூறிய பகுதிகள், அடித்தட்டில் பேணி வளர்க்கப்படும் கல்விச் செயல்முறையை செழுமைப்படுத்துவதிலும், நமது கூட்டு முயற்சிகளின் துடிப்பிலும் கலை முயற்சிகள் வகிக்கும் பங்கு பற்றிய உங்கள் விழிப்புணர்வை அதிகரித்திருக்கும் என எதிர்ப்பார்க்கப் படுகிறது. அத்தகைய முயற்சிகள், குறிப்பாகக் கைவினைப்பொருள்கள் விஷயத்தில், முடிந்த அளவு ஒரு மண்டலத்தின் கலை மரபுகளின் பயனைப் பெறும் போது, அவை பலதரப்பட்ட கலாச்சாரங்களின் செழுமையின் மதிப்புணர்வை உயர்த்திடும் என்பதை நீங்கள் உணர்ந்திருக்கலாம். இதில், கலாச்சாரத்தின் வெளிப்பாடாக, கலைச் செயல்பாடுகள் அவற்றுடன் மதிப்புகளைக் கொண்டுள்ளன என நூல் 5-ல் எழுப்பப்பட்ட கருத்தை நீங்கள் நிச்சயமாக நினைவில் வைத்திருப்பீர்கள். அப்படியானால், தகுந்த கலாபூர்வ குறிக்கோள்களைத் தேர்ந்தெடுப்பதில் நீங்கள் கவனமாக இருப்பீர்கள். ஏனெனில், அவை ஒரு வேளை கவனக்குறைவால், நுட்பமான வழிகளில், கல்விச் செயல்முறை அல்லது சமூக வாழ்க்கையின் வடிவங்களைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் மதிப்புகளைத் திணித்திடக்கூடும். இத்தகைய (கலை)வடிவங்கள், பஹாவுல்லாவின் வெளிப்பாட்டினால் உத்வேகம் பெற்ற ஒரு புதிய வளர்ந்து வரும் கலாச்சாரத்தின் மதிப்புகளை பிரதிபலிக்கின்றன என்பது அங்கீகரிக்கப்பட வேண்டும். நூல் 6-இல் நீங்கள் படிப்பாய்வு செய்த உலக நீதிமன்றம் எழுதிய ஒரு செய்தியிலிருந்து பின்வரும் மேற்கோளைப் படிக்கவும்:

**"பஹாய் சமூகத்தின் உள்ளேயும் வெளியிலும் உருவாகிவரும் ஆற்றல்களினால் உந்தப்பட்டு, மண்ணுலக மக்கள் பல்வேறு திசைகளிலிருந்து ஒருவர் மற்றவர்பால் நெருங்கி வந்து, நாம் இன்று கற்பனை செய்திடவே இயலாததோர் உலக நாகரிகத்தை நோக்கி விரைந்து கொண்டிருப்பதை நாம் காண முடியும். ஜனத்தொகைகளின் இந்த மையநோக்குமிக்க பெயர்ச்சி உலகம் முழுவதிலும் வேகமுறுகையில், ஒவ்வொரு கலாச்சாரத்திலும், சமயத்தினுடைய போதனைகளுடன் ஒத்து வராத சில அம்சங்கள் காலப்போக்கில் கழன்று வீழ்ந்து விடும் அதே நேரத்தில், மற்றவை மறுபலப்படுத்தப்படும். இதே அடிப்படையில், மானிடத்தின் ஒவ்வொரு பிரிவிடமிருந்தும், பஹாவுல்லாவினுடைய திருவெளிப்பாட்டினால் உற்சாகம் பெற்ற மக்கள் அவர்தம் போதனைகள் தருவித்திருக்கும் திவ்விய கோட்பாடுகளுக்கேற்பத் தங்களுடைய சிந்தனைகளையும், செயல்களையும் அமைத்துக் கொள்ளும்போது, கலை மற்றும் இலக்கியப் பணிகளில் கலாச்சாரத்தின் புது அம்சங்கள் படிப்படியாகத் தோன்றி வரும். இவ்வாறான கருத்துகளை மனதில் கொண்ட நிலையில்தான், ரூஹி பயிற்சிக் கழகம் தனது பாடங்களை வடிவமைக்கும் பணியை, கலைசார்ந்த நடவடிக்கைத் தொடர்பான விஷயங்களை முன்னிருத்தும் பொருட்டு, உள்ளூர் நண்பர்களிடமே விட்டுவிடப்படுகிறது என்னும் அப்பயிற்சிக் கழகத்தின் முடிவை நாங்கள் வரவேற்கின்றோம். பாலர் வகுப்புகள் மற்றும் பால்ய இளைஞர் குழுக்களின் பாடத் திட்டங்களை நீட்டிப்புச் செய்வதற்காக சக்திகள் முதலீடு செய்யப்படும் இக்கட்டத்தில் நாங்கள் கேட்டுக் கொள்வது யாதெனில், இந்நோக்கத்திற்காக உருவாக்கப்படும் துணைப் பாடத் திட்டங்கள், கிராமப்புறங்களிலும், அண்டையர்ப்பகுதிகளிலும் ஏற்பட்டு வரும் சமூக நிர்மாணிப்புச் செயல்பாட்டின் ஒரு துணை வளர்ச்சியாக இயல்பாக நடைபெற அனுமதிக்க வேண்டும் என்பதுதான். உதாரணமாக, பஹாய் சமயத்தினுடைய போதனைகளில் பொதிந்துள்ள ஆழ்ந்த கருத்துகள் இளம் வயதினரின் உணர்வுகளைக் கவர்ந்து அவை அவர்களுடைய மனங்களில் படிந்திடும் வகையில் உலகின் ஒவ்வொரு பகுதியிலும், மனதை ஈர்க்கவல்ல பாடல்கள் ஒவ்வொரு மொழியிலும் வெளிப்பட்டு வருவதைக் காண நாங்கள் ஆவலுறுகின்றோம். அவ்வாறிருந்தும், பொருளாதார வளங்களைப்**

**பெற்றுள்ளவர்கள் தங்களது கலாச்சாரக் கண்ணோட்டத்தை மற்றவர்களின் மீது திணித்து, அது தொடர்பான பாடங்களையும், உபகரணங்களையும் தீவிரப்படுத்தும் தற்போதைய உலகின் நடைமுறைகளில் நாம் கால்தவறி விழுந்துவிட்டால், நாம் மேற்கொண்ட அத்தகைய ஆக்கப்பூர்வமான சிந்தனைப் படைப்பின் வெளிப்பாடு தோல்வியுற்றுவிடும். மேலும், வியாபார நோக்கத்தின் பேராபத்துக்களிலிருந்து ஆன்மிகக் கல்வியைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஒவ்வொரு முயற்சியும் மேற்கொள்ளப்பட வேண்டும். தனது பயிற்சிப் பாடநூல்களும், கல்வி உபகரணங்களும் சந்தையில் ஒரு விற்பனை பொருளாக அடையாளப்படுத்தப்படுவதை ரூஹி பயிற்சிக் கழகம் மிக வெளிப்படையாகவே தடைசெய்துள்ளது. இவ் விஷயத்தில் அப்பயிற்சிக் கழகத்தின் அறிவார்ந்த நிலையை நண்பர்கள் மதித்துணர்வார்கள் என நாங்கள் நம்புகிறோம்.”[20]**

கலாச்சாரம், நீங்கள் எப்போதும் அக்கறை செலுத்தப்படவேண்டிய ஒன்றானதாகும். மனிதகுலத்தின் வாழ்க்கையை ஆக்கிரமிக்கும் லௌகீகவாத கலாச்சாரத்தின் செல்வாக்கை நீங்கள் எதிர்க்க வேண்டுமானால், நீங்கள் எந்நேரமும் கவனமாக இருக்க வேண்டும். அத்துடன், பாரம்பரிய முறைகள் மற்றும் கருவிகள் ஆகியவற்றின் பயனைப் பெற்று, ஆனால் சமயத்தின் உத்வேகம் பெற்ற புதிய ஆன்மிகமும் அறநெறியையும் உள்ளடக்கமாகக் கொண்டுள்ள நீங்கள் தேர்ந்தெடுக்கும் சில கலை வெளிப்பாடுகளானது கலாச்சாரத்தின் செழுமையைப் பிரதிபலித்திட வேண்டும் என்பதை உறுதிபடுத்திக்கொள்ள விரும்புவீர்கள். உங்கள் மக்களின் கலைப் பாரம்பரியத்தைப் பற்றிச் சிந்திக்க சிறிது நேரம் ஒதுக்க இஃது ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கலாம். பின்வரும் கேள்விகளுக்குப் பதிலளித்து இந்தத் தலைப்பில் ஒரு சிறிய பத்தியை எழுதவும்:

அ. உங்கள் மண்டலத்தில் மக்கள் என்ன வகையான சங்கீதத்தை இசைக்கின்றனர் அல்லது விரும்பிக் கேட்கின்றனர்? அறுவடையின் போது அல்லது விலங்குகளை பராமரிக்கும் போது வயல்களில் பாடப்படும் பாடல்கள் அல்லது அதன் சொந்தக் காதல் பாட்டுகள், தாலாட்டுகள், குழந்தைகளின் பாடல்கள் மற்றும் புனித இசை போன்ற வேலையின் போது பயன்படுத்தப்படும் அதன் சொந்தப் பாரம்பரிய பாடல்கள் இப்பகுதியில் உள்ளனவா? திருமணங்கள், இறுதிச் சடங்குகள் அல்லது கொண்டாட்டங்கள் போன்ற சிறப்பு நிகழ்வுகளுக்குப் பாரம்பரியமாக ஒரு குறிப்பிட்ட வகையான இசை பயன்படுத்தப்படுகிறதா? பயிற்சிக்கழக செயல்முறை வலுப்பெற்றுள்ளதால், உங்கள் பகுதியில் வெளிப்பட்டுள்ள பாடல்கள் மற்றும் இசையின் சில உதாரணங்கள் யாவை?

ஆ. இம்மண்டலத்திற்கென குறிப்பிட்ட இசைக்கருவிகள் ஏதேனும் உள்ளனவா? எந்த வகையான இசைக்கு அவை பொருத்தமானவை? சமூக நிகழ்வுகளுக்கு உயிரூட்ட இளைஞர்கள் மற்றும் பெரியவர்கள் வாசிக்கும் இசை ஏதேனும் உள்ளதா?

இ. கதை சொல்லுதல் உங்கள் மக்களிடையே ஒரு பாரம்பரியமா? 'அப்துல்-பஹாவின் வாழ்க்கையிலிருந்தும் சமய வரலாற்றிலிருந்தும், இல்ல விஜயங்கள் செய்யும் போதும் சமூக ஒன்றுகூடல்களில் போதும் இந்தக் கதைகளைப் பகிர்வதன் மூலம் இந்தப் பாரம்பரியம் செழுமையாக்கப்பட்டுள்ளதா?

ஈ. உங்கள் பகுதியில் பிரபலமான நாடக வடிவங்கள் யாவை? உங்கள் மக்களின் வரலாற்றிலிருந்தும் அதன் ஹீரோக்கள் மற்றும் ஹீரோயின்களின் கதைகளில்

வரும் துணுக்குகளை அவர்கள் எவ்வாறு சித்தரிக்கிறார்கள்? பயிற்சிக்கழகப் பயிற்சிப் பாடங்களில் படிப்பாய்வு செய்யப்படும் ஆன்மிகக் கருத்துகள் மற்றும் கோட்பாடுகள் குறித்த ஒன்றிணைந்த உணர்வு நிலையை உயர்த்துவதற்கு இந்தக் கலை வடிவம் பயன்படுத்தப்படுகிறதா?

உ. அழகு, சமச்சீர், நயம் ஆகியவற்றை உங்கள் மண்டலத்தின் பாரம்பரிய கைவினைப் பொருள்கள் எவ்வாறு வெளிப்படுத்துகின்றன? இளைஞர்களின், குறிப்பாக இளைய இளைஞர்களின் ஆன்மிக சக்தியூட்டும் திட்டத்தில் பங்கேற்கும் இளைஞர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியை மேம்படுத்த அவை எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

## பகுதி 13

இந்தப் பாடப்பிரிவைப் பற்றிய உங்கள் ஆய்வின் மூலம் நீங்கள் நிச்சயமாக அறிந்துள்ளபடி, அடித்தட்டு அளவில் கலைகளை மேம்படுத்துவதற்கு நீங்கள் நடிகராகவோ, நாடக ஆசிரியராகவோ, கவிஞராகவோ அல்லது இசைக்கலைஞராகவோ இருக்க வேண்டியதில்லை. நீங்கள் நினைவில் கொள்ள வேண்டியது யாதெனில், பயிற்சிக்கழகப் பாடங்கள் அடிப்படையில் ஆன்மிக மற்றும் தார்மீக சக்தியளிப்பு, மனித ஆன்மாவின் சக்திகளை கட்டவிழ்த்தல் ஆகியவற்றில் அக்கறை கொண்டுள்ளன. ஒரு பயிற்றுநராக, இங்கே விவரிக்கப்பட்டுள்ள வழிகளில் கலையையும் கைவினைகளையும் மேம்படுத்துவதில், உத்வேகமும் அழகின் மீதான ஈர்ப்புச் சக்தியும் வழிந்தோடக்கூடிய ஆக்கப்பூர்வ வழிகளைத் திறப்பதற்கு நீங்கள் பங்களிப்பீர்கள்.

## குறிப்பீடுகள்

1. From a message dated 30 December 2021 to the Conference of the Continental Boards of Counsellors, published in *The Nine Year Plan, 2022–2031: Messages of the Universal House of Justice* (West Palm Beach: Palabra Publications, 2022), no. 6.12, p. 50.

2. ‘Abdu’l-Bahá, in *The Importance of the Arts in Promoting the Faith: Extracts from the Bahá’í Writings*, compiled by the Research Department of the Universal House of Justice (Ingleside: Bahá’í Publications Australia, 2020), no. 23, p. 20.

3. Ibid., no. 24, p. 20.

4. *Selections from the Writings of ‘Abdu’l-Bahá* (Wilmette: Bahá’í Publishing, 2010, 2015 printing), no. 175.1, p. 282.

5. From a talk given on 18 June 1912, published in *The Promulgation of Universal Peace: Talks Delivered by ‘Abdu’l-Bahá during His Visit to the United States and Canada in 1912* (Wilmette: Bahá’í Publishing, 2012), par. 2, p. 287.

6. Bahá’u’lláh, in *The Kitáb-i-Aqdas: The Most Holy Book* (Wilmette: Bahá’í Publishing, 1993, 2021 printing), par. 51, p. 41.

7. *Selections from the Writings of ‘Abdu’l-Bahá*, no. 74.1, p. 159.

8. ‘Abdu’l-Bahá, in *Music: Extracts from the Bahá’í Writings*, compiled by the Research Department of the Universal House of Justice (Ingleside: Bahá’í Publications Australia, 2020), no. 15.8, p. 17.

9. ‘Abdu’l-Bahá, in *The Importance of the Arts in Promoting the Faith*, no. 10, pp. 12–13.

10. ‘Abdu’l-Bahá, in the compilation *Music*, no. 14.1, p. 14.

11. Ibid., no. 14.2, p. 15.

12. Postscript in the handwriting of Shoghi Effendi appended to a letter dated 17 November 1932 written on his behalf to an individual.

13. From a letter dated 8 June 1933 written on behalf of Shoghi Effendi to an individual.

14. *The Dawn-Breakers: Nabíl’s Narrative of the Early Days of the Bahá’í Revelation* (Wilmette: Bahá’í Publishing Trust, 1932, 2021 printing), pp. 446–58.

15. From a letter dated 25 July 1936 written on behalf of Shoghi Effendi to an individual, in *The Importance of the Arts in Promoting the Faith*, no. 35, p. 28.

16. From a letter dated 9 March 1977 written on behalf of the Universal House of Justice to an individual, ibid., no. 49, pp. 36–37.

17. From a letter dated 12 August 1975 written by the Universal House of Justice to an individual, in "Portrayal of the Central Figures of the Faith: A Compilation of Extracts from Letters Written on Behalf of Shoghi Effendi and the Universal House of Justice", compiled by the Research Department of the Universal House of Justice, no. 6; also quoted, in part, in *Lights of Guidance: A Bahá'í Reference File* (New Delhi: Bahá'í Publishing Trust, 1988, 2016 printing), no. 343, p. 99.

18. Bahá'u'lláh, in "Extracts from the Writings concerning Arts and Crafts", published in *The Compilation of Compilations* (Maryborough: Bahá'í Publications Australia, 1991), vol. 1, no. 2, p. 1.

19. Ibid., no. 4, p. 1.

20. From a message dated 12 December 2011 written to all National Spiritual Assemblies, published in *Framework for Action: Selected Messages of the Universal House of Justice and Supplementary Material, 2006–2016* (West Palm Beach: Palabra Publications, 2017), no. 20.19, pp. 136–37.